ஆகஸ்ட் 2011

# ஞானம்

135

கலை இலக்கியச் சஞ்சிகை

கப்டன் அக்கப்

ப்ரெஞ்ச் சினிமா

இருண்ட வானம்
(சிங்களச் சிறுகதை)



தீவிரவாத பெண்ணியமும்
பெண் உடல் அரசியலும்

கவிஞர் துரையர்

விலை : ரூபா 65/=

www.gnanam.info


தரமான தங்க நகைகளுக்கு...


# NAGALINGAMS

*Jewellers*



**Designers and**
**Manufacturers of 22KT**
**Sovereign Gold Quality**
**Jewellery**





101, Colombo Street, Kandy
Tel : 081 - 2232545

# CENTRAL ESSENCE SUPPLIERS

**SUPPLIERS TO CONFECTIONERS & BAKERS**

**Dealers in all Kinds of Food Essences,**
**Food Colours, Food Chemicals, Cake Ingredients Etc.**

76 B, Kings Street, Kandy
Tel : 081-2224187, 081-2204480, 081-4471563

# ஞானம்

கலை, இலக்கிய மாத இதழ்

ஒளி – 12 சுடர் – 03


**பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம்**


ஆசிரியர்
தி. ஞானசேகரன்

இணை ஆசிரியர்
ஞானம் ஞானசேகரன்

ஓவியர்
சிவா கௌதமன்

தலைமை அலுவலகம்
கண்டி

தொடர்புகளுக்கு...
தி. ஞானசேகரன்
ஞானம் கிளை அலுவலகம்
3- B, 46வது ஒழுங்கை
கொழும்பு - 06
தொலைபேசி: 011-2586013
0777-306506
+ 61 02 80077270
தொலைநகல்: 011-2362862
E-mail: editor@gnanaminfo
web :www.gnanam.info


வெளிநாட்டு உள்நாட்டு
வங்கித் தொடர்புகள்.
SwiftCode :-HBLILKLX
T.Gnanasekaran
Hatton National Bank
Wellawatha Branch
A\C No.009010344631

# இதழினுள்ளே...

## கவிதைகள்


| | |
|---|---|
| புசல்லாவை குறிஞ்சிநாடன் | 03 |
| சித்திரா சின்னராஜன் | 04 |
| சண்முகம் சிவகுமார் | 14 |
| சிவாசண்முகம் | 30 |
| த. ஜெயசீலன் | 39 |
| செ. ஞானராசா | 40 |
| ஷெல்லிதாசன் | 44 |
| தாரணி | 46 |
| அல்வாயூர் சிவநேசன் | 47 |
| த. எலிசபெத் | 51 |
| புலோலியூர் வேல் நந்தன் | 54 |


## கட்டுரைகள்


| | |
|---|---|
| கே. விஜயன் | 05 |
| கலாபூசணம் புன்னியாமீன் | 18 |
| வாகரை வாணன் | 23 |
| எம். ஏ. நுஃமான் | 25 |
| யுகாயினி | 29 |
| கலாநிதி நா. சுப்பிரமணியன் | 34 |


## படைப்பியல்புக் கட்டுரை


| | |
|---|---|
| ஆசி. கந்தராஜா | 10 |


## சிறுகதைகள்


| | |
|---|---|
| பிரமிளாபிரதீபன் | 07 |
| ஜயதிலக கம்மெல்லவீர/ திக்குவல்லை கமால் | 15 |
| ஆரூரான் | 28 |
| தாட்சாயணி | 41 |


## சினிமா


| | |
|---|---|
| எம்.கே. முருகானந்தன் | 32 |


## சமகால கலை இலக்கிய நிகழ்வுகள்


| | |
|---|---|
| கே. பொன்னுத்துரை | 58 |


## பத்தி எழுத்து


| | |
|---|---|
| யோகேஸ்வரி சிவப்பிரகாசம் | 45 |
| கே. ஜி. மகாதேவா | 48 |
| கே. விஜயன் | 52 |
| கலாநிதி துரைமனோகரன் | 55 |


## வாசகர் பேசுகிறார்


| | |
|---|---|
| வாசகர் பேசுகிறார் | 61 |



ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகட்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள். புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், முகவரி ஆகியவற்றை வேறாக இணைத்தல் வேண்டும். பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு. - ஆசிரியர்

ஞானம்
கலை, இலக்கிய மாத இதழ்

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப்பதவி கொள்வார்.

## பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பியின் மறைவு தமிழுக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு

பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் தமது 79ஆவது வயதில் அமரரானார் என்ற செய்தி தமிழ்கூறு நல்லுலகை ஆறாத்துயரில் ஆழ்த்தியிருக்கிறது. பேரறிஞர் அவர்கள் உலகத் தமிழ்ப் பேரறிஞர்கள் வரிசையில் முன்னணியில் திகழ்ந்தவர். கடந்த ஐந்து தசாப்தங்களுக்கு மேலாக தமிழ்ப்பணி மூலம் எமது நாட்டுக்குப் பெருமை சேர்த்துக் கொண்டிருந்தவர்.

பழந்தமிழ் இலக்கியம், இலக்கணம், நவீன இலக்கியம் பக்தி இலக்கியம், மொழியியல், தமிழ்நாடகம், இலக்கியவரலாறு, தமிழர் பண்பாடு, அரசியல் பொருளாதாரம் ஆகிய துறைகளில் ஆய்வுகளை மேற்கொண்ட பேராசிரியர் தமிழ்மொழி சார்ந்த இலக்கியங்களை உலகளாவிய இலக்கியங்களுடனும் இலக்கியச் சிந்தனைகளுடனும் ஆராய்ந்தவர். அவருக்கிருந்த ஆங்கில அறிவு இத்தகைய ஒப்பியல் ஆய்வுக்கு வழிசமைத்தது எனலாம்.

பொதுவாக பேராசியர்கள் என்றால் தமது துறைசார்ந்த ஒரு கூறினை ஆய்வு செய்து அத்துறையில் அறிஞர்களாக இருப்பர் ஆனால் பேராசியர் சிவத்தம்பி அவர்களோ தமது பல்துறைச் சங்கம ஆய்வு (Multi Diciplinery Approach) காரணமாக பல்வேறு துறைகளில் இயங்கி புகழ்பூத்த பன்முக ஆளுமையாளராகத் திகழ்ந்தார்.

பேராசியர் வித்தியோதயப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராக இருந்த காலத்தில், பெர்மிங்காம் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் தொம்சனின் கீழ் DRAMA IN ANCIENT TAMIL SOCIETY என்று ஆய்வினைச் செய்யும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. அதன் பின்னர் 'கலாநிதி' பட்டம் பெற்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும், கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்திலும் பேராசிரியராகப் பணியாற்றினார்.

பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள், தஞ்சைப் பல்கலைக் கழகம், ஸ்கன்டினேவியப் பல்கலைக் கழகம், உப்சலா பல்கலைக்கழகம், அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியா, பெர்கிளி, விஸ்கான்ஸியன், ஹாவார்ட் பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றிலும் வருகைப் பேராசிரியராகப் பணியாற்றியவர்.

ஆரம்பத்தில் ஸாகிராக் கல்லூரியில் ஆசிரியராக இருந்த காலத்தில் வானொலி நாடகங்களில் நடித்தார். பின்னர் பல்கலைக் கழகத்தில் இருக்கும் போதும் மேடை நாடகங்களில் நடித்து வந்தார். இந்த நாடக அறிவே அவருக்கு வெளிநாட்டில் நாடகம் பற்றிய ஆய்வை மேற்கொள்வதற்கு உறுதுணையாக அமைந்தது. பேராசிரியர் வித்தியானந்தன், பேராசிரியர் கணபதிப்பிள்ளை ஆகியோரின் மாணவனாக இருந்த காலத்தில் இவர்களது வழிகாட்டலில் மரபுவழி நாடகங்களையும், நவீன நாடகங்களையும் ஒரு சேர வளர்த்ததோடு பிற்பட்ட காலத்தில் நாடகத்தை ஒரு கல்வி நெறியாக்கும் முயற்சிகளை மேற்கொண்டார். பல்கலைக்கழகத்தில் 'நாடகமும் அரங்கியலும்' என்ற பட்டப்படிப்பு பாட நெறியினை உருவாக்குவதில் முன்னின்று உழைத்தார்.

அறுபதுகளில் ஈழத்தமிழ் இலக்கியத்தின் திருப்பு முனையாக அமைந்த முற்போக்கு எழுத்தாளர் சங்கம், மரபுப் போராட்டம் ஆகியவற்றில் பேராசிரியர் கைலாசபதியுடன் இணைந்து அவர் ஆற்றிய பணி மகத்தானது. மார்க்சிய ஒளியில் தமது விமர்சனப் பார்வையைச் செலுத்தியதோடு தமிழ் விமர்சனத் துறையிலும் பல புதிய கோணங்களுக்கு வெளிச்சமிட்டுக் காட்டியவர் பேராசிரியர்.

பேராசிரியர் அவர்கள் தமிழுக்கு மட்டும் தொண்டு செய்தவரல்லர், தமிழருக்கும் தொண்டு செய்தவர் 84-86 காலப்பகுதியில் வடக்கு கிழக்கு பிரதேசத்தின் பிரஜைகள் கண்காணிப்புக்குழு ஒன்றியத்தின் தலைவராகப் பணியாற்றியவர். போர் மிகவும் உக்கிரமடைந்த நிலையில் மிகவும் ஆபத்தான சூழ்நிலையில் தமது உயிரைத் துச்சமாக மதித்து மக்கள் படுகின்ற கஷ்டங்களையும் படையினரால் இழைக்கப்படும் குற்றங்களையும் தளபதிகளுக்கு எடுத்துக் கூறியும் அரச மட்டத்திற்கு எடுத்துச் சென்றும் பணிபுரிந்தார். 86-98 காலப்பகுதியில் தமிழ் மக்கள் அல்லலுற்று அகதிகளாக அலைக்கழிந்த வேளையில் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தில் தலைவராக இருந்து பேராசிரியர் ஆற்றிய பணி அளப்பரியது.

பேராசிரியர் சிவத்தம்பி ஆற்றிய பணிகளுக்காக பல விருதுகளைப் பெற்றுள்ளார். அவற்றுள் தமிழக அரசின் அதியுயர் விருதுகளில் ஒன்றான "திரு.வி.க விருது" பெருமை மிக்கது. இவ் விருதினைப் பெற்ற ஒரே இலங்கையர் பேராசிரியர் சிவத்தம்பி என்பது குறிப்பிடத்தக்கது.

ஏறத்தாழ 50நூல்கள், பிரசுரங்கள் ஐம்பதுக்கு மேற்பட்ட ஆய்வுகள், கட்டுரைகள் ஆகியவற்றைப் பேராசிரியர் எழுதியுள்ளார். தமிழாராய்ச்சி மாநாடுகள் உலகில் எப்பகுதியில் நடைபெற்ற போதும் பேராசிரியர் சிவத்தம்பியின் பங்களிப்பும் அதில் இருக்கும். பிற்பட்ட காலத்தில் தமிழகத்தில் நடைபெற்ற செம்மொழி மாநாட்டில் பேராசிரியரின் பங்களிப்பு முக்கியமானதாக இருந்தது. இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் இலங்கையில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் பேராசிரியர் சிவத்தம்பி கலந்து ஆரம்ப உரையாற்றி ஈழத்தமிழ் எழுத்தாளர்களுக்குப் பெருமை சேர்த்தார். இதுவே பேராசிரியர் பங்குபற்றிய இறுதி நிகழ்வாகவும் அமைந்துவிட்டது.

பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் ஞானம் சஞ்சிகையுடன் பேணி வந்த உறவை நாம் நினைவு கூர்ந்து அன்னாருக்கு அஞ்சலி செலுத்துகிறோம். பேராசிரியர் ஞானம் சஞ்சிகைக்கு வழங்கிய நேர்காணல் விரிவானது, தனித்துவமானது. வேறு நேர்காணலில் சொல்லியிராத பலவிடயங்களை ஞானம் நேர்காணலில் அவர் பதிவு செய்திருக்கிறார். இந்நேர்காணல், பின்னர் “பேராசிரியர் சிவத்தம்பி இலக்கியமும் வாழ்க்கையும்” என்ற மகுடத்தில் நூலுருப் பெற்றது. ஞானம் தனது 84 இதழைப் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்களது பவள மலராக வெளியிட்டதோடு, அன்னாருக்குப் பவள விழா வெடுத்துப் பெருமை கொண்டது.

பேராசிரியரின் பிரிவால் வாடும் அவரது மனைவி ரூபவதி, கிருத்திகா பாலசேகர், தாரணிபுவன், வர்த்தனி ஆகியோருக்கும் உலகெங்கும் உள்ள பேராசிரியரின் அன்புக்குப் பாத்திரமானவர்களுக்கும் ஞானம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

பேராசிரியரின் மறைவு ஈழத்து இலக்கிய உலகில் பெரும் வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது. நிரவ முடியாத வெற்றிடமாக அது அமைந்துவிட்டது.

---

## என்னதான் அவசரமோ ?

எல்லோர்க்கும் இனியோனாய் ஏற்புடைய ஆசானாய்
உள்ளத்தில் வீற்றிருந்த உத்தமனாம் நன்முத்தை
பொல்லாத எமன்தானும் பொசுக்கெனவே பறித்தெம்மை
பூமியிலே துடிக்கவிட்டுப் போனவனை சபித்திடுவோம்

இலக்கியத்தின் பேரொளியாய் இன்தமிழின் காவலனாய்
இருள்போக்கும் சூரியனாய் எம்மவரின் கோமகனாய்
துலங்கிட்ட தூமணியே ! துய்ய சிவத் திருமகனே
தேவர்க்கும் அமுதூட்ட சென்றாயோ பொன்னுலகம்

தேசமெல்லாம் செந்தமிழை தேன்மணக்கத் தென்றலுடன்
பரிமளிக்கச் செய்திட்ட பரஞ்சுடரே என்றென்றும்
நேசித்த நெஞ்சமெல்லாம் நெஞ்சுருகிக் கலங்கிடவே
நோகவிட்டு நொடிப் போதில் பிரிந்தெங்கு சென்றீர் ஐயா !

வருவோர்க்கும் செல்வோர்க்கும் வளமான வாழ்த்தினையும்
வாய் இனிக்க வழங்கிய நின் வாய்மொழியை கேட்பதென்னாள்
தெருவெல்லாம் மேடைகளில் செந்தமிழைப் பொழிகின்ற
சிறப்புடையார் இவரானோம் தீந்தமிழைச் சுவைத்திடவே


பல்கலைக் கழகங்கள் கலையிழந்து போனதையா !
பார்மீது தமிழாய்வும் பதியிழந்து போனதையா !
செல்வமாய் விளங்கிட்ட சீராளர் போனதன் பின்
செந்தமிழாம் வண்ணமகள் பொட்டிழந்து போனாளே !

நடமாடும் நூலகமாய் வளம்வந்து அறிவூட்டி
நன்னூல்கள் பற்பலவும் நயந்தளித்த நாயகமே
குடத்தினுள் விளக்கான குறைமதியர் மனம்மகிழ
இடம்தந்து போனீரே என்னதான் அவசரமோ ?

**- புசல்லாவை - குறிஞ்சிநாடன்**

# பட்டாம் பூச்சிகள்


சித்திரா சின்னராஜன்



வாலிபத் தாகத்திற்கு
தேன்குடிக்க வட்டமிடும்
பட்டாம் பூச்சிகளே!
பருவச் செடிகளில்
பூத்துக் குலுங்கும்
மங்கை மலர்களை
கசக்கி மணந்தபின்
கைவிட்டுப் பறப்பது
வேறு மலருக்காகவா...?

"எங்கள் இல்வாழ்வு
உல்லாசப் பயணமாகும்" என்று
உறுதி மொழி தந்தவரே!
உறவுப் பாலத்தை
உள்ளத்தில் கட்டிவிட்டு
வாழ்க்கை என்னும் ஓடத்தை
என் கண்ணீரில் மிதக்கவிட்டு
எந்த மாதவியுடன்
கானல்வரிப் பாடலைப்
பாடச் சென்றீர்கள்...?

காதல் கவிதைகளை வரைந்து
என் இதயத்திற்கு
அர்ச்சனை மலர்களாய்
சமர்ப்பணம் செய்தவரே!
இளமை கலையாத
என் வாழ்வுக்கு
சமாதி கட்டிவிட்டு
எந்த மங்கைக்காக
புதுக்கவிதை எழுதத்
தொடங்கி விட்டீர்கள்...?



தினம் தினம்
உங்கள் அன்பு மீதிகளை
என் இதயப் பேரேட்டில்
நிரந்தர வைப்பாகச்
சேமித்து வைத்தேன்


ஆனால் நீங்களோ
நாட்பட்ட காசோலையாய்
என்னை வீசிவிட்டு
புது உறவு தேடிப்
புறப்பட்ட தேனோ?



அன்பரே!
உங்கள் வரவுக்காக
புல்லாங் குழலாய்
பூபாளம் இசைத்தேன்
என்னை
வெந்தணலில்
விறகாய் வீசிவிட்டு
எந்த மோகினியுடன்
தேன் நிலவைக்காண
மோகம் கொண்டீர்கள்?

உங்களை
ஓர் இராமனாக எண்ணியே
என்னை அர்ப்பணம் செய்தேன்
ஏனோ இராவணன் போல்
அசோக வனங்களை நாடி
ஆராதனை செய்கிறீர்கள்!

கணவன் இறந்த பின்பே
ஒருபெண் விதவையாகிறாள்
ஆனால் நீங்கள்
உயிருடன் இருந்து கொண்டே
என்னை விதவையாக
ஆக்கி விட்டீர்களே...!



மஞ்சள் குங்குமம்
மாலை மரியாதை
மங்கலப் பொருளாய்
மணநாளில் தந்தீர்கள்!
தாலியைக் கட்டி
வேலியாய் விட்டீர்கள்!
இப்போது ஏனோ
வேலி தாண்டிய
வெள்ளாட்டுக் கிடாயாய்
வேறு தோட்டங்களில்
மேய்ச்சல் தேடுறீர்கள்!



# கவிஞர் துரையர்

**கே. விஜயன்**

கவிஞர் துரையர் என இலக்கிய உலகில் பவனிவரும் சு. துரைசிங்கம் ஓய்வுபெற்ற கல்லூரி அதிபர். இவருடைய பங்களிப்புகள் கவிதைத்துறை, நாடகத்துறை, கட்டுரை நூல்கள், சிறுவர் நூல்கள், கல்வித்துறை சம்பந்தமான நூல்கள்,அறிவியல் சார்ந்த நூல்கள், தொலைக்காட்சித் தொடர்ப் பிரதியாக்கங்கள் என மிகவும் விரிந்த மட்டத்தில் திகழ்கின்றன. இவற்றைவிட இறுவட்டு வடிவில் கீர்த்தனைகளும் வெளியிட்டுள்ளார். வலம்புரி பத்திரிகையின் ஆசிரியர் பீடத்திலும் பணியாற்றியிருக்கிறார்.

கவிதைத் துறையில் 1972ஆம் ஆண்டில் 'தெரு விளக்கு' நூல் வெளியாகியது. 1985இல் 'கவிக்குரல்' ஒலி நாடாவினை வெளியிட்டார்.

நாடகத்துறையில் 'ஒரு மரம் சரிகிறது' (நாடகப்பிரதி) 'மௌனத்தின் விளையாட்டு' ( பிரதியும் நெறியாள்கையும்) என்பனவற்றுடன் 'எம தர்பார்' நாடகத்தில் ஒரு பாத்திரமேற்றும் நடித்துள்ளார். சில நாடகங்களுக்குப் பாடல்கள் எழுதியுள்ளார். நாடகக் கலைப்பணி என்பதை அத்துடன் நிறுத்திக் கொள்ளவில்லை. ஓர் உணர்வு பூர்வமான கலைஞனின் மனம் ஓய்வு கொள்வதில்லையே. அதன் செயற்பாட்டு உணர்வு ஆழமும் அகலமுமான தாயிற்றே. கந்தரோடை கலாநிலையம் நடத்தியமை, இசையிலும் நடனத்திலும் பயிற்சிகள் மேற்கொண்டமை, பாடசாலைகளிலும் அவை சார்ந்த பகுதிகளிலும் நாடகத் தயாரிப்பு முயற்சிகளில் ஈடுபட்டமை என அக்கலைத்தாகம் விரிவு கண்டது.

இன்றும் அன்னாரின் அக்கலையுணர்வுத்தாகம் ஓய்வு காண்பதாக இல்லை.

இலக்கியக் கூட்டங்களுக்குத் தவறாமல் சமூகமளிப்பார். நிகழ்வுகளையும் உரைகளையும் அமைதியாக அவதானிப்பதும் செவிமடுப்பதுமாக விருப்பார். திடு திடுப்பென எழும்பிச்சென்று இவற்றை 'கிளிக் கிளிக்' செய்வார். அவை வலம்புரியில் நிழற்படங்களாகவும் இலக்கியத் தகவல்களாகவும் பிரசுரமாகும். இலக்கி நிகழ்வுகளென்றால் பல பத்திரிகையாளர்களுக்குக் கசப்பான விஷயம். அரசியல்வாதிகள் பின்னால்தான் விழுந்தடித்துக் கொண்டு ஓடுவார்கள். அத்தகையதொரு கவலையான நிலையில் கலைத்தாகம் மிக்க இப்பெரியவரின் பணி மிக மிக மேன்மையானது அல்லவா! கலை இலக்கியப் பாரம்பரியத்தின் உன்னதமான செயற்பாடுகள் இவையென்றால் அது மிகையல்வே.

கட்டுரை நூல்களாக 'சுன்னாகத்தில் தமிழ் இலக்கிய முன்னோடிகள்', 'ஈழத்து சிறுவர் பாடல் வளர்ச்சி' ஆகிய நூல்களை வெளியிட்டிருக்கிறார். எனினும் துரையரின் முழுக்கவனமும் சிறுவர் பாடல்கள் எழுதுவதிலேயே கழிந்திருக்கிறது. 'எங்களுக்காக, ஆடும் மயில், வயல் செய்வோம், உண்டு மகிழ்வோம், நட்பே உயர்வு, தோட்டத்தில் ஆடு, பாலன் வருகிறான், அம்மன் கவசம், ஒலிப்பதிவு நாடாவும் இறுவெட்டும், பண் சுமந்த பாடல், முன்பள்ளி பாலர்களுக்கான கணிதம், எண்ணமும் வண்ணமும் சித்திர நூல்' என்பன இவரின் இலக்கிய வயலின் அறுவடைகளாகும்.

இன்று ஒரு நாட்டைப்பற்றிய விபரங்களை முழுமையாக அறிவதற்காக இணையத்தளத்தை நாடுகின்றோம். நம் துரையரோ 90 களிலேயே ஆரம்பித்துவிட்டார். '50 நாடுகளை அறியுங்கள் என்பதே நூலின் பெயர். உலகிலுள்ள பல நாடுகளின் முக்கியமான தகவல்களை மாணவர்களும் ஆர்வமுள்ளவர்களும் அறிந்துகொள்ளும் விதத்தில் இந்நூல் அச்சிடப்பட்டிருக்கிறது. அண்மையில் 3 இறுவட்டுகளையும், 5 சிறுவர் நூல்களையும் இவர் வெளியிட்டார். கவிஞர் துரையர் குறித்த இவ்வாக்க இலக்கிய தகவல்கள் ஆன்மிகப்பற்றினையும் சிறுவர் இலக்கியம் மீதுள்ள அவரின் தணியாத தாகத்தினையும் வெளிப்படுத்துகின்றன.

'கவிக்குரல்கள்' என்னும் இறுவட்டு சிறுவர்களுக்கு மட்டுமானதல்ல. இலக்கிய ஆர்வலர்களிடமும் இருக்கவேண்டியதொரு பொக்கிஷமாகும். நமது அரும்பெரும் படைப்பாளிகள் சிறுவர் கவிதைகளை நெஞ்சை ஈர்த்திடும் அருமைத்தமிழில் கவிதை

**நடையில் வாசித்**திருக்கிறார்கள்.செவிக்குள் நுழையும் **வரிகளால் உடல்** சிலிர்க்கும்.

**இவரது** இந்த இறுவட்டில் அமரர் பெனடிக்ற் பாலன் **பாடும் ஒரு** கவிதையைக் கேளுங்கள்:

"மாடாக மலையேறி
மலர்க்கையால் கொழுந்தெடுத்து
நாடாக வளமூட்டும் நம்மவர் உறங்குதற்கு
வீடாக ஒன்றில்லை என்றும் லயன்கள் தானே.
முழுமைக்கும் பொதுமை வேண்டும் என்றார் பாரதியார்
செழுமையுடனே செய்கின்றார் சோஷலிஸ நாட்டார்.

மலையகத் துயரத்தையும், சோஷலிசத்தின் செழுமையையும் அச்சித்தாந்தத்தில் நம்பிக்கை கொண்டு எழுதிவந்த நமது சிரேஷ்ட படைப்பாளிகளில் ஒருவரான பெனடிக்ற் பாலன் தொனியில் அது வெளிப்படுவது சிறப்பாக அமைந்திருக்கிறது. கவிக்குரலில் 27 கலையுலகினரின் கவிதை வாசிக்கும் குரலைக் கேட்க முடிகிறது. அதுவே ஒரு வரப்பிரசாதமாகும். புதுவை, இ.முருகையன், நந்தி, சொக்கன், சிற்பி, சபா ஆகியோரின் அருமையான குரலினைக் கேட்பது இதமாகும்.

சிறுவர் இலக்கியம் மீது துரையருக்கு ஆழ்ந்த பற்று. அது குறித்த தெளிவும், அதன் வரலாறும் நன்கு அறிந்தவர். சிறுவர்கள் வாழும் சூழல், அவர்களுடைய மொழிவளம், வயது கொள்ளும் திறன் என்பனவற்றை கருத்திற்கொண்டு அவர்களின் உளவிருத்திக்கும் அறிவு விருத்திக்கும் மனப்பாங்கு விருத்திக்கு ஏற்றதாய் சிறுவர் படைப்புகள் ஆக்கப்படவேண்டும் என்று துரையர் எடுத்துரைக்கின்றார்.

இன்று சிறுவர் இலக்கியத்தில் இந்தியாவே இலங்கையை விட முன்னணியில் இருக்கிறபோதும் சிறுவர்பாடல்களும் நூல்களும் இலங்கையிலேயே முதலில் தோன்றின என்ற குறிப்புகளை தாராளமாக விரல்நுனியில் வைத்துக் கொண்டிருக்கிறார். கேட்டால்போதும் மலையருவியெனக் கொட்டுவார்.

கவிஞர் துரையரின் இலக்கிய உலக அறிமுகம் 1960ல் இருந்து ஆரம்பிக்கிறது. கந்தரோடை சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவரின் முழுப்பெயர் சுப்பிரமணியம் துரைசிங்கம். 1939ல் இவ்வுலகிற்கு அவதாரமெடுத்த கவிஞரின் முதலாவது கவிதை அன்னாரின் 16ஆவது வயதில் வீரகேசரியில் பிரசுரமானது. பிறகு ஆலம் விழுதென விவேகி, ஈழநாடு, வலம்புரி, ஞானம் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் கவிதைகளாகவும் கட்டுரைகளாகவும் சிறுகதைகளாகவும், வெளிவந்தன. இலங்கை வானொலி, ரூபவாஹினி முதலிய இலத்திரனியல் ஊடகங்களிலும் ஒலி ஒளி பரப்புகளாகப் பிரகாசித்தன.

கவிஞரின் நற்சேவைகளுக்கும் இலக்கியப் பங்களிப்புகளுக்குமுரித்தான வாழ்த்துக்களும் விருதுகளும் பட்டங்களும் அவரைச் சென்றடைந்துள்ளன. ஆசிரியராக, அதிபராகப் புரிந்த நற்பணிகளுக்காக 'நல்லாசிரியர்', 'சிறந்த அதிபர்' விருதுகள் பெற்றுள்ளார். இலக்கியப் பங்களிப்புகளுக்காக இசைப்பாவலர், கலாபூஷணம், சாமஸ்ரீ, தேசகீர்த்தி ஆகிய பட்டங்களையும் விருதுகளையும் தனதாக்கிக் கொண்டார்.

பவளவிழாவை எட்டிவிட்ட இந்த நல்லுணர்வுகளில் கனிந்த கவிஞர் நட்புக்கு இனியவர். கொழும்பு வாழ்க்கையை ஓய்வு வாழ்க்கையாகக் கருதி ரீவியும் படுக்கையும் தானும் என்று முடங்கிவிடாமல் இலக்கிய உலகில் சதா சஞ்சாரமிடும் பறவையாக வாழ்கிறார்.

இலக்கிய நண்பர்களும் உரையாடல்களும் நூல் வெளியீடுகளும் கூட்டங்களும் அவருடைய இனிமையான உறவுகள். 1960களில் யாழ். இளம் எழுத்தாளர் சங்கம் நடத்திய சிறுகதைப்போட்டியில் பரிசு பெற்றதன்மூலம் எனது இலக்கியப் பிரவேசம் நிகழ்ந்தது. அதனை நடத்தியவர்களில் இந்த அருமைக் கவிஞரும் ஒருவர். அதை இன்றும் பெருமையாகச் சொல்கிறார் இவர். அந்தக்கூற்று இலக்கிய உலகம் எனக்கு அளிக்கும் மகுடமாக மகிழ்கிறேன்.

## BREAKING NEWS



**சபையோர்களே..! அரசின் பொருளாதார சீர்கேடுகளை உங்களுக்கு விளக்கிக் கூறுவதற்காக ஏற்பாடு செய்யப் பட்டிருந்த பேச்சாளர் சற்று முன்பு தான் அரசுடன் இணைந்து கொண்டதால்... அவருடைய வண்டவாளங்களையும், அரசியல் தில்லு முல்லுகளையும் உங்களுக்கு எமது பிரதான பேச்சாளர் விரிவாக விளக்கிக் கூறுவார் என்று அறியத் தருகிறோம். தயவு செய்து தொடர்ந்து எங்களுடன் இணைந்திருங்கள்.**

சிறுகதை

# காத்தான்...

பிரமிளா பிரதீபன்

முத்துக்கொட்டை போட்டுப் பார்த்து குறி சொல்வதில் காத்தானுக்கு நிகர் காத்தானேதான்.

அந்த ஆறு முத்துக்கொட்டையையும் அணுவணுவாய் ஆராய்ந்து ஆயிரம் அர்த்தங்கள் சொல்லத்தெரிந்த ஒரே மனிதர் காத்தானாகத்தான் இருக்கும்.

காத்தானுக்கு அடிக்கடி குளிக்கப் பிடிக்காது.... முடிவெட்டவோ, நகம் வெட்டவோ பிடிக்காது.. எல்லாமே எப்போதாவதுதான். ஒரு பழைய சாரத்தை உயர்த்திக் கட்டி, அதை ஒரு மடி மடித்து பாதியாய் கட்டிக்கொள்வார். ஒரு காவி நிற ஷேட்டை எப்போதும் அணிந்திருப்பார். ஒரு வேளை வெள்ளை நிற ஷேட் ஒன்றுதான் அப்படி நிறம்மாறி போயிருக்குமோ என்பது பலரது சந்தேகம். தோளில் ஒரு மஞ்சள் நிற மெல்லிய டவல். தலைமுடியிலும் தாடியிலும் ஆங்காங்கே வெள்ளை முடிகள் துருத்திக் கொண்டு நிற்கும். அவர் செருப்பு போட்டு யாருமே பார்த்ததில்லை. முழுப்பாதத்தையும் நிலத்தில் பதிக்காமல் குதிகாலை சற்று உயர்த்தி அடி வைத்து நடப்பார்.

மொத்தத்தில் காத்தன் ஒரு ஊத்தையான உருவமாய் அனைவர் மனதிலும் பதிந்துபோய் இருந்தார்.

ஊருக்குள் யாருக்காவது உடம்புக்குக் கொஞ்சம் முடியாமல் போனால் போதும். காத்தன்தான் வைத்தியர்.

முத்துக்கொட்டையை குலுக்கிப் போட்டு, அலசி தேடி....... ஆராய்ந்து இறுதியில் செத்துப்போன யாருடைய ஆவியாவது பிடித்திருப்பதாய் கண்டுபிடித்து விடுவார். அதற்குப் பரிகாரமும் சொல்வார்.

அவர் முத்துக்கொட்டை போட்டுப் பார்க்கும் அந்தத் தருணம் விநோதமாயும் கொஞ்சம் பயம் கலந்ததாயும் இருக்கும்.

எந்த வீடானாலும் சரி இஸ்தோப்பில் இடது பக்க மூலையில்தான் ஒரு துணி விரித்து அமர்ந்து கொள்வார். ஒரு பத்து நிமிட நேரத்திற்கு கண்கள் மூடி தியானம் செய்வதையொத்து முணு முணுத்தபடியே இருப்பார். வீட்டு உறுப்பினர்கள் அனைவரும் பாய் போட்டு சுற்றி அமர்ந்துகொள்ள வேண்டும். நோய் பிடித்துள்ள குறிப்பிட்ட நபர், காத்தனுக்கு சரியாய் எதிர் பக்கத்தில் ஒரு வெள்ளைத் துணி விரித்து அமர்ந்து கொள்ள வேண்டும்.

யாரும் பேசாமல் கொள்ளாமல் அமர்ந்து மௌனித்து இருப்பார்கள். திடீரென காத்தான் கண்களைத் திறப்பார். கீழே குனிந்துகொண்டு அவசரமாய் ஒரு செம்பு தண்ணீர் கேட்பார். ஒரு வெற்றிலை கொண்டு வரச் சொல்லுவார். பக்கத்தில் விபூதித் தட்டை வைத்துக்கொண்டு வேறோரு தட்டில் ஒரு பிடி சாம்பலை எடுத்துவரச் சொல்லுவார். வாயினுள் ஏதேதோ முணுமுணுவென கூறியபடி வலது கையினுள் பொத்தி வைத்திருந்த சிப்பிக் கொட்டை ஆறையும் குலுக்கி விசிறி நிலத்தில் போடுவார்.

பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கு என்ன சொல்லப்போகிறாரோ என்று வயிறு கலங்கிக் கொண்டு இருக்கும். தரையில் விழுந்த முத்துக் கொட்டைகளை நன்றாக உற்றுப்பார்ப்பார்...... பின் நகம் வெட்டப்படாத தன் நெடிய நீண்ட விரல்களால் குவித்து........ ஒரு நொடி அவதானிப்பார். பின்னர் இன்னொரு தடவையும் அவற்றை கையில் வாரி எடுத்து, நன்றாய் குலுக்கி தாயம் போடுவது போல் போடுவார். மீண்டும் அவதானிப்பு....... மீண்டும் முணுமுணுப்பு......... இன்னொரு முறையும் இப்படியே செய்து பார்த்தவராய், தலையை ஆட்டிக்கொண்டே இருப்பார். உதட்டைப் பிதுக்கி வெளித்தள்ளி முகத்தில் ஒரு குழப்ப நிலையைக் காட்டுவார்.

எதிரில் உள்ளவர்கள் பரிதவித்துப்போய், அவர் சொல்லும்வரை மௌனமாய் காத்திருப்பார்கள்.

“காத்துப் பட்டிருக்குதம்மா... ஒரு
காத்துப் பட்டிருக்குது....... புள்ளையை
ஒரு காத்து தீண்டியிருக்கு..”

ஒரு நெடிய மௌனம்............ பின் அவராகவே தொடருவார்.

“புள்ளைக்கு ஒரு கெழமையா சரியா இயங்க முடியாம இருக்கு. தாயி.... இயங்க முடியாம இருக்கு..”

ஒத்துக் கொள்பவர்களைப்போல எதிரில் உள்ளவர்கள் தலையசைப்பார்கள். அடுத்தது அவர் என்ன சொல்லப் போகிறார் என்று பயத்துடன் பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

விபூதியை அள்ளி அந்த குறிப்பிட்ட நபரின் மீது நெற்றியில் அழுத்தி வைத்துக் கொண்டே ஏதோ

முணுமுணுவென சொல்லுவார். பின் படாரென பட்டையாய் அந்த விபூதியைப் பூசி விடுவார்.

"ஓம்......சி............ சி.......... சி.............."

என்று ஏதோ வேக வேகமாய் சொல்லிவிட்டு

"புள்ள கோடிப்பக்கம் தனியாப் போயிருக்கு.......

ஸ்..... ஸ்..... ஆறுமணிப்பட்டு தனியாப் போயிருக்கு"

எல்லோரும் மௌனமாக இருப்பார்கள்.

"போயிருக்கா .....................?"

குரலை உயர்த்தி அவசரமாய் கேட்பார். அப்போது அவர் கண்கள் மூடியிருக்கும்.

அநேகமாய் ஆமாம் என்றுதான் எதிர்பக்கத்தில் இருந்து பதில் வரும்.

அந்த செம்புத்தண்ணீரை அருகில் எடுத்து, உற்றுச் பார்க்கச் சொல்லுவார். கொஞ்சம் சாம்பலை அந்த செம்பு நீரிற்குள் தூவி, தானும் அதைப் பார்த்து.... பின் வீட்டில் உள்ள அனைவரையும் அதனைப் பார்க்கச் சொல்லுவார்.

குறிப்பிட்ட நோயாளி நபருக்கு அந்தத் தண்ணீரைப் பருகக் கொடுத்து......., கொஞ்சக் காலத்திற்கு முன் இறந்துபோன யாருடைய பெயரையாவது கூறி, அவருடைய ஆவி பிள்ளைக்கு பட்டிருந்ததாகவும், இனி சரியாய் போய்விடும் என்றும் அவர் கூறும் விதம் அனைவரையும் நம்பிக்கையுடன் தெளிவுற வைக்கும்.

பின் அந்த செம்புத் தண்ணீரைக் கொடுத்து மூன்று தினங்களுக்கு அந்த நீரில் விழிக்க வேண்டும் என்றும் காலையும் மாலையும் அதில் கொஞ்சம் பருகி முகமும் கழுவ வேண்டுமொனவும் கட்டளையிடுவார்.

அநேகமாய் காத்தானது குறிபார்க்கும் சம்பவம் இப்படித் தான் நிகழ்வதுண்டு.

ஊரில் உள்ள நிறைய பெரிசுகளுக்கு இதில் பெரிய நம்பிக்கை. காத்தானிடம் குறிபார்த்து, மூன்று தினங்களுக்குப் பிறகு...... யாருக்காக இருந் தாலும் உடம்பு குணமடைந்து போவது, எல்லோருக்கும் பெருத்த ஆச்சிரியமாக இருந்தது.

அதனாலோ என்னவோ... தட்சணையாக நூற்றியொரு ரூபா காசும் கொஞ்சம் மரக் கறியும் கொடுத்துப் பழக்கியிருந் தார்கள்.

காத்தானும் எத்தனை பணியாக இருந்தாலும் சரி யார் எப்போது கூப்பிட்டாலும் தயங் காமல் வந்துவிடுவார். முகம் சுளிக்காமல் குறிபார்ப்பார்.

ஊரில் உள்ள இளம் பிள்ளைகள் சிலருக்கு காத்தான் மீது மெல்லிய சந்தேகம். இந்த ஆள் ஏமாத்துறானோ! நூறு ரூபாய்க்காக பூ சுத்துறானோ...?



"சீசி....... அப்படியெல்லாம் சொல்லக் கூடாது.....?" என்று யாராவது ஒரு பெரிசு சலித்துக்கொள்ளும்.

முத்துக்கொட்டை போட்டுப்பார்ப்பது மட்டுமல்லாமல் அரிவாளில் ஏறி நின்று குறிசொல்லவும் காத்தானுக்கு முடியும்.

அதுதான் கொஞ்சம் இடித்தது. அரிவாள் வெட்டும் என்பது எல்லோருக்கும் தெரியும். அதுவும் பளீரென தீட்டப்பட்டு பளபளவென மினுங்கும் அந்த கத்தி நுனியில், தேசிக்காய் குத்தி.... அந்த அரிவாளைத் திருப்பி வைத்து வெட்டும் பக்கத்தில் ஏறிநின்று குறி சொல்வதென்றால் சும்மாவா பின்னே........!!!

ஏதாவது கோயில் திருவிழாவிற்குத்தான் இப்படி நடப்பதுண்டு.

ஒரு தடவை சில பொடியன்கள் ஒன்று சேர்ந்து ஒரு திட்டம் தீட்டினார்கள். எப்படியாவது அந்த கத்தியைத் தொட்டுப்பார்க்க வேண்டும். ஒரு வேளை மொட்டைக் கத்தியில் ஏறிநின்று ஏமாற்றுவேலை நடக்கின்றதோ.... என்னவோ......?

இந்த சோதனை நடவடிக்கையில் சில பொடியன்கள் பின் வாங்கினர்.

"அடேய் வேணாண்டா.... சாமி சாபம் கொடுக்கும்......"

"சாபமும் மண்ணும்..... நான் பாரு அந்தாள் வேஷத்தைக் கலைக்கிறேன்.........."

துஷி என்ற ஒருவன் மட்டும் உறுதியாய் இருந்தான்.

துஷியை இரண்டொரு நண்பர்கள் தட்டிக் கொடுத்து ஊக்கப்படுத்தினார்கள்.

"நீ பயப்படாத மச்சான்........ இந்த முற எப்படியாவது தொட்டுப் பார்த்துருவோம்......"

திருவிழா ஆரம்பமானது. குறிசொல்லும் வைபவம் கோலாகலமாக ஆரம்பித்தது. ஒரு பக்கம் தீ குதிப்பு......... ஒரு பக்கம் வேல் குத்தல்........ பக்தி பரவசமாய் இருந்தது அந்த கோயில். தீ மிதிப்பு முடிந்ததும், காத்தானது குறி சொல்லல் ஆரம்பமானது.

காத்தான் மொட்டை மேனியுடன், ஒரு சிறிய மஞ்சள் வேட்டியைக் கட்டிக் கொண்டு.... தலையுடன் மூன்று குடம் நீர் ஊற்றிக் கொண்டான். பட்டையாய் விபூதியை அள்ளிப் பூசிக் கொண்டான். கூட்டம் நிரம்பி வழிந்தது. கூட்டத்தோடு கூட்டமாய் துஷியும் போய் நின்றுகொண்டான்.

பெரிய துணிவாய் கதை விட்டிருந்தாலும் அவனுக் குள்ளும் ஒரு சிறிய பயம் இருக்கத்தான் செய்தது. எப்படிச் சாத்தியம் இது......? எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கும் போது என்னவென்று

கைவைத்துப் பார்ப்பது....? அடித்துத் துவைத்துவிட மாட்டார்களா....! ஒரு சிறிய இடைவெளி கிடைத்தால் கூட படாரென தொட்டுப்பார்த்து விடலாமே... சந்தர்பத்தை எதிர்பார்த்து அருகிலேயே போய் நின்றுகொண்டான்.

குறி சொல்லி முடிய..... முடிய... சிலர் காத்தானது காலைத் தொட்டு வணங்கினர். தானும் போய் குனிவது போல் நின்று காலைத் தொட்டு கும்பிடும் அந்நொடியில் கத்தியின் ஓரத்தில் லேசாய் பெருவிரலை அழுத்தி உரசிப் பார்த்தான்.

அவ்வளவுதான் நறுக்கொன்று பெருவிரல் வெட்டப்பட்டு இரத்தம் லேசாய் கசிந்தது. துஷி பயந்து அதிர்ச்சியடைந்தான். ஒரே ஓட்டமாய் கூட்டத்தில் இருந்து விலகி பின்னால் ஓடினான்.

நல்லவேளை இதை யாருமே பார்க்கவில்லை. காத்தான் சாமியென்றால் இதை அறிந்திருப்பார் தானே........ ! துஷிக்கு வியர்த்துக் கொட்டியது. பெருவிரல் நறுக்கென்று தெறித்து வலியெடுத்தது.

துஷியின் மற்றய நண்பர்களும் ஓடி வந்து அவனைச் சூழ்ந்துக் கொண்டார்கள்.

"என்னடா............ ஆச்சு...... ?"

"என்னடா.......... ஆச்சு....... ?"

"அந்த ஆள் நிண்ட எடத்த தொட்டியாடா...... ?.

"உண்மையாவே வெட்டுற கத்திடா அது...... நான் ஓரத்தை தான் தொட்டேன்"

துஷி பயந்து போய் பேசிக் கொண்டிருந்தான்.

"காத்தான் கண்டுபிடிச்சிட்டா என்னடா செய்றது.....?"

அவர்கள் கலைந்து போனார்கள். அதன் பிறகென்றால் அவர்களும் காத்தானை நம்பத் தொடங்கியிருந்தார்கள்.

இப்படியே அந்த ஊர் மட்டுமல்லாது, வேறு ஊர்களில் இருந்தும் காத்தானைப் பார்க்க நிறையப்பேர் தேடி வரத்தொடங்கினார்கள். குறிப்பிட்ட காலத்திற்குப் பின் நாட்டில் உள்ள சிங்களவர்களும் காத்தானைப் பார்க்க விருப்பப்பட்டார்கள்.

இப்போதெல்லாம் காத்தான் யார் வீட்டுக்கும் போவதில்லை. அவரைத்தேடிதான் எல்லோரும் போக வேண்டும். தட்சணையும் கூடியிருந்தது. குறைந்தது முந்நூறு ரூபாயாவது வைக்க வேண்டும்.

சிங்களவர்கள் என்றால் நெல் எல்லாம் மூட்டைக் கணக்கில் கொடுப்பதாய் கேள்வி.

காத்தான் தன் வீட்டிற்கு முன் உள்ள ஒரு சிறிய இடத்தை துப்புரவு செய்து, அதில் ஒரு காளி படத்தை வைத்து பூசை செய்யத் தொடங்கியிருந்தார். அது ஒரு சிறிய கோயிலாக உருமாறியிருந்தது. அந்தக் கோயிலில் நிறைய சக்தி இருப்பதையும் பரவலாகப் பேசப்பட்டது.

யாருக்கு என்ன பிரச்சினை யென்றாலும் அந்தக் கோயிலில்தான் காணிக்கை கட்டுவார்கள். யாருடனாவது சண்டையென்றால், ஒரு ரூபாய் நாணயத்தை இரண்டாய் வெட்டி..... நாசமாப் போகட்டும் என்று சபித்து விட்டுக் கட்டுவார்கள்.

நாட்கள் செல்லச் செல்ல காத்தானிடம் பணம் கொஞ்சம் புரள ஆரம்பித்தது. அவரது செய்களிலும் மாற்றத்தை அவதானிக்க முடிந்தது.

தோட்டத்தில் வேலைக்கு போவதை நிறுத்துவிட்டு முழு நேரமும் பூசை வேலைகளை செய்யத் தொடங்கியிருந்தார்.

நடையுடை பாவனையெல்லாம் கூட ஒரு பூசாரியை ஒத்திருந்தது. முந்தி போல் அல்லாது சில மந்திரங்களை மனனம் செய்து வைத்திருந்தார்.

காத்தானது மனைவிக்கும் இந்த விடயத்தில் பெரிய பெருமிதம். யார் யாரெல்லாமோ தன் கணவனைத் தேடி வருவதாய், மலையில் வேலை செய்யும் பொழுது வாய் ஓயாமல் சொல்லிக்கொண்டே இருப்பாள். இப்போதெல்லாம் நல்ல வடிவான தாவணி கட்டத் தொடங்கியிருக்கிறாள்.

தன் ஒரே மகளுக்கு ஒரு ஜோடி தோடு செய்துவிட வேண்டுமென்ற பல நாள் ஆசை கூட நிறைவேறியிருந்தது. பத்து வருடங்களாய் பிள்ளையில்லாமல் காத்திருந்தபின் தவமாய் பெற்றெடுத்த பெண் குழந்தை அவள்.

அந்தப் பெண் குழந்தை மீதும்....... தன் மனைவிமீதும் அளவில்லாத பாசம் காத்தானுக்கு.

தன் பூசையால் கிடைக்கும் அத்தனை வருமானத்தையும் அவர்களுக்காவே செலவழிக்கத் தொடங்கியிருந்தான்.

தோட்டமும் முன்புபோல் அல்லாமல் சந்தோஷமாயும் செழிப்பமாயும் இருப்பதால் எல்லோரும் நம்பத் தொடங்கினர். அந்த தோட்டத்தின் ஒரு முக்கியப் புள்ளியாய் காத்தான் விளங்கினார்.

ஊரின் பிரதான கோயிலைவிட காத்தானது கோயிலின் புகழும் குறிபார்த்தலும் பல இடங்களிலும் பிரசித்தமாயிருந்தது. ஏகப்பட்ட நோயாளர்கள் வைத்தியரிடம் செல்வதை விட காத்தானிடம் செல்வதையே விரும்பினார்கள். காத்தானை அத்தனை தூரம் நம்பத் தொடங்கியிருந்தார்கள்.

அந்த நம்பிக்கையினாலோ.. என்னவோ, காத்தான் விபூதி பூசிய மாத்திரமே அவர்கள் முகத்தில் ஒரு தெளிவு பிறந்தது.

அன்று காலையில் இருந்தே காத்தானின் மகளுக்கு உடம்பு கொதித்தது. குளிர் காய்ச்சலாய் இருக்க வேண்டும். விட்டு விட்டு உடம்பு கொதித்தது. மகள் துவண்டு போய் படுத்திருந்தாள். ஒரு வாய் தண்ணீரேனும் குடிக்க மறுத்தாள். கண்களின் நிறமும் லேசாக மங்கலாகிக்கொண்டு போவதை காத்தான் மனைவி அவதானித்தாள்.

"புள்ளைக்கு விபூதி கொஞ்சம் மந்திரிச்சி போடுங்க...."

அவள் காத்தானை நச்சரித்துக் கொண்டே இருந்தாள்.

காத்தான் மெதுவாக பிள்ளையின் தலையை தடவிக் கொடுத்தார். பிள்ளை நன்றாகவே சோர்ந்து படுத்திருந்தாள்.

"சுருக்கா ஏதாவது பண்ணுங்க..... பயமா இருக்கு"

காத்தான் விரைவாகச் செயல்பட்டார். ஒரு ஆட்டோவை கூட்டிவர ஆள் அனுப்பினார். பிள்ளையை தூக்கி ஆட்டோவில் போட்டுக் கொண்டு வேகமாக.... மிக வேகமாக டவுன் ஆஸ்பத்திரியை நோக்கிச் சென்றார்.


அவரது மனதில் பிள்ளைப்பாசம் வழிந்தோடிக் கொண்டிருந்தது.

படைப்பியல்புக் கட்டுரை

ஆசி கந்தராஜா - அவுஸ்திரேலியா

(சென்ற இதழ் தொடர்ச்சி)

# கருத்தக் கொழும்பான்





அந்த நாளும் வந்தது!

உடையார் மாமாவும் நானும் தென் ஆபிரிக்காவின் டேர்பன் நகருக்குப் பறந்தோம். தென் ஆபிரிக்காவின் தலைநகரான யோகான்ஸ்பேர்க்கில் இறங்கி உள்ளூர் பறப்பின் மூலம் டேர்பனை அடைந்தோம். தென் ஆபிரிக்காவில் டேர்பனிலும் அதன் அயலிலும் இந்தியர்கள் செறிவாக வாழ்ந்து வருகின்றார்கள். டேர்பன் ஒரு துறைமுகநகரம். தென் ஆபிரிக்காவின் வெள்ளையர்களின் அரசு துறைமுக வேலைகளுக்காக இந்தியர்களை கூலிகளாக கொண்டு வந்திருந்தார்கள். அவர்களுள் தென் இந்தியர்களே அதிகம். பெரும்பான்மையானவர்கள் அன்றைய மதராஸ் மாகாணத்தில் வாழ்ந்த தமிழர்கள். இவர்கள் தவிர குஜராத் மாநிலத்திலிருந்து வந்தவர்களும் தென் ஆபிரிக்காவில் வசிக்கிறார்கள். இவர்கள் கிழக்கு ஆபிரிக்க நாடுகள் பலவற்றிலும் வணிகர்களாக குடியேறியவர்கள். அவர்கள் தமது வணிக முயற்சிகளை தென் ஆபிரிக்காவின் டேர்பன் நகரம்வரை விரிவு படுத்தியுள்ளார்கள். இவர்களது வணிக நிறுவனங்களில், முன்னால் நிற்கும் விற்பனையாளர்கள் ஆபிரிக்க கறுப்பர்கள். குஜராத்தி முதலாளிகள் பின்புலத்தில் இருந்து கொண்டு சூத்திரக்கயிறுகளை லாவகமாக இழுத்துக் கொண்டிருப்பார்கள். இந்தக் குஜராத்தியர்களுடைய தென் ஆபிரிக்க தொடர்புகளே மகாத்மா காந்தியைத் தென் ஆபிரிக்காவுக்கு கொண்டு வந்தது என்பது தனிக்கதை. இருபதாம் நூற்றாண்டின், ஐம்பதாம் அறுபதாம் ஆண்டுகளில், தென் ஆபிரிக்காவில் இன ஒதுக்கல் கொள்கை கடுமையாக அமுலாக்கப்பட்டுக் கொண்டிருந்தது. கறுப்பர்களுக்கும் இந்தியர்களுக்கும் உயர்கல்வி உட்பட பல்வேறு உரிமைகள் அப்போது மறுக்கப்பட்டிருந்தன. இதன் காரணமாக இந்திய நலன் விரும்பிகளின் முயற்சியால் 1960ஆம் ஆண்டு University College for Indians என்னும் கல்வி நிறுவனம் தென் ஆபிரிக்காவின் Salisbury தீவில் நிறுவப்பட்டது. இன ஒதுக்கல் கொள்கைக்கு பயந்த இந்திய மாணாக்கர்கள் இக்கல்வி நிறுவனத்தில் அப்போது குறைவாகவே சேர்ந்தார்கள். இருப்பினும் எண்பதாம் ஆண்டுகளின் ஆரம்பத்திலே தோன்றிய இன ஒதுக்கலுக்கு எதிரான எதிர்ப்பலை பெருமளவு இந்திய மாணாக்கர்களை இக்கல்வி நிறுவனத்தில் சேர்ந்து படிக்கத் தூண்டியது. இந்த எழுச்சியின் காரணமாக இந்தியர்களுக்கான பல்கலைக்கழகக் கல்லூரியாக இருந்த இந்த நிறுவனம் முழுமையான பல்கலைக்கழக அந்தஸ்தைப் பெற்று 1971 ஆம் ஆண்டு University of Durban - Westville என்னும் பெயரைப் பெற்றது. 1984 ஆம் ஆண்டு தொடக்கம் இப்பல்கலைக் கழகத்தில் இந்திய மாணாக்கர் மட்டுமல்லாது கறுப்பர்களும் வெள்ளையர்களும் சேர்ந்து படித்துப் பயன் பெறுகிறார்கள். பெரும்பான்மையாக இந்திய விரிவுரையாளர்களே பணிபுரிந்த இக்கல்வி நிறுவனத்தில் தற்போது மாணாக்கர்களின் இன விகிதாசாரத்துக்கு ஏற்ப கறுப்பர்களும், ஒரு சில வெள்ளைக்காரர்களும் பணிபுரிகிறார்கள்.

University of Durban பூங்கனியியல் பிரிவு மாம்பழ ஆராய்ச்சி மாநாடொன்றை சர்வதேச ரீதியாக ஒழுங்கு செய்திருந்தது. இம்மாநாட்டில் 'அவுஸ்திரேலியாவில் மாம்பழச் செய்கையின் சாதகபாதகங்கள்' என்னும் தலைப்பில் நான் பணிபுரியும் பல்கலைக்கழகத்தின் சார்பில் ஆராய்ச்சிக் கட்டுரையொன்றைச் சமர்ப்பிக்கும்படி நான் அழைக்கப்பட்டிருந்தேன். இது உடையார் மாமாவுக்கு தெரியவந்தபொழுதுதான் என்னுடன் கூடவே தென் ஆபிரிக்காவுக்கு வந்திருந்தார்.

உடையார் மாமாவுக்கு ஆங்கில அறிவு அப்படி இப்படித்தான் என்பது பரமரகசியமல்ல. விஞ்ஞான கலைச் சொற்கள் சுட்டுப் போட்டாலும் அவருக்கு விளங்கியிருக்க மாட்டாது. இருப்பினும் மாநாட்டின் இடைவேளையில் இந்தியாவில் இருந்து வந்திருந்த விவசாய விஞ்ஞானிகளுடன் நன்கு பழகி பலவகையான தகவல்களைச் சேகரித்துக் கொண்டார். இரவில் நாம் தங்கியிருந்த விடுதிக்கு வந்தவுடன் தான் சேகரித்த தகவல்களை 'ஒரு சின்னப்பிள்ளை தன் தாய்க்கு கதை சொல்வதுபோல்' ஆர்வமுடன் எனக்கு ஒப்பிப்பார்.

ஒரு நாள் ஒரு சின்னப்போத்தலில் 'Cultar' என்னும் இரசாயன திரவத்தை கொண்டுவந்து காட்டினார். மாநாட்டு மண்டப விறாந்தையில் விவசாய மருந்துக் கொம்பனிகள் பல்வேறு விவசாய

உபகரணங்களையும் மருந்துகளையும் காட்சிக்கு வைத்திருப்பதாகவும் அங்கு Cultar திரவத்தை அன்பளிப்பாக கொடுத்ததாகவும் சொல்லி மாமரத்துக்கு இதை தெளிக்கலாம் எனச் சொன்னதாகவும் சொன்னார்.

மாமா கொண்டுவந்த திரவம் மாமரத்தின் வளர்ச்சியைக் குறைத்துக் குட்டையாக வைத்திருக்கும். இதன் பயன்பாட்டை எவ்வாறு உடையார் மாமாவுக்கு விளக்குவது என குளம்பிப் போயிருந்தேன். மாமாவின் கைதடி வீட்டில் உள்ள ஒரு பரப்பு காணியை மூன்று கறுத்தக் கொழும்பான் மாமரங்கள ஆக்கிரமித்திருந்ததாக, ஒருதடவை கதையோடு கதையாக சொல்லியிருந்தார். மாமரத்திலே பூக்கள் எங்கே அதிகமாகத் தோன்றும்? என அவரது விவசாய அறிவைச் சோதிப்பவனைப்போல கேட்டேன்.



இளம் கிளைகளின் நுனிக்குருத்தே பூக்களாக மாறுவதாகவும், பெரியமரங்களின் கிளைக்கூடலின் உட்பகுதியில் இளம் இலைக் குருத்துக்கள் இல்லாததால் மரத்தின் கிளைக்கூடலின் (Vegetative Crown) வெளிப்பகுதியில் மாத்திரம் பூக்கள் தோன்றி மாங்காய் காய்ப்பதாகவும் சொன்னவர் உட்பகுதி கொப்புக்களில் உள்ள கிளைகளில் மிக அரிதாகவே பிஞ்சுகள் வருவதாகவும் மேலதிக தகவலை சொல்லி என்னை அசத்தினார்.

ஒரு பரப்புக் காணியில் சின்ன கிளைக்கூடல் கொண்ட எத்தனை மாமரங்கள் நடலாம் என மேற்கொண்டு கேட்டேன். ஆறு மரங்களாவது நடலாம் என்றார். மூன்று பெரிய மரங்களின் கிளைக் கூடலின் வெளிப்புறத்தில் காய்க்கும் மாங்காய்களைவிட சிறிய கிளைக்கூடல்கள் கொண்ட ஆறு மாமரங்களில் அதிக மாங்காய்கள் பெறலாமல்லவா என நான் கேட்டேன்.

'உண்மைதானடா தம்பி, அதுக்காகத்தான் தின்னவேலி பாமிலை மாமரங்களைக் கவ்வாத்துப் பண்ணிற வங்கள்'என்று தமது அநுபவத்துக்குப் புதிய விளக்கம் கண்ட குதூகலத்தில் சொன்னார். கவ்வாத்துப் பண்ணுவது ஒரு முறை. இன்னுமொரு முறை நீங்கள் கொண்டுவந்த Cultar என்ற மருந்தை தெளிப்பது அல்லது கரைத்து மரத்தின் அடிக்கு ஊற்றுவது. இந்த மருந்தை PB2 என்றும் கூறுவதுண்டு. இது இம்மருந்தின் இரசாயனப் பெயரான 'Paclobutrazol' இன் சுருக்கம் என விளக்கம் சொன்னேன்.

பள்ளிக்கூட மாணவன்போல் நான் சொல்லும் ஒவ்வொரு தகவலையும் கவனமாக குறிப்புப் புத்தகத்தில் பதிந்து கொண்ட உடையார் மாமா, தான் எதிலும் சுழியனே என்பதை மீண்டும் நிரூபித்தார்.

(4)

உடையார் மாமா டேர்பன் நகரில் இருந்தபோது சும்மா இருக்கவில்லை. அது அவர் சுபாவமும் அல்ல. தனக்குத் தெரிந்த 'கத்திப் பிடி' ஆங்கிலத்தை வைத்துக் கொண்டு சகல மட்டத்திலும் சிநேகிதர்களைப் பிடித்துக் கொண்டார்.

கலாநிதி மன்றீ (Dr. Mundree) என்னும்இளைஞன் ஒருவன் இவருடன் வாஞ்சையுடன் ஒட்டிக் கொண்டான். அங்கிள் என்று அழைத்து இவருக்கு சகல உதவிகளையும் செய்தான். இதனால் உடையார் மாமா எனக்குத் தொல்லை தருவதைத் தவிர்த்து மன்றீயுடன் பல இடங்களுக்கும் போய்வரத் துவங்கினார். இந்த இளைஞனை நான் நன்கு அறிவேன். இவனின் தாவர ஆராய்சிகள் மிகவும் பிரசித்தமானவை. பல ஆராய்சிக் கட்டுரைகளை சர்வதேச விஞ்ஞான சஞ்சிகைகளில் பிரசுரித்துள்ளான். விவேகமான ஆராய்சியாளான். டேர்பன் பல்கலைக் கழகத்தில் மதிக்கப்படும் விரிவுரையாளனாக பணிபுரிகின்றான்.

ஒரு நாள் உடையார் மாமா அந்த இளைஞனை என் இருப்பிடம் கூட்டிவந்தார். அவனுடன் ஓர் இந்திய பெண்ணும் வந்திருந்தாள். செல்வி டாக்டர் ஐயர் என அவளை அறிமுகப்படுத்தி தன்னுடைய ஆராய்ச்சிகளிலே அவள் பெரிதும் ஈடுபாட்டுடன் கூட்டுச் சேர்ந்திருப்ப தாகவும் கூறினான்.

ரஸ்பர குசலம் விசாரிப்புக்கு மத்தியில் அவுஸ்திரேலியாவில் புலம் பெயர்ந்த சிறார்களுக்கு 'தொடர்பு கொள்வதற்கும் கருத்துப் பரிமாற்றத்துக்கும்' ஏற்ற வகையில் எழுதப்பட்ட புத்தகத்தை கலாநிதி மன்றீக்கு அனுப்பி வைக்க முடியமா? என உடையார் மாமா என்னைக் கேட்டார்.

'டொக்டர் மன்றீக்கா...?' என வியப்பு மேலிடக் கேட்டேன்.

அவன் வெள்ளைக்காரன் போல் தோற்றமளித் தான். அவன் பெயரும் தமிழ் பெயர் போல் தோன்ற வில்லை. இவனுக்கு ஏன் தமிழின் மேல் ஆர்வம்?

இப்படி என் தலையிலே கூத்தாடிய கேள்விகளே என் வியப்புக்கு காரணம். என் தடுமாற்றத்தினை

புரிந்து கொண்ட உடையார் மாமா, 'நீ என்ன யோசிக்கிறாய் என்று சொல்லட்டே? இவன் தமிழ் படிக்க ஆசைப்படுகிறான். இவன் ஒரு பச்சைத் தமிழன். இவனுடைய முன்னோர்கள் தமிழ் நாட்டில் இருந்து வந்தவர்கள். இவனுடைய கொள்ளுத் தாத்தாவின் பெயர் நாராயண-மந்திரியாம். அவர் கூலியாக வந்த காலத்தில் நாராயண'மந்திரி' என தன் பெயரைச் சொன்னது புரியாமல் பதிவேட்டில் வெள்ளையன் மன்றீ (Mundree) என பதிந்து விட்டானாம். அதுவே இன்றும் நிலைத்துவிட்டது' என்று அவனது பூர்வீகத்தை எடுத்துச் சொன்னார். அவனும் அதை ஆமோதிப்பவன்போல் புன்னகைத்தான். எவ்வளவு தலைமுறைகள்!

இந்த நரட்டின் வாழ்க்கையின் தன்மையுடன் கரைந்துவிட்டன. யதார்த்தம் இவ்வாறு இருக்கும் போது ஏன் தமிழ்படிக்கும் ஆசை உனக்கு வந்தது என அவனைச் சீண்டும் குரலிலே கேட்டேன்.

'என்ன அப்படிக் கேட்கிறீங்கள்? என விநோதமாக என்னைப் பார்த்தவன் 'தமிழ் என் இனத்தின் அடையாளமல்லவா..?' என மிடுக்குடன் கேட்டான்.

ஆபிரிக்க நாடொன்றில் இப்படி ஒரு தமிழ் இளைஞன் இருப்பதையிட்டு உண்மையிலேயே நான் பெருமைப்பட்டேன். மகிழ்ச்சி தாங்காமல் அவனை ஆரத் தழுவி இரவு விருந்துக்கு அவர்களை அழைத்தேன். மன்றீ, டேர்பன் நகரிலுள்ள இந்திய உணவு விடுதிக்கு வழிகாட்டினான். உடையார் மாமா, நான், அந்த இளைஞன், அவனுடன் வந்திருந்த டாக்டர் ஐயர் என்ற பெண் அனைவரும் புரியாணிக்கு ஓடர் கொடுத்துக் காத்திருந்தோம். அங்குள்ள ஒலிபெருக்கியில் இந்தி திரையிசைப் பாடல்களும் இடையிடையே தமிழ், மலையாள, தெலுங்கு பாடல்களும் ஒலித்துக் கொண்டிருந்தன. பாடல் இடம் பெற்ற படம் பாடியவர்கள் பற்றிய விபரங்களை ஒலிபரப்பாளர் ஆங்கிலத்தில் சொல்லிக் கொண்டிருந்தார்.

என் வியப்பினைப் புரிந்து கொண்ட மன்றீ 'இது டேர்பன் நகரில் இயங்கும் தனிப்பட்ட இருபத்திநாலு மணி இந்திய வானொலி' என்றான்.

அங்குள்ள பல இந்தியர்கள் தமிழர்களாக இருந்தாலும் அவர்களுக்கு தமது தாய் மொழி தெரியாது. ஆனால் இந்திய திரைப் படங்களையும், திரை இசைப்பாடல்களையும் பெரிதும் விரும்பி ரசிக்கிறார்கள். இந்திய திரைப்படங்கள் மூலம்தான் இந்திய கலசாரம் தென் ஆபிரிக்காவில் பெயரளவுக்கேனும் நிலைத் திருப்பதாக டாக்டர் ஐயர், மன்றீயின் கூற்றினை ஆதரித்துப் பேசினாள். அந்த வேளையிலேதான் ஓர் உண்மை உறைத்தது. இந்தியாவிலே தாம் இந்தியர்கள் என்று சொல்வதிலும் பார்க்க, கன்னடத்தான், மலையாளி, குஜராத்தி, வங்காளி, தெலுங்கன், பஞ்சாபி என தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளுகிறார்கள். தமிழ் நாட்டிலேகூட தமிழர்களைப் பார்ப்பது அரிது. மறவர், பறையர், வன்னியர், கவுண்டர், தேவர், முதலியார், பார்ப்பனர், தலித் என்கிற ஜாதிகளாலே தான் மக்களைப் பார்க்கலாம்.

'இந்திய இனம்' என்பது உண்மையிலேயே வலிந்து புகுத்தப்பட்ட கருத்துவம் என்கிற எண்ணம் எனது இந்திய பிராயாணங் களின்போது ஏற்படுவது தவிர்க்க முடியாத தாகவும் அமைந்துவிடுகிறது.

ஆட்சி அதிகாரத்துக்கும், அடக்கு முறைக்கும் உள்ள வித்தியாசத்தை உணரமுடிகிறதா?

அடக்குமுறையின் காரணமாக தென் ஆபிரிக்காவிலும் மொறேசியஸ், பிஜீ தீவுகளிலும் இந்தியர்கள் மொழி ரீதியாகவும், ஜாதி ரீதியாகவும் தங்களை அடையாளப் படுத்தாமல் ஒரே இந்திய இனமாகக் காட்சியளித்தது மகிழ்ச்சியைத் தந்தது.

இதன் தொடர்ச்சியாக, 'இந்திய மக்களுடைய நலன்களை முன்வைக்கும் இந்திய மொழிப் பத்திரிகைகள் ஏதாவது வெளிவருகின்றதா?' எனக் கேட்டேன்.

இந்தியர்களுக்காக நடாத்தப்படும், இந்தியர்களின் புதினங்களை பெருமளவில் தாங்கி ஆங்கில மொழிப் பத்திரிகையொன்று வெளிவருவதாகவும் இதன் ஜீவிதம் விளம்பரங்களிலேயே தங்கியிருப்பதாகவும் ஐயர் பெண் கூறினாள்.

சின்னனும் பெரியதுமாய் பெருவாரி சைவக் கோவில்களும் பிரார்த்தனைக் கூடங்களும் இருப்ப தாகவும் இன்னமும் திருமணங்கள் இந்திய சம்பிரதாய முறைப்படியே நடப்பதாகவும் தான் அறிந்த விபரங்களை உடையார் மாமா அவிழ்த்து விட்டார்.

'சிறுபான்மை இன வெள்ளையர்களின் ஆட்சிமாறி, பெரும்பான்மை கறுப்பர்களின் ஆட்சிவந்தபின், தென் ஆபிரிக்க இந்தியர்களின் வாழ்க்கைமுறை எப்படி இருக்கிறது?' என என் மனதில் கனகாலம் உறங்கியிருந்த கேள்வியை கேட்டேன்.

சிறிது நேரம் மௌனம் சாதித்த மன்றீ தன்னைச் சுதாகரித்துக்கொண்டு, 'முன்பு வெள்ளையர்களுக்குப் பயந்து அடிமைகளாக கறுப்பர்களும் இந்தியர்களும் வாழ்ந்தோம். இப்போது கறுப்பர்களுக்குப் பயந்து இந்தியர்களும் வெள்ளையர்களும் வாழ்கிறார்கள். மொத்தத்தில் இந்தியர்களின் வாழ்க்கையில் பெரிதளவு மாற்றமெதுவு மில்லை' என்றான்.

அவனுடைய பதிலில் ஒருவகை விரக்தி புரையோடிக்கிடந்தது.

புதிய சூழலில் வெள்ளையர்களும் இந்தியர்களும் குழுக்களாக அங்கு வாழ்கிறார்கள். இவர்களின் வீடுகளைச் சுற்றி உயர்ந்த மதில்கள் எழுப்பப்பட்டு பாரிய இரும்புக் கேற்றுக்களும் போடப்பட்டுள்ளன. வளவின் உள்ளே என்ன நடைபெறுகிறது என்பது வெளியே தெரியாது.

அவர்களின் மதிலும் கேற்றும் போயஸ் கார்டினிலுள்ள ஜெயலலிதாவின் வீட்டையே ஞாபகப்படுத்தும். ஒவ்வொரு வீட்டிலும் ஒரு ஆபிரிக்கன் காவலுக்கு இருப்பான். மணி அடித்தால் கேற்றில் உள்ள சிறிய துவாரக் கதவை திறந்து விபரம் கேட்பான்.

காவலுக்கு இருக்கும் கறுப்பன் எவ்வளவு தூரம் விசுவாசமாக இருப்பான் என்பது அவரவர்களின் அதிர்ஷ்டத்தைப் பொறுத்தது. இரவில் வீதிகளில் இந்தியர்கள் நடந்து போவது மிகவும் அரிது.

வெள்ளையர்கள் தங்கள் வாகனங்களில் துவக்கு வைத்திருப்பதை வழக்கமாக கொண்டிருக்கிறார்கள்., என தான் சேகரித்த தகவல்களை சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் உடையார் மாமா சொல்லத் துவங்கினார்.

இந்த உரையாடல்களுக்கு மத்தியில் தனது கைக்கடிகாரத்தை பார்த்த ஐயர் பெண் தான் தேவாலயத்துக்கு போகவேண்டுமென்று மன்றீக்கு மெல்லச் சொன்னாள்.

இது உடையார் மாமாவின் பாம்புக்காதுக்கு கேட்டுவிட்டது.

'தேவாலயத்துக்கா..? நீ ஐயர் பெம்பிளை, சேர்ச்சுக்கு போறியோ.? அவர் என்ன பேசுகிறார் என்று புரியாமல் விழித்தாள் ஐயர் பெண். நிலைமையைச் சமாளிக்க 'உனது பெயரின் அர்த்தம் தெரியுமா-?' என அவளைக் கேட்டேன்

இல்லை என்றவள் தனது மூதாதையர்கள் தென் இந்தியாவில் பண்டிதர் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என தான் அறிந்ததாகச் சொன்னாள்.

உடையார் மாமாவின் முகத்தில் கோவம் தெரிந்தது. அவர் தம்மை ஆசாரமான இந்து என்பதை வலியுறுத்தி வாழ்பவர். எந்த மதத்தவராக இருந்தாலும் ஆதாயத்துக்காக மதம் மாறுவது அவருக்கு பிடிக்காது. 'ஐயர்' என்ற சொல்லின் அர்த்தத்தை விளக்கியவர் 'ஒன்றில் உன் பெயரை மாத்து, அல்லது உன் மதத்தை மாற்று என்று கூறிய அவர் 'ஐயர்' பெம்பிளை சேர்ச்சுக்கு போறாள் என்பது வேடிக்கையாக இருக்கிறது என்று தன்பாட்டில் புறுபுறுத்தார்.

ஹ...! பெயருக்கான விளக்கத்தைக் கேட்ட இளைஞனும் பெண்ணும் வாய்விட்டுச் சிரித்தார்கள். தான் பிறந்த நாள்முதல் கிறீஸ்தவராக இருப்பதாகவும் தனது பாட்டனார் கிறிஸ்தவ மதத்துக்கு மாறியிருக் கலாம் எனச் சொன்னவள், இற்றை வரையில் தனது பெயரில் இப்படி ஒரு வில்லங்கம் இருப்பது தெரியாது என்று சொல்லி தனது ஆச்சரியத்தை மறைப்பதற்கு ஐயர் பெண் அழகாகச் சிரித்தாள்.

**(5)**

மாம்பழ மாநாடு முடிந்தது!

மாமர செய்கைபற்றிய பல்வேறு தகவல்களை மாமாவால் திரட்ட முடிந்தது என்பது உண்மையே. இருந்தாலும் கறுத்தக் கொழும்பான் மாமரத்தை அவுஸ்திரேலியாவுக்கு கொண்டு வருவதற்கான வழிவகை எதுவும் அந்த மாநாட்டினால் தெரிய வரவில்லை. இலங்கை அகதிகள் வேறொரு நாட்டில் தற்காலிகமாக தங்கி, ஐரோப்பாவுக்கோ, அவுஸ்தி ரேலியாவுக்கோ நுழைவதுபோல தென் ஆபிரிக்காவுக்கு கறுத்தக் கொழும்பானை கொண்டுவந்து அங்கிருந்து அவுஸ்திரேலியாவுக்கு கொண்டு வரமுடியுமா என்று பல 'ரூட்'டுக்களிலும் உடையார் விசாரணைகளை நடத்திய போதிலும், எதுவும் சாத்தியமானதாகப் பொருந்தி வரவில்லை என்பது அவருக்கு ஏமாற்றம் தந்தது.

அங்கு வாழும் இந்தியர் ஒருவரின் வீட்டில் கறுத்தக் கொழும்பான் நிறையக் காய்க்கிறது என அவர் கேள்விப்பட்டதை உறுதிப்படுத்த முடியாத நிலையில், பிறிஸ்பனில் உள்ள அவரது பறங்கி நண்பரின் வீட்டில் வளரும் கிளையை அவுஸ்திரேலிய இன மாமரத்தில் ஒட்டி முயன்று பார்க்கலாம் என அவரை அமைதிப் படுத்தினேன்.

கறுத்தக் கொழும்பான் மாம்பழம் பற்றி உடையார் மாமாவுக்கு முந்தி இருந்த தீவிரம், தென் ஆபிரிக்காவுக்கு போய்வந்தபிறகு இல்லை என்று எனக்குத் தோன்றியது. அதற்கு பதிலாக அவரிடம் புதியதொரு தீவிரம் முளை கொண்டிருப்பதை அவதானிக்கமுடிந்தது.

உடையார் மாமா தனது மூத்த பிரஜைகள் சங்க சகாக்களுடன் அடிக்கடி, சிட்னியிலே தமிழ் கற்பிக்கும் முயற்சிகளிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பாடசாலைகளுக்கு வார இறுதி நாட்களிலே சென்றுவருவதை அறிந்தேன். அங்கு அந்நிய மொழிச் சூழலில் வாழும் சிறார்களுக்கு தமிழ் கற்பிக்க பாவிக்கப்படும் பாடநூல்களையும் பயிற்சி நூல்களையும் மட்டுமல்லாது பேச்சுத் தமிழுக்கான குறுந்தட்டுக்களையும் வாங்கிச் சென்றதாக அறிந்தேன். இதன் பின்னணியை என்னால் ஓரளவு ஊகித்துக் கொள்ள முடிந்தது. அன்று உடையார் மாமா வீட்டிற்கு வந்திருந்தார். இந்த தடவை ஹோம்புஸ் தமிழ் பாடசாலையில் தமிழ் கற்பிக்கும் ஈடுபாட்டினால் அறியப்பட்டவரான என்னுடைய நண்பர் ஒருவரையும் அழைத்து வந்திருந்தார். அந்தக் கூட்டணியைப் பார்த்ததுமே எனது ஊகம் சரியானதுதான் என்பதை உணரமுடிந்தது.

நான் அவர்களை முகமன்கூறி உபசரித்தேன். உடையார் மாமாவைப் பார்த்து 'கறுத்தக் கொழும்பான் மாமரத்திலை சில கிளைகளை வெட்டுவதற்கு உங்கள் நண்பரைக் கேட்டுப்பாருங்கோவன். இப்ப சுவாத்தியமும் நல்லாய் இருக்கு, அவற்றை ஒட்டுவதற்கு என்னிடம் உள்ளூர் மரக்கன்றுகளும் இருக்கின்றன' என்ற செய்தியை மிக அக்கறையுடன் சொன்னேன்.

'அந்த சிங்களவங்கள் கண்ணொறுவவிலுள்ள நிலையத்திலை கறுத்தக் கொழும்பானை விரட்டி அடிச்சாலும் பறுவாய் இல்லை தம்பி. இதிலும் பார்க்க குடிமுழுகப்போற சங்கதி ஒண்டு இருக்குது. அதை நீ தென் ஆபிரிக்காவிலை பார்த்தனீ தானே. இப்ப எங்கடை தமிழைப் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு கொண்டு போறதுதான் கறுத்தக் கொழும்பானிலும் பார்க்க முக்கியம். டேர்பனுக்கு மாம்பழ மாநாட்டுக்கு வந்து நான் தெளிவு பெற்ற அறிவு இதுதான்' என்று கூறி உடையார் மாமா மனம் விட்டுச் சிரித்தார்.

'பிறகென்ன, புத்தர் போதிமர ஞானம் பெற்றது போல, நீங்கள் கறுத்தக் கொழும்பான் மாமர ஞானம் பெற்று விட்டீர்கள் என்று சொல்லுங்கோவன்' என்று கூறி அவருடைய சிரிப்பில் சங்கமமானேன்.

'தம்பி, இது சிரிக்கிற விடயம் இல்லை. அந்த டேர்பன் பெடியன் மன்றீ, ஐயர் பெட்டை எல்லாரும் தமிழர்தானே. இப்ப தமிழ் தெரியாமல் எங்களுடன் தமிழில் பேசமுடியாமல்..சே, அந்த மன்றீ தமிழிலை தான் பேசமுடியாததுக்கு எவ்வளவு துக்கப்பட்டவன் எண்டது எனக்குத்தான் தெரியும்...'

எடதம்பி, தமிழ் பற்றிய தியானம் அடுத்த அடுத்த தலைமுறைக்கு தமிழ் மொழிமூலம் எடுத்துச் செல்லப்படவேண்டும். அது எங்களாலைதான் முடியும். தென் ஆபிரிக்காவிலை பார்த்தாய்தானே? அங்கை வாழும் தமிழர்கள் தமிழை மறந்து, ஓர் இந்திய இனத்தின் அங்கமாக நிர்ப்பந்தவசத்தால் மாறிக் கொண்டிருக்கிறார்கள். இந்த அவலங்களுக்கு மத்தியிலை தமிழை அடுத்த தலைமுறைகளுக்கும் எடுத்துச் செல்லவேண்டிய கடமை எங்களுடைய தாகத்தான் இருக்கிறது' என ஒலிபெருக்கிக் கருவி இல்லாத குறையாக தமிழ் பாதுகாக்கப்பட வேண்டும் என்கிற பிரசார கூட்டத்திலே பேசுபவரைப் போல விளாசித் தள்ளினார் உடையார் மாமா.

'தமிழ் அழிவதை தமிழ் நாடும் அங்குள்ள தமிழ் தலைவர்களும் பார்த்துக் கொண்டிருக்க மாட்டார்கள்' என்று நான் வேண்டுமென்று சொன்னேன். உடையாரை உசுப்பி விட்டால் உணர்ச்சி வேகத்தில் பொங்குவார் என்பது எனக்குத் தெரியும்.

'நீ கறுத்தக் கொழும்பான் ஞானம் என்று பகிடி பண்ணினாலும் பறுவாய் இல்லை. தென் ஆபிரிக்காவிலையும், மொறிசியஸ் தீவிலையும், பிஜித் தீவிலையும் தமிழ் அழிஞ்சதை தமிழ் காவலர்கள் எல்லாரும் பார்த்துக் கொண்டுதானே இருந்தவை.

இல்லை தெரியாமல்தான் கேட்கிறன்.

நீ சொன்ன தமிழ் நாடு எங்கை இருக்கு? ஒரு மாநிலம் இருக்குது, அங்கை ஒரு பக்கத்தாலே ஆங்கிலமும் மறுபக்கத்தால இந்தியும் போட்டி போட்டுக் கொண்டு வளருது. நீ தமிழ் நாட்டு 'டிவி' யில பேசிற 'தமிங்கிலத்தை' கேட்கிறனிதானே?

இப்பதான் எனக்கு உண்மை விளங்குது. தமிழ் இனம் ஒன்று இருப்பதை தமிழ் மொழிமூலம் தான் அடையாளப் படுத்தலாம். எனவே சிட்னி போன்ற இடங்களிலே நமது நாளைய தலைமுறைகளின் நாவிலே தமிழ் வாழ்ந்திட வேண்டும்.' என்று ஒரு பிரார்த்தனை போன்று கூறி மௌனமானார்.

அந்த மௌனத்தின் உறுதி என்னுள் ஒரு சிலிர்ப்பினை ஏற்படுத்தியது. 'கறுத்தக் கொழும்பானின் சுவையிலும் பார்க்க தமிழ் மொழியின் சுவை மேலானதும் பாதுகாக்கப் படவேண்டிய ஒன்றும்' என்கிற உடையார் மாமாவின் ஞானத்தினால நான் புதிது கற்றுக்கொண்ட உற்சாகம் பெறலானேன்.

# புரட்சி எங்களோடிருக்கும் நாள்...

- சண்முகம் சிவகுமார்

அவர்கள் அதிமானுடர்
எந்த அற்புதங்களையும் புரிவார்கள்

என் பசியை வறுத்தெடுத்து
தூளாக்கி காசு பண்ணும்
சகல இங்கிதங்களும் தெரிந்தவர்

அவர்களுக்கு தெரியும்
என் சுயபுத்தி
அதிகார பீடங்களை
சாய்க்குமெனவும்
அவர்களின் இங்கிதங்களின்
சுய முகங்களை தூளாக்குமெனவும்

ஆதலால்...
எனக்கான சலுகை என்புகளை
அவ்வப்போது ஒப்பந்தமிடுகிறார்கள்
பின்
என் வாழ்வை எடுத்துக்கொண்டு
மன்றம் செல்கிறார்கள்...

நான் மக்களுக்காக அழுதேன்
என்னால் இதற்கு மேல்
என்ன செய்ய முடியும்

அவர்கள் அதிமானுடர்
அன்பிற்குரிய 'சே'

உன்னைப் போல்
விஷயங்களை எப்படி சொல்வது என்று

மிகச் சரியாக தெரியும் நாளில்
உன் புரட்சி
எங்க ளோடிருக்கும்...

# இருண்ட வானம்

சிங்களச் சிறுகதை

சிங்களத்தில்- ஜயதிலக கம்மெல்லவீர

தமிழில்- திக்குவல்லை கமால்

தனது இரண்டாவது மகன் நிலைக்கண்ணாடி முன்னின்று தலைசீவும் பாங்கை அவள் பார்த்துக்கொண்டிருந்தாள். முகத்தின் நீள அகலத்திற்குப் பொருந்திவரும் அளவில் அந்தக் கண்ணாடியை ஞாயிறு சந்தையால் வாங்கிக் கொண்டுவந்து, பராலை ஆணி அடித்து சுவரில் தொங்கவிட்டு இப்போதைக்கு நான்கு வருடங்களாகின்றன. முதலில் அந்த ஆணியை சுவரில் வைத்து கருங்கல் லொன்றால் அதன் தலையில் தட்டியபோது, உலர் சாந்து கழன்று கபுக்கல் வெளிப்பட்டு குழியொன்று தோன்றியது. இப்பொழுது அந்தக் குழிவு கபுக்கல் முழுமையாகத் தெரியக்கூடிய அளவுக்கு வியாபித்திருந்தது. மகனின் தலையளவு உயரத்தில் இரண்டாம் முறையாக அடித்த ஆணியை சுவர் ஏற்றுக் கொண்டதுடன் அன்று முதல் இன்றுவரை அதில் தொங்கவிடப்பட்ட நிலைக்கண்ணாடியை சுமந்தபடியுள்ளது. இப்பொழுதெல்லாம் மகன், கால்களை அகலவைத்து முதுகை வளைத்தபடி. பதிந்து நின்றே முகம்பார்க்கிறான்.

தலைசீவிக்கொண்ட மகன் சேர்ட் அணிவதை அவள் கண்டாள். "எங்க போகப் போறாய்?" என்று கேட்க அவளுக்குத் தேவையிருந்தபோதும், "சும்மா வெளியிறங்கிறன்" என்ற பதிலை எதிர்கொள்ள விருப்பமில்லாத தால் அவள் மௌனமாகவே இருந்துவிட்டாள். வெளியே இறங்கினாலே காணாமல்போகும் இந்தக்காலத்தில் 'சும்மா வெளியிறங்கிச் செல்வது' எந்தளவுக்கு நிதானமானது...?

'வெளியே சும்மா சுற்றித்திரியாதே' என்று சொல்வதற்கு அவள் வாய்திறந்தபோதும், திறந்த வாயை அப்படியே வைத்துக்கொண்டு யோசித்தாளே தவிர எதுவும் சொல்லவில்லை. இந்தக்காலத்தில் இந்த வயது ஆம்பிளைக்கு 'வேண்டாம்' என்று சொல்வதாக இருந்தால், அப்படிச் சொல்ல இன்னும் எத்தனை விடயங்கள் இருக்கின்றன?.... பகலில் வெளியே செல்லாதே.. இரவில் வீட்டில் தங்காதே... புத்தகம் - பத்திரிகைகள் படிக்காதே... அவற்றைக் கைப்பட வைத்திராதே... நண்பர்களோடு பழகாதே... உனது கருத்து சரியாகவிருந்தாலும் அது பற்றி வாதிக்காதே... அரசாங்கத்துக்கு எதிராளி யாகாதே. கட்சியொன்றில் சேர்ந்துவிடாதே.. எந்தவொரு கட்சியும் நல்லதென்று சொல்லாதே கூடாதென்றும் சொல்லாதே... 'வேண்டாம்' என்று சொல்ல இப்படி எத்தனை விடயங் களுண்டு? இனி அவளால் செய்யக்கூடியது 'ஐயோ எதுவும் நடந்துவிடக்கூடாது' என்று பிரார்த்தனை செய்து 'நடக்கிறது நடக்கட்டும்' என்று மனதைத் தேற்றிக் கொள்வதொன்று தானே?

முற்றத்தில் கால்பதித்து பாதைப்பக்கமாகச் செல்லும் மகனின் உயரம், பருமனைப் பார்க்கும்போது அவளது மனதில் பெருமையும் மகிழ்ச்சியும் இரண்டறக்கலந்து வெளிப்பட்டன.... 'வாலிபன்'...

அடுத்த கணம் இளந்தளிரின் மீது கொதிக்கும் எண்ணெய்யைக் கொட்டியது போல் அவளது இதயம் வெந்து கருகியது...ம்... வாலிபன்'...

இந்த அம்மாவின் தலைப்பிள்ளை அல்லது முதற்பிள்ளை இறந்துபோனது இந்த வயதிலே தான். தான் இளம் பெண்ணொருத்தியுடன் சினேகம் கொண்டிருப்பதை அறிந்து அம்மா ஏசியதைத் தாங்கிக்கொள்ள இயலாது அவன் நஞ்சுண்டு மாண்டுபோனான்.

அன்று முழுக்கிராமமும் அழுது ஓலமிட்டது. அந்தப் பிரதேசமே அல்லோல கல்லோலப் பட்டது. இந்தச் செய்தியைக் கேள்வியுற்ற தூரக்கிராமங்களில் இருந்தும் வந்தார்கள். பார்த்து அதிர்ந்து போனார்கள். உறவினர்களும் நண்பர்களும் வாரக் கணக்காக சோகத்தில் ஆழ்ந்து போனார்கள்.

தலைப்பிள்ளைக்கு இருபது வயது குறைவான இரண்டாம் மகனுக்கு இப்போது இருபது வயது. அன்றைய இருபதையும் இன்றைய இருபதையும் ஒப்பீடு செய்தபடி அவள் நிலைப்படிக்கு தோள்கொடுத்து அதேநிலையிலேயே நின்றாள். அவளது கண்களின் வெற்றுப் பார்வைக்கு மேல்வானம் மெல்ல மெல்ல இருண்டுகொண்டு வந்தது. கஞ்சலடைந்த குடையொன்றை விரித்தாற்போல் அக்காட்சி புலப்பட்டதால் நிலைப்படியிலிருந்து விலகி கதிரையொன்றில் வந்து அமர்ந்துகொண்டாள்.

மேசை கதிரை மட்டுமல்ல வீட்டின் அரைவாசியே தெரியாதளவுக்கு வீடு இருளடைந்துவிட்டது. இருந்தும் பிள்ளைகள் இல்லாத வீட்டில் விளக்கேற்றும் அளவுக்குக் கூட உற்சாகம் அற்றுப்போனதால் அவள் இருளின் விருப்பத்திற்கு இடம்கொடுத்துவிட்டுத் தன்பாட்டில் அமர்ந்திருந்தாள். அப்போது அவள் கதவு நிலைப்படிக்கூடாக பார்வையை வெளியே செலுத்தி உள் - வெளி இருளை ஒப்பிட்டுப்பார்க்க முனைந்தாள். அவ்வாறு வெளியே பரவிய பார்வையில், இருண்ட வானத்திற்குக் கீழாக... வேலிக் கடவைக்கு மேலாக வெள்ளைக்கொடியொன்று அசையும் சாயல் அவள் கண்களில் பட்டது. அவளது பயந்த மனமும் உடலும் உதிரிப்பாகங்கள் தேய்ந்த பழைய மின்மோட்டார்போல் நடு நடுங்கத் தொடங்கியது. ஏதோவொன்றைத் தோள்களில் சுமந்தபடி ஐந்துபேர் அந்த வெள்ளைக் கொடியின் கீழாக நடந்து வருவது அவளுக்குத் தெரிந்தது. வேறொன்றுமல்ல, அவர்கள் சவப்பெட்டி ஒன்றைத்தான் தோளில் சுமந்து வந்தனர். முன்பக்கம் மூவர். மத்தியில் நின்றவன் இருகைகளாலும் அடுத்த இருவரும் தோளுடன் சேர்த்து ஒவ்வொரு கைகளாலும் சவப்பெட்டியைச் சுமந்தபடி வந்தனர். பின்பக்கமாக இருவர் இருபக்கமாகவும் தோள் கொடுத்து வந்தனர்.



அவளது சர்வாங்கமும் கிடுகிடுத்த போதிலும் கதிரையில் அமர்ந்தது அமர்ந்த படியே நின்றாளே தவிர, கண்மடல்களைக்கூட அசைக்கவில்லை.

சவப்பெட்டியைச் சுமந்துவந்த புதுமுகங்கள் ஐவரும் அதனை வீட்டு நடுவாசலில் வைத்தனர். ஒருவன் சேப்பிலிருந்து தீப்பெட்டியை எடுத்து ஒரு குச்சைத்தட்டி சுற்று முற்றும் பார்த்தான். அவன்தேடுவது என்ன என்பதை மோப்பம் பிடித்துக்கொண்ட அவள், கதிரையில் அமர்ந்தபடியே கையை உயர்த்தி நீட்டி சுவர் மூலையொன்றைக் காட்டினாள். அவன் இரண்டாவது குச்சியைத் தட்டியபடி அவள் காட்டிய மூலைப்பக்கம் அகன்றான். சுவர் மூலையில் பொருத்தப்பட்டிருந்த பலகைத்தட்டில் சிறிய புத்தர்சிலையொன்று காணப்பட்டது. புத்தரின் முன்னே சிறிய விளக்கொன்று வைக்கப்பட்டிருந்தது. கையிலிருந்த தீக்குச்சி அணையுமுன் அந்த விளக்கை ஒளியேற்ற முற்பட்டான்.. புத்தரின் விளக்கிலிருந்து பரவிய ஒளி, அடுத்த நான்கு பேராலும் திறக்கப்பட்ட சவப்பெட்டியில் இருப்பது யாரென்பதை அறிந்துகொள்ளப் போதுமான தாக இருக்கவில்லை.

நடுங்கும் கைகளோடு உள்ளேசென்று ஓரளவு பெரிய விளக்கொன்றைத் தேடியெடுத்தாள். அதற்கு எண்ணெய் வார்த்துப் பற்றவைத்தபோது, சவப் பெட்டியுள் உறங்கும் தனது இரண்டாவது புதல்வனைக் காணக்கூடிய அளவுக்கு அதிலிருந்து ஒளி பரவியது. விளக்கை உயர்த்தித் தனது மகனின் சடலத்தைப் பார்த்த அவளது முகத்தில் தனது ஊகம் சரியென்பதைத் தெளிவாகப் புரிந்துகொண்ட தோற்றம் வெளிப்பட்டது. பின்னர் அவள் பின்னே வரிசையாக அமர்ந்திருக்கும் இனந்தெரியாத ஐவரதும்முகங்களுக்கு விளக்கைப் பிடித்து அவர்களை அறிமுகம் செய்துகொள்ள முயற்சித்தாள்.

"இதனைப் பொறுப் பளித்து உங்களிடம் சொல்லி விட்டுப் போகவே வந்தோம். நாங்கள் அவசரமாகப் போக வேணும்"- ஐந்துபேரும் ஒரே குரலில் கூறினர்.

அவர்களது முகங்களில் வியப்புக்குறி இல்லை. கவலையைக் காணவில்லை. ஐந்துபேரிலும் அவசரம் மட்டுமே வெளிப்பட்டது. அவசரம் காரணமாக அவர்களிடம் ஐக்கியம் ஏற்பட்டிருப்பது தெரிந்தது. அந்த இணக்கத்திற் கேற்ப முதலாம் நபர் பேச ஆரம்பித்தான்.. அவன் பேசிமுடிக்கும்வரை அடுத்த நால்வரும் அமைதி காத்த போதும், அவசரத்தினால் இடையிடையே எழுவதும் மீண்டும் அமர்வதுமாக இருந்தனர்.

முதலாம் நபர்:- "அவன் வாகை மரத்தடியில் இந்தப்பக்கமாக வந்து கொண்டிருப்பதை நான் நன்றாக அவதானித்தேன். வேன் ஒன்று மிக வேகமாகவந்து இவனருகே நின்றது.அதில் அமர்ந்திருந்த ஒருவன் இன்னொருவனிடம "இவனும் ஒருவனல்லவா?" என்று கேட்டான். அப்போது "இருக்கலாம்" என்று யாரோ ஒருவன் சொன்னான். அடுத்த கணம் நான்கு மெஷின் துப்பாக்கிகள் ஒன்றாக இயங்கின. இவன் வாகை மரத்தைக் கட்டிப்பிடித்தபடி செத்துவிழுந்தான். நான் சொல்வது என்னவென்றால் இதற்கு வகை

கூறவேண்டியது அம்மா. மகனைப்பற்றி அம்மா தேடிப்பார்த்திருந்தால் இப்படி நடந்திருக்காது"

இரண்டாம் நபர்:வாகை மரத்துக்குக் கீழால் இந்தப்பக்கமாக நடந்து வருவதை நான் கண்டேன். இரு வாலிபர்கள் படுவேகமாக மோட்டார் சைக்கிளில் வந்து இவனருகே நிறுத்தினர். பின்னால் அமர்ந்து வந்தவன் இறங்கி இவனருகே வந்தான். பையிலிருந்த கைத்துப்பாக்கியொன்றை எடுத்து இவனது வாயில் வைத்தான். "இவன் பெரிய வாயாடி" என்று படபட வென்று சுட்டான். இவன்ர கழுத்தைவெட்டி அவனது அம்மாவிடம் கொண்டு போய்க் கொடுப்பம்." என்று அடுத்தவன் சொன்னான். அப்போது தூரத்தே வாகனம் ஒன்று வருவதைக்கண்டு இருவரும் பாய்ந்தோடி விட்டனர். நான் என்ன சொல்வதென்றால் இதற்குத் தாய்தான் பொறுப்புக்கூறவேணும். மகனைப்பற்றி அம்மா தேடிப்பார்த்திருந்தால், இப்படி நடந்திருக்க வாய்ப்பில்லை.

மூன்றாம் நபர்:- இவனுக்கு என்ன நடந்ததென்று எனக்கு நன்றாகத்தெரியும். இவன் போய் இராணு வத்தில் சேர்ந்தான். முதற்கட்டப் பயிற்சியென்று யுத்தத்திற்கு அனுப்பினாங்க. யுத்தகளத்தில காலவைக்கும் போது சூடுபட்டு விழுந்தான். இதற்கு நான் என்ன சொல்வதென்றால், அம்மாதான் பொறுப்பேற்க வேணும். மகனுக்கு நல்லதொரு தொழில் அம்மா தேடிக் கொடுத்திருக்கலாம்.

நான்காம் நபர்:- எனக்கு நன்றாகத் தெரியும் இவன் பழகியது நல்ல நபர்களுடன் அல்ல. அந்த வாகை மரத்தடி பற்றைக்காட்டுக்குள் ஒன்றுகூடுவார்கள். நன்றாக அவதானித்துப் பார்ப்பவர்களுக்கு அங்கிருந்து மெல்லிய புகை கிளம்புவது தெரியும். அதனால் நரம்பு மண்டலம் காய்ந்து ஒருநாள் மாண்டு போவார்கள். அதுதான் இவனுக்கு நடந்தது. நான் என்ன நினைக்கிறேன்னா, இதற்குத் தாய்க்காறிதான் வகை சொல்லவேணும். மகன் பழகுவதற்கு நல்ல நண்பர்களை அம்மா தேடிக் கொடுத்திருக்கலாம்.

ஐந்தாம் நபர்:- நான் நன்றாகக் கண்டேன் இவன் பாதையின் வலது பக்கத்தால் மிகவும் ஒரமாகத்தான் வந்தான். பஸ்ஸொன்றின் சைட் கண்ணாடி தலையில் பட்டு விழுந்தான். தலைக்கு மேலாகத்தான் வண்டிச்சக்கரம் உருண்டது. கண்டவர்கள் சத்தமிட்டார்கள். நிறுத்தவேயில்லை. சிறிதுதூரம் சென்று கை நீட்டிய ஒருவனையும் ஏற்றிக்கொண்டு ஹோரண் அடித்தபடி சென்றது. நான் என்ன நினைக்கிறேனென்றால் இதற்கு அம்மாதான் காரணம். அம்மாமார் பிள்ளைகளைப் பாதுகாத்துக் கொள்வார்களென்றால் இப்படியான அகால மரணங்கள் சம்பவிக்காது.

ஐந்தாம் நபரின் பேச்சு முடிவுறும்போது ஐவரும் எழுந்து நின்றனர். அவர்கள் மரணித்துள்ளவருக்கு மரியாதைகூடச் செய்யாமலேயே வெளியேறிச் சென்றனர். அவர்கள் வேலிக்கடவையைத் தாண்டி பாதைக்குத் திரும்பி மறையும்வரை அவள் பார்த்தபடி இருந்தாள். அவள் முற்றுமுழுதாக உணர்வற்றவளாக இருப்பதுபோல் தெரிந்தது.

அசையாதிருந்த மேகம் சிதைந்து அகல ஆரம்பித்தது. வான இருள் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்தது. வேலிக் கடவைக்கு மேலாகத் தொங்கிக் கொண்டிருந்த வெள்ளைக் கொடி, அசைந்து கொண்டிருந்த மேகத்தில் சிக்கிமறைந்தது.

கதவடியில் நின்ற அம்மா தொலைவில்வரும் உருவத்தை அறிமுகம் பிடித்துக் கொண்டாள். அவளது இளைய மகன் கடவையைத்தாண்டி பாதைக்குத் திரும்பி மறையும்வரை அவள் பார்த்தபடி இருந்தாள். அவள் முற்றுமுழுதாக உணர்வற்றவளாக இருப்பதுபோல் தெரிந்தது.

கதவடியில் நின்ற அம்மா தொலைவில் வரும் உருவத்தை அறிமுகம் பிடித்துக் கொண்டாள். அவளது இளைய மகன் கடவையைத் தாண்டி முற்றத்திற்கூடாக வரும்போது அவள் கதவடியிலிருந்து விலகி அவனுக்கு இடம்கொடுத்து வீட்டினுள் சென்றாள். வீட்டுச் சுவர், மேசை,கதிரைகள் தெரியுமளவுக்கு இருள் பரவியிருந்த போதிலும் விளக்கை அணைத்துவிட்டு அவள் சமையலறைக்குப்போய் அடுப்பில் கேத்திலை வைத்தாள்.

வாங்குக் குற்றியைத் தேடி எடுத்து அடுப்பருகே வைத்த அவள், சுவரில் பொருத்தியிருந்த பீங்கான் ராக்கையின் மேல்தட்டைத்தடவி எண்ணெய்க் குப்பியைத் தேடி எடுத்து, அடுப்புக்குப் பின்புறம் காட்டி அமர்ந்து கொண்டாள். இருகால்களையும் நீட்டி சீத்தை ஆடையை உயர்த்தி வீங்கிய முழங்கால்களில் எண்ணெய் பூசித் தேய்க்கும்போது தண்ணீர்க்கேத்தல் முணுமுணுக்க ஆரம்பித்தது.

கட்டிலில் சாய்ந்தபடி கூரையைத் துளாவிக் கொண்டிருந்த தனது மகனருகே வந்த அவள், நீண்ட கதையாடலுக்குத் தயாராகியதுபோல் காலடியில் அமர்ந்து கொண்டாள். தேநீர்க் கோப்பையை ஏந்தியபடியே கொஞ்சநேரம் மகனின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த அவள் அந்த நீண்ட பெரும் கதையை ஒரே வசனமாக சுருக்கிச் சொன்னாள்.

"பழகுறதுக்கு பொம்புளப்புள்ளயொருத்திய தேடிக்கொண்டா நல்லதுதானே மகன்".

*நன்றி: 'லே' (இரத்தம்) சிறுகதைத்தெகுதி.*

*dickwellakamal@gmail.com*

# தமிழ்



*கலாபூசணம்*

**புன்னியாமீன்**

# விக்கிப்பீடியா – ஓர் ஆய்வு

**(சென்ற இதழ் தொடர்ச்சி)**

தமிழ் விக்கிப்பீடியாவின் நிர்வாகக் கட்டமைப்பினை பின்வருமாறு வகைப்படுத்தலாம். அண்ணளவான அதிகார ஏறுவரிசைப்படி இவ்வகைப் படுத்தல் தரப்பட்டுள்ளது. இது அனைத்து விக்கிப்பீடியாக் களுக்கும் பொருந்தும்.

1. பயனர்கள்
2. நிர்வாகிகள்
3. அதிகாரிகள்
4. மேலாளர்கள்
5. உருவாக்குநர்

**பதிவு செய்துகொண்ட பயனர்கள்**

சாதாரண அணுக்கம் கொண்ட பயனர்கள், 'புகுபதிகை செய்யாத வருனர்கள்' உட்பட, தமிழ் விக்கிப்பீடியாவின் பெரும்பாலான பணிகளைச் செய்ய முடியும். கட்டுரைகளைத் தொகுக்கவும் விக்கிப்பீடியா துப்புரவுப் பணிகளுக்கு உதவுவதும் இதில் அடங்கும்.

ஆனால் புகுபதிகை செய்து கொண்ட பயனர் மட்டுமே கோப்புகளை பதிவேற்றுதல், கோப்புகளின் பெயர்களை மாற்றுதல், கோப்புகளை இடம்பெயர்த்தல் போன்றவற்றை செய்யமுடியும்.

**நிர்வாகிகள்.**

தமிழ் விக்கிப்பீடியாவில் ஒரு பயனரால் இற்றைப்படுத்தப்படும் கட்டுரைகள் ஏனைய பயனர் களால் திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட்டாலும் கூட, நிர்வாகிகளின் பங்களிப்புகள் பலவகைகளிலும் வியாபித்துக் காணப்படுகின்றன. 'கட்டக இயக்குனர் (sysop) உரிமை'யுள்ள விக்கிபீடியர்கள் 'நிர்வாகிகள்' எனப்படுவர். இவர்களது பணியின் பண்புகளைத் தெளிவாக உணர்த்தக்கூடிய வகையில் பல வேளைகளில் இவர்கள் 'முறைமைச் செயற்படுத்து நர்கள்' என்றும் 'துப்புரவுத் தொழிலாளர்கள்' என்றும் அழைக்கப்படுவதுண்டு. சில காலம் விக்கிபீடியாவில் செயற்பாடுள்ள பங்களிப்பாளராக இருப்பதுடன், பொதுவாக அறியப்பட்ட, நம்பிக்கைக்கு உரியவராக இருக்கும் உறுப்பினர் எவருக்கும் இந்தப் பொறுப்பை வழங்குவது, தற்போது விக்கிபீடியாவின் கொள்கையாக இருந்துவருகிறது. 2010ம் ஆண்டின் இறுதியில் தமிழ் விக்கிப்பீடியாவில் பத்தொன்பது பேர் நிர்வாக தரத்தில் உள்ளனர். அவர்கள் மயூரநாதன், நக்கீரன், ரவி, சுந்தர், அரபாத் ரியாத், கெனக்ஸ், கார்த்திகாபாலா, குரும்பன், மணியன் (Rsmn), சந்தோஸ்குரு, சிவக்குமார், சோடாபட்டேல், தங்கராசு, உமாபதி, கலை, கோபி, செல்வா, ஜெ.மயூரேசன், பரிதிமதி ஆகியோராவார்.

நிர்வாகி தரத்துக்கான வேண்டுகோள் என்ற தலைப்பில் விக்கிப்பீடியாவின் நிறுவனர் ஜிம்மி வேல்ஸ் குறிப்பிடுகையில் மிக எளிமையாக "இது ஒரு பெரிய விடயமே அல்ல - This should be no big deal" என்கிறார். இதிலிருந்து கண்ணியம், நேர்மை, முயற்சியுள்ள எந்தவொரு பயனருக்கும் நிர்வாகியாக வர முடியும் என்பது புலனாகின்றது.

தொகுத்தல் பொறுப்புகள் தொடர்பில், நிர்வாகி களுக்குச் சிறப்பு அதிகாரங்கள் எதுவும் கிடையாது என்பதுடன், அவர்கள் ஏனைய பயனர்களுக்குச் சமமானவர்களே. நிர்வாகிகள் மீது கொண்ட நம்பிக்கை காரணமாக, செயற்பாடு மற்றும் பாதுகாப்பு அடிப்படையிலமைந்த பல்வேறு கட்டுப்பாடுகளிலிருந்து இவர்களுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. நிர்வாகிகளை பயனர்களே தெரிவு செய்வர். நிர்வாகிகளுக்கு வழங்கப்படுகின்ற மேலதிக அணுக்கம் தேவைப்படும் வேலைகளைச் செய்வதற்காக, இச் சமுதாயம் நிர்வாகி களை எதிர்பார்த்துள்ளது. இவற்றுள், நீக்கலுக்கான வாக்களிப்பு விவாதங்களைக் கவனித்தல், ஒருமனதான தீர்மானங்களின் அடிப்படையில் கட்டுரைகளை நீக்குதல் அல்லது அவற்றை வைத்திருத்தல், புதிய மற்றும் மாற்றப்படுகின்ற கட்டுரைகளைக் கவனித்து வெளிப் படையான நாசவேலைகளை நீக்கிவிடல், மற்றும் நிர்வாகி அணுக்கம் தேவைப்படும் விடயங்களில் பிற பயனர்களால் கோரப்படும் உதவிகளைச் செய்தல் என்பன அடங்கும். உதவி தேவைப்படும் பயனர்கள் ஆலோசனைகளுக்கும், தகவல்களுக்கும் ஒரு நிர்வாகியையே பொதுவாக நாடுவர். நிர்வாகிகளின் சிறப்பான பணிகளினாலேயே விக்கிப்பீடியாவின் கட்டமைப்பு காக்கப்படுகின்றது.

**அதிகாரிகள்**

அதிகாரி தரத்தில் உள்ள பயனர்கள் பிற பயனர்களை நிர்வாகிகள் ஆக்க முடியும். ஆனால் நிர்வாகி தரத்திலிருந்து ஒரு பயனரை நீக்கும் உரிமை இல்லை. ஏற்கெனவே அதிகாரிகள் தரத்தில்

உள்ளவர்களைக் கொண்ட திட்டங்களில், அதிகாரி களைப் பிற அதிகாரிகளே உருவாக்குகிறார்கள். அதிகாரிகள் எவரும் இல்லாத திட்டங்களில் மேலாளர் (steward) தரத்தில் உள்ளவர்கள் அத்திட்டத்துக்கான புதிய அதிகாரியை உருவாக்கலாம். நிர்வாகச் செயற்பாடுகள், பதிகை/ உரிமைகள் மற்றும் விக்கிப்பீடியா: அதிகாரி பதிகைகள் ஆகிய பக்கங்களில் பதியப்படும். மேலாளர்களினால் செய்யப்படும் நிர்வாகச் செயற்பாடுகள் 'மெடா: பதிகைகள்/ உரிமைகள்' பக்கத்தில் பதியப்படும். தமிழ் விக்கிப்பீடியாவில் அதிகாரிகள் தரத்தில் உள்ள நால்வரும் வருமாறு: மயூரநாதன், நக்கீரன், ரவி, சுந்தர்.

### மேலாளர்கள்

'மேலாளர்' தகுதி உள்ள பயனர்கள் எந்தவொரு விக்கித்திட்டத்திலும் எந்தப் பயனரின் அணுக்கத்தையும் மாற்றக்கூடிய உரிமை கொண்டவர். இது கட்டக இயக்குனர் அணுக்கத்தைக் கொடுப்பதும், எடுப்பதும் பயனர்களை தானியங்கியாக குறிப்பதும் உள்ளிட்ட செயல்களை உள்ளடக்கியது. அவர்களது செயல்பாடுகள் 'மெடா: அதிகாரி பதிகைகள்' பக்கத்தில் பதியப்படும். அவர்களது உதவியை நாட உரிமை கோரல்கள் பக்கத்தில் பதிய வேண்டும். பொதுவாக, உள் அதிகாரி செய்யக்கூடிய செயல்பாடுகளை அவர்கள் எடுத்துக் கொள்ள மாட்டார்கள்.

### உருவாக்குநர்

மிக உயர்ந்த நுட்ப அணுக்கம் "உருவாக்குனர் (developer)" பெறுகிறார்.இவர்கள் விக்கிப்பீடியா மென்பொருள் மற்றும் தரவுத்தளத்தில் மாற்றங்கள் செய்யும் உரிமை கொண்டவர்கள். இவர்கள் பெரும்பாலும், போலிப் பயனர் (sock puppetry) சோதனைகள் மற்றும் தொகுப்புகளின் பங்களிப்பாளரை மாற்றுவது போன்ற ஒருசிலவற்றைத் தவிர பிற நிர்வாகப் பணிகள் செய்வதில்லை.

### தமிழ் விக்கிபீடியாவில் கட்டுரைகளை ஆரம்பித்தல்

விக்கிப்பீடியாவில் புதிய கட்டுரைகளை ஆரம்பிப்பது கடினமான காரியமல்ல. எமக்குத் தெரிந்த எந்தவொரு விடயத்தையும் கட்டுரையாக பதியலாம். விக்கிப்பீடியாவில் கட்டுரைகளை இற்றைப்படுத்தும் போது முதலில் தமிழ் விக்கிப்பீடியாவின் 'முதற்பக்கத் திற்குச் செல்ல வேண்டும். முதற்பக்கத்தில் வலதுபக்கம் மேல் பகுதியில் "புகுபதிகை/பயனர் கணக்கு தொடக்கம்" என்ற பகுதியைத் தெரிவு செய்து அதனைச் சொடுக்க வேண்டும். அப்போது விக்கிப்பீடியாவின் புதுப்பயனருக் கான விண்ணப்பப் படிவம் தோன்றும். அதனைப் பூர்த்தி செய்து மின்னஞ்சல் முகவரிக்கான இடத்தில் விண்ணப்பதாரியின் சரியான மின்னஞ்சல் முகவரியையும் கொடுத்து ஒப்புவிக்க வேண்டும். பின்பு நம் மின்னஞ்சல் முகவரிக்கு தமிழ் விக்கிப்பீடியாவில் இருந்து ஒரு கடிதம் கிடைக்கும். இந்தக் கடிதத்தில் பயனர் பெயர், கடவுச்சொல் போன்றவைகள் தெரிவிக்கப் படுவதுடன் சரியான மின்னஞ்சல் முகவரிதானா என்பது சரிபார்க்கப்பட்டிருப்பதுடன் அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கும் இணைப்பில் சொடுக்கினால் நமக்கான புதுப்பயனர் பக்கம் தொடங்கப்பட்டுவிடும். அதன் பிறகு தமிழ் விக்கிபீடியாவின் பயனர்களில் ஒருவராக ஆகிவிடலாம்.

### புகுபதிகை

இதன் பிறகு 'புகுபதிகை'ப் பக்கத்திற்குச் சென்று நாம் பயனர் கணக்கு தொடங்கும்போது கொடுத்த 'பயனர் பெயர்' மற்றும் 'கடவுச் சொல்' போன்றவை களைக் கொடுத்து சொடுக்கினால் தமிழ் விக்கிப்பீடியாவில் நமக்கான பயனர் வழியில் உள்ளே சென்று விடலாம். நாம் புகுபதிகை செய்து உள்ளே நுழைந்த பின்பு தமிழ் விக்கிப்பீடியாவின் மேல்பகுதியில் நமது பயனர் பெயர், என்பேச்சு, என் விருப்பத்தேர்வுகள், என் கவனிப்புப் பட்டியல், என் பங்களிப்புகள், விடுபதிகை போன்ற தலைப்புகளில் சிறு குறிப்புச் சொற்கள் இடம் பெற்றிருக்கும். இதில் பயனர் பெயர் என்ற தலைப்பில் சொடுக்கி நம்மைப் பற்றிய தகவல்களை இங்கே பதிவு செய்து வைக்கலாம்.

என் விருப்பத் தேர்வுகள் என்ற தலைப்பில் சொடுக்கி நாம் அளிக்க விரும்பும் கட்டுரைகள் சார்ந்த துறைகள் குறித்த குறிப்புகளை இங்கே பதிவு செய்து கொள்ளலாம். என் பங்களிப்புகள் பக்கத்தில் நம் பயனர் வழியைப் பயன்படுத்தி நாம் செய்த பங்களிப்புகள் குறித்த கட்டுரை தலைப்பு, நாள், நேரம் மற்றும் அனைத்துத் தகவல்களும் அங்கே தானாக இடம் பெற்றுவிடும். இந்தப் பக்கத்திலிருந்து 'விடுபதிகை'யைச் சொடுக்கினால் நாம் நம் பயனர் பயன்பாட்டிலிருந்து விடுபட்டு விடலாம்.

### கட்டுரை எழுதுவது எப்படி?

நாம் கட்டுரை எழுதுவதற்கு முன்பு எம்மாதிரியான கட்டுரையை தமிழ் விக்கிபீடியாவிற்கு எழுதலாம்? தமிழ் விக்கிப்பீடியாவிற்கு ஏற்ற நடையில் எப்படி அளிப்பது என்பதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். அதன் பிறகு நாம் எழுத நினைத்திருக்கும் தலைப்பை தமிழ் விக்கிப்பீடியாவின் இடது பக்கத்தில் இருக்கும் 'தேடுக' எனும் தலைப்பிலான பகுதியில் உள்ள காலிக்கட்டத்தில் உள்ளீடு செய்து அதன் கீழ் உள்ள "செல்" எனும் இடத்தில் வைத்துச் சொடுக்கினால் நாம் கொடுத்திருக்கும் தலைப்பிலான கட்டுரை முன்னரே தமிழ் விக்கிப்பீடியாவில் இருந்தால் அந்தக் கட்டுரைக்கான பக்கம் திரைக்கு வந்து விடும். இல்லாவிடில் நாம் தேடிய பக்கம் எதுவும் இல்லை என்ற தகவலுடன் நாம் கொடுத்த தலைப்பு சிகப்பு நிறத்தில் தெரியும். மேலும் "இந்தப்பக்கத்தை நீங்கள் உருவாக்கலாம்" எனும் குறிப்பும் தெரியும். சிகப்பு நிறத்தில் தெரியும் நாம் கொடுத்த தலைப்பின் மேல் சொடுக்கினால் அந்த கட்டுரைக்கான தொகுப்புப் பக்கம் தோன்றிவிடும். இந்தப் பக்கத்தில் நாம் கட்டுரையைத் தமிழில் தட்டச்சு செய்துவிடலாம். மேலும் கட்டுரையை தமிழ் விக்கிப்பீடியாவிற்கு ஏற்ற வகையில் அளிக்க சில குறியீடுகளும் அளிக்கப் பட்டுள்ளன.

எழுதிய கட்டுரையில் புகைப்படம் அல்லது படங்கள் அவசியம் என்று கருதும் நிலையில் அந்தப் புகைப்படத்தை முதலில் விக்கிப்பீடியாவின் கட்டுப்பாடுகளுக்குட்பட்டு வலையேற்றம் செய்ய வேண்டும். தமிழ் விக்கிப்பீடியாவின் பட்டியலில் இருக்கும் காப்புரிமைக்கான விபரத்தைத் தேர்வு செய்து தமிழ் விக்கிப்பீடியாவின் நடைமுறைகளுக்கு ஒப்புதல் அளித்து படத்தை வலையேற்றம் செய்து விடலாம்.

இந்தக்கட்டுரைக்கு ஆதாரமானவற்றை 'ஆதாரம்' என்ற தலைப்பின் கீழ் கொடுக்கலாம். இந்தக் கட்டுரையுடன் தொடர்புடைய இணையப் பக்கங்களின் முகவரிகளை 'வெளி இணைப்பு' எனும் தலைப்புக் கொடுத்து அங்கிருந்து இணைப்பு செய்து விடலாம்.

கட்டுரை எந்தத் தலைப்பின் கீழான பகுப்பில் இடம் பெற்றிருக்கிறது என்பதைக் குறிப்பிட்டு விடலாம். கட்டுரை எந்த பகுப்பின் கீழ் இடம்பெற வேண்டும் என்பதை தேர்வு செய்ய பகுப்புப் பட்டியல்களை முன்கூட்டியே பார்த்துக் கொள்ளலாம்.

இவை அனைத்தையும் முழுமையாகச் செய்து பக்கத்தைச் சேமிக்கவும் பக்கத்தைச் சொடுக்கினால் கட்டுரையின் முழுப்பகுதியும் இடம் பெற்றுவிடும். இந்தக் கட்டுரையைப் பகுதி பகுதியாகக் கூடத் தயாரித்துக் கொள்ள முடியும்.

உலகம் முழுவதும் உள்ள பயனர்களால் தமிழ் விக்கிப்பீடியாவில் எழுதப்பட்ட புதிய கட்டுரைகள், முன்புள்ள கட்டுரைகளில் செய்யப்பட்ட மாற்றங்கள், பதிவேற்றப்பட்ட கோப்புகள், ஒரு சில கட்டுரை குறித்த உரையாடல்கள் போன்றவை குறித்த தகவல்கள் அனைத்தும் 'அண்மைய மாற்றங்கள்' எனும் பக்கத்தில் உடனுக்குடன் இடம் பெற்றுவிடுகின்றன.

### கட்டுரையில் மாற்றம்

தமிழ் விக்கிப்பீடியாவில் இருக்கும் அனைத்துக் கட்டுரைகளும் மாற்றங்களுக்கு உட்பட்டதாகவே இருக்கின்றன. கட்டுரையில் மேலும் பல தகவல்களைச் சேர்க்கவும் மாற்றங்கள் செய்யவும் தமிழ் விக்கிப்பீடியாவின் அனைத்துப் பயனர்களுக்கும் உரிமை அளிக்கப் பட்டிருக்கிறது. எனவே தமிழ் விக்கிப்பீடியாவில் இருக்கும் கட்டுரையில் எப்போது வேண்டுமானாலும் யாராலும் மாற்றங்கள் செய்யப்படலாம். நாமே கட்டுரையில் மீண்டும் மாற்றங்கள் ஏதும் செய்ய விரும்பினால் மாற்றங்கள் செய்து கொள்ளலாம்.

ஒவ்வொரு கட்டுரையின் மேல் பகுதியில் இடம் பெற்றிருக்கும். 'உரையாடல்' எனும் தலைப்பைச் சொடுக்கி அந்தப் பக்கத்தில் கட்டுரை குறித்த சந்தேகங்கள் இருந்தால் உதவச் சொல்லிக் கேட்கலாம். தவறுகள் இருந்தால் அதைச் சுட்டிக் காட்டலாம். இதற்கு பயனர் நிர்வாகியால் உதவிகள் கிடைக்கும். மேலும் கட்டுரை குறித்த சிறப்புகளைக் குறிப்பிடலாம். 'தொகு' எனும் தலைப்பைச் சொடுக்கினால் கட்டுரையின் முழுமைப் பகுதியாகவோ அல்லது பகுதியாகவோ மாற்றம் செய்து கொள்ளலாம். பகுதியாக மாற்றம் செய்து கொள்ள கட்டுரையின் துணைத் தலைப்புகளின் வலது புறத்தில் இருக்கும் 'தொகு' எனும் தலைப்பைச் சொடுக்கி மாற்றம் செய்து கொள்ளலாம். 'கட்டுரையில் வரலாறு' எனும் தலைப்பின் கீழ் கட்டுரையில் செய்யப்பட்ட அனைத்து மாற்றங்கள், மாற்றம் செய்யப்பட்ட நாள், நேரம் மற்றும் பங்களிப்பு செய்தவர்கள் குறித்த தகவல்கள் தானாகவே இடம் பெற்று விடுகின்றன. இந்த தமிழ் விக்கிப்பீடியாவில் கட்டுரைகளில் பங்களிப்பு செய்தவர் குறித்த விபரங்கள் கட்டுரைக்கான வரலாறு பக்கத்தில் மட்டுமே இடம் பெறுகிறது.

மேலும் கட்டுரைகளை அளிக்கும் பயனர்களுக்கோ பயனர் நிர்வாகிகளாக இருப்பவர்களுக்கோ எவ்விதமான பரிசுகளோ அல்லது நன்கொடையோ அளிக்கப்படு வதில்லை. இருப்பினும், தமிழ் வளர்ச்சியில் அக்கறை கொண்ட பயனர்கள் மற்றும் பயனர் நிர்வாகிகள் போன்றவர்களால் தமிழ் விக்கிப்பீடியாவில் கட்டுரைகள் அதிகமாகத் தொகுக்கப்பட்டு வருகின்றன.

### விக்கியில் ஏற்படக்கூடிய பிரச்சினைகள்

விக்கியில் ஏற்படக்கூடிய ஒரு முக்கிய பிரச்சினை பற்றியும் குறிப்பிடல் வேண்டும். எந்தவொரு விக்கியிலும் குழப்பக்காரர்களால் வேண்டும் என்றே சில கட்டுரைகள் மாற்றப்படலாம் அல்லது நீக்கப்படலாம். விக்கிப்பீடியா அனுபவத்தில் இது போன்ற சில நிகழ்வுகள் ஏற்பட்டுள்ளன. ஒரு கட்டுரை மாற்றம் பெறுகையில் அம் மாற்றத்தை விக்கி வரலாற்றில் பதிவு செய்கின்றது. மாற்றங்கள் தகுந்ததாக அமையாவிட்டால், அந்த வரலாற்றை அவதானித்து வரும் பயனர்களால் அம் மாற்றங்களை நீக்கி பழைய கட்டுரையை மீள் பதியலாம். குழப்பக்காரர்கள் விடாது வற்புறுத்தினால் அவர்களுடைய இணைய இலக்கத்தை விக்கி கண்காணிப்பாளர்களால் தடைசெய்ய முடியும். குழப்பக்காரர்கள் வேறு இணைய இலக்கத்தை பாவித்து மீண்டும் வர முயற்சித்தால் விக்கி கண்காணிப் பாளர்கள் புதிதாய் மாற்றப்படும் பக்கங்களை ஒரு வித தணிக்கையில் வைத்து பின்பு வெளியிடலாம். இவை தவிர மேலும் சில படி நிலை நடவடிக்கைகளையும் எடுக்க முடியும். விக்கி ஆர்வலர்களின் பங்களிப்புக் கூடும் போது இத்தகைய நிலைகள் மேலும் உறுதிப்படுத்தப்படுகின்றன.

### தமிழ் விக்கிப்பீடியா அறிமுக நிகழ்ச்சித் திட்டங்கள்.

தமிழ் விக்கிப்பீடியாவை அறிமுகம் செய்யும் பல நடவடிக்கைகள் 2009ம் ஆண்டில் விசேடமாக முன்னெடுக்கப்பட்டன. பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்கங்கள், வலைப்பதிவு, வானொலிகள், பத்திரிகைகள், இதழ்கள், நேரடிப் பயிற்சிகள் ஆகிய வழிகளின் ஊடாக அறிமுகப்படுத்துவதில் கரிசனை காட்டப்பட்டது. 2009ம் ஆண்டில் தமிழ் விக்கிப்பீடியா மூன்று பயிற்சிப் பட்டறைகளை ஒழுங்கு செய்தது. மூன்று கருத்தரங்கங்களில் பங்கு கொண்டது. தமிழ் விக்கிப்பீடியாவின் முதலாவது பட்டறை சென்னை விக்கிமீடியா அறிவகத்தின் முன்னெடுப்போடு சனவரி

18, 2009இலும், இரண்டாவது பட்டறை பெங்களூரில் சனவரி 31, 2009 இலும், மூன்றாவது பட்டறை இந்திய அறிவியல் கழகத் தமிழ்ப் பேரவையினரால் பெங்களூர் இந்திய அறிவியல் கழகத்தில் மார்ச் 21 இலும் நடத்தப்பட்டன.

சென்னையில் ஜூன் 14, 2009 இல் கிழக்குப் பதிப்பகத்தில் தமிழ் விக்கிப்பீடியா பற்றிய கருத்தரங்கம் நடைபெற்றது. தொடர்ந்து கனடா ரொரன்ரோவில் ஒக்டோபர் 14, 2009 இல் நடைபெற்ற தமிழ் தகவல் தொழில்நுட்பக் கருத்தரங்கில் தமிழ் விக்கிப்பீடியா பற்றி ஒரு களம் அமைந்தது. நவம்பர் 7 2009 இல் இந்தியா கோவை குமரகுரு கல்லூரியில் நடைபெற்ற தமிழ் கணிமை கருத்தரங்கிலும் தமிழ் விக்கி பற்றி அறிமுகம் மேற்கொள்ளப்பட்டது. இவை தவிர பல்வேறு இந்திய, இலங்கை ஊடகங்களிலும், இணையங்களிலும் விக்கிப்பீடியர்களின் விரிவான படைப்புக்கள் வெளிவந்தன. 2009 இன் இறுதியில் புதிதாக 'விக்கிப்பீடியர் அறிமுகம்' என்ற முதற்பக்க பகுதி தொடங்கப்பட்டது.

கடந்த ஆண்டுகளுடன் ஒப்பு நோக்கும் போது 2011 ஆம் ஆண்டில் விக்கிப் பீடியாவை அறிமுகப்படுத்தும் பல்வேறு செயல்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப் பட்டுள்ளன. குறிப்பாக 'உலகத் தமிழ்ச் செம்மொழி' மாநாட்டுடன் நடந்த தமிழ் விக்கிப்பீடியா கட்டுரைப் போட்டியைக் குறிப்பிடலாம். மேலும் செம்மொழி மாநாட்டுடன் இணைந்து நடத்தப்பட்ட 2010 தமிழ் இணைய மாநாட்டில் விக்கிப்பீடியா, விக்சனரி பற்றி விளக்குவதற்காக சிறப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டன. இணைய மாநாட்டில் நடைபெற்ற தமிழ் மின்தரவு மற்றும் மின்னகராதிகள் எனும் தலைப்பிலான ஆய்வரங்கில் தேனி.மு.சுப்பிரமணி அவர்கள் தமிழ் விக்கிப்பீடியா எனும் 'தமிழ்க் கலைக்களஞ்சியம்' என்ற தலைப்பில் கட்டுரை வாசித்தார். வலைப்பூக்கள் மற்றும் விக்கிப்பீடியா குறித்த கலந்துரையாடல் நிகழ்விலும் தமிழ் விக்கிப்பீடியர்கள் கலந்து கொண்டனர்.

2010 விக்கிமேனியா மாநாடு (இது அனைத்து விக்கிப்பீடியாக்களினதும் அறிமுக அரங்காகும்) போலந்து நாட்டின் கடான்சுகுவில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் மயூரநாதன் Tamil Wikipedia: A Study of The Challenges and Potentials in Relation to Socio-Cultural Context of the Tamil Community (தமிழ் விக்கிப்பீடியா: சமூக பண்பாட்டுச் சூழலில் தடைகளும் வாய்ப்புக்களும் பற்றிய ஓர் ஆய்வு) என்ற கட்டுரையையும், ரவிசங்கர் A Review of Google Translation project in Tamil Wikipedia: Role of voluntarism, free and organically evolved community in ensuring quality of Wikipedia (தமிழ் விக்கிப்பீடியாவில் கூகிள் மொழிபெயர்ப்புத் செயற்திட்டம் பற்றிய மதிப்பீடு: விக்கிப்பீடியாவின் தரத்தை உறுதிப்படுத்துவதில் இயல்பாக உருவான தன்னார்வலர் சமூகத்தின் பங்கு) என்ற கட்டுரையும் சமர்ப்பித்தனர்.

கடந்த ஆண்டில் இருந்து கூகிள் நிறுவனம் அவர்களது மொழிமாற்றிக் கருவியைப் பயன்படுத்தி, துறைசார் மொழிபெயர்ப்பாளர்களையும் ஈடுபடுத்தி ஆங்கில விக்கியில் இருந்து சில இந்திய விக்கிகளுக்கு கட்டுரை மொழிபெயர்ப்புகளைச் செய்து வருகின்றது. இந்த கூகிள் மொழிபெயர்ப்புத் திட்டத்தினால் நூற்றுக்கணக்கான ஆழமான கட்டுரைகள் விரைவாக ஆக்கப்படுவதற்கான வாய்ப்பு உள்ளது. ஆனால் தொடக்கத்தில் மொழிபெயர்க்கப் பட்ட பெரும்பாலான கட்டுரைகளின் தரம் மிக மோசமானதாக இருந்தது. இதனால் இந்த ஆண்டு தமிழ் விக்கிப்பீடியர் சமூகம் கூகிள் திட்ட ஒருங்கிணைப்பாளர்களுடன் பல கலந்துரையாடல்களில் ஈடுபட்டு, ஓரளவு இணக்க முடிவு எட்டப்பட்டது. தமிழ் விக்கியில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைப்புகளில், ஏற்றுக் கொள்ளப்பட்டத்தக்க தரத்தில் ஆங்கில விக்கியின் சிறப்புக் கட்டுரைகளில் இருந்து கட்டுரைகள் தற்போது மொழிபெயர்க்கப்படுகின்றன. மேலும் 2010ம் ஆண்டில் விக்கியூடக அறக்கட்டளையின் இந்தியப் பிரிவும் அலுவலகமும் பெங்களூரில் தொடங்கப்பட்டது. மேலும் துபாயில் நடந்த சந்திப்பு ஒன்றிலும் தமிழ் விக்கிப்பீடியர்கள் பங்கு கொண்டார்கள்.

கடந்த ஆண்டுகளைப் போலவே ஊடகங்கள், பட்டறைகள், நிகழ்வுகள் ஊடாக தமிழ் விக்கிப்பீடியாவை பரந்த தமிழ்ச் சமூகத்திற்கு அறிமுகப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டன. பேர்கனில் முதல் முறையாக நிகழ்ந்த '2010 தமிழ் தாய்மொழி மாநாட்டிலும் தமிழ் விக்கிப்பீடியா பற்றிய ஒரு சுருக்கமான அறிமுகம் தரப்பட்டது. சென்னையில் நவம்பரில் ஒரு விரிவான பட்டறை நிகழ்ந்தது. கனடாவில் 'யோர்க்' பல்கலைக்கழக தமிழ் வகுப்பு மாணவர்களுக்கும், கனடா சொற்கோவைக் குழுவிற்கும் அறிமுகப்படுத்தல்கள் வழங்கப்பட்டன. இலங்கையில் முதன் முறையாக டிசம்பர் 28, 2010 இல் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தமிழ் விக்கிப்பீடியா பயிற்சிப் பட்டறை நடைபெற்றது. தமிழ் விக்கிப்பீடியா குறித்து அனைத்து வாசகர்களுக்கும் எளிமையாக அறிமுகம் செய்யும் வண்ணம் தேனி.மு.சுப்பிரமணி அவர்களால் எழுதப்பட்ட தமிழ் விக்கிப்பீடியா எனும் நூலும் வெளியிடப்பட்டது.

### தமிழ் விக்கிபீடியா - வளர்ச்சிப் போக்கு

தமிழ் விக்கிபீடியாவின் வளர்ச்சிப் போக்கின் ஓர் அடித்தள ஆண்டாக 2005ஆம் ஆண்டினைக் கொள்ளலாம். ஆக்க உருவாக்கம், பக்க வடிவமைப்பு, வகைப்படுத்தல், நுட்ப மேம்படுத்தல், மொழிபெயர்ப்பு, நடைமுறை பரிந்துரைகள், பயனர் அறிமுகம் என பல தளங்களில் தமிழ் விக்கிபீடியா 2005ஆம் ஆண்டில் வளர்ச்சி கண்டுள்ளது. 2005ஆம் ஆண்டு 1000 கட்டுரைகள் என்ற இலக்கு எட்டப்பட்டு, 10,000 கட்டுரைகள் என்ற புதிய இலக்கு முன்வைக்கப் பட்டுள்ளது. கட்டுரை எண்ணிக்கைகளை விட தமிழ் விக்கிபீடியாவை பொறுத்தவரை அதன் நடு நிலைமை, உலக நோக்கு, தரம், நம்பிக்கை, சமூகம் ஆகியவை முக்கியம் என்பது மிக ஆழமாக உணரப்பட்டுள்ளது என 2005ம் ஆண்டிற்கான 'தமிழ் விக்கிப்பீடியா அறிக்கை' குறிப்பிட்டிருந்தது.

2009 ம் ஆண்டிலே பரந்த அடிப்படையில் தமிழ்ச் சமூகத்துக்கு தமிழ் விக்கிப்பீடியா அறிமுகமாகத் தொடங்கியது. 2009 ம் ஆண்டில் கட்டுரைகளின் எண்ணிக்கை 20000 க்கும் மேலாகக் கூடி ஒரு முக்கிய மைல்கல்லைத் தொட்டதுடன், 2008ம் ஆண்டோடு ஒப்பிடும்பொழுது பதிவுசெய்த பயனர்களின் எண்ணிக்கை இரண்டு மடங்காகி, 13,486 க்கும் மேலாகக் கூடியுள்ளது. நாளாந்தம் தமிழ் விக்கிப்பீடியா பார்க்கப்படும் அளவு மேலும் 10,000 ஆகக் கூடி 62,977 ஆக உயர்ந்தது.

தமிழ் விக்கிப்பீடியா உருவாக்கம் பெற்று 2011 ம் ஆண்டில் ஏழு ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில் தமிழ் விக்கிப்பீடியா புதிய முயற்சிகளுடன் தனது வளர்ச்சிப் போக்கினைக் காட்டி நிற்கின்றது. நாளாந்தம் தமிழ் விக்கிப்பீடியா பார்க்கப்படும் அளவு கடந்த ஆண்டை விட 25,000 ஆல் கூடி 89,256 ஆக உயர்ந்தது. இதுவொரு ஆரோக்கியமான மாற்றமே. மேலும் ஆங்கில விக்கிப்பீடியா போன்று தமிழ் விக்கிப்பீடியாவும் புதிய எளிய இடைமுகத்தைப் பெற்றுக் கொண்டது. மலையாள விக்கி பயனர்களின் உதவியுடன் நேரடியாக 'தமிழ் 99' அல்லது எழுத்துப்பெயர்ப்பு மூலம் தமிழில் தட்டச்சு செய்யும் வசதி ஏதுவாக்கப்பட்டது. தமிழ் விக்கிப்பீடியா 'குறுந்தட்டு திட்டமும்' ஆரம்பிக்கப்பட்டது.

### எதிர்பார்க்கை

காலமாற்றங்களுக்கேற்ப மனிதச் செயற்பாடுகளும் நடத்தைகளும் மாற்றமடைய வேண்டுமென்பது அறிவு ஜீவிகளின் எதிர்பார்க்கையாகும். அண்மையில் அமெரிக்காவைச் சேர்ந்த பேராசிரியர் போல் எடம்ஸ்மித் என்பவர் சீ.என்.என். செய்திச் சேவைக்கு வழங்கிய ஒரு நேர்காணலில் "2022ஆம் ஆண்டாகும்போது உலகளாவிய அறிவியல் வளர்ச்சியில் இலத்திரனியல் ஊடகங்களின் பங்களிப்பு 65%தை கடந்து விடு"மெனத் தெரிவித்திருந்தார். அவ்வாறாயின் இன்று தமிழ் மொழியில் இலத்திரனியல் கலைக் களஞ்சியமாகத் திகழும் தமிழ் விக்கிப்பீடியா இதில் ஒரு விசாலமான பங்களிப்பினை வழங்கவேண்டியிருக்கும்.

உலகெங்கும் வாழும் அனைத்து தமிழர்களும் இலாப நோக்கமற்ற, அரசியல்-சமய-பக்க-சாதி-வர்க்க சார்பற்ற அறிவுத்தொகுப்பான தமிழ் விக்கிபீடியாவில் இணைந்து அதன் வளர்ச்சியில் பங்களிப்பு செய்ய வேண்டியது அத்தியாவசியமானது. இதன் கூட்டுழைப்புத் திட்டத்திற்கு பங்களிக்க அனைவரும் முன்வரவேண்டும். எளிய தமிழில் தரமான கட்டற்ற கலைக்களஞ்சியம் என்ற குறிக்கோள் எம் அனைவரினதும் செயல்பாட்டை ஒருங்கிணைத்து வழிநடத்தும் இத்திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் தமிழ்மொழியின் வளத்துக்கும், பாதுகாப்புக்கும் துணைநிற்க வேண்டியது காலத்தின் தேவைக்கேற்ப தார்மீகப்பொறுப்பாகும்.

### உசாத்துணை


* அசோகமித்திரன்."Encyclopaedia in Tamil (தமிழில் கலைக்களஞ்சியம்)", நூல் திறனாய்வு. 'த இந்து நாளிதழ். 2007-07-17
* http://ta.wikipedia.org/wiki/ விக்கிப்பீடியா:சமுதாய_வலைவாசல்
* http://ta.wikipedia.org/wiki/ விக்கிப்பீடியா:தமிழ்_விக்கிப்பீடியா_புள்ளிவிபரங்கள்-பகுப்பாய்வு
* http://ta.wikipedia.org/wiki/ பகுப்பு:தமிழ்_விக்கிப்பீடியா_திட்டங்கள்
* சனவரி 11,2011 - புன்னியாமீன் (வலைப்பூ) விக்கிப்பீடியா எமது சொத்து
* சன்வரி 16, 2011 - கனல்-கே சுவிசு அரச வானொலியில் புன்னியாமீனின் நேர்காணல்.
* http://tamilwikipedia.blogspot.com/
* http://www.britannica.com/
* http://www.nisaptham.com/2005/04/blog-post_11.html
* http://www.youtube.com/TamilWikipeida
* http://twitter.com/tawiki
* http://chennaionline.com/tami/news/newsitem. aspx?newsid= f9a75700-62f0-40b0- 9f04-6c55160ac0f0 &categoryname=tchn
* http://www.thehindu.com/mp/2009/05/21/stories/2009052150760100.htm
* http://stats.wikimedia.org/EN TablesWikipediaTA.htm
* http://meta.wikimedia.org/wiki/List_of_Wikipedias
* http://www.muthukamalam.com/muthukamalam_katturai53.htm
* http://www.geotamil.com/pathivukal/e_interview_natkeeran_wickipedia.html
* http://mauran.blogspot.com/2007/02/blog-post_4900.html
* http://ukumar.blogspot.com/2006/05/blog

# அன்றைய கிறிஸ்தவக் குருமாரின் வாழ்க்கை முறையும் சில சொற்களும்

**- வாகரைவாணன்**

கிறிஸ்தவ மத குருமாரின் 'சமூக பண்பாட்டு இசைவாக்கம்' எனும் தலைப்பில் தெணியான் தினக்குரலில் (12.06.2011) எழுதிய கட்டுரையில் 16ம், 17ம், 18ம் நூற்றாண்டுகளில் தமிழ் நாட்டில் வாழ்ந்த கத்தோலிக்க, கிறிஸ்தவக் குருமாரின் வாழ்க்கை முறை அச்சான்றோர் தொடர்பான சில சொற்கள் பற்றித் தெரிவித்துள்ள கருத்துக்களையே இக்கட்டுரை ஆராய முற்படுகின்றது. முதலில் சொற்களை எடுத்துக் கொள்ளலாம்.

தமிழில் உள்ள சொற்களில் ஒரெழுத்துச் சொற்களும் அடங்கும். அவற்றில் ஐ என்னும் சொல்லும் ஒன்று. இச்சொல்லுக்கு (ஐ) கடவுள், அரசன், குரு, சிவன், துர்க்கை, தலைவன் என்றெல்லாம் பொருள் உண்டு.

இக்கருத்துக்களைக் கொண்ட ஐ என்னும் சொல்லில் இருந்தே ஐயன், ஐயர், ஐயை, ஐயப்பன் ஆகிய சொற்கள் தோற்றம் பெற்றன. இவற்றில் 'ஐ' எனும் சொல்லோடு 'அன், என்னும் ஆண்பால் விகுதி இணைந்தமையாலேயே ஐயன் (ஐ+அன்) எனும் சொல் உருவானது.

தமிழ் இலக்கணத்தின்படி அர், ஆர் விகுதிகள் பெற்ற சொற்கள் பன்மையேயாயினும், பழந்தமிழ் நூல்களில் அச்சொற்கள் மரியாதைப் பொருளில் ஒருமையாகவே வந்துள்ளன. இதனைத் தொல்காப்பியரும் 'ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும் (தொல்காப்பியம் - கிளவியாக்கம்) என்று எடுத்துரைப்பார்.

இதற்கமையவே ஐயன் (இச்சொல் முதல் போலியாக அய்யன் என்றும் வரும்) எனும் சொல் மரியாதைப் பொருளில் அர் விகுதி பெற்று ஐயர் என ஒருமையில் பயன்படுத்தப்படுகின்றது. இதிலிருந்து இவ்விரு சொற்களும் (ஐயர், ஐயன்) ஒத்த கருத்துள்ள சொற்கள் என்பது வெளிப்படை.

அந்தணர் எனும் சொல் பிராமணரை (பார்ப்பனரை) மட்டும் குறிக்கும் ஒரு சொல் அன்று என்பதனை பொய்யா மொழிப்புலவர் வள்ளுவரின் 'அற ஆழி அந்தணர்', 'அந்தணர் என்போர் அறவோர்' எனும் சொற்றொடர்கள் விளக்கும்.

வள்ளுவரின் இவ்விளக்கத்திலிருந்து பண்பாடு மிக்க ஒவ்வொருவரையும் அந்தணர் என்று அழைக்கலாம். இப்பண்பாட்டினையே (CULTURE) திருவள்ளுவர் 'செந்தண்மை' என்று குறிப்பிட்டுள்ளார் என நாம் கொள்ளமுடியும். குரு என்னும் சமஸ்கிருதச் சொல்லுக்கு இருளைப்போக்குபவர் என்று பொருள் இக்கருத்தின் அடிப்படையில் பார்ப்பனரைக் கூட குருக்கள் என்று கூற முடியும். ஆனால் சாதி முறைமையே குறிப்பிட்டதொரு சமுகத்தவர்களை மட்டும் இச்சொல்லால் (குருக்கள்) அழைத்திட வழி வகுத்துள்ளது.

தமிழ் இலக்கணத்தின் படி, பன்மை விகுதிகளைக் (கள், மார்) கொண்ட குருக்கள் குருமார் என்னும் சொற்களுக்கிடையில் கருத்தின் அடிப்படையில் எவ்வித வித்தியாசமும் இல்லை. எனினும் 'சாதி' இச்சொற்களுக்கிடையிலும் தனது மூக்கை நுழைத்து வேறுபடுத்திவிட்டது.

புத்தகம் எனும் பொருள் தரும் BIBLIA எனும் கிரேக்கச் சொல்லே தமிழில் விவிலியம் என்று திரிபடைந்தது. BIBLE எனும் ஆங்கிலச் சொல்லுக்கும் மேற்படி கிரேக்கச் சொல்லே மூலமாகும்.

தற்காலத்தில் விவிலியம் என்னும் கிரேக்கச் சொல் தவிர்க்கப்பட்டு அதற்கு மாற்றாக திருமறை நூல் என்னும் தூய தமிழ்ச் சொல் பயன்படுத்தப்படுகிறது. ஆயினும் விவிலியம் என்னும் சொல் இன்னும் புழக்கத்தில் இருக்கவே செய்கின்றது.

'வித்' என்னும் சமஸ்கிருதச் சொல்லில் (வின்ன அடி) இருந்தே வேதம், வித்தை, வித்யா, வித்தகன், வித்துவான் ஆகிய சொற்கள் தோற்றம் பெற்றன. இவை அனைத்தும் அறிவு என்னும் கருத்தோடு தொடர்புடையவை.

கி.மு.1500 ஆண்டுகளுக்கு முன் இந்தியாவில் குடியேறிய ஆரியர்கள் (பார்ப்பனர்கள்) என்னும் அந்நியர்களின் வாழ்க்கை முறை, சிந்தனை, பாரம்பரியம் என்பனவற்றையே பெரிதும் உள் வாங்கியுள்ள இன்றைய இந்துவத்தின் நான்கு வேதங்களையும் ஆகமங்களையும் மாதிரியாகக்

(SAMPLE) கொண்டே அன்று பைபிள் (பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும்) தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட போது 'வேதாகமம்' என்னும் பெயரைப் பெற்றது. இப்பெயரே கத்தோலிக்க, கிறிஸ்தவர்களை வேதக்காரர்கள் என அழைக்க வழிகோலியது எனலாம்.

துரை (இது ஒரு தெலுங்குச் சொல் என்பர்) என்னும் சொல்லும் ஐயர் என்னும் சொல்போன்று உயர்ந்த பொருளை உடையது. இதனை நன்கு உணர்ந்தமையாலேயே மகாகவி பாரதி பார்ப்பானை ஐயர் என்றும், வெள்ளைக்காரனைத் துரை என்றும் சொல்லும் காலமும் போனதே என்று முரசு கொட்டினான்.

இறைவழிபாட்டின் முக்கியதொரு சடங்காக இருப்பது பூசையாகும். இச்சொல்லின் திரிபே பூஜா என்னும் சமஸ்கிருதச் சொல் என்பர்) பூவைக் கொண்டு இச்சடங்கு செய்யப்படுவதினாலேயே (பூ + செய்) அது பூசை என ஆயிற்கு எனக் கூறுவர்.

இச்சொல் தரும் கருத்தின் அடிப்படையிலே பூசை செய்யும் அனைவரையும் (பிராமணர் உட்பட) பூசகர் அல்லது பூசுரர் என்று குறிப்பிடும் வழக்கம் தோன்றியது. ஆயினும் சாதி என்னும் பிரிவினை வாதியே குறிப்பிட்ட சிலருக்கு மட்டும் அச்சொற்களை உரிமையாக்கியது.

கலாசாரம் என்னும் சமஸ்கிருதச் சொல்லே நீண்ட நெடுங்காலமாக தமிழில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதற்கு இணையான பண்பாடு எனும் தமிழ்ச் சொல் CULTURE எனும் ஆங்கிலச் சொல்லை ஒட்டி எழுபது ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் அறிஞர் டி.கே.சி. அவர்களால் தோற்றுவிக்கப்பட்டது. இதிலிருந்து இவ்விரு சொற்களும் (பண்பாடு, கலாசாரம்) ஒத்த கருத்துள்ள சொற்கள் என்பது தெளிவு.

கி.பி.16ம், 17ம், 18ம் நூற்றாண்டுகளில் கத்தோலிக்கத் துறவிகளான தத்துவ போதகர் (ROBERT DE NOBILE) வீரமா முனிவர் (CONSTANTINE JOSEPH BESCHI) முதலானோரும், போப்பையர் (Q V.POPE) சீகன் பால்கு ஐயர், எல்லிஸ் துரை, இரேனியிஸ் ஐயர், கால்டுவெல் ஐயர் ஆகிய கிறிஸ்தவக் குருமாரும் தமிழ் நாட்டில் காலடி எடுத்து வைத்தபோது அங்கு சிறுபான்மையினரான பிராமணரின் பிடி இறுக்கமாகவே இருந்தது.

எனவேதான், அச்சான்றோருக்குத் தமிழ் நாட்டின் அந்தணர் வேடம் தரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதில் ஒரு சிறு அம்சாமகவே, வீரமாமுனிவர் அணிந்திருந்த குமிழ் மிதி அடியையும் நாம் கொள்ளல் வேண்டும்.

தமது மறையைத் தமிழ் மண்ணில் வேர் ஊன்றச் செய்வதற்காகக் கத்தோலிக்க, கிறிஸ்தவக் குருக்கள் தாங்கிய இவ்வேடமே அவர்களுக்கு ஐயர், துரை என்னும் பட்டங்களை அளித்தன. மற்றப்படி, அவர்கள் அப்பட்டங்களைத் தமக்குத் தாமே கட்டிக்கொள்ள வில்லை என்பதற்கு அப்பெரியாரின் எளிய வாழ்க்கையே (FRUGL LIFE) சான்றாக அமையும்.

பொது வைபவங்களில் தமிழர் விளக்கேற்றுதல், பூரண கும்பம் வைத்தல் நெற்றியில் சந்தனம் இடுதல் ஆகிய செயல்கள் தமிழர் பண்பாட்டோடு சம்பந்தப்பட்டவை. இதற்கும் இந்துத்துவத்திற்கும் எவ்வித சம்பந்தமுமில்லை என்பதனை இளங்கோ அடிகளின் சிலப்பதிகாரம் இந்திரவிழா ஊர் எடுத்த காதையில் இடம் பெற்றுள்ள,

மங்கலம் பொறித்த மகர வாசிகைத்
தோரணம் நிலைஇய தோம் அறு பசும்பொன்
பூரண கும்பத்துப் பொலிந்த பாலிகை
பாவை விளக்கு பசும் பொன் படாகை

எனும் பாடல் அடிகள் எடுத்துக் காட்டும்.

தமிழர்களில் பெரும்பான்மையோர் இந்துக்கள் என்ற காரணத்தினாலேயே தமிழர்க்குரிய தைப் பொங்கல் விழா இந்து மத விழாவாக இன்று பல இடங்களிலும் கொண்டாடப்படுகின்றமை இச்சந்தர்ப்பத்தில் இங்கு சுட்டிக் காட்டப்பட வேண்டியதொன்று.

சந்தனம் என்னும் வாசனைப்பொருள் தமிழர் வாழ்வோடு சம்பந்தப்பட்டமையை புறநானூறு (பாடல் 108) எடுத்துச் சொல்லும் இப்பாடலின்படி சந்தனக்கட்டை கொள்ளியாகவும் (விறகாக) சங்க காலத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இதுபோன்று இப்பொருள் (சந்தனம்) தமிழர் வாழ்வோடு தொடர்புடையது என்பதற்கு கி.மு. தமிழர்கள் அந்நிய நாட்டாரோடு மேற்கொண்ட வாணிபத்தில் அது இடம் பெற்றிருந்தமை தெளிவான சான்றாகும். இவ்வாணிபத்தின் ஊடாகவே சந்தனம் எனும் தமிழ்ச் சொல் புலம்பெயர்ந்து இன்று அது ஆங்கில மொழியில் SANDAL WOOD என்னும் பெயர் பெற்று விளங்குகின்றது.

முடிவாக, முந்நூறு ஆண்டுகளுக்கு முன் தமது மறைபோதகத்திற்காகத் தமிழ் நாட்டிற்கு வருகை தந்த கத்தோலிக்க கிறிஸ்தவக் குருமார் தமது நோக்கத்தை வெற்றிகரமாக மேற்கொள்ளும் பொருட்டு தம்மைத் தமிழக அந்தணராக மாற்றிக் கொண்டமை ஒரு தற்செயலான நிகழ்வாகும்.

ஆயினும், அன்றையச் சூழ்நிலை இவ்விதம் அச்சான்றோரை உருமாற்றினாலும் அவர்கள் வாழ்க்கை முட்படுக்கையாகவே இருந்தமையை வரலாறு காட்டும்.

# டொமினிக் ஜீவாவுக்கு எண்பத்தைந்து வயது

**- எம். ஏ. நுஃமான்**



டொமினிக் ஜீவாவுக்கு 85 வயதாகிறது. கலை இலக்கிய நண்பர்கள் அவரது எண்பத்தைந்தாவது பிறந்தநாளை கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் 27.06.2011 கொண்டாடினார்கள். 18.06.2011ல் பேராசிரியர் கா. சிவத்தம்பியின் எண்பதாவது பிறந்த நாளை முன்னிட்டு கரவை விக்னேஸ்வரா கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த நூல் வெளியீட்டு விழாவில் ஜீவாவைச் சந்தித்தேன். வழக்கம்போல் அன்போடு விசாரித்தார். மல்லிகை இதழ்களோடு அழகாக அச்சிட்ட ஒரு அழைப் பிதழையும் நீட்டினார். அது அவரது பிறந்த நாள் சந்திப்பு அழைப்பிதழ். எட்டுப் பக்கங்களில், ஒவ்வொரு பக்கத்திலும் ஜீவாவின் வெவ்வேறு முகத் தோற்றத்துடன், ஜீவமொழிகள் பொறிக்கப்பட்ட அழைப்பிதழ். இம்முறை கட்டாயம் இந்நிகழ்வில் கலந்துகொள்ள வேண்டும் என்று நினைத்தேன். எனினும் முடியவில்லை. ஆகையால் இக்குறிப்பை எழுதுகிறேன்.

ஜீவாவுக்கு எண்பத்தைந்து வயது என்பதை நம்பமுடியாது. அவரது ஆரோக்கியம் அப்படி. இன்னும் அதே வெள்ளை நெஷனல் வேட்டியுடன் கைகளை அகல விரித்து நிமிர்ந்து நடக்கிறார். இளமை மிடுக்கின் சுவடுகள் இன்னும் மறைந்துவிடவில்லை. தீவிர இலக்கியச் செயற்பாட்டாளராக, நான்கு தசாப்தங் களுக்கு மேலாக தொடர்ந்தும் மல்லிகை ஆசிரியராக அர்ப்பணிப்புடன் இயங்குகிறார். நினைவாற்றலும் செயற் துடிப்பும் மங்கிவிடவில்லை. உங்கள் இளமையின் ரகசியம் என்ன என்று வேடிக்கையாக மல்லிகை தூண்டில் பகுதிக்கு ஒரு கேள்வி அனுப்பலாம் என்று சிலவேளை நாங்கள் சில நண்பர்கள் சந்திக்கும் போது பேசிக்கொண்டதுண்டு. அதற்கு அவர் சொல்லக் கூடிய விடைகளை நினைத்துப் பார்த்துச் சிரித்ததும் உண்டு. ஜீவாவின் ஆரோக்கியத்தின் அடிப்படை அவரது வாழ்க்கை முறைதான் என்று நினைக்கிறேன். அவர் தன் வாழ்க்கையை கட்டுதிட்டமான சில ஒழுங்குமுறைகளுக்குள் அமைத்துக்கொண்டவர். தற்துணிபும் தன்னம்பிக்கையும் அவரை வழிநடத்தின. ஒரு இலக்கியவாதி என்ற வகையில் அவரது வாழ்வு நிறைவானது. இதில் அவருக்கு ஒரு சுயதிருப்தி இருப்பது அவரது ஒவ்வொரு எழுத்திலும் வெளிப்படக் காணலாம்.

நான் ஜீவாவை முதல்முதல் சந்தித்தது 1965 டிசம்பரில் என்று நினைக்கிறேன். அப்போதுதான் நீலாவணனுடன் முதல்முதல் நான் யாழ்ப்பாணம் போயிருந்தேன். அப்போது மல்லிகை வெளிவரத் தொடங்கியிருக்கவில்லை என்று நினைக்கிறேன். கஸ்தூரியார் வீதியில் ஜீவாவின் தொழிலகத்தில் அவரைச் சந்தித்துச் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந் தேன். என்ன பேசினோம் என்பது இப்போது நினைவில்லை. ஜீவா ஒருவருக்கு சிகையலங்காரம் செய்துகொண்டே என்னுடன் உரையாடியது இன்றும் நினைவிருக்கிறது. அப்போது நான் இலக்கிய உலகுக்குப் புதியவன். ஜீவா என்னைப் பற்றி அதிகம் அறிந்திருக்க முடியாது. 1970களின் தொடக்கத்தில் கைலாசபதியின் தலைமையில் சாகித்திய மண்டல உறுப்பினர்களாகச் செயற்பட்டபோதுதான் நாங்கள் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது. நாவலப் பிட்டியிலும் கல்முனையிலும் இலக்கிய விழாக்களை நாம் இணைந்து நடத்தியிருக்கிறோம். அக்காலகட்டத் தில்தான் நான் மல்லிகையில் அடிக்கடி எழுதினேன். 1976ல் நான் யாழ் பல்கலைக் கழகத்தில் விரிவுரை யாளராக இணைந்தபின் மல்லிகை அலுவலகத்திலும், வெளியிலும் அவரை அடிக்கடி சந்திக்கும் வாய்ப்புகள் இருந்தன. மல்லிகையைத் தருவதற்காக என் வீட்டுக்கும் அவர் சில தடவைகள் வந்திருக்கிறார். 1990ல் நான் யாழ்ப்பாணத்தை விட்டுப் புலம்பெயரும் வரை இச் சந்திப்பு நீடித்தது. பின்னர் ஜீவாவும் அநேகரைப்போல் கொழும்புக்குப் புலம்பெயர்ந்தார். அதன்பின் அடிக்கடி இல்லாவிட்டாலும் இடைக்கிடை அவரைச் சந்திக்கும் வாய்ப்புகள் கிடைக்கின்றன.

ஜீவாவுக்கும் எனக்குமிடையே சில ஊமை முரண்பாடுகள் இருந்தபோதும் அவை பகை முரண்பாடுகள் அல்ல, நட்புரீதியான, விமர்சனரீதியான முரண்பாடுகள்தான். நான் நீண்டகாலமாக மல்லிகைக்கு எழுதுவதில்லை என ஜீவாவுக்கு என்மீது வருத்தம் உண்டு. மல்லிகைக்கு மட்டுமல்ல ஏனைய பத்திரிகை களுக்கும் நான் அதிகம் எழுதுவதில்லை. அதற்கு உள்நோக்கம் எதுவும் இல்லை. நான் இப்போதெல்லாம் அதிகம் எழுதுவதில்லை என்பதுதான் அதற்குரிய ஒரே காரணம்.

ஜீவா கொழும்புக்கு வந்தபின்னர் மல்லிகை அட்டையில் எனது படமும் இடம்பெற வேண்டும் என்று விரும்பினார். கொழும்பில் சந்திக்கும் போதெல்லாம் வற்புறுத்தி எனது படம் ஒன்றை அனுப்பவேண்டும் என்று கேட்பார். நானும் அனுப்புவதாகச் சொல்லிவிட்டுச் செல்வேன், பிறகு மறந்துவிடுவேன். இவ்வாறான விடயங்களில் எனக்கு அதிக ஆர்வம் இருந்ததில்லை என்பதும் அதற்கு ஒருகாரணம். ஒருமுறை கொழும்பில் சந்தித்தபோது எனது படம் மல்லிகை அட்டையில் வராவிட்டால் வரலாறு தன்மீது பழிசுமத்தும் என்று தனக்கே உரிய பாணியில் ஜீவா என்னிடம் கூறினார்.

'வரலாற்றுப் பழியில்' இருந்து ஜீவாவை விடுவிக்க வேண்டும் என்று நானும் நினைத்தேன். ஆயினும் சொன்னதுபோல் படம் அனுப்பவில்லை. பின்னர் எப்படியோ எனது படம் ஒன்றை எங்கிருந்தோ பெற்று, எனது மாணவன் பிரசாந்தனைக்கொண்டு என்னைப் பற்றி ஒரு நல்ல கட்டுரை எழுதுவித்து ஜூன் 2009 மல்லிகை இதழில் பிரசுரித்தார். 'வரலாற்றுப் பழியில்' இருந்து ஜீவா விடுபட்டதில் எனக்குத் திருப்தியே.

மல்லிகையை வெளியிடத் தொடங்கிய பின்னர் ஜீவா தன் சுயதொழிலைக் கைவிட்டு அதனையே தன் முழுநேரத் தொழிலாகவும் இலக்கியப் பணியாகவும் வரித்துக்கொண்டார். சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக எழுத்தை, இலக்கியத்தை மட்டும் நம்பி வாழ்பவர் இலங்கையில் நான் அறிந்தவரை ஜீவா ஒருவர்தான். அவருடைய விடா முயற்சியும், தற்துணிபும், அர்ப்பணிப்பும் அதைச் சாத்தியமாக்கியுள்ளன, மல்லிகையை ஐம்பதாவது ஆண்டை நோக்கிக் கொண்டு செல்கின்றன. இதை ஒரு தனிமனித சாதனையாக நாம் கொண்டாடலாம்.

கடந்த நாற்பது ஆண்டுகால ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் மல்லிகையின் பங்கு என்ன என்ற கேள்வி நம்முன் உள்ளது. 1970க்குப் பின்னர் மல்லிகையில் எழுதி முன்னணிக்குவந்த ஒரு எழுத்தாளர் பரம்பரை இதற்குப் பதில் சொல்லும் என்று நம்புகின்றேன். திக்வல்லை கமால் எனக்கு உடனடியாக நினைவுக்கு வரும் ஓர் இலக்கிய ஆளுமை. இவருடைய கணிசமான படைப்புகள் மல்லிகையிலேயே பிரசுரமாயின. செங்கை யாழியான் தொகுத்த மல்லிகைச் சிறுகதைகள் இரு தொகுதிகளும் மல்லிகையின் இலக்கியப் பங்களிப்பின் அறுவடைகள்தான். தான் வளர்த்த அல்லது தன்னைக் களமாகக் கொண்டு வளர்ந்த இலக்கியப் பரம்பரை பற்றி மல்லிகை பெருமைப்படுவதில் நியாயம் உண்டு.

முக்கியமான சிங்கள எழுத்தாளர்களையும் அவர்களது படைப்புகளையும் தமிழுக்கு அறிமுகப் படுத்தியதிலும் மற்ற இதழ்களைவிட மல்லிகைக்கு முக்கியமான பங்கு உண்டு. மல்லிகை வெளியிட்ட சிங்களச் சிறுகதைகள் தொகுப்பு இதற்கு ஒரு உதாரணம்.

ஈழத்து இலக்கியம், இலக்கிய விமர்சனம் தொடர்பான திறந்த விவாதங்களுக்கு மல்லிகை எந்த அளவு களமாக அமைந்தது என்ற கேள்வியையும் நாம் கேட்டுப்பார்க்கலாம். இது தொடர்பான கருத்து வேறுபாடுகளுக்கு இடம் உண்டு. எனினும் மல்லிகையில் இடம்பெற்ற விமர்சனங்கள், விவாதங்கள் பல முக்கியமானவை. மார்க்சியம், தேசியம், இலக்கிய வடிவங்கள் என்பன தொடர்பான முக்கியமான விமர்சனக் கட்டுரைகள், விவாதங்கள் மல்லிகையில் இடம்பெற்றுள்ளன. கைலாசபதி, சிவத்தம்பி, ஏ. ஜே. கனகரட்னா உட்பட ஈழத்தின் முக்கியமான விமர்சகர்கள் மல்லிகையில் எழுதியுள்ளனர். மல்லிகையில் வெளிவந்த முக்கியமான விமர்சனக் கட்டுரைகள் தொகுக்கப்பட்டு நூலுருவாக்கப் படின் இத்துறையில் மல்லிகையின் பங்களிப்பு வெளிச்சத்துக்கு வரும்.

ஜீவா பிரதானமாக ஒரு படைப்பாளியா, பத்திரிகை ஆசிரியரா என்ற கேள்விக்குப் பதில் சொல்வது சற்றுச் சிக்கலானது. ஜீவா ஒரு படைப்பாளியாக - ஒரு சிறுகதை எழுத்தாளனாகவே தன் இலக்கிய வாழ்வைத் தொடங்கினார். 1950, 60 களில் அதில் தீவிரமாக இயங்கினார். தண்ணீரும் கண்ணீரும், பாதுகை, சாலையின் திருப்பம், வாழ்வின் தரிசனங்கள் ஆகிய நான்கு சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டார். பின்னர் இவற்றில் இடம்பெற்ற கதைகளையும் வேறு சில கதைகளையும் சேர்த்து 50 கதைகள் கொண்ட டொமினிக் ஜீவா சிறுகதைகள் ஒரு முழுத் தொகுப்பாக 1996ல் வெளிவந்தது. ஜீவாவின் மிகப் பெரும்பாலான கதைகள் 1950, 60களில் எழுதப்பட்டவைதான். மல்லிகை வெளிவரத் தொடங்கிய பின்னர் மிகக் குறைவான கதைகளையே ஜீவா எழுதியிருக்கிறார். அவ்வகையில் ஜீவா ஒரு சிறுகதை எழத்தாளர் என்பதைவிட மல்லிகை ஆசிரியர் என்ற பிம்பமே இன்று மேலோங்கியுள்ளது.

ஒரு சிறுகதை எழுத்தாளர் என்ற வகையில் 1950, 60 காலகட்டத்துச் சிறுகதை எழுத்தாளராகவே நாம் ஜீவாவை நோக்கவேண்டும். ஈழத்து இலக்கிய வரலாற்றைப் பொறுத்தவரை இக்காலகட்டம் மிக முக்கியமான ஒரு திருப்பு முனையாகும். இலங்கையில் இடதுசாரி, மார்க்சிய அரசியல் சிந்தனையும் முற்போக்கு இலக்கிய இயக்கமும் முன்னணிக்கு வந்த காலகட்டம் இது. சமூகரீதியில் ஒடுக்கப்பட்ட அடிநிலை மக்களின் அரசியல் விழிப்புணர்வும் சமூக எழுச்சியும் இலக்கியத்தில் வெளிப்பாடு பெற்று, சாதாரண மக்களின் பேச்சுமொழி இக்கிய மொழியாக மாற்றமடைந்த காலகட்டமும் இதுவே. வர்க்க, சாதி ஒடுக்குமுறைகளிலிருந்து விடுதலை என்ற குரல் இலக்கியத்தில் தீவிரமாக ஒலிக்கத் தொடங்கிய காலகட்டம் இது. தாழ்த்தப்பட்ட அடிநிலைச் சமூகங்களைச் சேர்ந்தவர்கள் இக்கால கட்டத்தில்தான் எழுத்தாளர்களாக முன்னணிக்கு வந்தார்கள். டொமினிக் ஜீவா, டானியல், என். கே. ரகுநாதன், எஸ். பொன்னுத்துரை போற்றவர்கள் இவ்வகையில் குறிப்பிடத் தக்கவர்கள். செ. கணேசலிங்கன், நீர்வை பொன்னையன், இளங்கீரன் முதலியோர் தாழ்த்தப்பட்ட சமூகங்களைச் சார்ந்தோர் அல்ல எனினும் புதிய இலக்கியக் கருத்துநிலையை ஏற்றுக் கொண்டு முற்போக்கு இயக்கத்தின் முக்கிய ஆளுமைகளாக உருவாகினர். கைலாசபதி, சிவத்தம்பி, ஏ.ஜே. கனகரட்னா ஆகியோர் முற்போக்கு இலக்கிய இயக்கத்தின் கருத்துநிலைக் காவலர்களாக முன்னணிக்கு வந்தனர்.

ஜீவாவின் கதைகள் இக்காலகட்டத்து முற்போக்கு இலக்கியக் கோட்பாட்டுக்கு உதாரணங்களாக அமைவன. ஜீவாவின் பெரும்பாலான கதாபாத்திரங்கள் தாழ்த்தப்பட்ட அல்லது அடிநிலை மக்களே. அவர்களது பிரச்சினைகள், துன்பங்கள், ஆசை அபிலாசைகள், அவர்களுக்குள் புதைந்திருக்கும் மனிதத் தன்மை என்பன அவரது கதைப் பொருளாக

அமைகின்றன. சாதி ஒடுக்குமுறை என்னும் யாழ்ப்பாணச் சமூக யதார்த்தத்தை, அங்கு நிலவிய வர்க்க முரண்பாட்டை முகத்தில் அறைந்தாற்போல் சொல்லும் கதைகள் அவற்றுட் பல. இக்காலத்தில் எழுதிய டானியல், என். கே. ரகுநாதன், நீர்வை பொன்னையன், செ. கணேசலிங்கள் முதலியோரின் கதைகளிலும் நாம் இப் பொதுப் பண்பைக் காணலாம். 1950, 60களில் இத்தகைய கதைகள் ஈழத்து இலக்கிய உலகில் புதியவை. அரசியல் உணர்வை முனைப்பாகக் கொண்டவை. அதனாலேயே இவை கலை அல்ல பிரச்சாரம் என ஒரு சாராரால் ஒதுக்கப்பட்டன. ஆனால் இதுவே மக்கள் இலக்கியத்தின் அழகியல் என முற்போக்கு விமர்சகர்களும் எழுத்தாளர்களும் வாதிட்டனர். அக்கால கட்டத்தில் இத்தகைய படைப்புகளை முன்னெடுத்துச் செல்லவேண்டிய வாலாற்றுத் தேவை தங்களுக்கு இருந்ததாக ஏ. ஜே. கனகரட்னா இதுபற்றிப் பேசும்போது ஒருமுறை என்னிடம் கூறினார். இப்போது பின்னோக்கிப் பார்க்கும்போது ஏ. ஜே. அப்படிச் சமாதானம் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்று தோன்றுகின்றது. எக்காலத்துக்கும் பொதுவான, நிலையான கலைமுறை, அழகியல் என்று எதுவும் இல்லை. எல்லாமே மாறுவன, வேறுபடுவன. இந்த வேறுபாடுகளே இலக்கியத்துக்கு ஒரு பன்முகத் தன்மையைத் தருகின்றன. 1950, 60 களில் 70களிலும்கூட முற்போக்கு இலக்கியம் முன்வைத்த அழகியல் தனித்துவமானது. வேறுபட்டது என்ற புரிதல் முற்போக்கு இலக்கியத்தின் அழகில் பிரச்சினைகள் பற்றிய சர்ச்சைகளுக்கு ஒரு தீர்வாக அமையலாம். இச்சர்ச்சைகள் எவ்வாறு இருந்தாலும் ஐம்பது அறுபதுகளில் ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியில் ஜீவாவும் ஒரு முக்கிய ஆளுமை என்பதை யாரும் மறுக்க முடியாது. மல்லிகைப் பந்தல் மூலமாக ஒரு நூல் வெளியீட்டாளர் என்ற வகையிலும் ஜீவாவின் இலக்கியப் பணி முக்கியமானது.

ஜீவாவின் சுயசரிதை நூல்களை - எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம், அச்சுத் தாளின் ஊடாக ஒரு அனுபவப் பயணம் - படிக்கும் போது அவரது சமூகச் சூழல், குடும்ப வாழ்வின் நெருக்கடி ஆகியவற்றுக்குள் அமிழ்ந்து போகாது ஈழத்து இலக்கிய உலகில் ஒரு முக்கியமான ஆளுமையாக அவர் எழுச்சியடைந்தது ஒரு ஆச்சரியமான நிகழ்வாகவே தோன்றுகின்றது. அவரது தன்னம்பிக்கையும் விடா முயற்சியுமே இதனைச் சாத்தியமாக்கியது என்று கூறலாம். சவரக் கடையே தன் சர்வகலாசாலை என்றும், நான் சிரைக்கப் பிறந்தவனல்ல சாதிக்கப் பிறந்தவன் என்றும், மண்புழுவாக இருந்து மனிதனானவன் என்றும் ஜீவா தன்னைப் பற்றிக் கூறியிருக்கிறார். தன்னையும் தன் வரலாற்று முக்கியத்துவத்தையும் பற்றி அடிக்கடி குரல் உயர்த்திப் பேசியும் எழுதியும் வந்திருக்கிறார். சிலவேளை இது ஒரு நெருடலாகவும் மிகையான சுய மதிப்பீடாகவும் எனக்குத் தோன்றியதுண்டு. ஆயினும், ஜீவா என்ற மனிதனின், எழுத்தாளனின், பத்திரிகையாளனின் பயணத்தில் தாண்ட வேண்டியிருந்த தடைகளையும், சகிக்க வேண்டியிருந்த அவமானங் களையும், சந்திக்க வேண்டியிருந்த இன்னல்களையும் அறியும்போது ஜீவாவின் உளவியலைப் புரிந்துகொள்ள முடிகிறது. ஜீவா சொல்வதுபோல் இறுக்கமான யாழ்ப்பாணச் சாதி அடுக்கை உடைத்துக்கொண்டு ஒரு மண்புழு மனிதனான கதைதான் ஜீவாவின் கதை. அவருடைய சிறுகதைகள் எல்லாவற்றையும் விடச் சிறந்த கதை அது. ஜீவாவின் 85ஆவது பிறந்த நாளை அதனாலேயே நானும் கொண்டாட நினைத்தேன். ஜீவா இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து மல்லிகையையும் மல்லிகைப் பந்தலையும் இன்னும் மணம் கமழச் செய்ய வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

# யாழ். இலக்கிய வட்டம்

## கனக செந்தி கதாவிருது

பின்வரும் சிறுகதைகளை கனக செந்தி கதா விருதுக்காக யூன் 2009 - 2011 வரையிலான காலகட்டத்தில் ஈழத்தில் வெளிவந்த சிறுகதைகளில் சிறந்தவையாக யாழ் இலக்கிய வட்டம் தெரிந்துள்ளது.

1. நந்திக் கடல் கரை - செங்கை ஆழியான் - மல்லிகை 45வது ஆண்டுமலர்
2. நவகண்டம் - எஸ்.ரஞ்சகுமார் - ஞானம் யூன் 2010
3. கடவுள் உள்ளே மனிதன் வெளியே - பெனி. பே - வீரகேசரி - வாரமலர் - 08.05.2011
4. வைராவெளி பேச்சியம்மன் - கேணிப்பித்தன் ச.அருளானந்தன் தினக்குரல் யூன் 5.

**பரிசுத் தினம் பின்னர் அறிவிக்கப்படும் பரிசு பெற்றவர்கள் தங்கள் சரியான முகவரியை அறியத் தரவும்.**

பிறவுண் ரோட், யாழ்ப்பாணம்

- செங்கை ஆழியான்

# அதிஷ்டக்காரன்

**- ஆவூரான் (அவுஸ்திரேலியா)**

கந்தப்பு மாஸ்ரர் ஆசிரியர் தொழிலுக்குப் பெருமை சேர்த்தவர். அவர் கற்பித்த பாடசாலையில் ஓய்வு பெறும் வரை சேவையாற்றியதோடு பாடசாலை வளர்ச்சியிலும் கல்வி மேம்பாட்டுக்கும் முன்நின்று உழைத்தவர்.

நான்கு பிள்ளைகளையும் பெற்றுக் கொடுத்து விட்டு அவர் மனைவி காமாட்சி கண்ணை மூடிக்கொண்டாள்.

நான்கு பிள்ளைகளையும் வளர்த்து ஆளாக்கி படிப்பித்து நிமிர்த்தும் வரையும் படாத பாடுபட்டவர். ஒரு ஆண் பிள்ளையையும் ஒரு பெண் பிள்ளையையும் வைத்திய கலாநிதிகளாகவும் மற்றைய ஆண் பிள்ளையையும் பெண்பிள்ளையையும் பொறியலாளர் களாகவும் இந்த உலகுக்கு தந்ததோடு ஆசிரியர் தொழிலும் ஓய்வு பெறும் வயதை அடைந்து விட்டார்.

நாட்டில் இனப்போர் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கும் காலம். அவர் பிள்ளைகள் மேற்படிப்பை காரணம் காட்டி அவுஸ்திரேலியா, கனடா, லண்டன் என்று புலம்பெயர்ந்து அங்கேயே நிரந்தரமாக வாழத் தலைப்பட்டனர்.



ஆசிரியர் தொழிலின் ஓய்வூதியமும் பிள்ளைகள் அனுப்பும் சிறு தொகையிலும் சொந்த ஊரோடு காலத்தைக் கழித்து வந்தார்.

சும்மா வந்து பார்த்து விட்டுப் போகலாம் என்று அழைத்த மூத்த மகனின் அழைப்பை ஏற்று அவுஸ்திரேலியா போனவர் அங்கேயே தங்கி கொண்டார்.

மகன் பழைய வீட்டை விற்காமல் புதிய வீடு ஒன்று கட்ட ஆரம்பித்தான். பழையதைத் திருத்தி வாடகைக்கு விட்டுப் பார்க்க ஆள் தேவைக்கு அவரை ஒரு காவல்காரனாக பாவித்தான். இதனால் சிலகாலம் மகனுடனே தங்கவேண்டி ஏற்பட்டது.

இப்படியே மெல்ல மெல்ல மாலை நேரம் நடந்து பழகி பாணுக்கும் பாலுக்கும் கடைதெருவுக்கு போய் வர மருமகள் கேட்கிறாவே என்று செய்யப்போய் அதுவே காலப்போக்கில் கடமையாகிவிட்டது.

இனி, பேரப்பிள்ளைகள் பிறந்து அவர்களைத் தாலாட்டி பராமரித்து என்று ஒவ்வொரு கட்டம் கட்டமாக காலமும் கரைந்தது.

பேரப்பிள்ளைகளும் வளர்ந்து அவர்களும் ஆளாகிப் போக கந்தப்பு மாஸ்ரரின் உடலும் தளர்ந்து வயதும் நிறைந்து அவரைப் பார்க்கவே சகிக்காத ஜடமாக உலா வர, பிள்ளைகளும் பேரப்பிளைகளும் அவர் மீது வெறுப்புக் காட்டத் தொடங்கினாரகள்.

ஊருக்கும் போக முடியாமல் மகன் வீட்டில் சந்தோசமாக வாழவும் முடியாமல் ஒரு திரிசங்கு நிலையில் இருந்தது அவரது வாழ்க்கை.

ஒரு நாள் கந்தப்பு மாஸ்ரர் தன் கால்போன போக்கில் போகத் தொடங்கினார். அன்று வெப்பமும் காற்றும் படு மோசமாக வீசியது.

மாஸ்ரருக்கு தண்ணீர் தாகமும் பசியும் வாட்டத் தொடங்கியது. பாதை ஓரமாக இருக்கும் கடைகளில் தண்ணீர் கேட்டார். யாருமே அவருக்கு தண்ணீர் கொடுக்கவில்லை.

அவருடைய சட்டைப் பையினுள் கையை வைத்துப் பார்த்தார் இரண்டு வெள்ளிகள் இருந்தன. அதை எடுத்து பக்கத்தில் உள்ள கடையில் இரண்டு வெள்ளிகளைக் கொடுத்து தண்ணீர் தரும்படி கேட்டார்.

கடைக்காரரோ இரண்டு வெள்ளிகள் பத்துக் காசுகள் தந்தால் தண்ணீர் தருவேன் என்று சொன்னதோடு கழுத்தைப் பிடித்து தள்ளாத குறையாக வெளியே போகும்படி சொன்னார்.

பத்துக்காசுகள் இல்லாததால் தண்ணீர் வேண்ட முடியவில்லையே என்ற கவலையுடன் வெளியே வந்தவர் எதிரே இருக்கும் அதிஷ்டலாபச் சீட்டிழுப்புக் கடையைக் கண்டார்.

இரண்டு வெள்ளிகளையும் உள்ளங் கையில் வைத்துக் கொண்டு எதையோ யோசித்தவர்

"இந்த இரண்டு வெள்ளிகளுக்கு ஏதாவது சீட்டுத் தரமுடியுமா?" என்று கேட்டார்.

கடைக்காரர் இரண்டு வெள்ளி களுக்கான சீட்டைக் கொடுக்க, அதை வேண்டியவர் உள்ளே நின்றே சுரண்டிப் பார்த்தார்.

என்ன ஆச்சரியம் மூன்றும் ஒரே மாதிரியான வடிவங்கள் இருக்க அதை அப்படியே கடைக்காரரிடம் காட்ட அதைச் சரிபார்த்த கடைக்காரரோ வாயை பிளந்து கொண்டு

உங்களுக்கு பத்தாயிரம் வெள்ளிகள் கிடைத் திருக்கிறது என்றார்.

இதைக் கேட்ட மற்றைய கடைக்காரர்களும் ஓடி வந்து சரிபார்த்ததோடு, உங்களுக்கு என்ன வேண்டும் என்று கேட்டு அவரை உபசரிக்கத் தொடங்கினர்.

இதுதான் உலகம்! என்று முணுமுணுத்தார் கந்தப்பு மாஸ்ரர்.

# தீவிரவாத பெண்ணியமும் பெண் உடல் அரசியலும்

- யுகாயினி

பெண்ணின் விடுதலையை பெண்ணின் மொழியில் பேசும் பெண்ணியச் சிந்தனை கடந்த நூற்றாண்டிலேயே தமிழில் தடம் பதித்ததாகக் கூறப்பட்டாலும் ஆண்டாள் பாசுர காலத்திலிருந்தே பெண் மொழிப் பிரயோகம் தமிழில் நுழைந்து விட்டது. எனினும் பெண்ணியத்தை சித்தாந்தப் புரிதலோடு ஒர் அரசியல் சொல்லாடலாக முன்வைக்கப்பட்டது கடந்த நூற்றாண்டில் தான்.

பெண் உரிமைகள், பாலின வேறுபாடு, பெண் சமத்துவம் முதலியவற்றை விவாதப் பொருளாக்கி பெண் விடுதலைப் பயணம் துரிதமாக முன்னெடுக்கப் பட்ட கடந்த நூற்றாண்டிலிருந்து நவீன தமிழ் இலக்கியத்திலும் பெண்ணியம் பேசு பொருளாகியது. பெண்ணியம் என்ற சொல்லாடலைத் தொடர்ந்து பெண்மொழி, பெண்உடல், பெண் அரசியல் என்ற பதப் பிரயோகங்களும் நடைமுறைக்கு வந்தன. பெண்ணின் விடுதலை பற்றி பெண்ணின் மொழியில் பேசும் காலம் வந்த பின்னர் கூடவே அதனை மறுத்துரைக்க தீவிரவாத பெண்ணியம் என்ற பதமும் புழக்கத்திற்கு வந்தது. வர்க்க ரீதியில், இனரீதியில் ஒடுக்கப்பட்ட வர்களைப் போலவே பெண்களும் ஒடுக்கப்பட்டவர்களே என்ற பார்வை புட்டு வைக்கப்பட்டது பெண் மொழியால் தான்.

பெண் தனது இருப்பையும் நிலையையும் உணர்ந்து தனது விடுதலைக்காகவும், சமத்துவத்திற் காகவும் தனது மொழியில் குரல் கொடுக்கும் இன்றைய காலகட்டத்தில், பெண்ணிய முன்னெடுப்புகளை அடக்கி ஒடுக்கிடவே தீவிரவாத பெண்ணியம் என்ற கூப்பாடு ஆணாதிக்க வாதிகளிடமிருந்து எழுந்தமை அப்படியொன்றும் ஆச்சரியப்படக் கூடிய விடயமல்ல. உரிமை இழந்த சிறுபான்மை இனத்தவர்கள் தமது உரிமைக்காக போர்க்குரல் எழுப்பிய வேளை அவர்களை தீவிரவாதிகளாக, பயங்கரவாதிகளாக காட்சிப்படுத்தப்பட்டமை போன்றதே இதுவும். ஒடுக்கப்பட்ட தொழிலாளர்கள் தமது உரிமைக்காக கிளர்ந்தெழுந்தபோது அதை அடக்க அவர்களுக்கு பூசப்பட்ட முலாம் போலத்தான் இதுவும்.

ஆரம்பத்தில் பெண்ணியவாதிகள் தமது இருப்பின் நிலையை உணர்ந்து அதைப் பெண்ணினத்திற்கு உணர்த்துவதில் முக்கிய பங்காற்றினர். அடுத்த கட்டமாகவே பெண்ணுரிமைக்கான போராட்டமாக பெண்ணியம் முகிழ்ந்தெழுந்தது. இதன் ஓர் அங்கமாகவே இலக்கியத்திலும் பெண்ணியம் பேசு பொருளானது. பெண் விடுதலை நோக்கிய நகர்வு, பெண்ணின் சமூக பண்பாட்டு அடிப்படையிலான சமத்துவமின்மையையும் பாலின வேறுபாட்டையும் முதன்மைப்படுத்தி பால் சமத்துவத்தை வலியுறுத்தியது. பெண்ணியவாதிகள் முன்வைத்த வாதங்கள் உடல் அரசியல் எனும் கருத்தியலாக உருப்பெற்றது.

இதனை அடுத்து பெண்கள், சிறுமிகள் மீதும் அவர்களது உடல் மீதும் அதனால் உளரீதியிலும் நிகழ்த்தப்படுகின்ற வன்முறைகள் பற்றியும், அதற்கு எதிரான போராட்டம் பற்றியும் தீவிரமாக சிந்திக்கப் பட்டது. பொது வாழ்வில் சம உரிமைகள் வழங்கப்படும் அதே வேளையில் வீட்டிலும் பாலியல் உறவுகளிலும் சம உரிமைகள் இருக்க வேண்டுமென்ற கருத்து முனைப்புப் பெற்றது. பெண், தனது உடல் மீது அதிகாரமும் ஆதிக்கமும் செலுத்துபவளாக இருக்க வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. எங்கள் உடல்கள் எங்களுக்கே என்ற முழக்கம் முன்வைக்கப் பட்டது. சமூகக் கட்டமைப்பின் நிறுவனங்களாலும், தனிப்பட்ட உறவு உடையவர்களாலும் பெண்ணுடல் அடக்கி ஒடுக்கப்படுகின்றன என்பதே உடல் அரசியலின் தெளிவுபடுத்தலாக மிளிர்ந்தது.

உடல் ஆதிக்கம் என்பது பல்லாயிரம் ஆண்டுகள் தொட்டே தொடங்கியதால் அதை மறுத்துரைப்பதில் பல நெருக்கடிகளைச் சந்திக்க நேர்வது இயல்பே. பெண் உடல் என்பதற்கு அப்பால் இன்னொரு படி மேலாக சாதிய உடலாக நோக்கப்படும் போக்கினால் ஒடுக்கப்பட்ட சமூகப் பெண்கள் மேலதிக வன்முறைகளுக்கு உள்ளானார்கள். பெண்ணுடல் அடக்கப்படுவதற்கு மதங்களும் துணை போயின. பெண்ணுக்குப் பாதகமான, பெண் உடலின் உரிமையை மறுக்கும் கலாசார பண்பாட்டு அம்சங்களும் உருவாக்கப்பட்டு பாரம்பரியமாகத் தொடரும் மரபு உருவானது. இன்று இதற்காகக் குரல் கொடுக்கும் பெண்கள் ஆணாதிக்கத் தினால் புறம் தள்ளப்பட்டு தனிமைப்படுத்தப்படுகின்ற அவல நிலையை அவதானிக்க முடிகிறது.

பெண் தன் உடலை எழுதல், தன் காமத்தை வெளிப்படுத்தல் என்பன தமிழுக்குப் புதிதல்ல. எனினும், இன்று பெண் அரசியலாக, விடுதலைக்கான ஆயுதமாக அது வெளிப்படும் போது ஆணாதிக்கத் தினால் அதை ஜீரணிக்க முடியவில்லை என்பதே யதார்த்தம். இதற்காக அவர்கள் முன்வைக்கும் அபத்தங்களும் ஆணாதிக்கப் பார்வையிலேயே வெளிப்படுகிறது.

சமையல் அறை வீட்டு வேலை 'ரோபோ'வாக இருந்த பெண் இன்னொரு புறம் ஆணுக்கு இன்பம் அளிப்பவளாகவும் இருந்த நிலையில் இன்று ஏற்பட்டு வரும் தளர்வினை, சுகமனுபவித்த ஆணாதிக்கம் ஏற்க தயங்கி நிற்கிறது. இதனாலேயே பெண்ணைத் தம்மை ஒத்த சக மனிதப் பிறவியாக சமத்துவம் உடையவளாக ஏற்றுக் கொள்ளத் தயங்கி நிற்கிறது. பெண் பற்றிய பழைய மதிப்பீடுகள் உடைந்து வரும் இன்றைய நவயுகத்தில் பெண் உடல் சார்ந்து போகப் பொருள் சார்ந்து பார்க்கும் பிம்பம் உரத்த கேள்விக்கு உள்ளாக்கப்பட்டு வருகிறது.

அந்தரங்கத்தைப் பகிரங்கமாக்குகின்ற பெண்ணின் காமத்தின் இயல்புத் தன்மைகளை எடுத்தியம்புகின்ற புனைவுகளை ஆபாசமாகக் கூச்சலிடும் ஆணாதிக்கம், இன்னொரு புறம் பெண்ணின் உடலை ஆபாசப்படுத்தி வியாபார விளம்பரம் செய்கின்ற யுக்தியைக் கண்டு கொள்வதேயில்லை. உடல் அரசியல் சார்ந்த, உடலையே விடுதலைக்கான ஆயுதமாக்குகின்ற பெண்ணின் எழுச்சியின் உக்கிரம் ஆணாதிக்கத்தை எரிக்கக் கூடியது. (ஆணை அல்ல)

இவ்வாறான பெண் உடலின் மொழியானது விடுதலை மொழியாக, விடுதலைக்கான ஆயுதமாக பெண்ணின் உள்ளத்தைப் புட்டுக்காட்டி சமத்துவத்தைக் கோரி நிற்கிறது. கருவறையில் தொடங்கி கல்லறை வரை தொடரும் பெண் அடக்கு முறையை விரட்டிட, சமத்துவத்தை ஈட்டிய பெண்மொழி உதவும் என நம்பப்படுகிறது.

பெண்ணின் உடலை காதல் போர்வையில் வர்ணித்து எழுதிய ஆண்வர்க்கம் அதை ஆபாசமாகக் கண்டு கொள்ளாமல், பெண்கள் பெண்ணுடலை விடுதலைக்கான ஓர் ஆயுதமாக்கி எழுதும்போது மட்டும் பண்பாடு, கலாசாரம், ஒழுக்கநெறி என்று கூச்சல் போடுகிறது. ஒழுக்க நெறிக்கு நானொன்றும் மாறானவளல்ல. அது இருபாலருக்கும் சமமானதாகவே இருக்க வேண்டும். பெண்ணுக்கு ஒரு நீதி ஆணுக்கு வேறு நீதி என்ற நோக்கு சமூகத்தில் இருப்பதால் தான் ஆண்களால் சேறு கண்ட இடத்தில் மிதித்து, தண்ணீர் கண்ட இடத்தில் கழுவிக் கொண்டு இயல்பாக இருக்க முடிகிறது. ஆனால் பெண் பாலியல் ரீதியில் தும்மினால் கூட குற்றமாக இச்சமூகம் நோக்குகிறது. பாரபட்சமான நோக்கினை மாற்றவே பெண்பொழியிலான படைப்புக்களை பெண் எழுத்தாளர்கள், வெளிக் கொண்டு வருகிறார்கள். பெண்களின் இதயத்தின் அந்தரங்க அறைகள் மௌனத்தால் நிரம்பியிருந்தன. அவளின் இயல்பான காமத்தைப் பற்றி மூச்சு விட முடியாத நிலை. ஆனால் ஆண்கள் தமது உணர்வுகளை பகிரங்கமாகப் பகிர்ந்து உரையாட சமூகம் அனுமதித்திருந்தது. இயல்பான காமத்திற்கு நேர்வழியில் தீனி கிடைக்காத போது ஆணால் மாற்று வழிகளைத் தேட சமூகம் இடமளித்துள்ளது. இரண்டாவது திருமணத்தைக் கூட ஆண்களால் செய்ய முடிகின்ற அதே வேளையில் விதவைகளான பெண்கள் வெள்ளைப் புடவைக்குள் தமது இயல்பான உணர்வுகளை அடக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள். ஏன் இந்தப் பாரபட்சம்?

சீதனம், சாதியம் எனப் பல தடைகள் பெண்களின் திருமணத்திற்கு தடைக் கற்களாக உறுத்துகின்றன. வாழாத குமர்களாக பல முதிர் கன்னிகள் வாடிக் கொண்டிருக்கிறார்கள். தீவிரவாதப் பெண்ணியம் எனப் புறம் தள்ளப்பட்ட பெண்ணியவாதிகள், பெண்ணின் சகல விதமான உரிமைகளுக்காகவும் குரல் கொடுக்கிறார்கள். பெண்ணின் அடக்கு முறைக்கு எதிரான ஆயுதமாக பெண்ணுடலை பெண்மொழியில் எழுதும் இவர்களை தீவிரவாதப் பெண்ணியவாதிகள் என ஒதுக்குவது முறையல்ல. இவர்களது படைப்பை ஆபாசம் என கூச்சலிடுவதை விடுத்து, அனுதாபத்துடன் பெண்ணின் மனதை நியாயமான அபிலாசைகளைப் புரிந்து கொள்ள வேண்டும்.

## சின்ன உயிர்களின் வருகை...

*சிவா சண்முகம்*



முற்றத்து வேப்பமரத்தின் அசைவில்
தவழ்ந்து வரும் பூங்காற்றின் சுகம்,
கோடை வெய்யிலின் வெப்பத்தை
தணிக்கு மென்று நினைத்தபோது.

யன்னல்களைத் திறந்தால் தென்றலாய்
நுழைந்து விடுகின்றன நுளம்புகள்.
சின்ன உயிர்களின் வருகை என்றாலும்
உள்ளத்துக்கு உ[illegible]சாகம் தரவில்லை.

உயிர் பறிக்கும் நோய்கள் பல பரப்பும்
ஜீவன்கள் அவை என்கிறபோது,
மீண்டும் இழுத்து மூடிவிடுகிறேன்
கதவுகளைக் கவலையுடன்.

உயிர்களை வதைக்கும் உரிமை
எனக்கில்லை என்றுணர்ந்த போது,
மூலையில் புகையும் கொசுவர்த்தியில்
முங்கி அவை செத்து மடிவதை தவிர்க்க.

எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்
WRITERS MOTIVATION CENTRE

எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்

வழங்கும்

# தமிழியல் விருது 2011

எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் ஆண்டு தோறும் ஈழத்திலும் வெளிநாடுகளிலும் வாழ்கின்ற ஈழத்துத் தமிழ்ப் படைப்பாளிகளை ஊக்குவிக்கும் வண்ணம் தமிழியல் வித்தகர் பட்டமும் தமிழியல் விருதும் பொற்கிழியும் வழங்கிக் கௌரவித்து வருகின்றது.

இவ்வாண்டும் கார்த்திகை மாதத்தில் இவ்விருதுகளை வழங்குவதற்கு எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் செயல்வடிவம் கொண்டுள்ளது.

## உயர் தமிழியல் விருது

இலக்கிய மேம்பாட்டுக்கு உரமாய் உழைத்த மிகச் சிறந்த மூத்த படைப்பாளி ஒருவருக்கு எழுத்தாளர் ஊக்குவிப்பு மைய ஸ்தாபகர் ஓ.கே. பாக்கியநாதன் உயர் தமிழியல் விருது வழங்கிக் கௌரவிக்கும்.

## தமிழியல் விருதும் தமிழியல் வித்தகர் பட்டமும்

தமிழிலக்கிய மேம்பாட்டுக்கு உரமாய் உழைத்த மூத்த படைப்பாளிகள், ஊடகவியலாளர்கள் 5 பேருக்கு தமிழியல் வித்தகர் பட்டத்துடன் தலா ரூபா 15000 பொற்கிழியும், வவுனியூர் ஸ்ரீ இராமகிருஷ்ணா கமலநாயகி தமிழியல் விருதும் வழங்கப்படும்.

## மிகச் சிறந்த நூலுக்கான தமிழியல் விருது

2010ஆம் ஆண்டில் வெளிவந்த மிகச் சிறந்த நூலொன்றுக்கு ரூபா 30000 பொற்கிழியுடன் சுவாமி விபுலாநந்த அடிகளார் தமிழியல் விருதும் வழங்கிக் கௌரவிக்கும்.

## சிறந்த நூல்களுக்குத் தமிழியல் விருது

2010ஆம் ஆண்டில் வெளிவந்த சிறந்த 13 நூல்களுக்கு தலா ரூபா 10000 பொற்கிழியுடன்.

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை தமிழியல் விருது
கல்விமான் க. முத்துலிங்கம் தமிழியல் விருது.
சிவநெறிப்புரவலர் சீ.ஏ இராமஸ்வாமி தமிழியல் விருது
கலைஞர் ஓ.கே. கணபதிப்பிள்ளை தமிழியல் விருது
வணபிதா சந்திரா அடிகளார் தமிழியல் விருது
வித்தியாகீர்த்தி ந. சந்திரகுமார் தமிழியல் விருது
புலவர் மணி ஆ. மு ஷரிபுத்தீன் தமிழியல் விருது
அருட்கலை வாரிதி தி. சு. சண்முகவடிவேல் தமிழியல் விருது
நாவலாசிரியை பவளசுந்தரம்மா தமிழியல் விருது
பம்பைமடு நாகலிங்கம்- நல்லம்மா தமிழியல்விருது.
பதிவாளர் நாயகம் எஸ் முத்துக்குமாரன் தமிழியல் விருது
செந்தமிழ்ச் செல்வர் சு. ஸ்ரீகந்தராஜா தமிழியல் விருது
பம்பைமடு கந்தையா இரஞ்சிதமலர் தமிழியல்விருது வழங்கிக் கௌரவிக்கும்.

## குறுந்திரைப் படத்திற்கான தமிழியல் விருது

2010 ஆண்டில் வெளிவந்த சிறந்த 2 குறுந்திரைப்படங்களுக்கு தலா ரூபா 10000 பொற்கிழியுடன் கவிஞர் கல்லாறன் மு. கணபதிப்பிள்ளை தமிழியல் விருது துறையூர் வே. நாகேந்திரன் தமிழியல் விருதும் வழங்கிக் கௌரவிக்கும்.

## சிறப்புத் தமிழியல் விருது

மிகச் சிறந்த வெளியீட்டகம் / பதிப்பகம் / நூல்வடிவமைப்பு / அட்டை வடிவமைப்புக்கு தலா ரூபா 5000 பொற்கிழியுடன்
புரவலர் ந. ஜெகதீசன் தமிழியல் விருது
புரவலர் எஸ். சோலைமலைத்தேவர் தமிழியல் விருதும் வழங்கிக் கௌரவிக்கும்

## ஓவியருக்கான தமிழியல் விருது

மிகச்சிறந்த ஓவியர் ஒருவருக்கு தலா ரூபா. 5000 பொற்கிழியுடன் ஓவியர் கிக்கோ தமிழியல் விருது வழங்கிக் கௌரவிக்கும் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வாழ்கின்ற இலங்கையைத் தாயகமாகக் கொண்ட படைப்பாளிகள் 2010 ஆம் ஆண்டு தை 1ஆம் திகதி முதல் மார்கழி 31 ஆம் திகதிவரை வெளிவந்த நூல்களையும் குறுந்திரைப்பட இறுவட்டுகளையும் தேர்வுக்காக அனுப்பிவைக்கலாம்.

நாவல் சிறுகதை ,கவிதை, குழந்தை இலக்கியம், விடலை இலக்கியம், நாடகம், அறிவியல், ஆய்வியல் வரலாறு, பழந்தமிழ் இலக்கியம், மொழி பெயர்ப்பு, இனமதநல்லுறவு இலக்கியம், சிறுவர் இலக்கியம், தொழில்நுட்பம் எனப் பல்துறை சார்ந்த நூல்களையும்,30நிமிடங்களுக்கு உட்பட்ட பல்துறை சார்ந்த குறுந்திரைப்பட இறுவட்டுகளையும் தேர்வுக்காக அனுப்பிவைக்கலாம்.

தேர்வுக்காக பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாகச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விபரப்பட்டியலுடன் நூலாயின் 4 பிரதிகளும் இறுவட்டாயின் 2 பிரதிகளும் 10-8-2011க்கு முன்னர் அனுப்பிவைக்கவேண்டும்.

**ஒரு படைப்பாளி எத்தனை வகையான படைப்புகளையும் அனுப்பிவைக்கலாம்.**

**அனுப்பவேண்டிய முகவரி:**

ஓ.கே. குணநாதன்
மேலாளர், எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம், இல. 64, கதிர்காதர் வீதி அமிர்தகழி, மட்டக்களப்பு, இலங்கை.
தொலைபேசி: 0776041503

ஓவியம் போன்ற இயற்கைக் காட்சிகளுடன் பிரெஞ்ச் சினிமா

# கப்டன் அக்கப்
# (Captain Achab)

எம்.கே.முருகானந்தன்.

நீங்கள் அழகை ஆராதிப்பவரா? அச்சில் வார்த்து எடுத்தது போன்ற அங்க நேர்த்திகளும், கலையம்சம் கொண்ட ஓவியங்களும், மனதைக் கௌவி இழுக்கும் இயற்கைக் காட்சிகளும் உங்கள் மனத்தைக் கிறங்க வைத்து மாய உலகிற்குள் சஞ்சரிக்க வைப்பதுண்டா?

அவ்வாறாயின் நீங்கள் நிச்சயம் பார்க்க வேண்டிய ஒரு திரைப்படம்தான் கப்டன் அக்கப் (Captain Achab). இது ஆங்கிலப்படுத்தப்பட்ட தலைப்பு ஆகும். அதன் உண்மையான பெயர் Capitaine Achab. ஆம்! பிரஞ்சு மொழியில். இது ஒரு பிரஞ்சு- சுவீடன் (France-Sweden) இணைத் தயாரிப்பு ஆகும்.




இது ஒரு 19ம் நூற்றாண்டுக் கதை. திமிங்கில வேட்டை ஆடும் கப்பல் கப்டனின் வாழ்க்கை பற்றியது. ஹேர்மன் மெல்விலின் (Herman Melville) மொபி டிக் என்ற பிரபல நாவலை (Moby Dick) அடிப்படையாகக் கொண்டு, திரைக்கு அவசியமான தாராளமான மாற்றங்களுடன் வெளிவந்துள்ளது. தன்னை கடற் சண்டையில் ஊனமாக்கி, ஏறத்தாழ கொன்று விட்ட மொமி டிக் என்ற அந்த திமிங்கிலத்தை அழிக்க வேண்டும் என்ற வன்மத்துடன் உள்ளவனது கதை. திமிங்கில எலும்பாலான பொய்கால் அணிந்து மீண்டும் கடலுக்கு இறங்குகிறான்.

இவ்வாறு சொன்னவுடன் இது திகிலூட்டும் கடற் சண்டைகள் நிறைந்த படமாக இருக்கக் கூடும் என எண்ணி பட CD வாங்கினால் நீங்கள் ஏமாந்துவிடுவீர்கள். இலங்கையில் திரையிடப் பட்டதாகத் தெரியவில்லை. பிரான்ஸ் திரைப்பட விழாவில் சென்ற வருடம் காணக் கிடைத்தது.

ஆற்றொழுக்காக படம் காட்சிப்படுத்தப்படவில்லை. நாவல்கள் சில சொல்லப்படுன்ற மாற்று உத்தியில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது. ஐந்து பாகங்கள். ஒவ்வொன்றும் ஐந்து வெவ்வேறு நபர்களின் பார்வைகளாக விரிகின்றன. சிறு வயது முதலான அக்கப்னது வாழ்வுக்கான போராட்டங்களும், இறுதி இலட்சியத்திற்கான முயற்சியும், போரில் மரணத்தைத் தழுவுவதுமான வாழ்வின் கதை இது. அவனது வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்திய ஐந்து நபர்கள் பார்வையாக ஐந்து தனித் தனிப் பாகங்களாகச் சொல்லப்படுகிறது.

அவன் பிறப்பே அவலமானது. மரணத்தின் ஆண்டவனாக தனது ஜனனத்தில் தாயைக் காவு கொள்கிறான். தாயின் அணைப்பை, தாய்ப்பாசத்தின் நெருக்கத்தை, தாய்பாலின் சுவையை அறியாதவன் அவன். தாய் இறந்ததும் அவனை வளர்த்து ஆளாக்கியவன் **தந்தை** - ஒரு வேட்டைக்காரன். இவனுக்கு வேட்டையில் ஆர்வம் பிறப்பதற்குக் காரணமாக இருந்தவனும் அவனது தந்தைதான். ஆனால் தந்தை அவனைத் தன்னுடன் வேட்டைக்கு அழைத்துச் செல்லவே இல்லை.

சுதந்திரப் புறாவாகத் திரியும் ஒரு பெண்ணுடன், தாய் இறந்த பின் இவனது தந்தை உறவு கொண்டிருந்தான். ஓவியம், இசை, பெண், வனம் என உல்லாசம் கொள்ளும் மற்றொருவனுடன் அவளுக்கு இந்தச் சூழ்நிலையில் தொடர்பு ஏற்படுகிறது. அவளுக்கு அப் புதியவன் 'சுகம்' தந்து கொண்டிருந்த வேளை அங்கு வந்து தகாராறில் ஈடுபட்ட தந்தை கத்தியால் குத்தப்பட்டு இறக்கிறான். தந்தை இறந்தபின் அவனுக்குப் புகலிடம் அளிப்பவள் **அத்தை.**

கடுமையான மதப்பற்றும் இறுக்கமான ஒழுக்கக் கட்டுப்பாடுகளும் உள்ளவள் அத்தை. நல்லவனாக கடவுளுக்கு அடங்கியவனாக ஒழுக்கமாக இவனை வாழவைக்க வேண்டும் என்பது அவளது எண்ணம். படிக்கக் கற்றுக் கொடுக்கிறாள். அதைவிட ஆர்வத்துடன் பைபிள் கற்பிக்கிறாள். ஆனால் ஒரு குழந்தையின் மனதைப் புரிந்து கொள்ளாத, மதஇறுக்கமான கொள்கைப் பிடிப்புக் காரணமாக அவனால் ஒட்ட முடியவில்லை.

அவளது கணவன் ஒரு பாடகன். கோபக்காரன். அவனிடம் ஏச்சும் வாங்கிக்கட்டுகிறான். இவனது சிறு தவறுக்காக அவனிடம் கடுமையான பிரம்படி வாங்கியதால் மனம் வெறுத்து, சுதந்திரத்தை நாடி, வீட்டிலிருந்து தப்பி ஓடுகிறான். அவ்வேளை கொள்ளைக் காரார்கள் பிடியில் மாட்டுகிறான். இவையெல்லாம் ரம்யமான காட்சிகள் அநாதை போல அலையும் அவனது வாழ்வின் போக்கற்ற தன்மையும், அன்பையும் சாகச வாழ்வை நாடும் இயல்பும், வஞ்சனை செய்யாமல் அழகை அள்ளிக் கொட்டும் இயற்கையும் அற்புதமான காட்சிகளாக விரிகின்றன.

கொள்ளைக்காரார்களிடம் சூடு வாங்கிக் காயப்பட்ட போது காப்பாற்றி மறுவாழ்வளிக்கும் **மதகுரு** முல்லிகன் (Mulligan). ஒழுக்கமான கடவுளின் பணியாளனாக இவனை உருவாக்குகிறார். ஆனால் அருகில் உள்ள கடலும், அதில் மீன் பிடித்தலும் இவனுக்கு ஆர்வத்தை ஊட்டுகின்றன. கடற்கரையில் கண்ட திமிங்கிலத்தின் எலும்புகள் இவனது தந்தை வழி வந்த வேட்டைக்கார ஜீன்ஸ்சை உசுப்பிவிட இவனும் ஒரு வேட்டைக்காரனாகிறான். கடலில் வேட்டை. திமிங்கில வேட்டை.

திமிங்கில வேட்டையில் காயத்திற்கு உள்ளாகி மயக்கமுற்று, மரணப் படுக்கையில் கிடந்தபோது மிகுந்த அக்கறையோடு அவனைப் பராமரித்து மீண்டும் நடமாட வைக்கிறாள் ஒரு பெண். அவனின் காதலியுமாகிறாள். அவள் **அனா.**

இவன் பொய்க் காலுடன் மீண்டும் கப்பலுக்குச் செல்லும்போது அங்கு அவனுக்கு உதவியாளனாக இருக்கும் **ஸ்டார்பக்.**

இந்த 5 பேரின் பார்வையாகவே கதை சொல்லப் படுகிறது.

உண்மையில் அவ்வாறு சொல்லப்பட வேண்டிய அவசியம் இருந்ததாகவே தெரியவில்லை. அவ்வாறு தனித் தனியாகச் சொல்லப்பட்டதால் படத்திற்கு சிறப்பு ஏதும் சேர்த்து விட்டதாகத் தெரியவில்லை. அதே நேரம் அதனால் கதை ஓட்டம் சிதைந்து பார்வையாளனுக்கு சிரமம் கொடுப்பதாகவும் இல்லை. ஆக்கப்பின் குழந்தைப் பருவக் காட்சிகள் மிக அற்புதமாக அமைந்திருக்கின்றன. குழந்தையின் நடிப்பும் மிகவும் நன்றாக இருக்கிறது.



திமிங்கிலத்தினால் காலை இழந்த பின்னான பகுதியும் சிறப்பாக காட்சிப் படுத்துப் பட்டுள்ளது. ஆனால் படத்தின் முக்கிய குறையாக இருப்பது அவனது இடைக்கால வாழ்க்கை காட்சிப்படுத்தப்படாததே. அதிலும் முக்கியமாக புகழ் பெற்ற கப்டனான அவனது திமிங்கில வேட்டை வீரதீரச் செயற்பாடுகள் எவையும் காணக் கிடைக்கவில்லை.

இதனால் சுவாரஸ்யம் கெட்ட படம் என்று சொல்லி விட முடியாது. கதை தெளிவாக உள்ளது. காட்சிப் படுத்தல், ஒவ்வொரு பிரேமும் மனத்தில் நிற்கும் அளவிற்கு மிகுந்த அவதானத்துடனும், கலையுணர் வுடனும் படமாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு அற்புதமான ஓவியத்திற்கு நிகரானவை. ஆசை தீரப் பார்த்துக் கொண்டே இருக்கலாம்.

அந்நாள் வாழ்வை மிக அவதானமாக அடையாளப் படுத்தும் வீடுகள், அவற்றில் உள்ள பாவனைப் பொருட்கள், உடையலங்காரம் என 19ஆம் நூற்றாண்டின் ஐரோப்பாவிற்குள் எங்களை உலவ விடுகிறது. பல ஆங்கிலப் படங்களில் பார்த்தவை என்ற போதும் இவை காட்சிப்படுத்தப்பட்ட கோணங்கள் அற்புதமாக உள்ளன.

காடு, நதி, அதில் ஓடும் ஓடம் எனச் சொல்லிக் கொண்டே போகலாம். அடர்ந்த காடுகளின் வனப்பு அவை கிசுகிசுக்கும் ரகசியங்களும் எங்களைக் கிறங்க வைக்கின்றன. இந்தக் காட்சிகள் கண்ணுக்கு இனிமையானவை என்பதால் மட்டும் முக்கியத்துவம் பெறவில்லை. கடந்து போன அந்தச் சரித்திராந்தக் கனவுக் காலத்தை நிஜத்திற்குள் கொண்டு வரவும் கைகொடுக்கின்றன. பாதை பிரிந்து ஓடும் ஆறுகளின் சலசலப்பும், அவற்றில் தவழ்ந்து செல்லும் படகுகளும் அற்புதமான காட்சி அனுபவங்கள். சரசரப்பு ஒலிகளுடன் இசையும் கலந்து ஒலிப்பது இனிமையான அனுபவம்.

உண்மையில் இதன் நெறியாளரான பிலிப் ரமோஸ் (Philippe Ramos) படப்பிடிப்பு ஆரம்பிக்க முன்னரே அவ்விடங்களுக்கு சென்று தான் எடுக்க வேண்டிய காட்சிகளின் கோணங்களை சித்திரமாக வரைந்து வந்தார் என்று சொல்லப்படுகிறது. உண்மையோ தெரியாது. ஆயினும் ஒவ்வொரு காட்சியும் கண்ணில் ஒற்றக் கூடியவையாக அமைந்துள்ளன. நெறியாள்கைக்கு மேலாக எடிட்டிங்கும் அவர்தான். பிரஞ்சுப் படம் என்பதால் அம்மணமான பெண்ணுடலின் அழகும் ஓரிடத்தில் வழமைபோலக் காட்சியாகியது. தெய்வங்களை எமது கோயிற் சிற்பங்களில் அம்மணமாகக் கண்ட அழுக்கற்ற மனத்தோடு இதையும் பார்க்கலாம்.

கதைக்காக, விறுவிறுப்புக்காகப் பார்க்க வேண்டிய படமல்ல. ஆனால் காட்சி அழகுகளுக்காக, வித்தியாசமான கோணங்களிலான படப்பிடிப்பிற்காக, இரண்டு நூற்றாண்டு களுக்கு முன்னான ஐரோப்பிய கிராமிய வாழ்க்கையை கண்டு ரசிப்பதற்காகப் பார்க்க வேண்டிய சினிமா.

# தமிழ்
# இலக்கியத் திறனாய்வியல்
## அடிப்படைகள் — வரலாறு — புதிய எல்லைகள்

கலாநிதி நா.சுப்பிரமணியன்

(11)



*(இக்கட்டுரைத் தொடரின் இப்பகுதியை எழுதிக் கொண்டிருந்த போது, பேரிடிபோன்ற ஒரு செய்தி கிடைத்தது. "பேராசிரியர் சிவத்தம்பி நம்மை விட்டுப் பிரிந்துவிட்டார்" என்பதே அது. சமகாலத் தமிழ்த் திறனாய் வுலகின் தனிப்பெரும் ஆளுமையாக - 'விமர்சன மாமலை'யாக-த்திகழ்ந்த அவரே திறனாய்வியல் சார்ந்த எனது அண்மைக்காலச் செயற்பாடுகள் பலவற்றையும்எனது உள்ளுணர்வில் நின்று இயக்கிநிற்பவராவார். இவ்வகையில் இச் சிந்தனைத் தொடருக்கும் இவரே என் உள்ளுணர்வில் நின்று இயக்கியவராவார். கடந்த 30ஆண்டுக்காலப் பகுதியில், யாழ் பல்கலைக்கழகச் சூழலிலும், அதன்பின் தமிழகத்தின் உயராய்வுச்சூழல்களிலும் பல்வேறு சந்தர்ப்பங்களில் அவருடன் யான் மிக நெருக்கமாக நின்று கருத்துப் பரிமாற்றங்கள் நிகழ்த்தியுள்ளேன். அவ்வாறான உரையாடல்கள் எனது இத் தொடரின் கருத்துருவாக்கங்களுக்கும் கட்டமைப்பிற்கும் பெருமளவு துணைபுரிந்துள்ளன. இத்தொடர் நிறைவெய்திய பின்னர் அவருடைய ஆலோசனை களுடனும் ஆசியுடனும் இதனை மேலும் செப்பனிட்டு நூல்வடிவில் வெளியிட எண்ணியிருந்தேன். இந்நிலையில், பேராசிரியர் அவர்களின் பிரிவு என்னை எவ்வளதுதூரம் பாதித்திருக்கும் என்பதை வாசகருடைய ஊகத்துக்கே விடுகிறேன். பேராசிரியரின் குடும்ப உறவுகளுடனும் அவரது சிந்தகைளுக்குத் தளமாக அமைந்த தமிழ்ஆய்வுச் சூழல்சார் உறவுகளுடனும் எனது துயரைப் பகிர்ந்து கொண்டு இத் தொடரைத் தொடர்கிறேன்.)*

### 3.1.2.1 படைப்பாக்க நிலையில் வளர்ச்சி, மாற்றம் என்பனவும் பொருளிலக்கண இயங்கு நிலைகளும் - (தொடர்ச்சி)

**த**மிழில் 'செயன் முறைத் திறனாய்வு' என்றவகையில மரபாக நிலவிவந்துள்ள சிந்தனைகள் பற்றிய பார்வையிலே ***பாயிரம்*** தொடர்பான சில செய்திகள் முன்னைய கட்டுரையிலே நோக்கப்பட்டன. ***பாயிரம்*** என்பதன் ஒருவகையைப் ***பதிகம்*** என்ற சொல்லாலும் வழங்கியுள்ளமை பற்றிய **நன்னூல்** நூற்பாச் செய்தி அங்கு தோற்றுவாய் செய்யப்பட்டது. அத் தொடர்பிலே மேலும் சில செய்திகளை நோக்குவ தோடு இக்கட்டுரை தொடர்கிறது.

**பாயிர மரபு (தொடர்ச்சி)**

***பாயிரம்*** என்பதன் வகையாகிய ***பதிகம்*** என்பதற்கு அமைந்த உரை, *"ஐந்து பொதுவும் பதினொரு சிறப்புமாகிய பல்வகைப் பொருளையும் தொகுத்துச் சொல்லுதலிற் பதிகமென்றும் ..."* எனப் பொருளுரைக்கிறது. இதனை நோக்கும்போது ***பொதுப்பாயிரம்*** மற்றும் ***சிறப்புப்பாயிரம்*** ஆகிய இரண்டினது செயன்முறைகளையும் உள்ளடக்கியதே ***பதிகம்*** எனப்பட்டதென்பது புலனாகின்றது. பண்டைத் தமிழிலக்கியப் பரப்பிலலே ***பதிகம்*** என்ற பெயரில் ***பாயிரப்***பண்புடனமைந்த எழுத்தாக்கங் களைச் **சிலப்பதிகாரம், மணிமேகலை** ஆகிய பேரிலக்கியங் களிற் காண்கிறோம். இவ்விரு **பதிக**ங்களும் அவ்வவ் விலக்கியங்கள் உருவான சூழல்சார் காரணிகள், அவற்றின் உள்ளடக்க அம்சங்கள் முதலானவற்றை விரித்துரைப்பன. இளங்கோவடிகளும் சாத்தனாரும் ஒருவருக்கொருவர் கேட்போராக அமைந்தனர் என்பதான செய்தியையும் இப்பதிகங்கள் சுட்டியமைகின்றன.

*'உரைசா லடிக ளருள மதுரைக்*
*கூல வாணிகன் சாத்தன் கேட்டனன்'*

எனவும்,

*'இளங்கோ வேந்த னருளிக் கேட்ப*
*வளங்கெழு கூல வாணிகன் சாத்தன்...*
*...அறியவைத்தனன்'*

எனவும் சுட்டி இப் **பதிக**ங்கள் நிறைவுறுகின்றன.

***பாயிரம்*** தொடர்பாக **நன்னூ**லிலே இடம்பெறும் செய்திகளுள் அடுத்து நமது கவனத்துக்குரிய முக்கியமான ஒன்று '***பாயிரம்*** வழங்குவதற்குத் தகுதியுடையோர்' பற்றிய குறிப்பாகும்.

*"தன்னாசிரியன் தன்னொடு கற்றோன்*
*தன்மா ணாக்கன் தகுமுரை காரனென்*
*றின்னோர் பாயிர மியம்புதல் கடனே."*

என்பதே அக குறிப்பாகும்.(நூற்பா:51) ஆசிரியர், உடன் பயின்றோன், மாணவன் மற்றும் உரை யெழுதுவோன் என நால்வகையினரே பாயிரங்கூறத் தகைமையுடையோர் என்பது இதன் பொருளாகும். இவ்வரையறை குறிப்பாக இலக்கணம் மற்றும் தருக்கம், தத்துவம் முதலிய வகைகள் சார்

ஆக்கங்களுக்கான ***பாயிர***ங்கள் பற்றியதாகவே கொள்ளத் தக்கது.

இவ்வாறு இவற்றுக்குப் பாயிரம் வழங்குவதான தகுதியை வரையறை செய்தமைக்கு மரபுணர்வே ஒரு முக்கிய காரணியாகும். அதாவது ஒவ்வொரு நூலுக்கும் பின்னால் ஒரு மரபுப் பின்புலம் அமைந்திருக்கும். குறித்த ஒரு நூலாசிரியர் அம்மரபில் நின்றுகொண்டே தனது காலத் தேவைகளையும் சிந்தனைவிரிவுகளையும் உட்கொண்டு புதுநூல்செய்ய முற்படுவார். இவ்வாறு புது நூல்கள் ஆக்கப்படும்நிலையில் அவற்றின் 'மரபுப் பின்புலம் எத்தகையது?' என்பதையும் அதில் புகுத்தப்பட்ட 'புதுமைகள் மற்றும் வளர்ச்சி அம்சங்கள் ஆகியவை மேற்படி மரபை எவ்வகையில் நெகிழ்த்து கின்றன?' என்பதையும் நூலாசிரிருடன் கல்வித்தொடர்பு கொண்ட வர்களான ஆசிரியர், உடன்பயின்றவர் மற்றும் மாணவர் ஆகியவர்களே சரிவர உணர்ந்து கொள்ளக் கூடியவர்களாவர். எனவே அம்மூவரும் ***பாயிரம்*** வழங்க உரிமையுடையவர்கள் எனப்பட்டனர் எனக் கருதமுடிகின்றது.

உரைகாரர் எனப்படுபவர் குறித்த ஒரு கல்விச் சூழலில் உருவான ஆக்கத்தை இன்னொரு கல்விச் சூழலுக்கு ஏற்ப விரித்துக்கூற முற்படுபவராவார். அவ்வாறு அவர் புதிய சூழலுக்கு அந்நூலை அறிமுகம் செய்ய முற்படும் போது நூலின் மரபையும் நெகிழ்த் தப்பட்ட அம்சங்களையும்பற்றித் தெளிவாகத் தெரிந்து கொண்ட பின்னரே அம்முயற்றியில் ஈடுபடமுடியும். இத்தகைமையுடன் உரையெழுதும் அவர் அவ்வுரை யுடன் கூடிய ஆக்கத்துக்கு அறிமுகக் குறிப்பாகப் ***பாயிரம்*** செய்யும் உரிமையுடையவராகிறார். ***பாயிரம்*** வழங்கு வதற்கு உரிமையுடையோர் தொடர்பான **நன்னூ**லற் மேற்படி நூற்பா தரும் வரையறையை இவ்வாறு நாம் தெளிந்து கொள்ளலாம்.

***பாயிரம்*** தொடர்பாக **இறையனார் களவியலுரை** மற்றும் **நன்னூல்** என்பன தரும் செய்திகளை இதுவரை மேலே நோக்கினோம். பின்னாளில் ***பாயிர*** மரபானது ***சாற்றுகவி (சாத்துகவி)*** என்ற பெயரிலும் வழங்கப்படத்தொடங்கிவிட்டமையை 19ஆம்நூற்றாண்டின் இலக்கிய வரலாற்றுச் செய்திகளினூடாகத் தெரிந்து கொள்ளமுடியம். மேலும், நன்னூல் சுட்டிய ஆசிரியர், உடன்பயின்றோன், மாணவன் மற்றும் உரையெழுது வோன் என்பதான வரையறைக்கு அப்பால் சமகால அறிஞர்கள் மற்றும் சமூக மதிப்புப் பெற்ற பெரியோர்கள் முதிய பலரிடம் ***பாயிரம்*** பெறுவதான நடைமுறை யொன்றும் 19ஆம்நூற்றாண்டில் வழக்கிற்கு வந்துவிட்டமை தெரிகிறது. குறிப்பாக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் பதிப்பு முயற்சிகளுக்குச் சிவசங்கர மண்டிதர், தாண்டவராய முதலியார், வித்துவான் சுப்பராய செட்டியார் முதலியோர் வழங்கிய ***பாயிர***ங்கள் இவ்வகையில் நமது கவனத்துக்குரியன. இன்று நூலாசிரியர்கள் ***என்னுரை, நூலாசிரியருரை*** என்பனவாக எழுதும் ***முன்னுரை*** முறைமைக்கு முன்னோடி எனத்தக்கவகையில் முன்னாளில் ***தற்சிறப்புப் பாயிரம்*** என்ற ***பாயிர*** வகைமையும் வழக்கிலிருந்துவந்துள்ளது.

***பாயிரம்*** தொடர்பான மேற்படி இவ்விளக்கங் களை அடுத்து, இலக்கிய ஆக்கமொன்று சமூகவெளியை நோக்கி இட்டுவரப்படும் முறைமைகள் தொடர்பான பண்டைய தமிழகச் செய்திகள் என்றவகையில் ***சங்கம், சங்கப்பலகை*** ஆகிய கருத்தாக்கங்களும் ***அரங்கேற்றம்*** என்ற செயன்முறையும் அடுத்து நமது கவனத்துக்கு வருகின்றன.

### ***சங்கம், சங்கப்பலகை மற்றும் அரங்கேற்றம்:***

இலக்கியஆக்கங்களைச் சமூகமட்டத்தில் அறிமுகம் செய்யும்நோக்கில் மேற்கொள்ளப்படும் முதல் முயற்சிகளை ***நூல் அறிமுகம்*** மற்றும் ***நூல்வெளியீடு*** என்பனவாகச் சுட்டுவது நமது கால மரபு. இவ்வகைச் செயன்முறைகள் பண்டைய காலமுதலே தமிழ்ச் சூழலில் நிலவிவந்துள்ளன. ***சங்கம், சங்கப் பலகை*** மற்றும் ***அரங்கேற்றம்*** முதலிய பெயர்களில மைந்த கருத்தாக்கங்களும் அவை தொடர்பான செயன்முறை களும்பற்றிய செய்திகள் நமக்குத் தரும் வரலாற்றுக் காட்சி இது.

***சங்கம்*** என்பது இலக்கிய, இலக்கண ஆக்கங்களின் தகுதிப்பாடு தொடர்பாக படைப் பாளிகளும் மொழிசார் புலமையாளர்களும் கூடிப்பேசும் பேரவைகளைக் குறிப்பதாகும். இவ்வாறான பேரவைகள் பல பண்டைத் தமிழ் மன்னர்களின் ஆதரவுடன் அவர்களது தலைநகரங்களில் அமைந்திருந்தன என்பதை இலக்கிய, இலக்கணச் சான்றாதாரங்களூடாக உய்த்துணர்ந்துகொள்ள முடிகிறது. குறிப்பாக, பாண்டிய மன்னர்களின் பேராதரவுடன் தென்மதுரை, கபாடபுரம், மதுரை ஆகிய இடங்களில் வெவ்வேறு கால கட்டங்களில் முறையே 'தலைச்சங்கம்', 'இடைச்சங்கம்' மற்றும் 'கடைச்சங்கம்' என்பனவாக மூன்று சங்கங்கள் இருந்து தமிழாய்வை மேற்கொண்டன என்பது **இறையனார் களவியலுரை** மூலம் தெரியவரும் செய்தியாகும். மதுரைத் தமிழ்ச் சங்கச் சூழலிலே அங்குள்ள பொற்றாமரை வாவியிலே ***சங்கப் பலகை*** என்ற பெயரிலான 'தகுதிகாண் பீடம்' ஒன்று இருந்தது என்பதான கதைகளும் தமிழ்மரபில் நிலவிவரு கின்றன. தகுதிவாய்ந்த புலவர்கள் மட்டும் அமர இடம் தருவதான ***'சங்கப்பலகை'***யென்ற பெயரிலான பீடமொன்றை மதுரைத் தமிழ்ச்சங்கப் புலவர்களின் கேள்விக் கிணங்க ஆலவாய்க் கடவுள் நல்கினார் எனப் பரஞ்சோதி முனிவரின் **திருவிளையாடற்புராண**த்தின் 'சங்கப்பலகை தந்த படலம்' எடுத்துரைக்கிறது. தமிழ்ப் பேரிலக்கியங்களான **கம்பராமாயணம், கந்தபுராணம்** முதலிய பெருநூல்கள் பல கலைவல்லார் பலர் குழுமிய சபையிலே ***அரங்கேற்றப்பட்டன*** என்பதான கதைகளும் தமிழில் மரபாக வழங்கிவருகின்றன. இவ்வாறான கதைகள், செய்திகள் ஆகியன 'புராணத் தன்மை' வாய்ந்த கற்பனைகளுடனும் கூடியவை என்பதும் இங்கு நம் மனங்கொள்ள வேண்டியது அம்சமாகும்.

நூல் அரங்கேற்றச் செயன்முறைகள் தொடர்பான பல இலக்கண நிலைப்பட்ட செய்திகளை **வெண்பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல்** முதலிய இலக்கண

நூல்கள் எடுத்துரைக்கின்றன என்பதும் இத்தொடர்பிற் குறிப்பிடப்படவெண்டியதாகிறது.

இவ்வாறான செய்திகள், கதைகள் என்பவற்றை இங்கு விரித்துப்பேசவேண்டிய அவசியம் இருப்பதாக நான் கருதவில்லை. மாறாக, தமிழரின் செயன்முறைத் திறனாய்வியல் சார் கருத்தாக்கங்கள் தொடர்பாக இவற்றி னூடாக நாம் புரிந்துகொள்ளக்கூடிய அமசங்கள் எவை என்பதைச் சுட்டுவதே இங்கு முக்கியமானது. குறிப்பாக, இலக்கியம் மற்றும் இலக்கணம் சார் ஆக்கமுயற்சிகள் எழுத்துநிலையில் பதிவாகத் தொடங்கிய சூழ்நிலைகளில், அவ்வாக்கங்களுள் தரமானவற்றை மட்டும் தேர்ந்து நிறுவன நிலையிற் பேணிக்கொள்ள வேண்டுமென்ற கருத்தும் உருவாகிவிட்டது என்பதையே மேற்படி செய்திகளும் கதைகளும் உணர்த்திநிற்கின்றன என்பது வெளிப்படை. மேற்சுட்டிய ***சங்கம்*** என்பது 'புலவர் அவை' என்ற பொருள் தருவதால் மொழிப்புலமை மற்றும் இலக்கியப் புலமை என்பன முக்கிய தகுதிகளாகக் கருதப்பட்டன என்பதை உய்த்துணரமுடியும்.

***சங்கப்பலகை*** தொடர்பான கருத்தாக்கமானது அக்காலப்பகுதியில் தரமதிப்பீடு தொடர்பாக நிலவிய 'அளவுகோல்'களுக்கான 'குறியீடு' எனக் கொள்ளத் தக்கது. **திருவிளையாடற் புராணக்** கதையில், ***சங்கப் பலகை***யானது தகுதிவாய்ந்த முதிய புலவர்கள் வரும்போது தானே விரிந்து - ஒருமுழம் நீண்டு - இடமளிப்பது என்பதான செய்தி உளது.(சங்கப்பலகை தந்த படலம்:25) அறிவின் முதிர்ச்சிக்கு வாய்ப்பளித்துத் தகுதியான புதியனவற்றை வரவேற்பதான 'மனவிரிவு' கொண்டதாக மேற்படி 'அளவுகோல்' திகழ்ந்துள்ளது என்பதை இக்குறிப்பூமூலம் உய்த்துணரலாம். இவ்வாறான ***சங்கப் பலகைக்*** கருத்தாக்கமானது பிற்காலத்தில சமூகநிலைப் பட்ட செயல்வடிவில் எய்திய பரிணாமமாகவே ***அரங்கேற்றம்*** எனப்படும் நடைமுறை நமது கவனத்துக்குவருகிறது.

***அரங்கேற்றம்*** என்பதன் அடிச்சொல்லான அரங்கு, அரங்கம் என்பவை பொதுவாக மக்கள் கூடும் சபையையும் சிறப்பாக அச்சபையிலமைந்த 'மேடை'யையும் குறிப்பன என்பதை அறிவோம். கலை மற்றும் இலக்கியத் துறைகளில் தமது திறமைகளை வளர்த்துக் கொண்டவர்கள் மேடையிலே முதன் முதலில் அறிமுகமாகி, ஆளுமைகளை வெளிப்படுத்தி, அங்கிருந்த அவையோரின் அங்கீகாரத்தைக் கோரிநிற்பதான செயன்முறையே ***அரங்கேற்றம்*** என மரபாக வழங்கப் பட்டுவருகின்றது. தமிழிலே இச்செயன்முறை சார்ந்ததாக நமக்குக் கிடைக்கும் முதலாவது தகவல் **சிலப்பதிகார**த்தில் இடம்பெற்றுள்ள மாதவியின் 'நடன அரங்கேற்ற' மாகும். இந்நிகழ்வைப் பேசும் கதைப்பகுதியை, 'அரங்கேற்றுகாதை' என்றே அப் பேரிலக்கியம் குறிப்பிடுகின்றது. இலக்கிய ஆக்கங்களின் அரங்கேற்றம் தொடர்பாக நமக்குக் கிடைக்கும் தகவல்களில் **கம்ப ராமாயணம், கந்தபுராணம்** போன்ற பேரிலக்கியங்கள் சார்ந்த கதைகள் முக்கியமானவை.

**கம்பராமாயண - கந்தபுராண *அரங்கேற்றக்* கதைகளும் அவை உணர்த்தும் '*திறனாய்வியற்* சிந்தனை'ச் சூழலும்**

மேற்படி இரு பேரிலக்கியங்களுக்கும் அரங்கேற்றங்கள் நிகழ்ந்தமை தொடர்பான செய்திகளை முறையே அஷ்டாவதானம் வீராசாமிச் செட்டியாரின் **விநோதரச மஞ்சரி** என்ற கட்டுரைத் தொகுப்பும் (1949: 166-68) கச்சியப்பர் எதிர்கொண்ட பிரச்சினையை **கந்தபுராணத்** தின் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பரிசோதனைப் பதிப்பில் இடம்பெற்றுள்ள 'கச்சியப்பசுவாமிகள் சரித்திரச் சுருக்க'மும் அறியத் தருகின்றன. இவ்விரு அரங்கேற்றங் களும் முறையே 'திருவரங்க'த் திலும் (ஸ்ரீரங்கம்) காஞ்சிபுரம் 'குமரக்கோட்ட'த் திலும் அறிஞர் அவையில் அரங்கேறியவை என்பதை இக்கதைகள் மூலம் அறிகிறோம்.

இவ்வாறு இவ்வாக்கங்களை அரங்கேற்ற முயன்றவேளை இவற்றின் ஆசிரியர்களான கம்பரும் கச்சியப்ப சிவாசாரியாரும் எதிர்கொண்ட சிக்கல்கள் தொடர்பாக சுவையான சில செய்திகளை மேற்படி கதைகள் நம்முன்வைக்கின்றன. இவற்றுளொன்று, மேற்படி இலக்கியங்களிற் பயின்ற சொற்களுக்கு முறையே சமூகத்தின் வழக்கியல்நிலையிலும் இலக்கணவிதி நிலையிலும் சான்றுகாட்ட வேண்டியிருந்த சூழ்நிலை பற்றியதாகும். இன்னொன்று படைப்பாளி தமது ஆக்கத்துக்குச் சமகாலசமூகத்தின் பல்வேறு தரப்பினரிடமிருந்தும் ஒப்புதல்பெற்றுவரவேண்டியிருந்த நிலையாகும். இவற்றுள் முதலாவது நிலையை கம்பர், கச்சியப்பர் ஆகிய இருவருமே எதிர்கொண்டனர்.

கம்பர் தமது பாடலொன்றில் (*குமுதனிட்ட குலவரை...*எனத் தொடங்கும் யுத்தகாண்டச் சேதுபந்தனப்படலப் பாடலில்) இடம்பெற்றதான **'துமி'** என்ற சொல்லுக்கு வழக்கியலுண்மை காட்ட வேண்டியிருந்தது. கச்சியப்பர் தமது **கந்தபுராண** ஆக்கத்தின் காப்புச்செய்யுளின் முதலாவது தொடரான 'திகடசக்கர' என்பதில் 'திகட' (திகழ்-த) என்பதற்குப் புணரியல்விதி காட்டவேண்டிய நிலையை எதிர்கொண்டார்.

மேற்படி பிரச்சிகைளிலிருந்து கம்பரும் கச்சியப்பரும் விடுபடுவதற்கு அவர்களது வழிபடு கடவுளர்களே (முறையே சரஸ்வதி தேவியும் முருகப் பெருமானும்) மானுடவடிவம் தாங்கிவந்து உதவிபுரிந்தனர் என்பது இக் கதைகள் மூலம் தெரியவரும் செய்திகளாகும். 'சரஸ்வதியானவள் ஒரு இடையர்குலப் பெண்ணின் வடிவில் வந்து தயிர்கடையும் செயற்பாட்டை மேற்கொண்டு 'துமி' சொல்வழக்கின் உண்மையை உறுதிசெய்தாள்' என **வினோதரச மஞ்சரி**க் கதை குறிப்பிடும். முருகப் பெருமான் ஒரு புலவராக வடிவுதாங்கி வந்து, **'ழ்'** என்பதோடு **'த'** சேரும்போது **'ட'** தோன்றும் என்பதான - **திகட** என்ற புணர்ச்சிக்கான - விதியை **வீரசோழியம்** என்ற தமிழிலக்கண நூலின் சந்திபடலத்துப் பதினெட்டாம் செய்யுளினின்று எடுத்துக்காட்டி, அப்பிரச்சினையிலிருந்து கச்சியப்பரை விடுவித்தார் என்பது 'கச்சியப்பசுவாமிகள் சரித்திரச் சுருக்கம்' தரும்செய்தி.

மேற்சுட்டிய இரண்டாவது பிரச்சினையை - 'சமகால சமூகத்தின் பல்வேறு தரப்பினரிட மிருந்து தமது ஆக்கத்துக்கு ஒப்புதல் பெற்றுவரவேண்டிய நிலையை - எதிர்கொண்டவர் கம்பர். இவ்வகையில் அவர், ஸ்ரீரங்கத் தலத்திலிருந்த வைணவ அறிஞர்கள், 'தில்லை மூவாயிரவர்' எனப்படும் சிதம்பரத் தலத்தின் தீட்சிதர்கள், திருநறுங்கொண்டை என்ற தலத்திலிருந்த ஜைன(சமண) அறிஞர்கள் மற்றும் மாவண்டூர என்ற ஊரைச்சார்ந்த ஒரு கருமான்(இரும்புத் தொழிலாளி) எனப் பல்வேறு சமூகப்பிரிவினரை நாடி ஒப்புதல் பெற்றார் என **வினோதரச மஞ்சரி**க் கதை கூறுகிறது. இவ்வாறான முயற்சியில் கம்பர், பாம்பு தீண்டி இறந்த குழந்தையொன்றை உயிர்ப்பிக்க வேண்டிய நிலையி லிருந்தார் எனறும் அதனை அவர் தமது கவித்துவத் தால்(**இராமாயண**த்தின் 'நாகபாசப் படல'த்தின் இரு பாடல்களிலிரண்டையும் வேறுசில பாடல்களையும் பாடிச்) சாதித்தார் என்றும் அக்கதை குறிப்பிடுகிறது.

மேற்கூறியவாறான கதைகள் புராண மரபுசார் கற்பனைகளுடன் அமைந்தவை என்பது வெளிப்படை. ஆயினும் இக்கதைகளுக்குப் பின்புலமாகத் திகழ்ந் திருக்கக் கூடிய 'திறனாய்வியற் சிந்தனைச்சூழ'லே இங்கு நமது கவனத்துக்குரியதாகும். மேலே முதலில் நோக்கிய'சொல்வழக்கு' மற்றும் 'புணரியல்விதி' தொடர்பான கதைகள், இலக்கிய ஆக்கத்தில் மொழியினுடைய 'சமூக வழக்கியல் மெய்ம்மை' மற்றும் 'இலக்கண வரையறைகள்' என்பவற்றுக்கு அன்றைய புலமைச் சமூகம் எந்த அளவுக்கு முக்கியத்து வமளித்தது என்பதை உணர்த்துவனவாகும்.

மேற்கூறிய **கந்தபுராண**க் காப்புப் பாடலின் புணரியல் விதி தொடர்பான கதையிலே மொழிமரபு சார்ந்த 'வரலாற்று முரண்' ஒன்றை நாம் தரிசிக்கிறோம். **'ழ்'** உடன் 'த' சேரும் நிலையில் **' ட'** தோன்றுவதான புணரியல் நிலையானது கச்சியப்பருக்கு ஏறத்தாழ ஆறேழு நூற்றாண்டுகளுக்கு முற்பட்டவரான (கி.பி. 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவரான) திருஞான சம்பந்தரின் தேவாரத்தின்(**திருமுறை:** 3:86:10) 'திகடரும்', 'முகிடரும்' ஆகிய சொற்களில் இடம் பெற்று விட்டது. இதனை மேற்படி **கந்தபுராண** அரங்கேற்ற'க் கதை புனைந்தோர் அறிந்திருக்கவில்லை என்பதே மேற்படி 'வரலாற்று முரண்' ஆகும்.

**இராமாயண** அரங்கேற்றத்தின்போது கம்பர் பல்வேறு தரப்பினரிடமும் ஒப்புதல் நாடியதான இரண்டாவது கதையானது, 'ஒரு பேரிலக்கிய ஆக்கம் தான் எழுந்த காலத்தின் பல்வேறு சமூகப்பிரிவினருக்கும் மன நிறைவு தருவதாக அமையவேண்டும்' என்பதான அக்கால 'அறிஞர் சமூக உட்கிடை'யை உணர்த்தி நிற்பதாகும். பாம்பு தீண்டி இறந்த குழந்தையை உயிர்ப்பித்த கதையானது கவிதைக்குத் 'தெய்விக ஆற்ற'லும் 'மந்திர சக்தி'களும் உள்ளன என்பதான பண்டைக்கால நம்பிக்கையை உணர்த்துவதாகும்.

### *அரங்கேற்றச் செயன்முறை - பாட்டியல் மரபு தரும் செய்திகள்*

***அரங்கேற்றம்*** நிகழ்வதற்குக் களமாக அமையும் அரங்கின் இயல்பு அதிலே நூலாசிரியன் நடந்து கொள்ளவேண்டிய முறைமை மற்றும் அரங்கேற்ற நடைமுறைகள் என்பன தொடர்பாக இலக்கண நிலைப்பட்ட பல செய்திகள் பாட்டியல்நூல்களில் எடுத்துரைக்கப் பட்டுள்ளன.

குறிப்பாக, **வெண்பாப் பாட்டியல்**(12ஆம் நூ.ஆ.), **நவநீதப்பாட்டியல்** (13ஆம் நூ.ஆ.), **பிரபந்த மரபியல்**(16ஆம் நூ.ஆ.) ஆகியவற்றில் இத்தொடர் பிலான செய்திகள் பதிவாகியுள்ளன. ***அரங்கேற்ற***த்துக் குரிய அவையின் இயல்பு தொடர்பாக மேற்சுட்டிய முதலிரு பாட்டியல் நூல்களும் பின்வரும் செய்யுள்களில் தெளிவாகவே எடுத்துரைத்துள்ளன.

*"புகழும் தரும நெறி நின்றோர் பொய்காமம்*
*இகழும் சினம் செற்றம் இல்லோர் - நிகழ்கலைகள்*
*எல்லாம் உணர்ந்தோர் இருக்கும் இடமன்றோ*
*நல்லாய் அவைக்கு நலம் .*

(**வெண்பாப்பாட்டியல்:**பொதுமொழியியல்:9)

*"அறந்திறம்பா நல்லறிவோர் நாற்கலையும்*
*திறந் தெரிந்தோர் பொய்காமம் சிதைக்கும் சித்தம்*
*மறந்து ஒருகாலும் ஒருபாற் படாதவர் மற்றுங் குற்றம்*
*துறந்தவர் தாங்களும் நல்லவை யாமென்று சொல்லுவரே"*

(**நவநீதப் பாட்டியல்** :பொதுமொழியியல்:20)

இச் செய்யுள்களின் பொருள் வெளிப்படை. 'நடுநிலைப் பண்புடையவர்களான அற நெறிநிற்கும் சான்றோர்களும் நுண்ணறிவு, கலைசார் புலமை ஆகியவற்றில் மிக்கோரும் நிறைந்ததாக அமையும் பொழுதே ***அரங்கேற்ற*** அவை சிறப்புடையதாக - 'நல்லவை'யாகத் திகழமுடியும்' என்பதே இவற்றில் அழுத்தமாக எடுத்துரைக்கப்பட்ட செய்தியாகும். மாறாக, 'நடத்தைக் குறைபாடுடையோரும் பக்கச் சார்புடையோரும் கூடியுள்ள அவையானது அரங்கேற்ற நிகழ்வுக்குப் பொருத்தமானதன்று' என்பதையும் மேற்படி செய்யுள்கள் உணர்த்திநிற்கின்றமையை உய்த்துணரலாம்.

மேற்சுட்டியவாறான சிறப்புடைய அரங்கிலே நூலை அரங்கேற்ற முற்படுவோர் பேணிக்கொள்ளவேண்டிய பண்புகள் என்ற வகையில் கோபமின்மை, பொய்பேசாமை, சபைக்கு விலக்கிய வழுச் சொற்களைப் பேசாமை ஆகியன முக்கியமானவை. மேலும் பண்டைய நூல்கள் விதித்துள்ள ஆணைகளை மீறி அல்லாத விடயங்களை அரங்கிலே அவர் எடுத்துரைக்கக் கூடாது. இவை தவிர, அவையில் அவர் அமரவேண்டிய முறைமை என்ற வகையில், 'எங்கோ ஒரு கோணத்தில் ஒதுங்கியிராமல் நடுநாயகமாக அவர் அமர்ந்திருக்கவேண்டும்' என்பதான விதிமுறையும் உளது. இவற்றை,

*"கோணத்திருப்பினும் கோபம் பெருக்கினும் குற்றமென்று*
*நாணத் தகுமவை நாவிற் பயிலினும் நாடி நன்னூல்*
*ஆணைப்படியன்றி அல்லவை சொல்லினும் அங்கிருந்தோர்*

*காணப் பொய் கூறினும் தோல்வி யென்றோதுவர் கற்றவரே"*

என்ற **நவநீதப்பாட்டியற்** செய்யுள் (பொது மொழியியல்:27) உணர்த்துகிறது. இதிலே 'கோணத் திருப்பினும்' என்பதற்கு, 'பெருந்திசைகளை அன்றிக் கோணங்களை நோக்கி ஆசிரியன்அமரலாகா' என்பதாக உரைகூறப்பட்டுளது. கோணங்கள் விலக்கப் பட்டமைக்குச் சோதிடநம்பிக்கைகள் காரணமாக இருக்கலாம் என ஊகிக்க இடமுளது. இச் செய்யுள் சுட்டும் ஏனைய பண்புகள் பண்பாட்டுணர்வு சார்ந்தவையாகும்.

அடுத்து, ***அரங்கேற்ற*** நடைமுறை மற்றும் 'அரங்கினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு ஆக்கம் எய்தும் கௌரவம் என்பன பற்றிப் **பிரபந்த மரபியல்** தரும்செய்திகள் இங்கு நமது கவனத்துக்கு வருகின்றன. மன்னன் அல்லது பிரபு ஒருவருடைய அவையிலே ஒரு படைப்பானது 'போற்றிவழிபடற்குரிய புனிதப் பொருளாக'க் கணிப்பெய்தியிருந்த சமூதாய வரலாற்றுச் சூழலை இச்செய்திகள் நமக்கு உணர்த்துகின்றன.

*"செய்யுள் கொளுமிடம் சித்திரத் துகிலின்*
*அரத்த விதானத்து அலங்கல் நாற்றி*
*தோரணம் கதலித் துவசம் உயர்த்தி*

என அரங்கேற்ற மண்டப அலங்காரம் பற்றிய விவரணங்களுடன் தொடங்கும் இந்நூற்பாவானது,

*மங்கலப்பாடல் ஏற்றுளம் மகிழ்ந்து*
*பொன் புவி வத்திரம் பூண்பன பிறவும்*
*உதவி ஏழடி புலவனுடன் போய்*
*மீள்வது கடன் என விளம்பினர் மேலோர்."*

என நிறைவுறுகிறது.**(பிரபந்த மரபியல்:** நூற்பா-31) மன்னர்கள் (அல்லது பிரபுக்கள்) பாடல்களையும் அவற்றை இயற்றிய புலவர்களையும் எந்த அளவுக்கு மதித்துப் போற்றி உபசரித்தனர் என்பதை உணர்த்தும் காலக்கண்ணாடிகளுள் ஒன்றாகத் திகழ்வது இந் நூற்பா. புலவரைப் பொன், பொருள், ஆடையாபரணங்கள் என்ன வழங்கி மகிழ்விப்பதும் அவர் பின்னால் ஏழடி தூரம் நடந்து வழியனுப்புவதுமான ஒரு மங்கலக் காட்சி இங்கே இலக்கண நிலையில் நமது கண்முன் விரிகிறது. 16ஆம் நூற்றாண்டு சார்ந்த தமிழக இலக்கிய அரங்கேற்றச் சிந்தனைச் சூழல் இது. என்பது இங்கு மனங்கொள்ளவேண்டிய வரலாற்றம்சமாகும்.

தமிழின் செயன்முறைத் திறனாய்வு மரபுடன் தொடர்புடையவை என்றவகையில் ***அரங்கேற்ற*** மரபு தொடர்பான முக்கிய செய்திகளை அடுத்து, 'மதிப்பீட்டு முறைமை' பற்றிய மரபு சார் செய்திகள் நமது கவனத்துக்கு வருகின்றன. அவற்றைக் 'குணமும் குற்றமும்' என்ற துணைத்தலைப்பில் நோக்குவோம்.

## குணமும் குற்றமும்

தமிழ் மரபிலே இலக்கியம் மற்றும் இலக்கண ஆக்கங்களில் குணம் மற்றும் குற்றம் காண்பது தொடர்பாக இருவகைத் தகவல்கள் நமக்குக் கிடைக்கின்றன. அவற்றுளொன்று, இலக்கண நூற்பாக்களாக அமைந்தவையாகும். இவற்றுக்குச் சான்றுகளாகத் **தொல்காப்பிய** மரபியலிலும், **நன்னூல்** பாயிரவியலிலும் அமைந்தவற்றைச் சுட்டலாம். **தொல்காப்பிய** மரபியல் 110ஆம் நூற்பாவானது "சிதைவெனப் படுபவை.." எனத் தொடங்கி 'நூற்குற்றம்' பற்றிப் பேசுவது. **நன்னூ**ற் பாயிரவியல் 12-13 ஆம் நூற்பாக்கள் முறையே நூலின் குற்றங்கள் மற்றும் அழகு என்பன பற்றிப் பேசுவனவாகும். இவைகூறும் 'நூற்குற்றம்' மற்றும் அழகு என்பன தொடர்பான செய்திகள் பெரிதும் , இலக்கணம் மற்றும் தத்துவம் முதலிய வகைகள்சார்ந்த அறிவுசார் ஆக்கங்களை மையப்படுத்தியவையாகும். இவ்வகை ஆக்கங்களில் நிகழக்கூடியவை என்றவகையில்,

*கூறியது கூறல், மாறுகொளக் கூறல், குன்றக் கூறல், மிகைபடக் கூறல், பொருளில கூறல், மயங்கக் கூறல், கேட்போர்க்குத் துன்பம் தரும் யாப்பில் கூறல், பழிக்கப்பட்ட சொற்களால் தாழ்வுண்டாகு மாறு கூறல், தானே ஒரு பொருளை எண்ணிக் கூறல், எப்பொருளையும் மனம்பற்றாத வகையில் உணர்த்துதல்*

ஆகிய 10 குற்றங்களை **தொல்காப்பிய** மரபியல் நூற்பா எடுத்துரைக்கிறது. இவற்றின் பொருள் வெளிப்படை. இதைத் தழுவியே **நன்னூல்** பாயிரவியல் நூற்பாவும் சிற்சில மாற்றங்களுடன் 10 குற்றங்களை முன்வைத்துள்ளது. **தொல்காப்பிய**ங் கூறாததாக **நன்னூல்** *'சென்று தேய்ந்திறுதல்'* என்ற ஒன்றைக் குறிப்பிடுகிறது. எடுத்துரைக்கப்படத் தொடங்கிய பொருண்மை சிறப்பாகத் தொடராமல் இடையிலே நலிவடைவதான நிலையை அது குறிப்பது தெரிகிறது. கி.பி 16ஆம்நூற்றாண்டின் பிற்பகுதி சார்ந்தவரான அதிவீரராமபாண்டியர் என்ற அரசபுலவரின் **நைடதம்** என்ற காவியம் இக்குறைபாடுடையது என்ற கருத்தைத் தரும் கதையொன்று செவிவழியாக வழங்கிவருகிறது. 'வேட்டை நாயொன்று ஓடி இளைத்தது போல' என இக் குறைபாடு அக்கதையில் சுட்டியுணர்த் தப்பட்டுளது.

நூலுக்கு அழகு தரும் அம்சங்கள் என்ற வகையில் **நன்னூல்** சுட்டும் 10 அம்சங்கள் வருமாறு:

*சுருங்கச் சொல்லல், விளங்கவைத்தல், வாசிப்பவர்க்கு இனிமைதருதல்,*

*நல்ல சொற்களுடனமைதல், ஓசையின்பம் தருதல், பொருளாழம் கொண்டிருத்தல்*

*காரண காரிய முறைப்படியான இயலமைப்பு, உலகின்உயர்ந்தோர் வழக்கோடு*

*மாறுபடாமை, சிறப்பான பொருளைத் தருதல்,தக்க சான்றுகளுடனமைதல்.*

இவ்வாறாக **நன்னூல்** சுட்டும் 'அழகு' அம்சங்கள் குற்றங்கள் எனப்பட்டவற்றுக்கு ஏறத்தாழ நேரெதிர் நிலையினவாக உள்ளமையை உய்த்துணரலாம்.

மேலே நூல்களின் குற்றம், அழகு என்பனவாக எடுத்தப்பேசப்பட்ட அம்சங்களிற் பெரும் பகுதி இன்றைய சூழலுக்கும் பெரிதும் பயன் பாடுடையன என்பதை இங்கு குறிப்பிடுவது அவசிய மாகும். குறிப்பாக, ஆய்வுநூல்கள் என்ற வகையிலும் பல்கலைக்கழக உயர் பட்டங்களுக்கான ஆய்வேடுகள்என்ற வகையிலும்எழுத்து முயற்சிகளை மேற்

கொள்வோர் முக்கியமாகக் கவனத்திற் கொள்ள வேண்டிய மரபுசார் செய்திகள் இவை.

அத்துடன் எந்த விடயந் தொடர்பாகவேனும் கட்டுரை எழுதுபவர்களும் மேடையில் உரையாற்ற வருபவர்களும்கூட மேற்படி **தொல்காப்பியம், நன்னூல்** என்பவற்றின் நூற்பாக்கள் தரும் செய்திகளை ஒருமுறையேனும் படித்துவிட்டு அம்முயற்சிகளில் ஈடுபடுவது பெரிதும் விரும்பத்தக்கது.

மேற்படி குணம் மற்றும் குற்றம் தொடர்பான தகவல்களில் இரண்டாவது வகையின கதை வடிவில் அமைந்தவையாகும். **இறையனார் களவியல்** என்ற இலக்கண ஆக்கத்திற்கு எழுந்த உரைகளை உருத்திர சன்மன் என்ற ஊமைப்பிள்ளை 'தரமதிப்பீடு' செய்ததாக வழங்கும் கதையும் *'கொங்குதேர்வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி ..."* என்ற பாடலில் நக்கீரனார் பொருட்குற்றம் கண்டதாக வழங்கும் கதையும் இந்த இரண்டாவது வகைக்கான சான்றுகளாகும். இவற்றுள் முதலாவது கதை **இறையனார் களவியலுரை** நூலிலேயே இடம்பெற்றுள்ளது. இரண்டாவது கதையானது பரஞ்சோதி முனிவரின் **திருவிளையாடற் புராண**த்தில் தருமிக்குப் பொற்கிழியளித்த படலத்தில் இடம்பெற்றதாகும்.

இவற்றில் முதலாவது கதையானது ***மனப்பதிவியல் திறனாய்வு (Impressionism)*** என்ற 'நவீனத்துவ' வகையுடன் சார்த்திச் சிந்திக்கப்படக்கூடியதாகும். **களவியலுக்கு** எழுந்த பல உரைகளில் தரமானதைத் தேர்ந்தெடுக்கும் முற்சியில் ஈடுபட்ட உருத்திரசன் மனானவன் ஊமை என்பதால் தனது மெய்ப்பாடுகள் மூலமே அதனை இனங்காட்டினான் என்பதே இக்கதையின் சாராம்சமாகும். 'மெய்சிலிர்த்தல்' மற்றும் 'கண்ணீர் ததும்புதல்' என்பனவே இங்கு மெய்ப்பாடுகளாக வெளிப்பட்டன என்பது இக்கதை தரும் செய்தியாகும். அதாவது மெய்யான - தரமான - உரைகளை வாசித்தபோது அவனுக்கு உள்ளத்திலேற்பட்ட கிளர்ச்சிகளுக்கு ஏற்பவே இவ்வகை மெய்ப்பாடுகள் தோன்றின என்பதே இக்கதை மூலம் உணரப் படுகின்றது. அவ்வகையிலேயே இது 'மனப்பதிவு' (Impression) சார்ந்ததாக கணிக்கப்படுகின்றது. இவ்வகையில், மனப்பதிவியல் திறனாய்வுக்கான எண்ணக்கருவானது தமிழ்மரபில் பண்டுதொட்டு நிலவிவந்த ஒன்றென்பதற்கு இக்கதை தக்கதொரு சான்றாக அமைவதாகும். இத்தொடர்பில் மேலும் கவனத்துக்குரிய ஒரு அம்சம், 'இங்கு ஊமைப்பிள்ளை புலப்படுத்திய மெய்ப்பாடு ஒரு இலக்கியப்படைப்பு சார்ந்ததன்று' என்பதும் மறாக, 'அது ஒரு இலக்கண உரை சார்ந்தது' என்பதுமேயாகும். அவ்வுரை இலக்கியப்படைப்பு எனத்தக்க அளவுக்கு சுவையுடையதாகக் அக்காலத்திற் கணிப்பெய்தியிருந்தமையை இதனால் உணர்கிறோம்.

நக்கீரர், *"கொங்குதேர்வாழ்க்கை..."* பாடலுக்குக் குற்றம்கண்ட கதையானது, தமிழ் விமர்சன மரபின் அஞ்சாமைக்குச் சான்றாக - அதாவது 'இறைவனே நேரில்வந்து நெற்றிக்கண்ணைக்காட்டி அச்சுறுத்தினாலும் உண்மையை ஓங்கியொலிப்பதான துணிவு'க்குச் சான்றாக - ப் பலராலும் எடுத்துப் பேசப்படுவது. இவ்வாறாக, ***'உண்மையை ஓங்கியொலிப் பதான துணிவு'***க்குச் சான்றாக இதனைக் கொள்வதானது, ***'அடிப்படையற்றதும் தர்க்கநெறி சாராததுமான ஒரு தவறான முன்முடிபு'*** ஆகும். உண்மையில் நக்கீரர் மேற்கொண்டது ***'விமர்சன முறைமை சாராத விதண்டாவாதம்'*** என்றே கொள்ளப்பட வேண்டியதாகும்.

**(தொடரும்)**


# உறுஞ்சுவோரின் விம்பங்கள்

த.ஜெயசீலன் ☆

எனக்குத் தெரியாது... என்னைக்
கடித்தெனது
இனித்த இரத்தத்தை
எத்தனை நிமிடங்கள்
உறுஞ்சியதோ நானறியேன்;
கடித்தஉணர் வெனக்கில்லை!
குருதிபறி போவதனைக் குறித்தறிய
முடியவில்லை!
தோலில் இருக்கும் தொடுகைவாங்கி
புலன்நரம்பு
எதுவும் உரைக்கவில்லை!
தற்செயலாய்த் தான்பார்த்தேன்...
இரத்தம் குடித்த கொழுத்த மயக்கத்தில்
பறக்க மனமின்றி
நுளம்பிருந்த தென்காலில்.
இவ்வளவு இரத்தத்தை இதுஉறுஞ்ச
என்னுணர்வு
ஏன்கண்டு எச்சரிக்கா திருந்ததெனக்
கோபமுற்றேன்.
பறக்கவும் ஏலாது;
எனைப்பிரிய மனமுமற்று;
இருந்த நுளம்பை நசித்தேன்!
என்இரத்தத்
துளிஇரண்டு மூன்று
என்நிலத்திற் சிந்திற்று.
அதிலென் நிலவளத்தை
'நுளம்புகளாய்' எவர்க்கும் நோகா
துறுஞ்சுவோரின்
விம்பங்கள் தெரிந்தென்னை
வில்லங்கப் படுத்திடுது.
காத்திருக்கும் பூதங்கள்

# உச்சி வெயில் ஊர்வலம்

-செ.ஞானராசா



உச்சிவெய்யிலில்
ஊர்வலமாய்ப் போக
பச்சைக் குழந்தை
பாதையிலே துடிக்கிறது

சோறு கேட்கவில்லை
சொத்தும் சேர்க்கவில்லை
வீறு நடைபோட்டு
விம்மி எழுகிறது.

சொந்தம் இழந்த
சோகம் தீராமல்
வெந்து காய்கிறது;
வெயிலால் வாடியே

எரிபொருள்விலையேற
ஏற்ற ஊதியமில்லை
தெரிகிறது வறுமைநிலை
தேய்கிறது வளமெல்லாம்!

நீதி கேட்கின்ற
நீண்ட ஊர்வலத்தில்
பாதி! ஊர்கேட்டு
பாதி! உறவுகேட்டு

கொடி பிடித்துச்சென்று
கொள்கை தெரிவிக்க
படி தாண்டிவந்து
தடி எடுத்து துரத்துகின்றார்

தமிழின் தாகத்தால்
தண்ணீர் கேட்டிடவே
அமிழ்த மொழியென்று
அதை மட்டும் கூறுகிறார்

வெம்மை தாங்காது
வெயிலால் துடிக்கையில்
உம்மைக் கேட்டதார்;
உரிமை இல்லை என்றார்

நடையாய் நடந்து
நாதன்முன்போகையில்
படையின் தடுப்பால்
பாதியில் திரும்புகிறோம்.

எங்கு போவதென
எதுவும் தெரியாமல்
சங்கு எடுத்தூதி
சரித்திரம் புரட்டுகிறோம்

அங்கும் நீதியில்லை
அடிதடியில் முடிந்த கதை
பொங்கி வழிகிறது
பொசுக்கும் வெய்யிலிலே

குழந்தையாய் நின்று
குமுறி அழுவதன்றி
இழந்த சுகங்காணா
இதயங்கள் ஆகிவிட்டோம்



சிறுகதை

# ராணியம்மா

• தாட்சாயணி

அம்மாவிண்டை வாயிலையிருந்து தீக்கங்குகள் போலைதான் வார்த்தைகள் வரும். அதிலை ஆர் எப்ப எரிஞ்சு மாய்வார் எண்டது ஒருதருக்கும் தெரியாது. அப்பிடித்தான் இப்பவும் அம்மா வெளிக்குந்திலையிருந்து பொரிஞ்சு தள்ளுறா. நான் ஒண்டும் பேசாமல் இருக்கிறன். ராணியம்மாவும் உள்ளுக்கை ஏதோ அலுவலாய் இருக்கிறா. அக்கம்பக்கத்திலையிருந்து ஒண்டு, ரெண்டு தலையள் எட்டிப்பாக்குது. அம்மாவைக் கண்டவுடனை அவையளும் திரும்பி, தங்கட தங்கட அலுவலைப் பாத்துக் கொண்டு போட்டினை. எனக்குத்தான் ஒரே அந்தரமாய்க் கிடக்கு. ரியூசனிலை கணிதபாடம் ரெஸ்ரும் இருக்கு. போகாமல் விடவும் ஏலாது. ஆனா இஞ்சை இருந்து எழும்பிப்போனால் அது வேறை வில்லங்கத்தைக் கொண்டந்தாலும் கொண்டந்திடும். அதைவிட போகாமல் விட்டிட்டு நாளைக்கு சேரிட்டை திட்டு வாங்குறது பறவாயில்லை.

"பெத்த தாய்தான். என்ரை பிள்ளையைக் கூட்டிக்கொண்டு போறதுக்கு நாள் கணக்கா நான் வந்து கெஞ்ச வேண்டியிருக்கு..."

அம்மாதான். அம்மாவுக்கு நான் அவவோடை போகேல்லை எண்டதிலை சரியான கோவம். அதாலை வந்த வெப்பியாரத்திலை வாயிலை மோசமான வார்த்தையள் தான் வந்து விழும்.

"அப்பிடியெல்லாம் நினைச்சவுடனை வரேலாதம்மா. ஆமி, பொலிஸ் அதோட ஜி.எஸ். பதிவு எண்டெல்லாம் கிடக்குதம்மா உடனை பதிவு வெட்டி வாறது கஷ்ரமம்மா..."

"என்ன கஷ்ரம்... நீ என்ரை மகள். நான் உன்னைக் கூட்டிக் கொண்டு போகப் போறன். இதிலை என்ன பிரச்சினை கிடக்கு...?"

"எல்லாப் பதிவுகளிலையும் நான் ராணியம்மா விண்டை மகள் எண்டுதான் கிடக்குதம்மா..."

நான் சொன்னவுடனை அம்மா ஒப்பாரி வைச்சுக் கத்தத் தொடங்கினா.

"உவளாலை நான் எல்லாத்தையும் இழந்தன். என்ரை புருசன், பெடியன், கடைசிலை உன்னையும் பறிச்சுப் போடுவாள் போலை கிடக்கு படுபாவி..."

அம்மா சொன்னது உள்ளுக்கு ராணியம்மாவுக்கு கேட்டிட்டுது போலை கிடக்கு. ஒரு அசுமாத்தத்தையும் காணேல்லை. எங்கையேன் மூலையுக்கை சுருண்டிருப்பா. பாவம்... அம்மா எப்பவும் இப்பிடித்தான். சுருக்கொண்டு சொல்லிப் போடுவா. இப்பவும் இன்னும் அவ சொல்லி முடிக்கேல்லை.

"உவள் என்ரை மனிசனுக்கு ஏதோ மருந்து மந்திரம் வைச்ச மாதிரி என்ரை பிள்ளையையும் மயக்கிப் போட்டாள்.

"அம்மா கொஞ்சம் நிதானிச்சுக் கதையுங்கோ... உள்ளுக்கை ராணியம்மா..."

"அவளுக்கு கேக்கட்டு மெண்டுதானை சொல்லுறன். நாக்கைப் புடுங்கிக் கொண்டு சாகட்டும்..."

"உப்பிடிக் கண்டபடி கதைச்சியள் எண்டா நான் ஒருக்காலும் உங்களோடை வரமாட்டன்..."

நானும் கத்தினவுடனை அம்மாவிண்டை முகத்திலை முழுசாட்டம் தெரிஞ்சுது. ஆனா அதுக்கு இரக்கப்பட்டு அவ கண்டதையும் கதைக்க விட எலுமே. எல்லாரும் தான் ஒவ்வொரு நேரத்திலையும் தனிச்சுப் போய் நிண்டம். ராணியம்மா, கிரியண்ணா, அப்பா, நான் எல்லாரும் தான். இப்ப இந்த அம்மா. ஒவ்வொரு நேரத்திலை ஒவ்வொருத்தர் தனிச்சுப் போயிட்டம். ஆனா அந்தத் தனிமையைப் போக்கிறதெண்டால் ஆளுக்காள் அனுசரணையாய் இருக்கோணும். இப்ப நான் அம்மாவோடை போகத்தயார். கூட ராணியம்மாவையும் அம்மா ஏற்கிறதாய் இருந்தால்... இஞ்ச ராணியம்மாவை விட்டிட்டு நான் அம்மாவோடை

போகமாட்டான். அதுக்கு அம்மா உடன்படமாட்டாவாம். அப்ப இப்பிடித்தனியக் கிடந்து அல்லாட வேண்டியது தான்.

கொஞ்ச நேரம் கத்திக் கொண்டிருந்திட்டு அம்மா வெளிக்கிட்டுப் போட்டா. இப்ப வெளிக்கிட்டாத்தான் பஸ் பிடிச்சு சுதுமலைக்குப் போகலாம். நல்லவேளை என்ரை சோதினை தப்பிச்சுது. எண்டு நினைச்சுக் கொண்டு ரியூசனுக்கு வெளிக் கிட்டிட்டன்.

திரும்பி வந்து பாத்தா ராணியம்மா பாயை விரிச்சுப் படுத்துக் கிடக்கிறா. என்னைக் கண்டவுடனை தான் எழும்பி அடுப்பு மூட்டித் தண்ணி கொதிக்க வைச்சா. நான் முகம் கழுவித் திருநீறு பூசிக் கொண்டு வர ரெடியாத் தேத்தண்ணி கொண்டு வந்தா.

நான் தேத்தண்ணி குடிக்கிறதையே கொஞ்ச நேரம் பாத்துக் கொண்டிருந்தா. பிறகு "என்னெண்டாலும் அவ சொல்லுறது சரிதானை. நீ கெதிலை சுதுமலைக்குப் போறது நல்லதுதான்" எண்டா எங்கையோ பார்த்துக்கொண்டு.

"ராணியம்மா..." நான் திடுக்கிட்டுப் போனன்.

"ஏன் என்னைப் படிப்பிக்க உங்களுக்கு கஷ்டம் போலை கிடக்கு..." எண்டன்.

"எனக்கென்ன கஷ்டம். எப்பிடியெண்டாலும், நீ அவவிண்டை மகள் தானை..." எண்டா ராணியம்மா.

எனக்கு அவவைப் பாக்கப் பாவமாகக் கிடந்தது.

"நான் படிக்கப் போறன் ராணியம்மா. என்னைக் குழப்பாதையுங்கோ. சரியாய் பசிக்குது. ஏதேன் செய்து தரமாட்டிங்களோ..." எண்டன். ராணியம்மா உடனை எழும்பிட்டா. பசியெண்டு சொன்னா அவ சும்மா இருக்கமாட்டா. என்ன கிடக்கோ இல்லையோ. ஏதோ ஒரு மாதிரி என்னத்தைக் கொண்டெண்டாலும் ஏதாவது செய்து தருவா. இப்பவும் பெரிசா கிடக்கிற மாதிரித் தெரியேல்லை. ஆனா, ஏதாவது தருவா எண்டு தெரியும்.

அம்மாவுக்குக் கத்தமட்டும்தான் தெரியும். அம்மாவோடை பத்து வயசு மட்டும் சீவிச்சது தானை. ஏதாவது நல்ல முறையான சாமான்கள் கிடந்தால் சோக்கான சமையல் செய்வா. சாமான் எதுவும் இல்லையெண்டால் கத்திப் போட்டிருப்பா. நாங்கள் பட்டினிதான். நாங்களெண்டா, நானும், கிரி அண்ணாவும்.

அப்பா வன்னியிலைதான் பாதிநாள். இடைக்கிடை வருவார். போவார். பிறகு அப்பா வாறதேயில்லை. ஒருக்கால் வரேக்கை அம்மாதான் இனிமேல் வரவேண்டாம் எண்டு சொல்லிப் போட்டாவாம். பிறகொருக்கால், எனக்குப் பத்து வயசு இருக்கேக்கை அப்பா என்னையும் அண்ணாவையும் வந்து ஊர் காட்டிறனெண்டு சொல்லிக் கூட்டிக் கொண்டு போனார். அம்மா அப்பவும் விடேல்லை. என்ரை பிள்ளைகளிலை எனக்கும் உரிமை இருக்கெண்டு சொல்லித் தான் அப்பா கூட்டிக்கொண்டு போனார். அப்பதான் ராணியம்மாவை முதலிலை கண்டன். ராணியம்மா வீட்டிலைதான் அப்பா இருந்தார். தான் ராணியம்மாவைக் கலியாணஞ் செய்திட்டதாய்ச் சொன்னார். எனக்கும் அண்ணாவுக்கும் முதலிலை ராணியம்மாவைப் பிடிக்கேல்லை. ஆனால், ராணியம்மாவிண்டை சாப்பாடு மட்டும் பிடிச்சுப் போட்டுது. ராணியம்மா எப்பவும் பெரிய சமையல்தான் செய்யிறவ. பக்கத்திலை இருக்கிற 'பேஸ்'களுக்கெல்லாம் ராணியம்மாவிண்டை சாப்பாடுதான் போகும். பெரிய பேசின் களிலையும், வாளிகளிலையும் 'அவையள்' வந்து சாப்பாடு எடுத்துக் கொண்டு போவீனை. அப்பா ராணியம்மாவிட்டைச் சாப்பிட வந்துதான் பழக்கமாம். அப்ப ராணியம்மா மட்டுமில்லை அவவிண்டை அம்மாவும் இருந்தவவாம். திடீரெண்டு ராணியம்மாவிண்டை அம்மா ஒரு 'செல்லடியிலை செத்தபிறகு தான் அப்பா அப்பிடியே ராணியம்மா வீட்டை தங்கீற்றாராம்.

ராணியம்மாதான் இந்தக் கதையை எங்களுக்கு சொன்னவா. அவவிண்டை கதையைக் கேக்கப் பாவமாக் கிடந்தாலும் எங்களுக்கு அம்மாவிலை உள்ள பாசத்தாலை அவவைப் பிடிக்காமல் தான் இருந்தது. எண்ணி ஒரு கிழமை கூட ஆகியிருக்காது. திடீரெண்டு பாதை பூட்டுப்பட்டது. பிறகென்ன, அப்பிடியே, மாறி மாறி ஓடுப்பட வேண்டியதாய்ப் போச்சு. ஒரு வருசம் முடிய அண்ணா காணாமல் பேச்சு. எங்கையேன் ஷெல்லடிக்கை அம்புட்டுதோ, இல்லாட்டி எங்கையேன் 'ட்ரெயினிங்' எடுத்துக் கொண்டிருந்துதோ... ஒண்டுமே தெரியா. மாறி மாறி, எங்கை பாத்தாலும் ஷெல்லடியும், குண்டுவீச்சும்தான். இடம்பெயருற வேளைகளிலை நாங்கள் தாண்டி வந்த ஒவ்வொரு பொடியளிண்டை உடம்புகளையும் அப்பா புரட்டிப் புரட்டிப் பார்ப்பார். கடைசிலை அவருக்கு ஒரே யோசினையாப் போச்சு. பரந்தனிலையிருந்து விரட்டுப்பட்டு, விரட்டுப்பட்டு புதுமாத்தளன் வரைக்கும் ஓடினம். அங்கை தான் ஆமிற்றைச் சரணடைஞ்சம். அது மட்டும் ராணியம்மா எங்களுக்காகப் பட்டபாடு சொல்லி முடிக்கேலாது. அண்ணையைப் போல பெடியளை விசாரணைக்கெண்டு கூட்டிக் கொண்டு போற நேரம் அப்பா துடிச்சுப் போவார். அப்பிடி, அப்பாவும் அண்ணாவை நினைச்சு நினைச்சு விசர் பிடிச்ச மாதிரி மாறின பிறகு ராணியம்மா என்னைத் தன்ரை கையிலை வைச்சுப் பொத்தின மாதிரிக் கொண்டு திரிஞ்சா. ஒருக்காலும் என்னைக் கைப்பிடி நழுவ விடமாட்டா. முகாமுக்குள்ளை அப்பா, அங்கையாவது அண்ணா கிடைக்கமாட்டாரோ எண்டு தேடித் திரிஞ்சார். எத்தினை பெரிய முகாம்கள். அதுக்குள்ளை எங்கையெண்டு தேடித்திரியிறது. அப்பா ஒண்டும் பேசாமல் யோசினையிலையே கிடந்தார். ஊரிலையிருந்த பிள்ளைகளை இஞ்சை கொண்டு வந்து அநியாயம் பண்ணிப் போட்டனே எண்டு நினைச்சாரோ இல்லாட்டி, அம்மாவுக்கு இனி என்ன

பதில் சொல்லுற தெண்ட ஏக்கமோ...? அப்பா அப்படியே செத்துப் போனார். 'ஹார்ட் அட்டாக்' எண்டு டொக்டர்மார் சொல்லிச் சீனை. முகாமுக்குள்ளை செத்த அப்பாவுக்கு ஈமச்சடங்கு செய்யக் கூட வழியில்லை. கடைசிலை ராணியம்மா எவ்வளவோ பாடுபட்டு வவுனியாவிலை இருந்த தூரத்துச் சொந்தக்காரருக்குத் தகவல் சொல்லி, அவர் மூலமாக எங்களை மூண்டு நாளைக்கு விசேட அனுமதியோடை வெளிலை விடுவிச்சு, அவரைக் கொண்டு கொள்ளி வைப்பிச்சா. அப்ப கூட அம்மாவுக்கு ராணியம்மா தகவல் அனுப்பித்தான் விட்டா. ஆனா அம்மா அந்த நேரம் வவுனியா வாறதிலை இருந்த கஷ்டத்தாலையோ இல்லாட்டி அப்பாவிலை உள்ள கோபத்தலையோ செத்தவீட்டுக்குக் கூட வரேல்லை.

"அம்மா வந்தா எண்டா ஏதேனும் நகையை அடைவு வச்சுக் கொஞ்சம் காசை எடுத்து உவங்களுக்குக் குடுத்தாவது, களவா உன்னை அம்மாவோடை அனுப்பிடுவன் மதி..." எண்டு அந்த நிமிடத்திலும் எதைப் பற்றியும் யோசிக்காமல் என்னிலை மட்டும் அக்கறை வைச்சிருந்தா ராணியம்மா.



அம்மா வரேல்லை. நாங்களும் அந்த மூண்டு நாள் இடைவெளியோடை திரும்பவும் முகாமுக்கை முடங்க வேண்டி வந்தது.

முறைப்படி கலியாணம் முடிச்ச அம்மா செய்ய வேண்டிய அப்பா விண்டை கடமைகளை ராணியம்மா செய்தா.

முகாமுக்குள்ளையிருந்து எப்பிடியோ, ஆரிட்டையோ ஐயாயிரம் ரூபாய் கடன் வாங்கி அங்கை இருந்த ஐயர் ஒருதரைப் பிடிச்சு அப்பாவுக்கு அந்தியேட்டிக் கிரியைகள் செய்தா. அதுக்குப் பிறகு அந்த முகாமுக்கை நாங்கள் இருந்த ஒரு வருச வாழ்க்கையும் ஒரே நரகம் தான். அதுக்குள்ளையும் தன்ரை சொந்தப்பிள்ளை போலை ராணியம்மா பொத்திப் பொத்தி என்னைப் பாதுகாத்ததைப் போல ஆர் செய்ய ஏலும்...?

அந்த முகாமிண்டை இருட்டுக்குள்ளை தான் நான் சாமத்தியப்பட்டன். நிறுவனங்கள் சுகாதாரப் பொதிகளைத் தந்தது. ஆனால், அந்த நேரத்துக்குத் தரவேண்டிய பத்தியச் சாப்பாடுகள்... ராணியம்மா தான் பக்கத்திலையிருந்து பாத்தா. எனக்கு அந்த நேரம் அதுக்கை இருக்கவே வெறுப்பாய்க் கிடந்துது. ராணியம்மா, ஆரிட்டையோ ரகசியமாய்க் கடன் வாங்கி, புக்கை பொங்கி, பொரியல் பொரிச்சு உழுத்தங்களி திரட்டி, பெத்த தாய் மாதிரி பாத்துக் கொண்டா. கர்ப்பிணிகளுக்கு நிறுவனங்கள் ஏதேன் சத்துணவு குடுக்கேக்கை ராணியம்மா எனக்கும் ஏதாவது ஓடிப்போய்ச் சேர்த்துக் கொண்டந்திடுவா. வெளிலை இருந்தால் இந்நேரம் என்னென்ன பத்தியங்கள் தந்திருப்பன். எண்டு புலம்பிப் புலம்பியே என்னை வடிவாப்பாத்தா ராணியம்மா.

இதொண்டும் அம்மாவுக்குச் சொன்னால் விளங்காது. அவ என்ன அங்கை வந்து பாத்தவாவே. ஏதோ முகாமெண்டவுடனை எல்லாரும் அதுக்கை இருந்துதான் வந்தவை. ராணியம்மா இல்லாட்டி நீ வந்திருக்கமாட்டியே. எண்ட மாதிரித் தான் கதை... ஆனா எனக்குத் தெரியும் ராணியம்மா எண்ட பாதுகாப்பு எனக்கு இல்லாமப் போயிருந்தால்... நான் எப்பிடிப் போயிருப்பன் எண்டு... அது உந்த அம்மாவுக்கு என்ன சொல்லியும் விளங்காது... அவவிண்டை எதிர்ப்பு எப்பவும் ராணியம்மா மேலைதான் இருக்கும்...

"இடியப்பம் அவிஞ்சிட்டுது மதி... வந்து சாப்பிடு...' ராணியம்மா கூப்பிடுறா. இவ்வளவு நேரமும் அம்மா வந்து கத்திப் போட்டுப் போன எந்த அடையாளமும் இல்லாமல் கூப்பிடுறா. நான் போய்ப்பாக்கிறன். இடியப்பத்தோடை பசளியிலைச் சொதி வைச்சிருக்கிறா. முத்தத்திலை போன கிழமைதான் பசளியைக் கொண்டு வந்து வைச்சவ ராணியம்மா. எதுவும் இல்லாட்டிலும், இல்லாத மாதிரித் தெரியாது. ராணியம்மா இருக்கிற வீட்டிலை. அதுதான் ராணியம்மா.

"அம்மா தனியப் பாவம் கஷ்டப்படுறா. நீ போயிரு அம்மாவோடை..." சாப்பிட்டு முடியவிட்டு ராணியம்மா திரும்பவும் தொடங்கினா.

"அப்ப, நீங்கள் தனியவில்லையோ...?"

"அது நான் சமாளிப்பன் எப்பிடியெண்டாலும்..."

"இல்லை, நான் உங்களை விட்டிட்டுப் போகன்..."

"இல்லை, மதி, உன்ரை அம்மா பாவம்..."

நான் ராணியம்மாவை நிமிர்ந்து பாக்கிறன்.

"நான் எப்பவும் தனிதான். ஆனா எல்லா உறவுகளோடையும் கொஞ்சக் காலமெண்டாலும் நிறைவா இருந்தன்... அவர் தன்ரை கடைசிக்காலம் மட்டும் என்னோடை இருந்தார். பிறகு நீ... கிரி... எல்லாரும் என்னோடை இருந்தியள். ஆனா உன்ரை அம்மா போன அஞ்சு வருசமா நீங்கள் இருந்தும் உங்க

ளோடை இருக்கிற சந்தோசத்தை இழந்து... கடைசிநேரத்திலை எனக்கு இப்பிடியொரு பழி வேண்டாம் மதி...'

ராணியம்மாண்டை கண்ணெல்லாம் கலங்கிக் கிடக்கு.

"அவள் உரிமைக்காரி. நான் உரிமையில்லா தவள். எனக்கு விதிச்சது இவ்வளவு தானெண்டு நான் விலகுறது தான் இனி முறை..."

"ஆனா, நீங்கள் தனிய..."

"தனிய, எல்லாரும் தனியத்தான். பக்கத்திலை சரசு, சாந்தா எண்டு ஆக்கள் இருக்கினைதானை. ஆளுக்காள் உதவி. சரசுவிண்டை குஞ்சு, குருமன்கள் வந்தாப் பொழுது போகும்... எங்கையாவது பள்ளிக் கூடத்திலை சமையலுக்கெண்டு போனாப் பிறகு என்ரை பாட்டை நானே பாக்கலாம் தானை..."

ராணியம்மாவிண்டை பதிலிலை நான் விக்கிச்சுப் போனனன். அம்மாவிண்டை நொந்த மனசை நான் ஏன் பாக்கத் தவறினன் எண்டு என்மேலையே எனக்குக் கோபம் வந்துது. அம்மாட்டைப் போகத்தான் வேணும். முதல்லை ராணியம்மாவையும், அம்மாவையும் கூட்டிக் கொண்டு ஜி.எஸ்ஸிட்டைப் போக வேணும்.

விஷயத்தை அவருக்கு விளங்கப்படுத்தி பதிவு நீக்கி சுதுமலைலையில் பதிய வேணும். ஆனா பள்ளிக் கூடம் மட்டும் மாறக் கூடாது. எவ்வளவு கஷ்டப்பட்டு ராணியம்மா இந்தப் பள்ளிக் கூடத்திலை இடம் எடுத்துத் தந்தா. பள்ளிக் கூடம், ரியூசனெண்டு இஞ்சை வரேக்கை அடிக்கடி ராணியம்மாவை வந்து பாத்துக் கொண்டு போக வேணும். அம்மா ராணியம்மாவை மனப்பூர்வமாய் புரிஞ்சு கொள்ளுற வரைக்கும் இதுதான் சரியான வழி...

நான் ஒரு முடிவுக்கு வந்தது போலை ராணியம்மாவிண்டை மடியிலை தலைவைச்சுப் படுத்துக் கொண்டிருக்கிறன். ராவு கனநேரமா ராணியம்மாண்டை விரல்கள் என்ரை தலையைக் கோதிக் கொண்டேயிருந்துது.

# எனக்குக் கிட்டாத இன்பம்!

**- ஷெல்லிதாசன் -**

அந்த மலர்களுக்கு
மிகத் தெளிவாகத் தெரியும்
அந்தியிலே தமது
அஸ்தமனம் நிச்சயமென்று!

ஆனாலும்...
வரப்போகும் அவலம்பற்றி
துளிகூட அவை
வருந்துவதாகத் தெரியவில்லை!

சின்னத் தேனீக்களுக்காய்
தேன் சிட்டுக்களுக்காய்
வண்ணத்துப் பூச்சிகளின் வரவுக்காய்
குவளையில் மது ஏந்தி
காத்துக் கிடக்கின்றன!

காணும் விழிகளின்
கருத்தைக் கவருவதற்காய்
ஆன பல நிறங்களில்
காற்றிலே
அசைந்தசைந்தாடியபடி
என்ன ஓர் அற்புதமாய்!

வாடும் மனங்களுக்கு
நாசிவழி உட்புகுந்து
எதிர்பார்ப்புக்கள் ஏதுமின்றி
நறுமணங்களால்
ஒத்தடச் சிகிச்சையளிக்கும்
உன்னதங்கள் எத்தனை!

அர்ச்சிக்க ஆராதிக்க
சூடி அழகு பார்க்க
சூடிக் கொடுத்துப் பெயர்வாங்க
வாடி உதிரும் வரை
வகையறியா அர்ப்பணிப்புக்களுடன்
மிகமிக அமைதியாக அவை!

அந்த ஒரு தன்மை
அந்த ஒரு எளிமை
அப்படியொரு அர்ப்பணிப்பு
எந்தனுக்கு மட்டுமேன்
எட்டாக் கனியாக!

மதியங் கடந்து
மெல்ல மெல்லச் சரிகின்ற
எனது வாழ்வுப் பயணத்தில்
ஒவ்வோர் நிமிடங்களும்
என்னைப் பற்றிய
எனது உயிர் பற்றிய சிந்தனைகள்!

மரணத்தின் முன்னமேயே
பலமுறை அதனைத் தழுவி
அமைதியைத் தொலைத்தபடி
நான்!

# உதவுவீர்களா?

திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

இருபாலைச்சேனாதிராய முதலியார் ஈழத்தமிழிலக்கியத்திற்கு மிகப்பெரும் சேவையாற்றியுள்ளார். அவர் தாமே யாத்தளித்த நூல்கள் பல. அத்துடன் நல்லதொரு மாணவப்பரம்பரையையும் உருவாக்கித் தந்ததன் மூலம் தமிழ் இலக்கியத்தை அவர்களாலும் வளர்த்துள்ளார்.

ஆயினும் நாம் செய்த தவறுகளால் அதன் பயனை இழந்து நிற்கிறோம். பழமை பேணுவதைக் கைவிட்டதனால் இவர்களால் ஆக்கப்பட்ட நூல்கள் பலவற்றை இன்று பெறமுடியாது தேடி அலைய வேண்டியுள்ளது.

சேனாதிராய முதலியார் இயற்றிய நூல்களாக அவர் பற்றி எழுதிய அறிஞர்கள் குறிப்பிட்டுள்ள நூல்களாவன - நல்லை வெண்பா, நல்லைக்குறவஞ்சி, நல்லூர்க்கந்தசுவாமியார் மீது ஊஞ்சற்பா, மாவிட்டபுரம் கந்தசுவாமியார் மீது ஊஞ்சற்பதிகம், நீராவியடிப் பிள்ளையார் கலிவெண்பா, மற்றும் பல ஊஞ்சற்பதிகங்கள், பல தனிப்பாடல்கள்.

வேறு சில ஆக்கங்களும் இவருடையதாகக் கூறப்படுகின்றன. குமாரசாமிப்புலவர் தனது தமிழ்ப் புலவர் சரித்திரத்தில் நல்லையந்தாதியை முதலியார் பாடியதாகக் கூறியுள்ளார் கணேசையர் அவர்களும் தானெழுதிய ஈழநாட்டுத் தமிழ் புலவர் சரித்திரத்தில் அவ்வாறே எழுதியுள்ளார்.நல்லைக் கலிவெண்பாவும் இவராற் பாடப்பட்டதாகக் கூறப்படுகிறது. இலக்கிய வித்தகர் கவிஞர் த.துரைசிங்கம் தனது பைந்தமிழ் வளர்த்த ஈழத்துப் பாவலர்கள் என்ற நூலில் முதலியார் பற்றிய கட்டுரையின் தலைப்பாகவே நல்லைக்கலி வெண்பாப் பாடிய இருபாலைச்சேனாதிராச முதலியார் எனக் குறிப்பிட்டுள்ளார்.பல்கலைப் புலவர் க.சி. குலரத்தினம் அவர்கள் தமிழ் வளர்த்த செம்மல்கள் எனும் தனது நூலில் இதை முதலியார் பாடியதாகக் குறிப்பிட்டு அத்துடன் சிலர் இதை அவர் பாடவில்லை என்றும் கருதுவர் எனவும் எழுதியுள்ளார். இந்தக் கலிவெண்பாவை நாம் கண்ணாற் காணும் பேறு பெற வழியமைத்துத் தனது நல்லூர் கந்தசுவாமி என்னும் நூலிலே இதனையும் சேர்த்துத் தொகுத்த குல சபாநாதன் அவர்கள் தனது குறிப்பிலே இதனை இயற்றியவர் இருபாலைச் சேனாதிராய முதலியார் எனக் கருதப்படுகின்றதெனினும் ஐயத்துக்கிடமின்றித் துணிந்து கூறமுடியவில்லை என்பர். நல்லை வெண்பாவிற்கு உரையெழுதிப் பதிப்பித்த யாழ்ப் பாணத்துப் புலோலி வித்துவான் க. முருகேசபிள்ளை அவர்கள் நூலாசிரியர் வரலாறு எழுதும்பொழுது நல்லைத்திரிபந்தாதியையும் சேனாதிராயர் இயற்றிய பிரபந்தமாகக் குறிப்பிடுகின்றார்.

இவ்வளவு நூல்களும் குறிப்பிடப்பட்டாலும் எமக்கு இன்று கிடைப்பவை ஓரிரண்டே. அவற்றையும் தேடியலைந்தே பெறவேண்டியுள்ளது.இந்த நிலை நீடிக்குமானால் மேலும் சிறிதுகாலம் செல்ல அவரது எந்த நூலும் கிடைக்காத ஒரு நிலை தோன்றும். இதைத் தவிர்ப்பதற்கு நாம் முயல வேண்டியது மிகமிக அவசியமாகும். இது சேனாதிராய முதலியாரின் நூல்களுக்கு மட்டும் நேரிட்டுள்ள கதி எனக் கூறமுடியாது. புழந்தமிழ் நூல்கள் பலவற்றிற்கும் இதே நிலைதான் என்பதை மிகுந்த கவலையுடன் குறிப்பிட்டேயாகவேண்டியுள்ளது.

இப்போது முதலியாரின் நூல்கள் பற்றிப் பார்ப்போம். ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளையின் பாவலர் சரித்திர தீபகத்தை மீள்பதிப்புச் செய்கையில் கலாநிதி பொன். பூலோகசிங்கம் அவர்கள் எழுதிய குறிப்பில் நல்லை வெண்பாவையும் நீராவிப்பிள்ளையார் கலிவெண்பாவையும் தென்கோவை அம்பலவாண பண்டிதர் 1878ல் சென்னை ஸ்கொட்டிஷ் பிரஸ்ஸில் பதிப்பித்ததாகக் கூறியுள்ளார். புலோலி வித்துவான் க. முருகேசபிள்ளையின் குறிப்புரையுடன் நல்லை வெண்பா 1942ல் யாழ்ப்பாணம் செந்தமிழ் பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இவ்விரு நூல்களும் கிடைத்தற்கரியனவாக உள்ளன. பல இடங்களிலுந் தேடியலைந்தவேளையில் நல்லை வெண்பாவை ஞானம் ஆசிரியர்தான் கொழும்புத் தமிழ் சங்க நூலகத்திலிருந்து பெற்று எனக்குத் தந்துதவினார். மேற்குறித்த நூலிலுள்ள மற்றைய நீராவியடிப் பிள்ளையார் கலிவெண்பாவை அக்கோவில் அறங்காவலர் திருமதி.வயித்திலிங்கம் செல்லம்மா அவர்கள், பண்டிதமணி, வித்துவான் ந. சுப்பையபிள்ளையைக் கொண்டு உரையெழுதுவித்து 1979ல் வெளியிட்டுள்ளார். ஈழநாட்டுத்தமிழ் புலவர் சரித்திரத்தில் பிரமஸ்ரீ சி கணேசையர் அவர்கள் நல்லை வெண்பா பற்றிக் கூறுகையில் பாடங்கேட்டுப் படிப்போரால் பலவாகத்திரித்து எழுதப்பட்டு தன் சொரூபம் பலவாறாகத்திரிவுபட்டது எனினும், அவர் மாணவர் அம்பலவாணபண்டிதரால் பின்னாளில் அது ஒருவாறு திருத்தி அச்சிடப்பட்டுள்ளது என்றெழுதப்பட்டுள்ளதும் கவனிக்கத் தக்கது.

கோப்பாய் கண்ணகையம்மன் பேரிற்பாடிய ஊஞ்சலை க. சிவகுமாரன் 1962 பங்குனியில் பதிப்பித்ததாக பூலோகசிங்கம் அவர்கள் தனது குறிப்பில் எழுதியுள்ளார். இப்பதிகம் கோவிலின் குடமுழுக்கு மலரிலும் இடம்பெற்றுள்ளது.

நல்லூர்க் கந்தசுவாமி மீது பாடிய ஊஞ்சல், குல. சபாநாதன் அவர்கள் எழுதிய நல்லூர் கந்தசுவாமி என்னும் நூலில் தொகுத்துள்ள நல்லூர் முருகன்

புகழ்மாலையில் இடம்பெற்றுள்ளது. அதே நூலில் நல்லைக்கலிவெண்பாவும் பதிப்பிக்கப்பட்டிருந்தாலும் அது முழுமையாகக் கிடைக்கவில்லை. அத்துடன் அது பற்றிய குறிப்பில் தனது திருப்தியின்மையையும் அவர் வெளியிட்டுள்ளார். நல்லைவெண்பா நூலாசிரியர் வரலாற்றில் முருகேசபிள்ளை அவர்கள் மார்கழித் திருவாதிரையின்போது நல்லூர் ஆலயவடக்குவீதியில் முருகன் திருவுலாப் போகும்போது இக்கலிவெண்பா ஓதப்பட்டு வருவதாகவும் அது விரைவில் அச்சேற்றப்படலாம் என்றும் எழுதியுள்ளார். ஆனால் அது வெளியிடப்பட்டதாகத் தெரியவில்லை.

நல்லைக்குறவஞ்சியில் இரு பாடல்களைத் தவிர எவையுங் கிடைத்ததாக எங்கேயுங் குறிப்புகளில்லை. பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் தனது இலக்கிய வழியில் இருவர் கவிராயர் என்னும் தலைப்பில் எழுதிய கட்டுரையில் சேனாதிராயர் "திருவாரு நல்லைநகர்" பாடியது பற்றி நயத்துடன் எழுதியுள்ளார். இப்பாடல்தான் குறவஞ்சிப் பாடலாகக் கூறப்படுகிறது. ஆனால் அது சம்பந்தமாக அவர் எதுவும் எழுதவில்லை. இவர் வசம் நல்லைக்குறவஞ்சி இருந்ததா என்பதும்தெரியவில்லை.

முதலியார் நல்லையந்தாதி பாடியதாக ஓரிருவர் கூற மற்றொருவர் நல்லைத்திரிபந்தாதி பாடியதாக எழுதியுள்ளார். ஏமக்கு இருநூல்களுமே கிடைக்க வில்லை. திரிபந்தாதி பற்றி எழுதிய புலோலியூர் வித்துவான் க. முருகேசபிள்ளை, இந்நூல் தென் கோவையில் வாழ்ந்த சுன்னாகம் முருகேசபண்டிதரால் பலருக்கும் படிப்பிக்கப்பட்டதெனக் குறிப்பிட்டுள்ளார். தனது முகவுரைக்கு தென் கோவை என 22- 01- 1942ல் முகவரியிட்டுள்ள இந்தப் புலோலியூர் வித்துவானுக்கும் அத்திகதியில் இந்நூல் கிடைக்கவில்லை என்பது புலனாகின்றது.

மாவைக்கந்தன் மீது பாடிய ஊஞ்சல் எங்கிருக் கின்றது? ஏன்பது அடுத்த வினா. இன்று அவ்வாலயத்தில்" சீர்பூத்த திருமாதும்" எனத்தொடங்கும் ஊஞ்சற்பதிகமே பாடப்படுகிறது. "இஃது 1842ம் ஆண்டு ஆடி மாதம் யாழ்ப்பாணம் நல்லூர் ம. சரவணமுத்துப்புலவரால் அரங்கேற்றப்பட்டது" என கோவிற்கடவை என்னும் நூலில் இரா.சுந்தரராஜசர்மாவினால் எழுதப்பட்டுள்ளது. மாவிட்டபுரத்திருத்தல வரலாறு எனும் நூலெழுதிய சு. து. சுண்முகநாதக்குருக்கள் "இஃது சாலிவாகன சகாப்தம் 1764ஆம் வருடம் சுபகிருது வருடம் (1842ஆம் ஆண்டு) ஆடி மாதம் நல்லூர் ம. சரவணமுத்துப் புலவனாரவர்களால் இதற்கு முந்திய ஊஞ்சற்பாக்களோடு ஒப்பிட்டுத் திருத்தியுஞ் சேர்த்தும் புதிதாக்கிக் கோவில் வசந்தமண்டபத்தில் வைத்துப் புலவர்,பண்டிதர்கள், பெருமக்கள் என்போர் முன்னிலையில் அரங்கேற்றப் பட்டது." என மாவைக் கந்தசுவாமி பேரிற் பாடிய ஊஞ்சற்பாக்கள் குறித்து எழுதுகையில் விவரித்துள்ளார். சேனாதிராயர் சிவபதமடைந்த ஆண்டு 1840 என்றே பலரும் குறிப்பிட்டுள்ளனர். சரவணமுத்துப்புலவர் சேனாதிராயரின் மாணவன். எல்லோரும் குறிப்பிடும் மாவைக்கந்தனின் ஊஞ்சல் என்னவாயிற்று என்ற உண்மை எவருக்கேனும் தெரியுமா?

வேறும் பல தனிப்பாடல்களும் ஊஞ்சல்களும் முதலியார் பாடியதாகக் கூறுகிறார்கள். இவற்றுட் சிலவேனும் கிடைக்குமா? இந்தத் தேடலில் தங்களது ஒத்துழைப்பையும் நாடிநிற்கின்றோம். மேலே அச்சில் வந்தவையாகக் குறிப்பிட்டவை தவிர்ந்த வேறு ஏதேனும் நூல்களோ கையெழுத்துப்பிரதிகளோ தங்களிடமிருக்குமாயின் தந்துதவுவீர்களாயின் அவற்றைப் பதிப்பிக்கப் பேருதவியாக இருக்கும். அவற்றை நிழற்பிரதி எடுத்துவிட்டு மீண்டும் தங்களிடம் ஒப்படைப்போம். பழந்தமிழ் இலக்கியத்தைப் பாதுகாக்கும் இம்முயற்சிக்கு உதவுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறோம். தொடர்பு கொள்ள எனது முகவரி - கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

# அறியாரோ?



நான் ஜீன்ஸ் அணிவது
அம்மாவுக்கு மட்டுமல்ல
அண்ணாவுக்கும் பிடிக்காது
சேலை அணியச்சொல்லி பல
அறிவுரைகள் தினமும்
சின்னச் சின்னச் சண்டைகள்
"ஆட்டக்காரி" என்று என்காதுபட
அயலாரின் முணுமுணுப்புகள்
சேலை அணிந்து பயணிக்கையில்
"பிரா"வை,
நழுவும் உட்பாவாடையை
சரி செய்யும் பொழுதுகளில்
நடுவில் தெரியும்
வயிற்றை மறைப்பதற்காய்
நான் முயலும் பொழுதுகளில்
நான் படும் அவஸ்தைகளை
மொய்க்கும் காமக் கண்களை
அம்மா அறியாளோ?
அண்ணாவும் அறியானோ?
அயலார் அறியாரோ?

# காத்திருக்கிறேன்

- அல்வாயூர் சி.சிவநேசன்

இன்று
நஷ்டங்கள் அடைந்தாலும்
நாளைய லாபங்களுக்காக
முனைப்புகள் காட்டி
காத்திருக்கிறேன்.

கஷ்டங்கள் கனத்தாலும்
கலங்காது சுமக்கிறேன்
இஷ்டமான அமைவிடத்தில்
இறக்கி வைத்து
இளைப்பாறுவேன் என்றாகும்
நம்பிக்கையோடு
காத்திருக்கிறேன்

பஷ்பமான பூமியில்
புழுதிக்குள் புதைந்த
செம்பூச் செடிகள்
முகிழ்த் தெழுந்து
மணம் பரப்பும்
வசந்தங்களுக்காக
காத்திருக்கிறேன்

துஷ்டமான பொழுதுகளாகி
துன்பரகம் பலவானாலும்
கண்பகரும் கனவுக்குள்
விண்விழிக்கும் விடியலின்
ஒளிப்புலர்வு காவிவரும்
கதிர் முளைத்த சூரியனை
தடையிட்டுக் கவியும்
இருள்மேகம் உடைந்தொழுக
செழிப்புகள் செந்தளிக்குமென்ற
தெரிகைகளால்
தளர்வின்றி காத்திருக்கிறேன்

---

**கு.சின்னப்பபாரதி அறக்கட்டளை சார்பாக 2011 ஆம் ஆண்டு இலக்கியப்பரிசுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள நூல்கள் (இலங்கை, வெளிநாடு)**

**முதன்மைப் பரிசு ரூபாய் ஐம்பதாயிரமும் விருதும்**

1. வவுனியூர்.இரா.உதயணன் - லண்டன் — நூல் - பனிநிலவு

**சிறப்புப் பரிசு ரூபாய் பத்தாயிரமும் விருதும்**

| பரிசு பெறுபவர்கள் | நூல் |
|---|---|
| 1. வி.ஜீவகுமாரன் - டென்மார்க் | சங்கானைச் சண்டியன் |
| 2. நாகரத்தினம் கிருஷ்ணா – பிரான்ஸ் | மாத்தகரி |
| 3. சை.பீர்முகமது – மலேசியா | பெண்குதிரை |
| 4. டாக்டர். நடேசன் - ஆஸ்திரேலியா | வண்ணாத்திக்குளம் |
| 5. தெணியான் - இலங்கை | ஒடுக்கப்பட்டவர்கள் |
| 6. கே.விஜயன் - இலங்கை | மனநதியின் சிறு அலைகள் |
| 7. த. சிவசுப்பரமணியம் - இலங்கை | சொந்தங்கள் |
| 8. தனபாலசிங்கம் - இலங்கை | ஊருக்கு நல்லது சொல்வேன் |
| 9. கலைச்செல்வன் - இலங்கை | மனிததர்மம் |
| 10. உபாலி லீலாரத்னா - இலங்கை | கு.சி.பா. வின் சுரங்கம், தாகம் |
| | நாவல்களின் சிங்கள மொழியாக்கம் |
| 11. புரவலர் ஹாசிம் உமர் - இலங்கை | கொடைச்சிறப்பு |

**இப்படைப்பாளிகளுக்கு அக்டோபர் 2-ம் தேதி, ஞாயிற்றுக்கிழமை நாமக்கல் செல்வம் கல்லூரி வளாகத்தில் பரிசளிப்பு நடைபெறும்**

அறக்கட்டளைத் தலைவர் டாக்டர்.பொ.செல்வராஜ், செயலாளர் நாமக்கல்.கா.பழனிச்சாமி, துணைத்தலைவர் சி.க.கருப்பண்ணன் ஆகியோர் இத்தகவலைத் தெரிவித்துள்ளனர்.

தமிழகச் செய்திமடல்

# கூன் பிறைகளால் உருவான கோதண்டம் கவிஞர் வாலியின் மறுபக்கம்

**- கே.ஜி.மகாதேவா -**

கலைஞர் கருணாநிதிக்கு கவிஞர் வாலி சூட்டிய பாமாலைகள் எக்கச்சக்கம் என்று சொல்லலாம். அங்குலம் அங்குலமாக ரசித்து ரசித்து தனது உயிர் நண்பர் கலைஞருக்கு மகுடமிட்டவர். இப்பொழுது ஆட்சிமாற்றம். தனது வெற்றித் தொகுதியான திருச்சி ஸ்ரீரங்கம் சென்ற முதலமைச்சர் ஜெயலலிதா அங்கு அரங்கநாதரை வணங்கி, நலத்திட்டங்களை ஆரம்பித்த செய்தி அறிந்து கவிஞர் வாலி: "வாக்களித்த ஸ்ரீரங்கத்து மக்கள் வாழ்த்துகிறார்கள் இன்று - எங்க நாயகி அந்த ரங்க நாயகி..." என்று ஜெயலலிதாவை ரங்க நாயகியாக பாமாலை சூடி அழகு பார்த்தது; தி.மு.க. வட்டாரத்தில் உச்சக் கட்ட கொந்தளிப்பை ஏற்படுத்தி வசை பாடவைத்து. "இரட்டை நாக்கு உடையாள் போற்றி என்று அண்ணா சொல்வாரே... அது இன்றைக்கு வாலிக்கு மிகவும் பொருந்தும். அந்த இரட்டை நாக்கு இருந்த காரணத்தினால் தான் ஜெயலலிதாவை ரங்க நாயகியே போற்றி என்று பாராட்டி வாலி பாடுகிறார். வாலி அவர்களே, என்ன ரெட்டை நாக்கு உங்களுக்கு..." என்று முன்னாள் அமைச்சர் பொன்முடி மற்றும் சுப.வீரப்பாண்டியன் போன்றோர் நாகரிகமாக சாபமிட்டு, 'பாசூடு' வைத்தனர். கட்சி வாடை வீசும் கவியரங்குகள், பொது மேடைகளில் இப்பொழுது கவிஞர் வாலியின் இரட்டை வேஷ பேச்சுத்தான் முன்நிற்கிறது.

கவிஞர் வாலி கலந்து கொள்ளும் இஸ்லாமிய நூல் வெளியீடு மற்றும் விழாக்களில் சமீப காலமாக தனது மறுபக்கத்தை வெளிச்சம்போட்டுக் காட்டி வருகிறார். விகடனில் கடந்த நாற்பது வாரங்களாக தொடர்ச்சியாக எழுதிவரும் மலரும் நினைவுகளில் அவரது வரிகள் நினைவுக்கு வந்து இங்கு நிஜமாகிறது. ஒரு கட்டத்தில் கவிஞர் வாலி; "எனது வாழ்வு இன்று இத்தனை வடிவுபெற உளியாயிருந்து செதுக்கிய உள்ளங்கள் எல்லாம் முகமதியர் குலத்தில் முளைத்தவைதான். பஞ்சகச்சம், பன்னிரு திருமண், முப்புரி நூல், முடித்த குடுமி என்று பரம ஆசார சீலராக, வைதிகம் வழுவா வேதியராக வாழ்ந்தவர் எனது தந்தை. இப்படியான பிராமணருக்கு பிறந்த நான், கூன் பிறைகளால் உருவாக்கப்பெற்ற கோதண்டம்" என்று மத நல்லிணக்கத்துக்கு மகுடம் வைத்து, மனம் திறக்கிறார்.

"வெள்ளைக் காரன் காலத்தில் எனது அப்பாவுக்கு மிகவும் பிடித்தமான, நம்பிக்கை ஊழியர் இப்ராஹிம். நான் பிறந்த இரண்டு வாரங்களில் எனது அன்னை ஜன்னி கண்டபோது பசியால் துடித்து நான் சாகக்கிடந்தேன். அந்தக் கட்டத்தில் எனக்கு சில மாதங்கள் தாய்ப்பால் ஊட்டி உயிர்ப்பித்தவர் - இன்று நான் பிழைத்திருக்க அன்றைய காரணமானவர், இப்ராஹிமின் துணைவி - இஸ்லாமிய மாது! இன்று முத்தமிழ்ப் பாலருந்த மூலகாரணம், முஸ்லிம் பால்தான். இளமையில் திருச்சி வானொலியில் சேர்ந்தபோது கதை எழுத ஊக்குவித்தவர், சென்னை வானொலி அன்றைய பெரிய அதிகாரி ஹக்கீம். எனது முயற்சிகளை முகம் முன்னே பாராட்டி, "நீ ஒரு பெரிய கவிஞனாக வருவீரய்யா" என்றவர் மற்றுமொரு திருச்சி வானொலி அதிகாரி கவிஞர் ஹமீது. சதாவதானி செய்குதம்பி பாவலரின் மைந்தன். சினிமா வாய்ப்பு தேடி சென்னை வந்தேன். அன்றாட எனது அவசியம் தேவையான சிகரெட், வெற்றிலை பாக்கு, புகையிலை அவ்வப்போது கடன்கொடுத்து, "நீ பெரிய ஆளானப்புறம் காசைக்கொடு வாலி..." என்று துணிந்து கடன் கொடுத்தவர், வெற்றிலைக் கடை சுல்தான்.

"படத்துக்குப் பாட்டெழுத இந்தப் பிறவியில் கிட்டாது என்று நான் ஏங்கிய போது, கே.வி.மகாதேவன் இசையில் தனது படத்துக்கு பாட்டெழுது என்று உயிரூட்டியவர், மாடர்ன் தியேட்டர்ஸ் உரிமையாளர் சுலைமான். உன்வாசலிலும் உன்முகத்தை எதிர்பார்த்து வரிசையாக கார்கள் காத்து நிற்கும் என்று அன்றைய எனது கனவுகளை நனவாக்கி, ஓரிரு படங்களில் பாட்டு வாங்கிக் கொடுத்தவர் இசையமைப்பாளர் டி.எஸ்.இப்ராஹிம்.

"நுங்கம் பாக்கத்தில் பன்னிரண்டு ஆண்டுகள் நான் மனைவி, மகனுடன் ஒரு வீட்டில் குடியிருந்தேன். சினிமா வருமானம் தான் தெரியுமே. வரும் ஆனால் வராது, தாமதித்துக் கிடைக்கும். வாடகையை நானாக கொடுக்கும்போது, அது எத்தனை மாத இடைவெளி யானாலும் மனநிறைவுடன் வாங்கிக் கொண்டவர் எனது வீட்டு உரிமையாளர் திருமதி ஜுனைதா பேகம். திரைப்படத்தை விட்டு இலக்கிய உலகில் எனக்கு அங்கீகாரத்தை வழங்கியவர் அமரர் நீதியரசர் இஸ்மாயில் தான். பலமுறை என்னை பாராட்டரங்கின் தலைவராக்கி அழகு பார்த்தவர்! என் இனிய இளவல் மு.மேத்தா வசன கவிதையாகப் புனைந்திருந்த நபிகள் நாயகம் வரலாற்றை ஒரே இரவில் வாசித்து முடித்தேன். அதனைப் படித்த பாதிப்பில் தான் 'அவதார புருஷனை' எழுதப் புகுந்தேன். மேத்தா ஓர் இஸ்லாமியப் பெருமகன். ஆக, ஓர் இஸ்லாமிய விளக்கு தான் இன்னோர் இந்து விளக்கை ஏற்றி வைத்தது எனலாம்.

"எனது மனைவி இறந்தபோது மயானம் வரை வந்து ஆறுதல் சொன்னவர்களில் இருவர் இஸ்லாமிய பெருமக்கள். ஒருவர், டாக்டர் ஜாஹிர் ஹுசைன்,

மற்றவர் தி.மு.க.பிரமுகர் உசேன். இரவு முழுக்க எனது வீட்டு வாசலில் விழித்திருந்து துக்கம் காத்தவர், இளைய இயக்குநர் இப்ராஹிம். எல்லாவற்றுக்கும் ஒரு படி மேலாக, பத்மஸ்ரீ விருதை எனது சட்டையில் மாட்டி, "உங்ககிட்ட இது இருப்பதுதான் மிகப்பொருத்தம்" என்றவர் மேதகு அப்துல் கலாம்..." என்று தனது மறுபக்கத்தைத் தொடருகிறார் கவிஞர் வாலி. கவிஞன் கவிஞன்தான். 'கலர்க்' கண்ணாடி போட்டு பார்ப்பது - அவரவர் உரிமை.

**ரூ.2,70,000 இலக்கிய பரிசுத் திட்டம்: இலங்கையிலிருந்து 70 தமிழ்ப் படைப்பாளிகள்**

நாமக்கல் கு.சின்னப்ப பாரதி அறக்கட்டளை சார்பாக நடைபெறும் 2011ம் ஆண்டுக்கான இலக்கிய பரிசுகளுக்கு சர்வதேச மட்டத்தில் கிடைத்திருக்கும் அமோக வரவேற்பு காரணமாக, தமிழ் இலக்கியத்துக்கான சிறப்புப் பரிசுகளை அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டு கூடுதலாக ஒரு லட்சம் ரூபா நிதி ஒதுக்கி, மொத்த ரொக்கப் பரிசுகளாக ரூ.270,000 வழங்க அறக்கட்டளை முடிவு செய்துள்ளது. சர்வதேச மட்டத்தில் தொன்னூறு படைப்பாளிகளும், தமிழ் நாட்டில் எண்பத்து ஐந்து படைப்பாளிகளுமாக மொத்தம் 175 பேர் பங்கு கொண்டுள்ள கு.சி.பா. அறக்கட்டளை பரிசுத் திட்டத்தில் இலங்கையிலிருந்து மட்டும் ஆகக் கூடுதலாக எழுபது படைப்பாளிகளின் நூல்கள் கிடைத்திருக்கிறது. விருதுகள், ரொக்கப் பரிசுகள் வழங்கும் விழா எதிர் வரும் அக்டோபர் மாதம் இரண்டாம் திகதி, நாமக்கல் செல்வம் கல்லூரி வளாகத்தில் நடைபெறுகிறது. பரிசுக்குரியவர்கள் விபரம் கடந்த மாத இறுதியில் அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டதைத் தொடர்ந்து, நாவலாசிரியர் கு.சின்னப்பபாரதியை நான் சந்தித்த போது; "சிறுகதை, கட்டுரை, நாவல், கவிதை, நாடகம், கணினித் தமிழ், மொழிபெயர்ப்பு, சமூகசேவை என்று பல பிரிவுகளாக அறிவிக்கப்பட்டு அறக்கட்டளைக்கு வந்து குவிந்த காத்திரமான படைப்புக்கள் கண்டு மலைத்து விட்டோம். இலங்கையிலிருந்து பங்கு கொண்டவர்களில், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு படைப்பாளி தமது இருபத்து ஐந்து குழந்தைக் கவிதைகள் நூல்களை அனுப்பிவைத்து பிரமிக்கச் செய்து விட்டார்." என்று பெருமைப்பட்டார்.

"தமிழ்ப் படைப்பாளிகள் உலகில் எந்த மூலையிலும் வாழ்ந்தாலும் சரி அவர்களின் இலக்கிய தரம் கண்டு ஊக்குவிக்க வேண்டும் என்ற முனைப்பில் இந்த மாபெரும் இலக்கிய பரிசுத் திட்டம் தனது பார்வையை சர்வதேச அளவுக்கு விஸ்தரித்தது. லண்டன், பிரான்ஸ், டென்மார்க், மலேசியா, ஆஸ்திரேலியா நாடுகளிலிருந்து இருபது படைப்பாளிகள் தங்களது நூல்களை அனுப்பி திண்டாடவைத் துள்ளனர். இதன் காரணமாக எமது இலக்கிய பரிசுகளையும்; புலம்பெயர்ந்த தமிழர்கள், இலங்கைத் தமிழர்கள், தமிழ்நாடு என்று மூன்று பிரிவுகளாக வகுத்து, பத்தாயிரம் ரூபா வீதம் ஏழு பேருக்கு சிறப்புப் பரிசுகள் வழங்கும் திட்டத்தை பதினேழு பேராக உயர்த்தியுள்ளோம். முதன்மை பரிசாக ஒரு தெலுங்கு மொழி படைப்பாளிக்கும், ஒரு தமிழ்ப் படைப்பாளிக்கும் தலா ஐம்பதினாயிரம் ரூபா பரிசளிக்கப்படுகிறது. ஆக மொத்தம் ரொக்கப் பரிசாக மொத்தம் 270,000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. நாம் எதிர்பார்த்ததை விட அதிகமான தமிழ்ப் படைப்பாளிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டுள்ளனர். இவர்களில் சிலர், அடுத்த ஆண்டு பரிசுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட விருக்கிறார்கள்" என்று கு.சின்னப்ப பாரதி என்னிடம் தெரிவித்தார்.

**இப்படியும் நடக்கிறது**

❋ படித்துக் கிழித்தது போதும் என்பார்கள். தமிழ் நாட்டில் இன்று, பாடப் புத்தகங்கள் கிழித்துப் படிக்கப்படுகிறது. உயிர்பிச்சைகேட்டு, பிள்ளையாருக்கு 108 தேங்காய்கள் உடைப்பதை வேண்டுவது பிரார்த்தனை. 108 பெயர் கொண்ட அந்த உயிர் காக்கும் வாகனத்துக்கு வேட்டு. பிறப்பொக்கும் என்று, வள்ளுவப் பெருந்தகையின் வார்த்தைகளை வடித்த கலைஞரின் வரிகளுக்கு கறுப்பு மை தடவல் என்றால், குமரிக்கடலில் அவர் எழுப்பிய வள்ளுவர் சிலையை ஏன் மறைக்கக் கூடாது - மக்கள் பேசுகிறார்கள்.

❋ சமூகத்தில் அக்கறையுடன் மக்கள் செல்வாக்குப் பெற்று வேகமாகச் செயல்படுபவர்களை வீழ்த்தும் சுலபமான ஆயுதம் 'செக்ஸ்' புளுதிதான். கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநில துணைச் செயலாளர் சி.மகேந்திரன் மீது இப்படியான ஒரு வீண் பழியைச் சுமத்தி ஓரம் கட்ட இலங்கை துணைத் தூதரக உயர் அதிகாரியே திட்டமிட்டுச் செயல்பட்டு அன்று விலாசம் இழந்தார். சில ஊடகங்கள் மட்டும்தான் குளிர் காய்ந்தன. இதன் பின்னர் இயக்குநர் சீமான் - நடிகை விஜயலட்சுமி காதல் புள்ளி விபரங்கள், ஊடகங்களில் கவர்ச்சிப் புயல் தொடருகிறது. இப்பொழுது, கடைசியாக ஊடகங்களில் அரங்கேறியிருப்பது எழுத்தாளர் சாரு நிவேதிதா, காதல் அலை சர்ச்சை. 'அந்த பதின் மூன்று நாட்கள்' பேஸ்புக் வழியாக இணையத்துக்குள் புகுந்து, ஒரு இளம் பெண்ணுடன் நடத்திய பாலியல் கவர்ச்சிக் கிளர்ச்சி உரையாடல் பற்றிய புகார், நாவலாகத் தொடருகிறது! 'செக்ஸ்' என்றதும் ஒரு சம்பவம் பளிச்சிடுகிறது. 1976ம் ஆண்டு. சென்னை, வூட்லண்டஸ் ஹோட்டல் அரங்கில், 'தினத்தந்தி' வெளியீடான 'ராணிமுத்து' நூறாவது மலர் வெளியீட்டு விழாவுக்கு அழைப்பின் மீது கலந்து கொண்டேன். ஒரு கட்டத்தில், 'கல்கண்டு' தமிழ்வாணனுக்கும் சாண்டில்யனுக்கும் கருத்து மோதல், "இந்த வயதிலும், பெண்பிள்ளைகளை வைத்திருந்தும், தொடை தொடையாக எழுதி 'செக்ஸ்' மோகத்தை தொடருகிறார் என்று சாண்டில்யனை தமிழ்வாணன் சாடுகிறார். பதிலுக்கு சாண்டில்யன் கல்கண்டு சங்கர்லாலை இழுக்கிறார். கடைசியில், கவிஞர் கண்ணதாசன் முடிவுரை கூறவேண்டிய கட்டம். "செக்ஸ் வேறு, வாழ்க்கை வேறு என்று பிரிக்க முடியாது. ஆனால் 'செக்ஸ்' தான் வாழ்க்கை அல்ல" என்று கவிஞர் கண்ணதாசன் கூறியது, இன்று நன்றாகவே கேட்கிறது. கற்பனைகளைத் தூண்டுவது 'அது' என்றால்; வாழ்க்கையின் வாசல்படி வரை வைத்திருக்க வேண்டியது - வீட்டுக்குள்ளேயே பாதுகாப்பது அவசியம்.

## அமரர் பேராசிரியர் கா. சிவத்தம்பி
## இரங்கல் கூட்டம்



தமிழ் அறிஞரும் இலக்கிய விமர்சகருமான
அமரர் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களின்
வாழ்வையும் பணியையும் நினைவு கூரும் இரங்கல் கூட்டம் நடைபெறும் இடம்

**Spectram Immigration Services (SIS) மண்டபம்**
**59 A, Roseberry Avenue, Preston 3072**
**06.08.2011 சனிக்கிழமை மாலை 8.00 மணி**

**அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்**

தகவல். லெ. முருகபூபதி

சர்வதேச தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் International Tamil Writers forum

(03) 9308 1484, 04166 25766 E.Mail: international.twfes.@yahoo.com.au

## 2011 ஜனவரி முதல்
## 'ஞானம்' புதிய சந்தா விபரம்

**உள்நாடு**

| | | |
|---|---|---|
| தனிப் பிரதி | : | ரூபா 65/= |
| ஆண்டுச் சந்தா | : | ரூபா 1000/= |
| ஆறு ஆண்டுச்சந்தா | : | ரூபா 5000/= |
| ஆயுள் சந்தா | : | ரூபா 20000/= |

சந்தா காசோலை மூலமாகவோ, மணியோடர் மூலமாகவோ அனுப்பலாம். மணியோடர் *வெள்ளவத்தை* தபால் நிலையத்தில் மாற்றக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

***இலகுவாக மேலதிகச் செலவின்றி சந்தா அனுப்பும் வழி :-***
உங்கள் பகுதியில் உள்ள ஹட்டன் நஷனல் வங்கியில்
**T. Gnanasekaran, Hatton National Bank - Wellawatte**
நடைமுறைக் கணக்கு இலக்கம் – 009010344631 என்ற கணக்கில் வைப்பு செய்து வங்கி ரசீதை எமக்கு அனுப்புதல் வேண்டும்.

வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்ப :
Swift Code : HBLILKLX
***அனுப்ப வேண்டிய பெயர்/ முகவரி :***
**T. Gnanasekaran**
**Gnanam Branch Office**
3-B, 46 th Lane, Wellawatte.

**ஞானம் விளம்பர விகிதம்**

| | | |
|---|---|---|
| பின் அட்டை | : | ரூபா 10000/= |
| முன் உள் அட்டை | : | ரூபா 8000/= |
| பின் உள் அட்டை | : | ரூபா 8000/= |
| உள் முழுப்பக்கம் | : | ரூபா 5000/= |
| உள் அரைப்பக்கம் | : | ரூபா 3000/= |

| *வெளிநாடு* | ஓராண்டு | இரண்டு ஆண்டு | மூன்று ஆண்டு |
|---|---|---|---|
| Australia (AU$) | 40 | 80 | 110 |
| Europe (₤) | 30 | 60 | 80 |
| India (Indian Rs.) | 500 | 950 | 1400 |
| Malaysia (RM) | 60 | 120 | 170 |
| Canada ($) | 40 | 80 | 110 |
| UK (£) | 25 | 50 | 70 |
| Other (US $) | 35 | 70 | 100 |

மூன்று சந்தாதாரர்களைச் சேர்த்துத் தருபவர்களுக்கு ஒரு வருடம் 'ஞானம்' இனாமாக அனுப்பப்படும்.



மலையகம் தலவாக்கலையைப் பிறப்பிடமாகக்கொண்ட த. எலிசபெத் 31-10-84ல் பிறந்தவர். க.பொ.த.(உ/த) கலைப்பிரிவில் சித்தி பெற்று தற்போது உதவிக் கணக்காளராகக் கடமையாற்றுகிறார்.

இவரது முதற் கவிதை ‘வரமாட்டாயா?’ வீரகேசரி வார இதழில் வெளியானது. கவிதை, சிறுகதை, கட்டுரை ஆகிய துறைகளில் ஈடுபாடு கொண்டுள்ள இவரது படைப்புகள் வீரகேசரி, சுடர் ஒளி, தினகரன், மித்திரன், வாரமலர், இருக்கிறம், சூரியகாந்தி ஆகிய பத்திரிகைகள் சஞ்சிகைகளில் வெளியாகியுள்ளன. தமிழ் ஓதர்ஸ்,வார்ப்பு, முத்துமணி, முத்துக்கமலம், ஊடறு, ஊடகம், லங்காஸ்ரீ ஆகிய தமிழ் இணையத்தளங்களிலும் இவரது படைப்புகள் வெளியாகியுள்ளன. இவரது தொடர்பு முகவரி:37/2, கோப்பியாவத்த வீதி, தெமட்டகொட தொலைபேசி:0774607589

**குட்டைப்பா வாடையும் குதறிய தலைமுடியும்**
**கட்டுக்கடங்கா அலங்காரமும் கவர்ச்சியின் வனப்பும்**
**ஆண்களினா டைக்குள் அடைக்கலமான பெண்மையும்**
**வீதிகளின் வழியே விகாரமாய்த் தெரிகிறதே.**

**சேலையும் தாவணியும் சேராமலே உடம்பில்**
**பாதியாடையும் பறந்திடு நிலையில்**
**பண்பாட்டையுமெம் பண்புகளைத் தெருவில்**
**பார்க்கும் கண்களெல்லாம் பழிக்கிறதே**

**த.எலிசபெத்**

**நாகரிகமென்றதை நாளும் வளர்க்கிறாய்**
**நாமெல்லாம் பெண்ணென்பதை நிமிடத்தில் மறக்கிறாய்**
**அச்ச மடமென்பதை ஆதிகாலப் பெண்ணுக்கென்கிறாய்**
**அடக்கமென்பதை அடக்கு முறையென அழுதார்ப்பரிக்கிறாய்**

**அழுகையால் கண்ணீரால்ல அன்புமடக்கத்தினில்**
**ஆழுமையின் ஆதிக்கத்தில்**
**கலியுக போராட்டம் கரையெட் டிடட்டும்**
**கயவரின் கண்களும் கைதொழ துணியட்டும்**

# படித்ததும் கேட்டதும்

## கே.விஜயன்



### அகலிக்கும் பெரும் வெற்றிடம்

ஈழத்தமிழர்கள் வாழ்வில் இழப்புக்கள் வெற்றிடங்களை அதிகரிக்கச் செய்கின்றன. பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பியின் பேரழப்பு பெரும் வெற்றிடத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

ஏன் இந்த நாட்டில் பேராசிரியர்கள் இல்லையா? கல்வியாளர்கள் இல்லையா? புத்திஜீவிகள் இல்லையா? வரலாற்றாசிரியர்கள் இல்லையா? இலக்கியத் திறனாய்வாளர்கள் இல்லையா? ஆக்க இலக்கியப் படைப்பாளிகள் இல்லையா?

இப்படி அடுக்கிக் கொண்டேபோகலாம். இல்லாமல் இல்லை, இருக்கிறார்கள். எனினும் இவை முழுவதையும் ஆளுமையாக்கிக்கொண்டவர்களுக்கான வெற்றிடமே ஏற்பட்டுள்ளது. பூமி வெடித்து உருவாகிவிட்டதொரு பாரிய பள்ளம்போல் பெரும் வெற்றிடம் என்றால் மிகையில்லை. இது பெரும் அலங்கார அடைமொழிச் சொல் அல்ல. உண்மை. யதார்த்த பூர்வமானது.

ஒரு சமூகத்தின் சகல அம்சங்களிலும் அவருடைய ஆளுமை ஏதோ ஒருவகையில் வேரோடிக் கிடப்பதைக் காணலாம். பெரும் அரசியல் 'தலைமைகளின் பிரச்சினைகள்', அரசியல் கோட்பாடுகள் முதல் சாதாரணதொரு புதுக்கவிதையாளனின் கவிதைப் பிரச்சினை வரை சிரித்த முகத்துடன் பேராசிரியர் சிவத்தம்பியின் அறிவு பூர்வமான ஆளுமை நெருங்கி நிற்கிறது. கோட்பாட்டு ரீதியான தர்க்கம் கருத்து முன்வைப்பு, ஆலோசனை அக்கறையுடன் வழங்கப் பட்டிக்கிறது. சமூக அக்கறைமிக்க அறிவு ஜீவிகளின் ஆளுமை இப்படித்தான் இருக்கும். சமூகவியல் பற்றிய சித்தாந்தத் தெளிவு சமூக முன்னேற்றத்தின் அக்கறையாக அகலிக்கின்றபோது கலை இலக்கியத்தின் சமூகக் கடப்பாட்டினை உள்வாங்கிக் கொண்டிருக்கும் போது அறிவுலக ஆளுமை மிக்கதொருவரின் வாழ்வியல் அவ்வாறே துலங்கும். பேராசிரியர் அத்தகையவர்.

இலக்கியத்திலும் சரி அரசியலிலும் சரி அவர் முன்வைத்த கருத்துக்கள் சித்தாந்த தெளிவின்மையின் முரண்பாடுகள் அல்ல, இயந்திரத்தனமாகச் சிந்தித்த வர்களின் கருத்துப் பிறழ்வுகளே. பேராசிரியர் சரியாகவே சிந்தித்தார். சரியாகவே கருத்துக்களை முன்வைத்தார். இவர் விசுவாசித்த பொருள் முதல்வாத(மாக்ஸிஸ) கண்ணோட்டத்தின் தன்மை தர்க்கவியலுடன் முன்னகர்வதே. அதன் காரணமாகவே பெரும் அறிவு ஜீவிகளுடன் மட்டுமல்ல ஒரு புதுக்கவிஞனுடனும் அவர் கருத்துக்கள் குறித்து சுமுகமாகவே தர்க்கம் செய்தார். கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டார். சமூக உணர்வுமிக்க பெரும் ஆளுமைகளின் எளிமைக் கோலத்தின் உச்சமே இத்தகைய எளிமையான பண்பு.

பேராசிரியர் ஒரு பெருங்கடல். பெருமலை என்றெல்லாம் அடை மொழிகள் வைத்து அஞ்சலிப் பத்திகள் எழுதினார்கள், பேசினார்கள். அப்பாடா! பேராசிரியருக்கு நெருக்கமானவர்கள், தெரிந்தவர்கள், ஒன்றாகப் படித்தவர்கள், என்பதைக் காட்டவே பத்திரிகையில் ஒருபத்தியை எழுதிவிட்டோம். இனியெல்லாம் சரி என்பது அவர்களின் அரசியல் நாடகம். இவர்களின் கலை இலக்கிய அரசியல் சித்தாந்தத்தின் ஆணிவேரே தமக்கு ஓர் இமேஜை ஏற்படுத்திக் கொள்வதுதான். பேராசிரியரின் கருத்துக்களை ஒரு சமூக உரையாடலாக்கும் முயற்சியில் அவர்கள் ஒரு பொழுதும் எண்ணிய தில்லை. ஈடுபடவில்லை.

அஞ்சலி உரையின்போது, பேராசிரியரின் INTELLECTUAL HONESTY பற்றிக் குறிப்பிட்டார் கவிஞர் மு. பொ. அதையடுத்து பொன்மணி என்ற தமிழ்ப் படத்தைத் தந்த (காவலூர் ராசதுரையின்) சிங்களவரான தர்மசிறி பத்திராஜா ஒரு தகவலைச் சொன்னார்.

சென்னைப் பல்கலைக் கழகமொன்று பேராசிரியர் சிவத்தம்பி பற்றியும் அவருடைய ஆக்கங்கள் குறித்தும் தொடர்ச்சியாக ஐந்து நாள்கள் கருத்தரங்கொன்றைத் தமிழ்நாட்டில் நடத்தியது. நம்நாட்டின் இந்தப் பேராசான் பற்றி நாம் இதுவரையும் அப்படியானதொரு கருதரங்கினை நடத்தவில்லை என்பதுதான் அந்தத் தகவல்.

எத்தகைய துயரமான நிலை இது. நாம் எங்கோ நிற்கிறோம். என்பது புரிகிறது அல்லவா.

இலக்கியத்திலும் சரி அரசியலிலும் சரி வெறும் அடை மொழிகளைச் சுமந்து திரியும் பெரும்பாலானவர்களைக் கொண்ட வெறும் மேடைப்பிரசங்க சமூகம் பெரிதாகி

விட்டது. அதனால் இழப்புக்கள் பெரும் வெற்றிடங்களாக அகலிப்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

**கல்விப் பேராசானின் ஆட்டத்தில் சபையோர் ஆடித்தான் போனார்கள்.**

20-6-2011 அன்று கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் பேராசிரியர் சி. மௌனகுரு இராவணேஸ்வரனாகத்தோன்றி ஆடிய ஆட்டத்தால் சபையோர் ஆடித்தான் போனார்கள்.

"அடேயங்கப்பா 70 வயதுக்கார கல்விமானா இந்த ஆட்டம் போடுகிறார்...!" என்று வியப்பில் ஆழ்ந்துவிட்ட சபையோர்தான் அப்படிப் பிரமிப்புக்குள் ஆழ்ந்து விட்டனர். அடியேன் மட்டுமென்ன நாமும் அந்த நிலைக்குத்தான் தள்ளப்பட்டுடு கிறங்கிப்போனோம்.

'அச்சடா, என்ன கலைஞர் இவர்' என்று அசந்துதான் போனேன்.

தமிழ் கூத்தும் சிங்கள நாடக மரபும் சம்பந்தமாகப் பேராசிரியர் பேசினார். தமிழ் சிங்கள மக்களின் மரபுக்கலைகளான இக்கலைகள் இரண்டிற்கும் இடையே இருக்கின்ற ஒற்றுமைப் பண்புகளையும் அவற்றின் வரலாறுகளையும் துல்லியமான இசை அபிநய அம்சங்களையும் ஒரு மணித்தியாலயத்திற்கும் அதிகமான காலம் சளைக்காமல் பேசி வீடியோ கிளிப்ஸுகள் மூலம் விங்கப் படுத்தி போதாதற்கு மேடையில் பாடியும் ஆடியும் நடித்தும் காண்பித்து சபையோரை அல்லோல கல்லோலப்படுத்திவிட்டார்.

அரச கலை இலக்கியத் திணைக்களம் இந்த நிகழ்வினை ஒழுங்கு படுத்தியிருந்தது. புகழ்மிக்க சிங்கள நாடகக் கலைஞர்கள் பலரும் சமூகமளித் திருந்தார்கள். அவர்களும் எதிரிவீர சரத் சந்திரவின் மனமே நாடகத்தில் இடம்பெற்ற சில நடன நிகழ்வுகளை நிகழ்த்தினர்.

பேராசிரியர் நான்கு தசாப்த காலத்திற்கும் அதிகமாக இராவணேஸ்வரனாக மேடைகளில் நடித்தவர். டெனியாய என்ற சிங்களக் கலைஞர் மனமே நாடகத்தில் சிங்கபாகுவாக அதே கால அளவு நடித்தவர். புகழ்மிக்க இக்கலைஞர்கள் இருவரும் ஒரேமேடையில் ஒரேவிதமான கட்டத்தையும் அவற்றிடையே காணப் படுகின்ற துல்லியமான வேற்றுமை ஒற்றுமை அம்சங்களையும் தமது அபிநயங்கள் மூலம் வெளிப்படுத்திக் காட்டியமை சபையோரைக் கரவொலி எழுப்பச் செய்தது.

பேராசிரியர் மௌனகுரு ஒரு ருசிகரமான தகவலைச் சபையோருக்குக் கூறினார். சிங்கபாகுவான கலைஞர் டெனியாயவும் இராவணேஸ்வரனான அவரும் சந்தித்துக்கொண்ட நிகழ்வே அது. ஒரு கூட்டத்தில் பேசுகின்றுபோது இதுவரை அவர்கள் சந்தித்துக்கொள்ளவில்லை. என்பதைக் குறிப்பிட்டார். அச்சபையில் டெனியாய இருந்தார்.

சபையிலிருந்த டெனியாய உடனே எழும்பி 'இதோ இருக்கிறேன்' என்று கைகளை உயர்த்திக் காட்டினார். உணர்ச்சி வசப்பட்ட கலைஞர்கள் இருவரும் ஓடோடிவந்து கட்டியணைத்துக் கொண்டனர். இந்தக்காட்சியினை அச்சபையிலிருந்த சினிமா தயாரிப்பாளர் தர்மசிறி பண்டார நாயக்கா படம்பிடித்த விட்டார்.இவ்விரு கலைஞர்களின் சந்திப்பும் சங்கமும் கட்டியணைப்பும் இன மத பேதம் கடந்த இரு கலைஞர்களின் உன்னத உணர்வாகும். அச்சபை யிலிருந்த தர்மசிரி அதனைப் படம்பிடித்துப் பதிவாக்கிக் கொண்டது கலையுணர்வின் சிகரமாகும். அக்காட்சியை திரையில் காண நேர்ந்தபோது பெரும் கலை விருந்தாகவே அமைந்தது.

பேராசிரியர் சொன்னார்:

நான்கு தசாப்தங்களுக்கு முன்னர் இராவணேஸ் வரன் இளைஞனாக இருந்தான். இப்பொழுது முதியவனாகிவிட்ட இராவணேஸ்வரனைத்தான் பார்க்கிறீர்கள்.

முதிய இராவணேஸ்வரனா சிம்ம கர்ச்சனையுடன் வாளை சுழற்றி சுழற்றி மேடையை அதிர வைத்தது.

அடேயங்கப்பா..!

**அவர்கள் கோர்டிற்கு வருவார்களா?**
**இவர்கள் வீட்டிற்குப் பொவார்களா?**

சட்டம் என்னடா சட்டம் தூக்கிப் போடுவதா கஷ்டம் இதுதான் இன்றைய யுகதர்மம். என்றாலும் என்ன சட்டத்தின் பாதுகாவலர்களின் சில தர்மப் புத்திரர்கள் மோதிக் கொள்வதற்கு அஞ்சுவதில்லை. "ஐயா ,பெரியவர்களே! நீதி மன்றம் வந்து இதற்குப் பதில் சொல்கிறீர்களா!" என்று நாசூக்காகச் சவால் விட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

இந்திய உயர்நீமன்ற நீதியரசர்கள்.இருவர் இப்படி ஒரு தலையிடியை இந்தியப் பிரதமருக்குக் கொடுத்திருக்கிறார்கள்.

இந்தியா அறிவியலில் மேற்கு நாடுகளில் போட்டிபோட்டுக்கொண்டு முன்னேறிவரும் ஒரு நாடு. ஒரு மணித்தியாலம் இந்தியத் தொலைக்காட்சிச் சனல் முன்பாகச் சிவனே என்று உட்கார்ந்திருந்தால் அடுப்படிப் பொருள்கள் முதல் ஆரோக்கிய அலங்காரப் பொருள்களின் கவர்ச்சியான விளம்பரங்கள் அம்மாடி என்று வாயைப்பிளக்கச் செய்யும் சுதந்திரப் பொருளாதாரத்தின் திருவிளையாடல் இது. அப்படி ஒரு அசுர வளர்ச்சி. அரசியல் வாதிகளின் உரையைக் கேட்க வேண்டுமே எதிர்கட்சி அரசியல்வாதி தொலைந்தான் போ! அவர்களின் ஊழல் பட்டியல் மண்டையைப் பிழக்கச் செய்யும்.

பத்திரிகையாளர்கள் நடிகைகளின் நிர்வாணக் கூத்துக்களை இன்வெஸ்டிகேஷன் பண்ணுவதில்

மும்முரமாக இருப்பார்கள். புலனாய்வுப் பத்திரிகா தர்மம் படும்பாடு பெரும்பாடுதான்.

அனைவரையும் கோழிகளை அடைப்பது போன்று இந்த விமரிசனக் கூட்டுக்குள் அடைத்தவிடமுடியாது. பெரும்பாலோர் இப்படி. அதனால்தான் மனிதாபிமான அவலங்கள் பல மண்மூடிப்போக அதிர்ச்சி தரும் சில சமாச்சாரங்கள் புற்றுப்பாம்பாக சீறலுடன் வெளிப் படுகின்றன. அப்படி ஒரு மனித அவலம் பற்றிய இன்றும் தொடர்கதையகிக் கொண்டிருப்பது வெளிவந்துள்ளது.

இந்தியா சுதந்திரம் அடைந்து 65 ஆண்டுகள். ஓடிவிட்டன. ஆனால் அந்த மண்ணில் இன்றும் மலத்தை கையால் அள்ளும் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். நகரங்களிலும் தெருவோரக் கழிப்பறைகளும் உலர் கழிப்பறைகளும் இருக்கின்றன. இவற்றிற்கு எதிரான ஒரு சட்டம் 1993 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்டது. எனினும் இன்றும் இலட்சக்கான மலத்தைக் கையால் அள்ளும் பணியாளர்கள் நாடு முழுவதும் இருக்கிறார்கள். உலர் கழிப்பறைகள் கட்டப்பட்டவண்ணம் இருக்கின்றன. எச்சங்களை யெல்லாம் பன்றிகள் தம் நாவால் கபளீகரம் பண்ணி சுத்தமாக்கிவிடுகின்றன என்பதனால் அந்தப் பிரச்சினை ஓரளவிற்குப் பைசலாகிவிடுகிறது. அடக் கடவுளே, இல்லையென்றால் நிலைமைதான் என்ன? பன்றிகளுக்கு சபாஷ்!

கடந்த மாதம் இதனுடன் தொடர்புடைய ஒரு வழக்கு உயர் நீதிமன்றத்திற்கு வந்தது. அதனை விசாரித்த இரு நீதியரசர்கள் அதிரடியாக ஓர் இடையாணை பிறப்பித்தார்கள்.

ஆமாம், மனிதன் கையால் அள்ளும் பணியில் ஈடுபடுவது மனிதாபிமான மற்ற செயல். சுகாதாரமற்ற செயல். இதை நிறுத்தும்படியாக1993 ஆம் அண்டில் ஒரு சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. அதை ஏன் இன்னும் நடைமுறைப்படுத்தவில்லை? இந்நாட்டின் பிரதமர், அவருடைய செயலாளர் இருவரும் வழக்கின் அடுத்த அமர்வின்போது நீதி மன்றம் வந்து பதில் சொல்ல வேண்டும். இதுதான் அந்த அதிரடி இடையாணை. அடடா, அற்புதம் அற்புதம் என்று சபாஷ் போடலாம் அல்லவா! எல்லாம் சரிதான், நாட்டின் தலைவர்கள் குறித்த நாளில் கோர்ட்டிற்கு வந்து பதில் சொல்வார்களா? இல்லை நீதியரசர்கள் தம்வீட்டிற்குப் போய் ஓய்வு கொள்வார்களா? என்பதை நாம் வாய்பிளந்து பார்த்துக் கொண்டிருக்கத்தான் வேண்டும்.

# தமிழ்ச் சந்ததி உள்ளவரை உம் நாமம் வாழும்

**- புலோலியூர் வேல்நந்தன்**

அள்ளக் குறையா
அட்சய பாத்திரமாய்
தெள்ளு தமிழுண்டு வாழ்ந்திருந்த
எங்கள் வள்ளுவனே
உம்மோடு முடிந்ததோ ஒருயுகம்
வித்தியானந்தன் ஏற்றி வைத்த
விளக்கதை அணையாது
காத்து நின்ற கலங்கரை விளக்கமே
கைலாசபதி காலம் முதல்
கடைசி மூச்சுவரை
தமிழிற்காய் வாழ்ந்த எங்கள்
பேராசானே
தசரதனின் பிரிவெண்ணிக்
கலங்கிய ராமனைப் போல
நாமும் இன்று கலங்குகிறோம்
உம் பிரிவெண்ணி
புதிய சொற்களால் தமிழிற்கு
புதுவளம் சேர்த்தீர்
சிந்தனைச் சிறப்பாய்
பன்மொழிப் புலமையால்
உலகெங்கும் தமிழின்
பெருமைதனை உரைத்தீர்
பலருக்குப் புரியாது உம்தமிழ்
புரிந்தவர்க்கோ அது தேன்தமிழ்
இருப்பதை கிளிப்பிள்ளை
பாடம் சொல்லாமல்
மறுத்தலில் புது செளிச்சம்தந்தீர்
மரபிலும் நவீனத்திலும் ஆழம் கண்டீர்
எழுத்தாளர் மாநாட்டிலும்
எங்களுடன் நின்றீர்
செம்மொழி மாநாட்டையும் சிறப்பித்தீர்
எம் காலத்தில் வாழ்ந்ததில்
பெருமை கொண்டோம் - இனி
நீர் விட்டுச் செல்லும் நூல்களும்
வாரிசுகளும் உம்
நினைவை பேசும்
சிந்தனைச் சிறப்பால் தமிழிற்கு
புதுவளம் சேர்த்தவரே
தமிழ்ச் சந்ததி உள்ளவரை
உம் நாமம் வாழும்
உம் கனவைத் தொடர்ந்திடுவோம்
முதிய வழிகாட்டியே
இளைய நெஞ்சமதன் அஞ்சலிகள்

# எழுதத் தூண்டும் எண்ணங்கள்

✲ கலாநிதி – துரைமனோகரன் ✲✲✲✲✲✲✲✲✲

**ஒரு விளக்கம்**

கடந்த ஜூலை 2011 ஞானம் இதழில் வெளிவந்த எழுதத் தூண்டும் எண்ணங்கள் என்ற எனது பத்தியெழுத்தில் இடம்பெற்ற மலேசிய மாநாட்டு அனுபவங்கள் என்னும் பகுதி, சிலரின் மனங்களைப் புண்படுத்தி விட்டதாகத் தெரிகிறது. எனது எழுத்து எவரின் மனத்தையாவது புண்படுத்தியிருப்பின், அதற்காக, எனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். யாரையாவது புண்படுத்துவதோ, அவதூறு செய்வதோ எனது நோக்கமன்று. நல்லவற்றை மனந்திறந்து பாராட்டுவதற்கு நான் ஒருபோதும் தயங்குவதில்லை. அதேவேளை, குறைகளைச் சுட்டிக்காட்டி விமர்சிப்பதற்கும் தயங்குவதில்லை. விமர்சனம் என்பது ஒரு போதும் அவதூறு ஆகாது. எனது பத்தியில் மலேசிய மாநாட்டு அனுபவங்கள் பற்றி நான் எழுதியவற்றுக்கு மாற்றுக் கருத்து இருப்பின், தமது பக்கத்து நியாயத்தை ஞானத்தில் எழுதுவதற்கு எவருக்கும் முழு உரிமையும் உண்டு. அப்படிச் செய்வதே நேர்மையும், நியாயமும் ஆகும். எனது எழுத்துத் தொடர்பாகக் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். அப்படி இருப்பதில் எந்தத் தவறும் இல்லை. ஆனால், எனது எழுத்தில் நேர்மை உண்டு. இதனை ஞானம் வாசகர்கள் நன்கு அறிவர்.

**காயல்பட்டினக் காட்சிகள்**

சென்ற மாதத்தில் (ஜூலை) தமிழ்நாட்டின் காயல்பட்டினத்தில் இஸ்லாமியத் தமிழ் இலக்கிய 15ஆவது மாநாடு நடைபெற்றது. இதில் இந்தியா, இலங்கை, மலேசிய, சிங்கப்பூர் நாட்டுப் பேராளர்கள் கலந்துகொண்டனர். மலேசிய மாநாட்டைப் போன்றே இம்மாநாட்டிலும் இலங்கைப் பேராளர்கள் பெருமளவில் கலந்துகொண்டனர். இதுபற்றி மாநாட்டில் அடிக்கடி புகழ்ந்து பேசப்பட்டது. கேட்கச் சந்தோஷமாகத்தான் இருந்தது. ஆனால், உண்மை எப்போதும் வேறாகத்தான் இருப்பதுண்டு. மலேசிய மாநாட்டைவிட கலை இலக்கியவாதிகள் சற்று அதிகமாகக் கலந்து கொண்டனர். ஆயினும் வழமைபோல வியாபார நோக்கம் கொடிகட்டிப் பறந்தது.

காயல்பட்டின மாநாட்டுக்கான இலங்கைக் குழுவில் வெளிப்படையாகத் தெரியும் முறையில் கோஷ்டிப் பூசல்கள் தலைவிரித்தாடின. விமானக்குழு, கப்பல்குழு, அரசியல் குழு, தனிநபர் குழு எனப் பல்வேறு குழுக்கள் காணப்பட்டன. ஒருவரையொருவர் விமர்சிப்பதில் மனம் திறந்து செயல்பட்டனர். ஆனால், ஒரு விடயத்தை வெளிப்படையாகக் குறிப்பிட்டே ஆகவேண்டும். இலங்கைப் பல்கலைக்கழகங்களில் இருந்து மாநாட்டுக்குச் சென்ற ஆய்வாளர்களின் கௌரவத்தைப் பேணுவதில் மானா மக்கீன் சிறப்பாகச் செயல்பட்டார். அவருக்கு உண்மையில் பாராட்டையும், நன்றியையும் தெரிவிக்க வேண்டும்.

தொடக்க விழாவில் அமைச்சர் ரவூப் ஹக்கீமின் பேச்சு இடம்பெற்றது. வழக்கமாக நன்றாக அமையும் அவரது பேச்சு, அன்று ஏனோதானோ என்றிருந்தது. இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் எம்.அப்துல் ரஹ்மானின் சொற்பொழிவு சிறப்பாக இருந்தது. ஆய்வரங்கத் தொடக்க விழாவில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவரான குமரி அனந்தன் பேசினார். இஸ்லாம் தொடர்பான பல்வேறு விடயங்களை உள்ளடக்கியதாக அவரது சொற்பொழிவு சிறப்பான முறையில் அமைந்திருந்தது. நிறைவுவிழாக் காலை நிகழ்ச்சியில் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் அஸ்வரின் பேச்சு இடம்பெற்றது. வழக்கமாகப் பிறரின் "சிந்தனை"யையே விசுவாசத் துடன் பேசிவரும் அவர், அன்றைய நிகழ்ச்சியில் அது பற்றி ஒரு வார்த்தை கூடப் பேசாதமை, ஆச்சரியமாகவும், மனத்துக்கு இதமாகவும் இருந்தது. உண்மையில் அஸ்வரின் அன்றைய பேச்சு மிகச் சிறப்பாக இருந்தது.

ஒரே நாளில் ஒரே நேரத்தில் பதினொரு ஆய்வரங்குகள் நடைபெற்றன. இலங்கையைச் சேர்ந்த பல ஆய்வாளர்களுக்கும் ஆய்வுக் கட்டுரைகள் படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. இலங்கையைச் சேர்ந்த எனக்கும், முத்துமீரானுக்கும் ஒவ்வொரு அரங்குக்குத் தலைமையேற்கும் பணியும் ஒப்படைக்கப்பட்டது. ஜின்னாஹ் ஷரிபுத்தீனுக்கும், மானா மக்கீனுக்கும் ஒவ்வொரு அரங்குக்கு நெறியாள்கை செய்யும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. சிலர் ஒரே நேரத்தில் ஓர் அரங்குக்குத் தலைமை வகிக்க வேண்டியும், இன்னோர் அரங்கில் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பிக்க வேண்டியும் ஏற்பட்டது. இத்தகைய சங்கட நிலை எனக்கும் ஏற்பட்டது. எப்படியோ சமாளித்து, இரு அரங்குகளிலும் பங்குபற்றினேன். இது நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களின் தவறாகும். எப்படியோ ஆய்வரங்குகளை நடத்தி முடித்துவிட்டால் போதும் என்று நினைத்துவிட்டார்கள் போலும்! எனினும், ஆய்வாளர்கள் உற்சாகத்தோடு கலந்துகொண்டனர். ஆய்வரங்களில் சமர்ப்பிக்கப்பட்ட

இந்திய ஆய்வாளர்கள் சிலரின் ஆய்வுத்தலைப்புகள் குழந்தைப் பிள்ளைத்தனமாக அமைந்திருந்தன.

காயல்பட்டின மாநாட்டில் கவியரங்கம் என்ற பெயரில் ஒரு நிகழ்ச்சி இடம்பெற்றது. இது போன்ற ஒரு கவியரங்கை நான் என் வாழ்நாளில் பார்த்ததேயில்லை. ஒரே மேடையில் முப்பத்து மூன்று கவிஞர்கள் கலந்துகொண்ட 'மெகா கவியரங்கு' இது! கவியரங்குத் தலைமை வகித்த ஈரோடு தமிழன்பன் உட்படக் கவிஞர்கள் பலரும் நல்ல அழகிய உரைநடையில் பேசினார்கள்! சிலர் வரவேற்புரையும், நன்றியுரையும் செய்தார்கள்! சிலர் கொலம்பஸ் கண்டுபிடித்ததெல்லாம் பெரிய கண்டுபிடிப்பல்ல, தாங்கள் கண்டுபிடித்ததுதான் சிறந்தது என்பதைப் போலப் பொருத்தமில்லாத சொற்களை யெல்லாம் கண்டுபிடித்துக் கவிதை செய்தார்கள்! சிலர் ஆக்ரோஷமாக என்னென்னவோ சொன்னார்கள்! ஒரு சிலர் மட்டும் கவிதை படித்தார்கள். இந்தக் கவியரங்கைக் குறிப்பிட்ட நாளில் முடிக்க முடியாமல் இன்னொரு நாளுக்கும் ஒத்திவைத்தார்கள். அந்த நாளில் புதிய தலைவர் ஒருவரின் கீழ் முன்னர் போலவே கவியரங்கு நடந்து முடிந்தது. கவியரங்கின் போது பலரும் நன்றாகக் கடலை கொறித்தார்கள். நானும் தான்.

மாநாட்டில் பேராசிரியர் அப்துல் காதரின் தலைமையின் கீழ், 'இன்றைய சூழலில் இஸ்லாமியரின் நிலை வாழ்த்தும் படியா? வருந்தும் படியா?' என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது. பட்டிமன்றம் நன்றாக இருந்தது. ஆனால், பட்டிமன்றத் தலைவர், பட்டிமன்றத்தின் தொடக்கத்திலும், முடிவிலும் நீண்ட நேரத்தை எடுத்துவிட்டார். தாம் பட்டிமன்றத் தலைவர் என்பதை மறந்து, பேராசிரியர் அப்துல் காதர் தமது தனிச் சொற்பொழிவையே நடத்தத் தொடங்கி விட்டார். அவர் சிறந்த பேச்சாளர் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், பட்டிமன்றப் பேச்சாளர்கள் இருபுறமும் வீற்றிருக்க, தாம் மட்டுமே தனித்தவில் வாசித்தமை அவருக்கு அழகல்ல. பட்டிமன்ற இறுதிக்கட்டத்திலும் பொறுமையிழக்கச் செய்துவிட்டார். நமது நாட்டிலும் சில பட்டிமன்றத் தலைர்கள் இப்படி நடந்துகொள்வதுண்டு. பேச்சாற்றல் என்பது நல்ல கலைதான். ஆனால், அதனைக் கொண்டு சபையைத் துன்பப்படுத்தக் கூடாது.

மாநாட்டின் இறுதி நாளன்று ஒரே நேரத்தில் இரு கருத்தரங்குகள் இடம்பெற்றன. அவற்றுள் ஒன்று மகளிர் அரங்கம். அங்கு என்ன நடைபெற்றது என்பது மகளிருக்கு மாத்திரமே தெரியும். மற்றைய அரங்கத்தில் அருமையான கருத்துரைகள் பரிமாறப்பட்டன. இக்கருத்தரங்கில் குறிப்பிடத்தக்க ஒரு விடயம், ஒருவரைத் தவிர மற்றைய பேச்சாளர்கள் எல்லோரும் தமிழர்கள். ம.தி.மு.க வின் கொள்கை விளக்க அணிச் செயலாளர் நாஞ்சில் சம்பத் உட்படப் பேச்சாளர்கள் அனைவரது பேச்சுக்களும் சிறப்பாக இருந்தன. நபிகள் நாயகத்தின் சிறப்பியல்புகளைப் பற்றித் தமிழ்ப் பேச்சாளர்கள் பேசும்போது, ஆச்சரியமாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தது. இத்தகைய புரிந்துணர்வு இன ஒற்றுமைக்கு மிக அவசியமானது. இத்தகைய ஒரு கருத்தரங்கை ஏற்பாடு செய்தவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

இந்த மாநாட்டில் என்னைக் கவர்ந்த இன்னொரு விடயம், அருமையாக ஒலித்த இஸ்லாமியப் பாடல்கள் நிகழ்ச்சிகள்தான். மிகச் சிறந்த பாடகர்களின் இனிமையான பாடல்களைக் கேட்டுச் சுவைக்க முடிந்தது. அந்த அனுபவம் அற்புதமானது. இலங்கையைச் சேர்ந்த கே.எல்.கமர்தீனும் (இவர் பற்றி முன்னமும் குறிப்பட்டள்ளேன்) இனிமையாகப் பாடி, நமது நாட்டின் புகழை மேலோங்கச் செய்தார்.

மாநாட்டின் இறுதிநாளில் வழங்கப்பட்ட பல்வேறு விருதுகளில் சேவைச் செம்மல், தமிழ் மாமணி விருதுகளை இலங்கையைச் சேர்ந்த இலக்கிய வாதிகள், ஊடகவியலாளர்களும் பெற்றுக்கொண்டனர். மானா மக்கீன், என்.எம்.அமீன் ஆகியோருக்குச் சேவைச் செம்மல் விருது வழங்கப்பட்டது. தமிழ் மாமணி விருது அல் அஸூமத், அஷ்ரப் சிஹாப்தீன், ஏ.இக்பால் (விழாவில் கலந்து கொள்ளவில்லை) ஆகியோருக்குக் கிடைத்தது. இவர்களுக்கு எனது பாராட்டுக்கள்! தமிழ்நாடு இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கழகம் நடத்திய போட்டிகளில் பேராதனைப் பல்கலைக் கழகத்தை சேர்ந்த இரண்டொரு மாணவிகளுக்கும் பரிசு கிடைத்தமை மகிழ்ச்சிக்குரியது.

இஸ்லாமியத் தமிழ் இலக்கிய 15ஆவது மாநாட்டின் முதுகெலும்பாகத் திகழ்ந்தவர், தமிழ்நாடு இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கழகத்தின் பொதுச் செலயாளர் பேராசிரியர் மு.சாயபு மரைக்காயர். அவரையும், அவரோடு இணைந்து செயற்பட்டவர்களையும் பாராட்டியே ஆகவேண்டும்.

காயல்பட்டினத்தின் கடும் வெயில் எங்களைக் கஷ்டப்படுத்தியது. ஆனால், விழா ஏற்பாட்டாளர்களின் வரவேற்பும், விருந்தோம்பலும் எங்களைக் குளிரவைத்தது. பல இந்திய இலங்கை இலக்கிய வாதிகளையும், அறிஞர்களையும் சந்திக்கும் இனிய வாய்ப்பினை மாநாடு ஏற்படுத்தியது.

### ஒரு தனித்துவ ஆளுமையின் இழப்பு

பேராசிரியர் கையலாசபதிக்குப் பின் தமிழ் இலக்கிய உலகில் இன்னொரு மாமலை சரிந்துவிட்டது. எவர் காலமானாலும் பேரிழப்பு என்று சொல்லிப் பழக்கப்பட்டு விட்ட இன்றைய உலகில், சிவத்தம்பியின் இழப்பை எப்படிக் குறிப்பிடுவது? கைலாசபதியின் இடமே இன்னும் நிரப்பப்படாத நிலையில், சிவத்தம்பியின் இடமும் நிரப்பப்படாமலே இருக்கப்போகிறது. இன்னொரு வகையில் பார்த்தால், எந்த ஒருவரின் இடத்தையும் எவராலும் நிரப்ப முடியாது என்பதுதான் உண்மை. அதுவே அவரவரின் தனித்துவத்தைக் காட்டும்.

கைலாசபதியும், சிவத்தம்பியும் தமிழ் ஆய்வுலகிலும், திறனாய்வு உலகிலும் புதிய பாதைகளைத் திறந்துவிட்டவர்கள். பாரம்பரிய

ரசனைப்போக்கையும், ஆய்வறிவு நோக்கு இல்லாத கிளிப்பிள்ளை மனோபாவத்தையும் மாற்றியவர்கள். இருவரும் பழந்தமிழ் இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரை தமது பரந்த பார்வையைச் செலுத்தியவர்கள் தமிழ் ஆய்வு என்பது பல்துறைகளோடு தொடர்புபடுத்திச் செய்யப்பட வேண்டியது என்பதை வலியுறுத்தியவர்கள். தமிழ் இலக்கிய உலகில் இருபெரும் தூண்களைப் போன்று விளங்கியவர்கள். பழமைவாதிகளுக்குச் சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்தவர்கள். இன்றைய தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களிலும், கல்லூரிகளிலும் பணியாற்றும் கணிசமான பேராசிரியர்கள் கைலாசபதி, சிவத்தம்பி ஆகியோரின் நூல்களைக் கட்டாயமாக வாசிக்குமாறு தமது மாணவர்களைக் கேட்டுக் கொள்வதையும் காண முடிகிறது.

ஆனால், இருவரும் குறைகள் அற்றவர்களோ விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவர்களோ அல்லர். இருவரிடத்திலும் பார்வைக் குறைபாடுகள் இருக்கவே செய்தன. இருவரும் தங்கள் வட்டங்களை விட்டு வெளியே வரமுடியாதவர்களாகவும் செயல்பட்டனர். சிவத்தம்பி தமது வட்டத்தை விட்டுச் சற்று வெளியே வர முயன்றபோது, அவரது வட்டத்தினராலேயே ஒதுக்கப்படத் தொடங்கினார். கைலாசபதி பற்றி ஒரு தொகுப்பு நூலில் அவரது கட்டுரை இடம்பெறாமலே போய்விட்டதை நான் முன்னர் ஞானத்தில் சுட்டிக்காட்டியிருந்தேன். சிவத்தம்பி பிற்காலத்தில் சற்றுத் தனிமைப்படுத்தப்பட்டிருந்தார். முற்போக்குப் பேசியவர்களே அவரைத் திட்டமிட்டு ஒதுக்கத் தொடங்கினர். ஆனால், அவர் காலமானபோது போட்டி போட்டுக் கொண்டு அஞ்சலி அறிக்கைகள் வெளியிட்டுத் தமது இருப்பைப் பிரபல்யப்படுத்திக் கொண்டனர்.

சிவத்தம்பியும் தம்முடன் தாமே முரண்பட்டுக் கொண்ட சந்தர்ப்பங்களும் உண்டு. அவை நிச்சயமாக அவரது ஆளுமையைப் பாதித்தன. ஆனால், குறைகளுக்கு மத்தியிலும் அவர் பலராலும் மதிக்கத்தக்க உயர்ந்த குன்றாகவே விளங்கினார். எதிர்காலத்தில் அவர் விட்ட இடத்திலிருந்து பணிகள் தொடரப்பட வேண்டும்.

## தமிழ்க் கதைஞர் வட்டம் - (தகவம்)
## 2010ஆம் ஆண்டுக்கான சிறுகதை மதிப்பீட்டு முடிவுகள்

**முதலாம் காலாண்டு**

| | | | |
|---|---|---|---|
| முதலாம் இடம் | - கெகிறாவை ஸஹானா | - அங்கும் இங்கும் | - மல்லிகை |
| இரண்டாம்இடம் | - வழங்கப்படவில்லை | | |
| மூன்றாம் இடம் | - சந்திரகாந்தா முருகானந்தன் | - வாழ்க்கையின் ரணங்கள் | - மல்லிகை |
| சிறப்புப் பாராட்டு | - கே. ஆர். டேவிட் | - பாண்போறணை | - ஜீவநதி |

**இரண்டாம் காலாண்டு**

| | | | |
|---|---|---|---|
| முதலாம்இடம் | - மருதம்கேதீஸ் | - ஔவைதரு முகிலி | - கலைமுகம் |
| இரண்டாம்இடம் | - தி.மயூரன் | - வாசமில்லா மலர்கள் | - சுடர்ஒளி |
| மூன்றாம் இடம் | - வழங்கப்படவில்லை | | |
| சிறப்புப் பாராட்டு | - க. சட்டநாதன் | - சடங்கு | - கலைமுகம் |
| | - பவானி சிவகுமாரன் | - நிழல்கொஞ்சம் தா | - ஜீவநதி |

**மூன்றாம் காலாண்டு**

| | | | |
|---|---|---|---|
| முதலாம் இடம் | - சந்திரகாந்தா முருகாநந்தன் | - உண்மை வலி | - மல்லிகை |
| இரண்டாம் இடம் | - களுவாஞ்சிக்குடி யோகன் | - பயணம் எங்கே | - வீரகேசரி |
| மூன்றாம் இடம் | - கிறிஸ்டி முருகுப்பிள்ளை | - உண்மையின் ஒளி | - தொண்டன் |
| சிறப்புப்பாராட்டு | - பவானி சிவகுமாரன் | - மீண்டும் புதிதாய்ப் பிறப்போம் | - வீரகேசரி |

**நான்காம் காலாண்டு**

| | | | |
|---|---|---|---|
| முதலாம் இடம் | - வழங்கப்படவில்லை | | |
| இரண்டாம் இடம் | - எம்.எஸ். அமானுல்லா | - தாய்மை | - ஜீவநதி |
| மூன்றாம் இடம் | - ராணி சீதரன் | - இன்று மட்டும் | - மல்லிகை |

**வசந்தி தயாபரன்**
செயலாளர்

# சம கால கலை இலக்கிய நிகழ்வுகள்

கே. பொன்னுத்துரை

## இளம் கவிஞர்களின் கன்னிக் கவிதைகளால் மணம் வீசிய நிகழ்வு

கொட்டக்கலை தமிழ்ச் சங்கத்தின் மாதாந்த ஒன்று கூடல் 14.07.2011 வியாழன் அன்று மாலை 2.00 மணிக்கு கொட்டகலை ஸ்ரீமுத்து விநாயகர் தேவஸ்தான மண்டபத்தில் தலைவர் மொழிவரதன் அவர்களின் தலைமையின் கீழ் இடம்பெற்றது.

தமிழுக்கு தொண்டாற்றி தனது வாழ் நாளையே அர்ப்பணித்த அமரர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்களுக்கு முதலில் மௌனாஞ்சலி செலுத்தப்பட்டது.

கொட்டகலை தமிழ்ச் சங்க செயலாளர் E.லோகநாதன் தனது இரங்கலுரையில் "பேராசான் ஒரு கடல், அவரது பணி பன்முகம் சார்ந்தது; எமது தமிழ்ச் சங்கம் அவரது மறைவையொட்டி தமிழ் கூறும் நல்லுலகிற்கு தமது துயரை பகிர்ந்து கொள்ள விழைகிறது என்றார்.

இதனை அடுத்து அக்கரப்பத்தனை ஹோம்வூட் தமிழ் வித்தியாலயத்தின் அதிபர் இரா.நல்லுசாமி அவர்கள் இரங்கல் கவிதையை கண்ணீராக்கி மறைந்த பேராசானுக்கு சமர்ப்பித்தார் "ஒரு நாள் போதாது ஒருமாதம் போதாது ஏன் ஏழு வருடமும் போதாது" பேராசான் புகழ் பாட என்று அவர் கூறினார்.

இதனை அடுத்து "முற்றத்தில் மலரும் மல்லிகை" எனும் வளரும் "இளம் கவித் தளிர்களின்" கவிதைகள் மேடை ஏற்றப்பட்டன.

கொட்டகலை த.ம.வி. மாணவர்களின் இக்கன்னி முயற்சிக்கு கொட்டகலை தமிழ்ச் சங்கம், ஆசிரியர் வி.நந்தகோபாலன் நெறிப்படுத்தலின் கீழ் களம் அமைத்துக் கொடுத்திருந்தது.

தலைவர் மொழிவரதன் அவர்கள் இந்நிகழ்வினை ஆரம்பித்த போது

"எமது முற்றத்தில் மலர்ந்து மணம் வீசும் மலர்களை நாம் கவனிப்பதில்லை ஆனால் அது பரப்பும் இலக்கிய நறுமணம் எவ்வாறானது என்பதனை இன்று நீங்கள் உணர்வீர்கள். முற்றத்தில் மலரும் இந்த இளம் கவிஞர்களின் கன்னிக் கவிதைகள் பற்றி உங்கள் எண்ணங்களையும் ஆலோசனைகளையும் நாம் வரவேற்கின்றோம்" என்றார்.

ஆசிரியர் வி.நந்தகோபாலன் நெறிப்படுத்தலின் கீழ் இருபத்திரண்டு இளம் கன்னி கவிஞர்கள் கவிதை பாடினர். தரம் 6, 7 மாணவர்கள் உட்பட தரம் 13 வரை இம்மாணவர்கள் உள்ளடங்கி இருந்தனர். இடையிடையே பின்வரும் மூத்த இளம் கவிஞர்கள் தத்தமது கருத்துக்களை வழங்கினர். பலரது பாராட்டையும் பெற்ற தரம் 6, 7 மாணவர்களின் கவிதைகள் விதந்துரைக்கப்பட்டன.

கவிஞர் மாரிமுத்து சிவக்குமார்

கவிஞர் சண்முகம் சிவக்குமார்

கவிஞர் மொழிவரதன்

கவிஞர்கள் மு.சிவலிங்கம், மல்லிகை சி.குமார், நல்லுசாமி திருக்கணேசபதி மாவட்ட செயலக உதவி முகாமையாளர் சண்முகராஜா, பாரதி கல்லூரி அதிபர் E.லோகநாதன் போன்ற பலரும் தத்தமது எண்ணங்களை முன் வைத்து வாழ்த்தினர்.

இதனை அடுத்து இளம் கவிஞர்கள் அறிமுகம் எனும் தலைப்பின் கீழ் ஹோம்வூட் தமிழ் வித்தியாலய அதிபர் இரா. நல்லுசாமி அவர்களை சங்கத் தலைவர் மொழிவரதன் அறிமுகம் செய்து வைத்தார்.

இரா.நல்லுசாமி அவர்கள் தனது கவித்துவ வரிகளை முன்வைத்து தமிழ்ச் சங்க செயற்பாட்டினை பாராட்டிப் பேசி நன்றி கூறினார்.

நன்றி உரையை E.லோகநாதன் (செயலாளர்) ஆற்றினார்.

மிகவும் இனிமையான, ரம்மியமான பொழுதாக இப்பௌர்ணமி பொழுது கழிந்ததாக அனைவரும் மகிழ்ந்து கலைந்து சென்றனர்

**தகவல் - மொழிவரதன்**

## ஞானம் ஆசிரியருடன் ஓர் கலந்துரையாடல்

ஞானம் ஆசிரியர் ஞானசேகரனுடனான ஒரு சந்திப்பு 02.07.2011 சனிக்கிழமை அன்று மாலை 4.30 மணியளவில் வடமராட்சி - சமரபாகுவில் எழுத்தாளர் சீனா. உதயகுமாரின் இல்லத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு சித்திரா சின்னராஜன் தலைமை வகித்தார். மிகச் சிறிய அளவில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் ஞானம் சஞ்சிகையின் இன்றைய வருகையும் அதன் குறைபாடுகளும் அக்குறைபாடுகளை நிவர்த்தி செய்தலும் என்ற தொனிப் பொருளில் உரையாடல்கள் இடம்பெற்றன.

ஞானம் ஆசிரியர் பேசுகையில், தமிழ்ப் படைப்புலகு இன்று புதிய திசைகளை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது. புதிய புதிய உத்தி, புதிய வடிவமைப்பு என இன்றைய தமிழ்இலக்கிய உலகு நகர்ந்து கொண்டிருககிறது. கட்டுடைத்தல் போன்ற உத்திகளில் படைப்புக்கள் வெளியாகின்றன. ஆனால் எங்கள் படைப்பாளிகள் இவற்றை எவ்வளவு தூரம் கவனத்தில் கொள்கிறாரகள் என்பது கேள்வியாகவே உள்ளது என்று குறிப்பிட்டார்.

மேலும் மூத்த எழுத்தாளர் சி.வன்னியகுலம் பேசுகையில் காத்திரமான படைப்புகளின் இருப்புநிலை பற்றியும், படைப்பாளிகள் தொடர்ச்சியான வாசிப்பு நிலையினைக் கொண்டிருக்கவில்லை. ஆனால் வாசகன் தொடர்ச்சியான வாசிப்பு நிலையினைக் கொண்டுள்ளான். இதனால் வாசகன் மிகத் தெளிவாக இருக்கிறான் என்றும் தனது உரையில் கூறியிருந்தார்.

1.தனிப்பட்ட நபர்கள் குறித்த அவதூறுகளை இலக்கியமாக்கி தம்மை இலக்கியவாதிகள் எனக் கொண்டாடும் ஒரு நிலை உருவாகி வருகிறது. சமூகத்திற்குப் பிரயோசன மில்லாத, காலத்தைப் பிரதிபலிக்காத படைப்புக்களை ஞானம் தவிர்க்க வேண்டும்.

2. வாசகர் வட்டங்களை உருவாக்கி இதழ்கள் படைப்புக்கள் பற்றிய கருத்துப் பரிமாறலை செய்தல் வேண்டும்.

3.நேர்மையான விமர்சன மரபை வளர்த்தெடுக்க வேண்டும்.

இவை போன்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. ஞானம் ஆசிரியர் இக்கருத்துக்கள் தொடர்பாக தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்திக் கூறியிருந்தார். தமக்கு வந்து சேரும் படைப்புக்களைக் கொண்டே போட்டிக்குரிய படைப்புக்களைக் கூட தெரிவு செய்ய வேண்டிய நிலை இருப்பதாகவும், இதழில் ஏற்படும் குறைபாடுகளைக் களைவதற்கு தாம் தயாராக இருப்பதாகவும் அவை யடக்கமாகக் கூறினார்.

கருத்துப் பரமாறலில் சித்திரா சின்னராஜன், சு.குணேஸ்வரன், கி.நவநீதன், அ.அன்பழகன், வீ.வீரகுமார், சீனா.உதயகுமார் ஆகியோர் தமது கருத்துக்களைக் கூறியரிருந்தனர்.

நன்றியுரையினை வீ.வீரகுமார் நிகழ்த்தியிருந்தார். மிகவும் ஆரோக்கியமான சந்திப்பொன்றை ஏற்படுத்தித் தந்த சீனா.உதயகுமாருக்கு நன்றி சொல்லி விடைபெற்றார் ஞானம் ஆசிரியர்.

## நாடக நூல்கள் இரண்டு அறிமுக விழா

பொன்விழாக் கலைஞர் கலைச்செல்வன் எழுதி இலக்கிய முற்றம் வெளியீடான "சக்காரம் பைண்டர்", "மனித தர்மம்" ஆகிய இரு நூல்களின் அறிமுகவிழா (கடந்த 03.07.2011) தமிழ்த் தொண்டாளர் புரவலர் ஹாசிம் உமர் முன்னிலையில் வவுனியூர் இரா. உதயணன் (லண்டன்) தலைமையில் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடந்தது. சிறப்பு விருந்தினர்களாக ப. உதயராசா, மில்லேனியம் அல்ஹாஜ் எஸ். ஹுசைன் மௌலானா. ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பு செய்தனர்.

நூல் அறிமுகத்தை சக்தி ரி.வி. தயாரிப்பாளர் ஆ. ராஜ்மோகனும். தம்புசிவாவும் நிகழ்த்தினர். அ. முத்தப்பன் செட்டியார், திருமதி கௌசல்யாதேவி கோவிந்தப்பிள்ளை ஆகியோர் இலக்கிய முற்றம் சார்பில் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

## ஈழத்துத் தமிழ்ப்பத்திரிகைகள் ஓர் ஆய்வு

கலாசூரி ஆ. சிவநேசச்செல்வன் எழுதிய ஈழத்துத் தமிழ்ப் பத்திரிகைகள் ஓர் ஆய்வு என்ற நூலின் வெளியீட்டு விழா கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் பேராசிரியர் சோ. சந்திரசேகரன் தலைமையில் (07.07.2011) நடைபெற்றது

சிறப்புவிருந்தினர்களாக எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர் நிறுவன தலைவர் குமார் நடேசன், தினக்குரல் நிறுவனர் எஸ்.பி. சாமி, சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே. அரசரட்னம், கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் மு. கதிர்காமநாதன், ஓய்வு நிலை நிர்வாக சேவை அதிகாரி த. இலங்காநேசன் ஆகியோர் கலந்து சிறப்பிக்க வாழ்த்துரையை சிரேஸ்ட ஊடகவியலார் என். வித்தியாதரன் நிகழ்த்த கருத்துரைகளை பேராசிரியர் சபா. ஜெயராசா, தெ. மதுசூதனன், ஆகியோர் வழங்கினர். நன்றியுரையை நூலாசிரியர் ஆ.சிவநேசச்செல்வன் ஆற்றினார்.

## சேர் பொன். இராமநாதனின் கல்விச் சிந்தனையும் கல்விப் பணியும்

கொழும்புத் தமிழ்ச் சங்கம் ஆர். எஸ். நடராசா எழுதிய "சேர் பொன். இராமநாதனின் கல்விச் சிந்தனையும் கல்விப் பணியும்" என்ற நூலின் வெளியீட்டு விழாவை சங்கரப்பிள்ளை மண்டபத்தில் (09.07.2011) சங்கத்தலைவர் மு.கதிர்காமநாதன் தலைமையில் நடத்தியது.

பிரதம விருந்தினராக ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தான அறங்காவலர் டி.எம். சுவாமிநாதன் கலந்து சிறப்பிக்க வரவேற்புரையை தென் கிழக்குப் பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர் க.இரகுபரன் நிகழ்த்த, கம்பவாரிதி இ. ஜெயராஜ் வாழ்த்துரைக்க, நூலின் அறிமுகவுரையை கலாநிதி ந. குமரகுருபரன் நிகழ்த்தினார். வெளியீட்டுரையை மா. கணபதிப்பிள்ளையும், நூல்விமர்சனத்தை ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி ஸ்ரீ பிரசாந்தனும், நன்றியுரையை கொழும்புத் தமிழ்ச் சங்க பொதுச் செயலாளர் ஆ. இரகுபதிபாலஸ்ரீதரனும் வழங்கினர். நூலாசிரியர் ஆர். எஸ். நடராசாவிற்கு கம்பவாரிதி இ. ஜெயராஜ் பொன்னாடை போர்த்தி கௌரவம் செய்தார்.

## அற்றைத்திங்கள்

கொழும்புத் தமிழ்ச் சங்கம் பிரதி மாதமும் பௌர்ணமி தினங்களில் நடத்தும் அற்றைத்திங்கள் நிகழ்வில் பிரபல படைப்பாளியும், கலைச்செல்வி ஸ்தாபக ஆசிரியருமான "சிற்பி" சரவணபவன் தனது தொடக்க காலப் படைப்பு முயற்சிகள் பற்றியும், கலை, இலக்கிய, வாழ்வியல் அனுபவங்களையும், மிகவும் திறந்தமனதுடன் எடுத்துரைத்தார். இந்நிகழ்விற்கு சங்கத் தலைவர் மு. கதிர்காமநாதன் தலைமை வகித்தார்.

## மக்கள் கவிஞர் இ. முருகையனின் இரண்டாவது ஆண்டு நினைவு நிகழ்வு

மக்கள் கவிஞர் இ. முருகையனின் இரண்டாவது ஆண்டு நினைவு நிகழ்வினை தேசிய கலை இலக்கிய பேரவை கைலாசபதி கேட்போர் கூடத்தில் பேராசிரியர் சி. தில்லைநாதன் தலைமையில் (16.07.2011) நடத்தியது. தொடக்க உரையை சட்டத்தரணி சோ. தேவராஜா நிகழ்த்த. கலாநிதி சி. சிவசேகரம் "சமூக விமர்சனமாக கவிதை" என்ற தலைப்பில் நினைவுப் பேருரை நிகழ்த்தினார்.

பொ. கோபிநாத் தலைமையில் "உயர ஏறுவோம்" என்றத் தலைப்பில் கவியரங்கம் நடைபெற்றது. இதில் கவிஞர்களான வி. விமலாதித்தன், ரிஷாங்கன், வே. வாசுகி, நிலா ஆகியோர் சிறப்பாக கவிபாடி கவியரங்கை சிறப்பு செய்தனர். தேசிய கலை இலக்கிய பேரவையினது கலைக்குழுவினரின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.

## தெளிவத்தை ஜோசப்பின் "குடைநிழல்" நாவல் வெளியீடு

தெளிவத்தை ஜோசப்பின் "குடைநிழல்" நாவல் அறிமுக விழா மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்தின் அனுசரணையுடன் கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் எம். வாமதேவன் தலைமையில் (17.07.2011) நடைபெற்றது. சிறப்பு அதிதிகளாக புரவலர் ஹாசிம் உமர், வீரகேசரி நிர்வாக இயக்குனர் குமார் நடேசன், பேராசிரியர் சோ. சந்திரசேகரன், மல்லிகை ஆசிரியர் டொமினிக்ஜீவா, ஞானம் ஆசிரியர் வைத்தியகலாநிதி தி. ஞானசேகரன். ஆகியோருடன் மற்றும் பலர் கலந்து சிறப்பு செய்தனர்.

தெளிவத்தை ஜோசப்பின் பேர்த்திகளான செல்விகள் சில்மியா டேவிட்செமுவேல், சித்ரா திமோதி ஜோசப் ஆகியார் முதற்பிரதியை வழங்க இலக்கிய புரவலர் ஹாசிம் உமர் பெற்றுக் கொண்டார்.

நூல் ஆய்வுரையை பேராசிரியர் சபா. ஜெயராசாவும், நாவல் பற்றிய கருத்துரைகளை பதுளை சேனாதிராஜா, சோ. தேவராஜா, மு. சிவலிங்கம், மு. தயாபரன், க. சண்முகலிங்கம். ஆகியோர் மிக சிறப்பாகச் செய்தனர். தெளிவத்தை ஜோசப் ஏற்புரையும், நன்றியுரையை இரா. சடகோபனும் நிகழ்த்தினார்கள். நிகழ்ச்சியை மிகவும் அழகாக தொகுத்து வழங்கினார் "மல்லியப்பு சந்தி" திலகர்

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் திருக்குறள் மாநாடு 2011

கொழும்புத் தமிழ்ச் சங்கம் ஏற்பாடு செய்திருந்த திருக்குறள் மாநாடு மிகவும் கோலாகலமாக ஜுலை 22,23,24 ஆம் திகதிகளில் இடம் பெற்றது. பம்பலப்பிட்டி பிள்ளையார் கோவிலில் இருந்து 22ஆம் திகதி மாலை குடை, கொடி, ஆலவட்டம் மங்கல வாத்தியங்கள் முழங்க யானை முன்வர திருவள்ளுவர் உருவம் ஊர்வலமாக மாநாட்டு மண்டபத்தை வந்தடைந்தது. சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் அரங்க ராமலிங்கம் மூன்று நாட்களும் சிறப்புரைகள் ஆற்றினார். மாநாட்டுச் சிறப்பு மலர் "முப்பால்" முதலாம் நாள் வெளியிடப்பட்டது. இரண்டாம் நாள் சிறப்புரையாக தமிழ்நாடு முனைவர் சீர்காழி வி. ராமதாஸ் அவர்களின் "வள்ளுவர் காட்டும் வாழ்வியல்" சொற்பொழிவு இடம்பெற்றது. தமிழ்ச்சங்கம் நடத்திய அகில இலங்கை பாடசாலை மாணவர்களுக்கு இடையேயான திருக்குறள் போட்டிகளில் 45 மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு இடம்பெற்றது. கடைசி இரண்டு நாட்களும் பல்கலைக்கழக பேராசிரியர்கள், கலாநிதிகள் பங்குகொண்ட ஆய்வரங்குகள் இடம்பெற்றன. தினமும் மாலை வேளைகளில் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. நிறைவு நாளன்று கம்பவாரிதி. இ. ஜெயராஜ் தலைமையில் பட்டிமண்டபம் இடம்பெற்றது. சிறப்பாக இம் மாநாட்டை ஒழுங்கு செய்த கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் மு. கதிர்காமநாதன், செயலர் ரகுபதி பாலஸ்ரீதரன், பொருளாளர் திருச்செல்வம், கல்விக்குழுச் செயலாளர் மா. கணபதிப்பிள்ளை உள்ளிட்ட ஆட்சிக் குழுவினர் பெரும் பாராட்டுக்குரியவர்கள்.

✱✱✱

# வாசகர் பேசுகிறார்

## உண்மைக்குப் புறம்பான எழுதத்தூண்டும் எண்ணங்கள் - மலேசிய மாநாட்டு அனுபவங்கள்

ஜுலை 2011 ஞானம் இதழில் எழுதத் தூண்டும் எண்ணங்கள் படித்தேன். முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகள் முடுக்கி வைத்த இஸ்லாமிய இலக்கியத்தேட்டம் பேராசிரியர் சு.வித்தியானந்தன் போன்ற தமிழ் அறிஞர்களால் பாராட்டிச் சீராட்டப்பட்டு பெருந்துறையாக இன்று வளர்ந்துள்ளது. நீண்ட இடைவெளிக்குப் பின்னர், இலங்கைத் தமிழ் அறிஞர்களின் ஆர்வத்துடன் கூடிய பங்களிப்பு இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்துக்கு கிடைத்திருக்கிறது எனச் செல்லும் இடமெல்லாம் நாம் சொல்லித் திரிவதுடன் அதையிட்டு பெருமகிழ்ச்சி யடைந்தவர்களாக இருக்கின்றோம். இந்நிலையில் கலாநிதி துரைமனோகரனின் மலேசிய மாநாடு தொடர்பான இலங்கை ஏற்பாட்டுக் குழுவினர் பற்றிய அதிலும் தலைவர், செயலாளர், பாராளுமன்ற உறுப்பினர் ஆகிய இம்மூவர் பற்றிய குற்றச்சாட்டுகள் உண்மைக்கு மாற்றமாக அமைந்துள்ளது.

மாநாட்டு பேராளர்களாக விண்ணப்பித்தவர்களின் தொகை 400 ஆகும். இவர்களின் விண்ணப்பங்கள் இன்னும் எம்மிடம் இருக்கின்றன. ஒரு சிலரைத் தவிர 95வீதமானோர் நல்ல கல்வித் தகைமையுடன் கூடியவர்களாவர். மாநாட்டில் கலந்து கொண்டவர்களும் அவ்வாறே. உண்மையான புள்ளி விபரம் எம்மிடம் இருக்க மாநாட்டில் கலந்து கொண்டவர்களில் 25வீதமானோர்தான் கலைஇலக்கிய ஈடுபாடு கொண்டவர்கள் என்று அவரால் எவ்வாறு கூறமுடியும்.

இலங்கை ஏற்பாட்டுக் குழுவின் சிறந்த செயற்பாட்டினால்தான் கலாநிதி துரை மனோகரனால் கூட மலேசிய மாநாட்டில் பங்கு கொள்ள முடிந்தது. அவரது "இலங்கை இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு 19ஆம் நூற்றாண்டு" எனும் தலைப்பிலான கட்டுரை ஒன்று மலேசிய மாநாட்டு மலரில் இடம்பெற்றுள்ளது. (மாநாட்டு மலர் பக்கம் 161) இக்கட்டுரை மாநாட்டு மலரில் எப்படி இடம்பெற்றது. அவராக மலேசியாவுக்கு அனுப்பி வைத்தாரா? மலேசியர்கள் அவரிடம் இருந்து பெற்றுக் கொண்டனரா? இலங்கை நடுவர்களின் தெரிவின் பின்னர் மாநாட்டு ஏற்பாட்டுக் குழுவினர் அக்கட்டுரையை மலேசியாவுக்கு அனுப்பிய பின்னர்தான் மலரில் அது வெளிவந்திருக்கிறது. ஏற்பாட்டுக் குழு ஒன்று இல்லாமல் இது நடந்திருக்குமா?

தலைவருக்கும், செயலாளருக்கும் முதுகெலும்பு இல்லை என்று குறிப்பட்டிருக்கிறார். இதுகாலவரை துரைமனோகரன் கலாநிதி துரைமனோகராகத்தான் அறியப்பட்டார். அவர் எப்போது வைத்திய கலாநிதியானார் என்பது தெரியவில்லை. பிழையான நோய் நிர்ணயம் செய்து அதற்கு நிவாரண பரிந்துரையும் செய்திருக்கிறார். எதிர் காலத்தில் இவர்கள் முதுகெலும்பை பொருத்திக் கொள்ள வேண்டும் என்று (போலி வைத்தியர்கள் நாட்டில் ஆயிரக்கணக்கில் உள்ளனர் என புள்ளி விபரங்கள் கூறுகின்றன. வாசகர்கள் கவனம்)

தலைவரும், செயலாளரும் குடும்பத் துடன் உல்லாச பயணம் செய்தனர் என்று குறிப்பிட்டுள்ளார். தலைவரதும், செயலாளரினதும் குடும்பத்தினர் மாநாட்டில் கலந்து கொண்டது உண்மைதான். அந்த உல்லாசப் பயணத்தை மலேசியாவில் இலவசமாக ஏற்பாடு செய்வதற்கு காரணமாயிருந்தவர்களே தலைவரும், செயலாளரும்தான். தமது சொந்தச் செலவில் அவர்கள் குடும்பத்தினரை மலேசியாவுக்கு கூட்டிச் சென்றனர். (எம்மிடம் உள்ள விமானப் பயணச் சீட்டின் பணப் பற்றுச் சீட்டினை துரைமனோகரன் எப்போதும் பார்வையிடலாம்) அந்த இலவச உல்லாசப் பயண ஏற்பாட்டின் மூலமாகத்தான் மலேசியாவின் தலைநகரை சுற்றிப் பார்க்கும் சந்தர்ப்பம் துரைமனோகரனுக்கும் ஏனைய பேராளர்களுக்கும் கிடைத்தது. குடும்பத்துடன் வருபவர்களை ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்று மலேசியர்கள் எத்தடையும் விதிககவில்லை. மலேசிய மாநாட்டு பயணத்துக்குள் எல்லாமே அடக்கம். (இலவச விடுதி வசதி, இலவச உணவு, இலவச போக்குவரத்து வசதி, இலவச சுற்றுலா ஏற்பாடு போன்றவை.) நாம் இலங்கையில் இருந்து ஸ்தல யாத்திரை எதுவும் செல்லவில்லை. இலங்கை ஏற்பாட்டுக் குழுவினரின் வேண்டுகோளின்படி பேராளர் கட்டணம் கூட அறவிடப்படவில்லை. (பேராளர் கட்டணமாக 100 மலேசிய ரிங்கிட்ஸ் செலுத்த வேண்டும் என கட்டாயம் இருந்தது. இத்தொகை இலங்கை நாணயத்தில் ரூபா 4000 பெறுமதியாகும்) தலைவரும் செயலாளரும் இரவு பகல் ஆற்றிய இலக்கியப் பணியை உணர்ந்த மலேசியர்கள் மாநாட்டின் முதல் நாள் தொடக்க விழாவில் அவர்கள் இருவரையும் கௌரவித்தனர். இது எதிர்பாராமல் நடத்த நிகழ்வாகும் என்பது துரைமனோகரனுக்கு தெரியாமல் இருக்கலாம். ஏறத்தாழ நான்கு

மாதங்கள் மாநாட்டுக் குழுவின் கடின உழைப்பினால் தான் இலங்கை பேராளர்கள் அனைவருக்கும் மாநாட்டில் அனைத்து உபசாரங்களும் கிடைத்தன. இலக்கியத்துக்காக நாம் எமது நேரத்தையும் சொந்தப் பணத்தையும் செலவு செய்து தியாகங்கள் செய்து வருகிறோம்.

இலங்கை ஏற்பாட்டுக் குழு செயற்பாட்டை யாரும் பொறுப்பேற்க முன்வராத நிலையில் தாருஸ்ஸலாம் முன்வந்து சகல வசதிகளுடனும் கூடிய காரியாலயத்தையும் அதற்குரிய ஆளணி வசதிகள் காகிதாதிகள் போன்ற பல இலட்சம் பெறுமதியான வசதிகளை இலங்கை ஏற்பாட்டுக் குழுவினருக்கு எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் வழங்கி இப்பணியினை செய்வதற்கு உதவியாய் இருந்ததோடு, எவரதும் தனிப்பட்டதும் அரசியல் சம்பந்தமானதுமான இடையூறுகளும் இன்றி சுதந்திரமாகக் காரியமாற்றுவதற்கு பக்கபலமாய் இருந்தனர் என்பதைக் கூறிக்கொள்வதற்கு கலாநிதி துரைமனோகரன் அவர்கள் இச்சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி தந்ததையிட்டு மன மகிழ்வெய்துகிறோம்.

பயண ஏற்பாடு சம்பந்தமான குற்றச் சாட்டுக்கள் ஒன்றல்ல பல வந்தன. என்பதை தார்மீக பொறுப்புடன் ஏற்றுக்கொண்டேயாக வேண்டும். ஆயினும் சில உண்மைகளையும் சொல்லவே வேண்டும். மாநாட்டில் கலந்து கொண்ட 228 பேராளர்களுள் சுமார் 40 பேராளர்கள் ஏற்பாட்டுக் குழுவினருடன் பதிவு செய்து கொண்டபின்னர் தத்தமது பயண ஏற்பாட்டிலேயே மலேசியா வந்து சேர்ந்தனர். மேலும் இது சம்பந்தமாக ஒவ்வொரு விண்ணப்பதாரருக்கும் நாம் தனிப்பட்ட முறையில் கடிதங்கள் மூலம் நீங்கள் வர விரும்பினால் குறிப்பிட்ட பயண முகவருடன் பயண ஏற்பாட்டினை செய்து கொள்ளுங்கள் இல்லையெனில் நீங்களாகவே தனிப்பட்ட முறையில் பயண ஏற்பாடுகளை செய்து விட்டு எம்முடன் பதிவு செய்து கொள்ளுங்கள் என மிகத் தெளிவாக அறிவித்திருந்தோம். அத்தகைய கடிதங்களை ஒன்றுக்கு பின் ஒன்றாக விண்ணப்பித்தவர்களுக்கு அனுப்பிக் கொண்டிருந்தோம். அத்தகைய கடிதங்கள் அனைத்தும் கலாநிதி.துரைமனோகரனுக்கு கிடைத்திருக்காமலிருக்க வழியில்லை. ஏனெனில் அக்கடிதங்கள் அனைத்தும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் றப்பர் முத்திரை இடப்பட்ட கடித உறைகளில் அனுப்பப்பட்டன. அந்த வகையில் பேராளர்களின் சுயவிருப்பத்திற்கு முதலிடம் கொடுத்திருக்கிறோம். நாம் பரிந்துரை செய்த பயண முகவரிடம்தான் நீங்கள் விமான டிக்கட் வாங்க வேண்டும் என்று எவரையும் நாம் கட்டாயப் படுத்தவில்லை. விரும்பின் முன்பணம் 10000ரூபா செலுத்தி குறிப்பிட்ட பயண முகவரிடம் பதிவு செய்து கொள்ளலாம் எனவும் வேண்டியிருந்தோம்.

மாநாட்டில் பங்களிப்புச் செய்யவென ஆய்வரங்கிற்கு கலாநிதி வல்லிபுரம் மகேஸ்வரன், விரிவுரையாளர். கனகசபை இரகுபரன், கலாநிதி.எம்.எஸ்.எம்.அனஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். அவர்களது பங்களிப்பு பற்றி மலேசியாவில் வைத்து கலாநிதி. துரை மனோகரன் என்னை குடைந்து கேள்விகள் கேட்டதுடன் பல குற்றாச்சாட்டுகளை இம்மூவர் மீதும் சுமத்தினார். மேலும் ஏ.எம்.மிஹ்லார், ராகில், மருதூர் மஜீத், இராசய்யா மகேஸ்வரன், எஸ்.முத்துமீரான், றமீஸ் அப்துல்லாஹ், டாக்டர்.நஜிமுதீன், தாஸிம் அகமது, எஸ்.ஐ.நகூர்கனி, டாக்டர் பௌசியா, கலாநிதி துரைமனோகரன், எஸ்.எச்.எம்.ஜெமீல், செய்யது. ஹஸன் மௌலானா, மஸிதா புன்னியாமீன், உ.நிஸார், என்.எம்.அமீன், டாக்டர்.யூ.ஏ.ஜாபீர், யூனுஸ்.கே.ரஹ்மான், கலாபூசணம். புன்னியாமீன் ஆகியோரின் ஆக்கங்களும், அமைச்சர் ரவூப் ஹக்கீம், பாராளுமன்ற உறுப்பினர் ஹஸன் அலி, புரவலர் ஹாஸிம் உமர் ஆகியோரின் வாழ்த்துச் செய்திகளும் மாநாட்டு மலரில் இடம்பெற்றுள்ளன. அறிஞர் சித்திலெப்பை, பேராசிரியர் உவைஸ், புலவர்மணி ஷரிபுத்தீன் ஆகிய மூன்று இலங்கை அறிஞர்களின் பெயரில் எமது வேண்டுகோளின் படி அரங்குகள் அமைக்கப்பட்டன. மேலும் இலங்கையர் இருவருக்கு தலைமை தாங்கும் வாய்ப்பும் வழங்கப்பட்டது. பீ.எச்.அப்துல் ஹமீதுக்கும், புர்கான் பீ.இப்தீகாருக்கும் அறிவிப்பாளர்களாக கடமையாற்றும் வாய்ப்பு வழங்கப்பட்டது. அறிஞர் அகார் முகமதுக்கு பேருரை ஒன்று வழங்கப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர் மற்றும் ஹஸன் அலி, பிரிதியமைச்சர் பஷீர் சேகுதாவூத் ஆகியோருக்கு சிறப்புரைகள் வழங்கப்பட்டன. இலங்கையர் 6 பேருக்கு அரங்கு முன்னிலை வகிக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது.

ஆய்வரங்கிலும், கவியரங்கிலும் பங்குபற்றிய ஐவருக்கு இலவச விமானச் சீட்டுகள் வழங்கப்பட்டன. இவ்வாறெல்லாம் இலங்கையர்கள் கௌரவிக்கப்பட்டதற்கும் (இலங்கையருக்கும் மொத்தம் 60 வாய்ப்புக்கள்) இலங்கை ஏற்பாட்டுக் குழுவினரின் அக்கறையுடன் கூடிய விடாமுயற்சியான செயற்பாடே காரணமாகும்.

கலாநிதி துரைமனோகரனின் எழுதத் தூண்டும் எண்ணங்கள் பத்தி நாட்டவிழி நெய்தலில் அப்படியே பதிவு செய்யப்பட்டுள்ளது. இலங்கை ஏற்பாட்டுக் குழு தலைவர், செயலாளர், பாராளுமன்ற உறுப்பினர் ஆகிய மூவரும் சமூகத்தில் உயர் அந்தஸ்த்தில் இருப்பவர்கள். இவர்களை பற்றி பகிரங்கமாக பிரசுரிக்கப்பட்ட இவ்வாறான அவதூறுகளில் மானநஷ்டத்துக்கு உட்பட்ட வார்த்தை பிரயோகங்கள் உள்ளனவா என பரிசீலிக்கப்பட்டு வருகின்றது.

இதனைவிடுத்து நடந்தவற்றைச் சரியான முறையில் புரிந்து கொள்ள முயற்சிக்காது சஞ்சிகைகளிலும், வலைத்தளங்களிலும் நினைத்த வாறெல்லாம் அவதூறு பிரச்சாரங்கள் செய்பவர்கள் இருக்கும்வரை நமது நாடு வளர்ச்சியடைய ஐம்பது ஆண்டுகள் என்ன நூறு ஆண்டுகளும் ஆகலாம். மலேசிய மக்களின் மனப்பாங்கு நம்மிடம் வளரவேண்டும். திறந்த மனதுடன் நல்லவற்றை பாராட்டும் பக்குவம் நம்மிடையே வரவேண்டும்.

**இனிய உளவாக இன்னாத கூறல்**
**கனியிருப்பக் காய் கவர்ந்தற்று.**

**வைத்திய கலாநிதி, தாஸிம் அகமது**
**மலேசிய மாநாட்டு ஏற்பாட்டுக்குழுச் செயலர்**

இலக்கியச்சுவை மிகுந்த ஆக்கங்களோடு. இலக்கிய சம்பந்தமான தகவல்களையும் செய்திகளையும் தாங்கிவரும் ஞானம் ஒவ்வொருமாதமும் எமது உணர்வுகளுக்குப் புத்தூக்கம் அளித்துவருகின்றது. அதிலும் புலம்பெயர்ந்து வாழும் என்போன்றோரின் தமிழ்த் தாகத்தினைத் தீர்ப்பதில் ஞானம் கணிசமானளவு பங்கினை வகிக்கின்றது. காலத்திற்குப் பொருத்தமான வகையில் எழுதப்படும் ஆசிரியர் தலையங்கங்கள் தமிழ்ச் சமூகத்தை நெறிப்படுத்தும் வகையில் சமூக அக்கறை மிகுந்த கருத்துக்களைத் தாங்கிவருகின்றன. தரமான கதைகள், கட்டுரைகள், கவிதைகள், தகவல்கள் என்றிப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம். ஞானத்தை விரித்ததும் முதலில் நான் படிக்கும் மூன்று விடயங்களைப்பற்றி மட்டுமாவது இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும். ஒன்று, கலாநிதி துரை மனோகரன் அவர்களது "எழுதத் தூண்டும் எண்ணங்கள்" என் மனதிற்கிசைந்த கருத்துக்களைத் தாங்கி வருவதனால் என்னை ஆவலோடு படிக்க வைக்கின்றன. அவரது எண்ணங்கள் தெளிவாகவும், துல்லியமாகவும், சரியாகவும் அமைந்து வாசகர்களுக்கு விளிப்புணர்வை ஏற்படுத்துகின்றன. மற்றையது, திரு. கே.விஜயன் அவர்களின் "படித்ததும் கேட்டதும்" பகுதி. ஆங்காங்கே நகைச்சுவை கலந்த மொழிநடையில் அவர் தரும் விடயங்கள் மிகவும் பெறுமதியானவை. அடுத்தது, திரு. மானா மக்கீன் அவர்களின் ஓசையில்லா ஓசைகள். அன்றாட நிகழ்வுகளைப்பற்றிய விடயங்களைத் தரும்போதுகூடத் தமிழ் இலக்கியவரலாற்றுச் சுரங்கத்திலிருந்து அவ்வப்போது தகவல்களை அகழ்ந்தெடுத்துக் கலந்து எழுப்புகின்ற அவரது அனுபவம்மிக்க ஓசைகள் எல்லாப் பருவத்தினருக்கும் பயனுள்ளவை.

கடந்த ஜூன் மாத இதழில் கண்டவுடன் என் கருத்தில் பட்ட இரண்டு விடயங்களைச் சொல்லித்தான் ஆகவேண்டும். அட்டையில் "ஆற்றல் மிக்க தமிழ் கற்ற ஒரு சிங்களப் படைப்பாளி மடுலுகிரிய விஜேரத்ன" என்று குறிப்பிடப் பட்டிருந்தது. "தமிழ்கற்ற ஆற்றல் மிக்க ஒரு சிங்களப் படைப்பாளி.." என்பதே சரியாகும். ஆற்றல்மிக்க என்ற அடைமொழி தமிழுக்கல்ல, விஜேரத்னவுக்கே என்பதால் இதழில் குறிப்பிடப்பட்டிருந்த சொற்றொடரொழுங்கு பொருத்தமற்றது என்பது எனது கருத்தாகும்.

மேலும், திரு. கே.ஜீ.மகாதேவா அவர்களது தமிழகச் செய்தி மடலில் நான்காவது பந்தியில் எம்.ஜீ.ஆர்-ராதா துப்பாக்கிச்சூடு சம்பவத்தால் கழுத்தில் காயமடைந்த எம்.ஜீ.ஆரால் பேசமுடியாமல் போனதுபற்றிக் குறிப்பிட்டு, "எம்.ஜீ.ஆர் திகைத்தார், தடுமாறினார், இரட்டை இலைக்கு வாக்களியுங்கள் என்று அவரால் குரல் எழுப்ப முடியவில்லை" என்று சொல்லியிருக்கிறார். துப்பாக்கிச்சூடு நடைபெற்றது. 1967 ஆம் ஆண்டு. அப்போது எம்.ஜீ.ஆர் அறிஞர் அண்ணாவின் தலைமையிலான தி.மு.க வில் இருந்தார். அவர்களது சின்னம் உதயசூரியன். இரட்டை இலை அப்போது இல்லை. எனது மதிப்பிற்குரிய திரு.கே.ஜீ.மகாதேவா அவர்களுக்கு இது தெரியாமல் இல்லை. ஏதோ எழுதும்போது சிறு தவறு ஏற்பட்டிருக்கிறது அவ்வளவுதான். ஆனால் வாசகர்களுக்குத் தவறான தகவல் சென்றுவிடக்கூடாதே என்பதாலேயே சுட்டிக்காட்டினேன். நன்றி.

**பாடும்மீன் சு.ஸ்ரீகந்தராசா,**
**அவுஸ்திரேலியா**

ஆசிரியர் அவர்கள்,

கடந்த ஜூலை 2011 ஞானம் இதழில் மணிவிழா நாயகன் லெ.முருகபூபதி ஐயா அவர்கள் பற்றி தெளிவத்தை ஜோசப் ஐயா அவர்கள் ஆரம்ப காலம் முதல் இன்று வரையாக விபரங்களை மிகத் தெளிவாகத் தந்துள்ளமைக்கு நன்றி கூற வேண்டும். இவ்விபரங்களின்படி முருகபூபதி அவர்கள் உள் நாட்டிலும், அவுஸ்திரேலியாவிலும் தனித்தும், கூட்டிணைந்தும் எடுத்துள்ள பிரகாசமான இலக்கிய நடவடிக்கைகள் நம் போன்ற பலருக்கும் பயன்மிக்கதும், முன்னுதாரணமுமாகும். இன்று அவர் சர்வதேசம் பேசும் மனிதர். 2011 ஜனவரியில் கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மகாநாட்டுகாக, எமது புத்தளம் தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்துக்கு அழைப்பு விடுக்கும் முகமாக புத்தளம் வருகை தந்த போதே நாம் அவரை முதன்முதலாக நேரில் சந்திக்கும் வாய்ப்பு எமக்குக் கிட்டியது. இச்சந்திப்பு ஊடகவியலாளரும், எமது ஒன்றிய உறுப்பினருமான உடப்பூர் வீர சொக்கன் மூலம் கடந்த டிசம்பரில் புத்தளம் பாத்திமா மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. அவர் தனது குடும்ப உறுப்பினர் சகிதம் வருகை தந்திருந்தார். அவரின் மேதா விலாசத்தையும், ஆளுமையையும், நாவன்மையையும் அப்போது புரிந்து கொள்ள முடிந்தது.

கூட்ட முடிவில் அவரது பாரியார் சுற்றுமுற்றும் பார்வையை செலுத்திவிட்டு 'இது பாத்திமா மகளிர் கல்லூரியா? என என்னிடம் வினவ, நான் சாதகமான பதில் கூற 'நான் இக்கல்லூரியின் பழைய மாணவி, எனவும், இப்பிரதேசத்திலுள்ள காரைத்தீவு கிராமத்திலேயெ நான் பிறந்தேன். எனது தந்தை அங்கு வைத்தியராகப் பணி புரிந்தார் எனவும் அஸீஸ் போன்ற பால்ய நண்பர்களையும் நினைவு கூர்ந்து புத்தளம் தொடர்பை விளக்கினார்.

ஞானத்தில் வழமையாக வெளிவரும் மானா மக்கீன் அவர்களின், 'ஓசையில்லா ஓசைகள்' பல்சுவை விருந்து. ஜூலை 2011 இதழில் ஓசையில்லாமல் ஒளிந்து கொண்டுள்ளது. சிறிது ஓசை எழுப்பி விளம்பிய போது,

கோலாலம்பூர், காயல்பட்டணம் இலக்கிய மகாநாடுகளை இலங்கையுடன் தொடர்பு படுத்தி ஓசையுடன் ஒத்துழைப்பு நல்க பறந்து விட்டதால் ஞானத்தின் ஓசை எழுப்ப சந்தர்ப்பம் அரிதாகிவிட்டதாக அறிய முடிந்தது.

**எம்.ஐ.எம்.அப்துல் லத்தீப்**
**தலைவர், புத்தளம் தமிழ் எழுத்தாளர் ஒன்றியம்,**

134ஆம் இலக்க ஞானம் இதழில் கலாநிதி துரை மனோகரன் எழுதிய பத்தி எழுத்தில் மலேசியாவில் நடந்த உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டைப் பற்றிய அனுபவங்களைப் படித்தேன். நடு நிலை இலக்கிய கர்த்தாவான அவரின் எழுத்தை மதிக்கிறேன்.

வரலாற்றுக்கு மேற்பட்ட தமிழ் மொழிக்கும், தொன்மையான தமிழகத்துக்கும் முஸ்லீம்களுக்கும் பண்டை நாள் தொட்டு தொடர்புகள் இருந்து வருகின்றன. தனித் தமிழ் நாகரீகம் இந்து, சமண, வைணவ, பௌத, கிறீஸ்தவ கலாசாரங்களை உள்ளடக்கி தமிழில் இலக்கியம் படைத்தனர். இவ்விலக்கியங்கள் இருட்டடிப்பு செய்யப்பட்டோ, அல்லது மறைக்கப்பட்டிருந்த காலப் பகுதியில் உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடுகளைக் கூட்டி தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு இஸ்லாமியரால் ஆக்கப்பட்ட இலக்கிய புது வடிவங்களையும் அதன் தொன்மைகளையும், அறிமுகஞ் செய்தனர். இலட்சங்களின்றி இலட்சியத்துடன் இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடுகளைக் கூட்டினர். ஆனால் இன்று இலட்சியங்களின்றி இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடுகளைக் கூட்டி கொச்சைப் படுத்துகின்றனர். இவ்வருடம் மலேசியா கோலாலம்பூரில் ஒரு இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடும், இந்தியாவில் தூத்துக்குடி மாவட்டத்தில் காயல்பட்டினத்தில் இன்னொரு இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடும் கூடிவிட்டனர். இந்த வருடம் மூன்று மாத காலத்துக்கிடையில் இரண்டு மாநாடுகள். 2011ஆம் ஆண்டு இன்னும் முடியவில்லை. இன்னும் எத்தனை மாநாடுகள் கூட்டப்படப் போகுதோ தெரியவில்லை. இலங்கையைப் பொறுத்தமட்டில் அரசியல் நோக்கம், வியாபார நோக்கங் களுடன் இலக்கிய மதநாடுகள் அமைக் கூடாது. இலக்கியம் படைக்கும் அரசியல் வாதிகள் பங்கு பற்றினாலும்

அதை சீரணிக்க முடியும். கலாநிதி துரைமனோகரன் குறிப்பிடும் அரசியல் வாதி முன்பு குறிப்பிட்ட சிந்தனையை நித்தனை செய்தார். இன்று அச்சிந்தனையை வந்தனை செய்கிறார். அடுத்தவர் கவிதைகளை தன் கவிதைகளாக பாடிக்காட்டும் இவர்களைப் போன்றோர் தம்மை தலைவர் என காட்டுவது எமது சமூகத்தின் தலையெழுத்து.

இலட்சியம் பேசும் இலங்கை முஸ்லிம் இலக்கிய வாதிகள் இலங்கையில் இடம்பெற்ற நான்காம் உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டைப் பாருங்கள். எவ்வளவு அழகாக இருந்தது. ஆய்வுக் கட்டுரைகள், சிறுகதை, கட்டுரை, கவிதை தொகுப்புகள் வெளியிடப்பட்டன. இன்று அவற்றில் பங்குபற்றியோரில் சிலர்தான் உயிரோடு இருக்கின்றனர்.உயிரோடு இருப்பவர்களைப் பற்றி இன்றைய ஜாம்பவான்கள் மறந்து விட்டனர். அல்லது மறைத்து விட்டனர். அத்துடன் மாநாடுகளில் கவிதை பாடி அதற்கும் விழா வெடுத்து புதிய கலாசாரத்தை புகுத்துகின்றனர். அவசர சங்கங்கள் கூட்டி பத்திரிகைகளுக்கு போஸ் கொடுக்காமல் உருப்படியான இலக்கிய சங்கங்களை அமைத்து அகில இலங்கை ரீதியில் சேவை செய்ய முன் வந்தால் எதிர் கால சந்ததியினர் நன்றி மறவாமல் இருப்பார்கள்.


**- பாணந்துறை எம்.பி.எம்.நிஸ்வான்**

தங்கள் (ஜூன்133) ஞானம் இதழில் நண்பர் கே. ஆர். டேவிட்டின் வடலிகள் கதையைப்படித்து மிகச் சந்தோசம் அடைந்தேன். அக்கதையில் வெளிக்காட்டப்பட்டுள்ள சிந்தனையே விடுதலை பற்றிய தரிசனமுடைய அனைவரினதும் சிந்தனையாக இருந்திருக்கிறது. என்னுடைய நெருங்கிய முஸ்லிம் நண்பர் ஒருவர் ஒருமுறை பின்வருமாறு கூறினார்: வன்னி மக்களுக்கு நேர்ந்த இக்கட்டான நிலை எம்மக்களுக்கு நேர்ந்திருக்குமாயின் நாம் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்திருப்போம். அல்லது எதிரியை ஓட ஓட விரட்டியிருப்போம்." அது முற்றிலும் உண்மை. வன்னிமக்கள் டேவிட் அவர்கள் கூறும்முடியை எடுத்திருப்பார்களாயின் இன்று இந்த சீரழிந்த நிலைக்குத் தள்ளப் பட்டிருக்க மாட்டார்கள். கெகிறாவை ஸஹானா அண்மையில் 'முறிந்த பனைகளும் முகிழ்க்கும் வாழ்வும்" என்ற தலைப்பில் (மல்லிகையில்) எழுதிய கட்டுரையையும் படித்தபோது என் மனதில் பின்வருமாறு உணர்வுகள் கிளர்ந்தன.' எத்தனையோ துன்பங்கள் பட்டதன் பின்னரும் இன்றும் தம் உணர்வில் விடுதலையைத் தோயவிடும் இந்த முஸ்லிம் சகோதரியின் உணர்வு எத்தனை மகத்தானது. இதில் ஒரு துளி கூட அகதியாய் இன்றும் அழுந்தும் வன்னி மக்களுக்கு இருக்கவில்லையே. இத்தகைய உணர்வுகளை கவிஞர் முல்லை முஸ்ரிபா இளைய அப்துல்லாஹ் உவைஸ்கனி போன்றவர்களின் கவிதைகளில் காணலாம். இதைத்தான் நண்பர் டேவிட் தன் கதையில் கூறவந்துள்ளார். அவருக்கு எனது பாராட்டுக்கள். அதை வெளியிட்ட ஞானம் ஆசிரியருக்கும் என் நன்றியும் பாராட்டும்

**- மு. பொ.**

# திருமண சேவை

**15** வருடத் திருமணசேவை நிறைவினை முன்னிட்டு
**வேல் அமுதன்** பாரிய சேவைக் கட்டணக் குறைப்பு!



### ❑ விவரம்

விவரங்களுக்குத் தனிமனித நிறுவநர், "சுய தெரிவுமுறை முன்னோடி" மூத்த, புகழ்பூத்த, சர்வதேச சகலருக்குமான திருமண ஆலோசகர்/ ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர், மாயெழு வேல் அமுதனுடன் திங்கள், புதன், வெள்ளி மாலையிலோ, சனி, ஞாயிறு நண்பகலிலோ தயங்காது தொடர்பு கொள்ளலாம் !

### ❑ தொலைபேசி

4873929 / 2360694 / 2360488

### ❑ சந்திப்பு

முன்னேற்பாட்டு ஒழுங்குமுறை

### ❑ முகவரி

8-3-3 மெற்றோ மாடிமனை (வெள்ளவத்தை காவல் நிலையத்திற்கு எதிராகவுள்ள 33 ஆம் ஒழுங்கை ஊடாக) 55ஆம் ஒழுங்கை, கொழும்பு 06.

**சுலப மணமக்கள் தெரிவுக்குச் சுயதெரிவு முறையே! மகோன்னத மணவாழ்வுக்குக் குரும்பசிட்டியூர், மாயெழு வேல் அமுதனே! சுலப மணமக்கள் தெரிவுக்குச் சுயதெரிவு முறையே!**

## 'ஞானம்' சஞ்சிகை கிடைக்கும் இடங்கள்

- பூபாலசிங்கம் புத்தகசாலை - 202, 340, செட்டியார் தெரு, கொழும்பு - 11.
- கா. தவபாலச்சந்திரன் - பேராதனை. தொலைபேசி: 077 9268808
- பூபாலசிங்கம் புத்தகசாலை - 309A, 2/3 காலி வீதி, வெள்ளவத்தை.
- பூபாலசிங்கம் புத்தகசாலை - 4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
- புக் லாப் - யாழ். பல்கலைக்கழக வளாக அருகாமை, யாழ்ப்பாணம்.
- துர்க்கா - சுன்னாகம்.
- ப. நோ. கூ. சங்கம் - கரவெட்டி, நெல்லியடி.
- லங்கா சென்றல் புத்தகசாலை - 84, கொழும்பு வீதி, கண்டி.
- மாரிமுத்து சிவகுமார் - ஸ்ரீகிருஷ்ணாஸ், இல 86, சைட் வீதி, ஹட்டன்.

GNANAM - Registered in the Department of Posts of Sri Lanka under No. QD/28/News/2011


*With Best Compliments from*

**Luckyland**

உலக சாதனை எங்கள் பாரம்பரியம்
பிஸ்கட்டிலும் தான் !




# LUCKYLAND BISCUIT MANUFACTURERS

**NATTARANPOTHA, KUNDASALE, SRI LANKA.**

**TEL : 0094-081-2420574, 2420217. FAX: 0094-081-2420740**

**Email: luckyland@sltnet.lk**


இச்சஞ்சிகை தி. ஞானசேகரன் அவர்களால் இல.48B புளூமெண்டால் வீதி, கொழும்பு 13. யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட் நிறுவனத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.